பக்கங்கள்: முப்பத்திரண்டு +X

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 மாசி 15 ஞாயிற்றுக்கிழமை (27.02.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 093



02 இலங்கையை வென்றது பாகிஸ்தான்



03 சாதிக்கப் போவது யார்?



17 ஜனாதிபதியின் ராஜதந்திரம்



23 மீண்டும் ஒரு முறை நிரூபிக்கப்பட்ட அடக்குமுறை



27 பழிவாங்கும் சாம்பல்

# இரு நாட்டு மீனவர்களின் பிணக்கு; இந்தியக் குழு இலங்கை வருகிறது

## நிருபமாராவ் தலைமையில் நேற்று சென்னையில் கூட்டம்

சென்னை,பெப்.27

இலங்கை - இந்திய மீனவர்களுக்குக்கிடையில் தொடரும் பிரச்சினைக்குத் தீர்வுகாண தமிழக மீனவர்கள் சங்க உறுப்பினர்களைக் கொண்ட குழு ஒன்றை இலங்கைக்கு அனுப்ப முடிவுசெய்யப்பட்டுள்ளது.

இந்திய வெளிவிவகாரச் செயலாளர் நிருபமராவ் தலைமையில் மீன்பிடித் திணைக்கள அதிகாரிகள், கரையோரப் பாதுகாப்பு அதிகாரிகள், பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகள் ஆகியோர் கொண்ட கூட்டம் நேற்று சென்னையில் நடைபெற்றது. இக்கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டது. தமிழ்நாடு தலைமைச் செயலர் மாலதி மற்றும் மீன்பிடி அமைச்சு அதிகாரிகளும் இதில் கலந்துகொண்டனர்.

தமிழ்நாடு மீனவர்சங்கப் பிரதிநிதிகளைக்கொண்ட குழுவை இலங்கைக்கு அனுப்பி இலங்கை அரசுடன் பேசித் தீர்க்கமான முடிவை எட்ட முயற்சிப்பது எனக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.

இந்திய மீனவர்கள் மீது இலங்கை (32ஆம் பக்கம் பார்க்க)

# தமிழர் தரப்புடனான பேச்சை இழுத்தடிப்பதற்கு அரசு முயற்சி

## தேர்தலைக் காரணங் காட்டி 3ஆம் கட்ட சந்திப்பு ஒத்திவைப்பு

கொழும்பு,பெப்ரவரி27

**இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக தமிழர் தரப்புடன் - தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடன் - நடத்திவரும் பேச்சுக்களை அரசு இழுத்தடிக்க ஆரம்பித்துள்ளது. தீர்வுக்கான அடிப்படைகள் குறித்து ஆராய்வதற்காக அரச மற்றும் கூட்டமைப்பு பிரதிநிதிகளைக் கொண்ட உப குழு அமைக்கப்பட்டது. இந்தக் குழு தனது மூன்றாவது சந்திப்புக்காக நாளை மறுதினம் கூடுவதாக இருந்தது. ஆனால் தேர்தல் பரப்புரையைக் காரணம் காட்டி அதனைக் காலவரையறை ஏதுமின்றிப் பிற்போட்டுள்ளனர் அரசதரப்பினர்.**

இந்த உப-குழு அமைக்கப்பட்டு இடம்பெற்ற முதலாவது சந்திப்பில் மாதம் இருதடவைகள் கூடித் தீர்வு குறித்து ஆராய்வது என்று தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும் முதல் சந்திப்பு நடந்த ஒரு மாதகாலத்தின் பின்பே இரண்டாவது சந்திப்பு நடைபெற்றது. மூன்றாவது சந்திப்பு ஒரு மாதம் கடந்த நிலையிலேயே நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. எனினும் இப்போது பிற்போடப்பட்டுள்ளது. இரண்டாவது சந்திப்பும் கூட திட்டமிடப்பட்ட திகதியில் நடக்கவில்லை.

சந்திப்பில் கலந்துகொள்ளும் அமைச்சர்கள் வெளிநாடு செல்கின்றனர்

(32ஆம் பக்கம் பார்க்க)

## நல்லிணக்க ஆணைக்குழு மே 15இல் கலைக்கப்படும்

### அதற்கு முன்னர் ஜனாதிபதிக்கு அறிக்கை

கொழும்பு,பெப்.27

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு மே மாதம் 15ஆம் திகதி கலைக்கப்படும்.

ஆணைக்குழுவின் ஊடக இணைப்பாளர் லஷ்மன் விக்கிரமசிங்க இத்தகவலைத் தெரிவித்தார்.

ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட இந்த ஆணைக்குழு பல்வேறு இடங்களில் விசாரணைகளை நடத்திச் சாட்சிகளைப் பதிவுசெய்தது. அதற்கு மேலதிகமாக கொழும்பு தலைமையகத்தில் பலரின் சாட்சியங்களையும் பதிவுசெய்தது. சாட்சியங்கள் பதியும் பணிகள் பூர்த்தியாகி, அவற்றைக் கொண்டு அறிக்கை தயாரிக்கும் பணி தற்சமயம் இடம்பெறுகிறது.

மே 15ஆம் திகதிக்கு முன்னர் இறுதி அறிக்கை ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்படும். அத்துடன் ஆணைக் குழு கலைக்கப்பட்டுவிடும் - என்றார் விக்கிரமசிங்க.

இந்த ஆணைக் குழுவுக்கு மேலதிகமாக அரசு நியமித்த சட்டத்தரணிகள் குழுவே அதன்பின் செயற்படும் - என்றார் அவர். (ஒ-ஐ)

## 100இலங்கையருக்கு ஜப்பானில் அரசியல் தஞ்சம்

டோக்கியோ,பெப்.27

ஜப்பானில் அரசியல் தஞ்சம் கோரிய 171 இலங்கையர்களில் 100 பேருக்கு அரசியல் தஞ்சம் வழங்கப்பட்டுள்ளது என்று ஜப்பான் அரசு தெரிவித்துள்ளது.

பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 1,402 பேர் அரசியல் தஞ்சம் கோரியுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-ஐ)

## மனித உரிமைகள் சட்டத்தை திருத்தினால்தான் ஆணைக்குழுவின் பணிகளை முன்னெடுக்கலாம்

### புதிய உறுப்பினர்கள் எடுத்துரைப்பு

கொழும்பு, பெப்.27

மனித உரிமைகள் சட்டத்தை திருத்தினால் மட்டுமே ஆணைக்குழுவின் பணிகளை முன்னெடுக்க முடியும் என்று மனிதஉரிமைகள் ஆணைக் குழுவுக்கு புதிதாக நியமிக்கப்பட்டுள்ள உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

அரசமைப்பில் 18 ஆவது திருத்தத்தின் கீழ் மனித உரிமைகள் ஆணைக் குழுவுக்கு உறுப்பினர்களை அரசு கடந்த மாதம் நியமித்திருந்தது.

இந்த ஆணைக்குழுவின் முதலாவது கூட்டம் கடந்தவாரம் குழுவின் தலைவரும் முன்னாள் நீதியரசருமான பிரியந்த பெரேரா தலைமையில் நடைபெற்றது.

மனித உரிமைகள் சட்டத்தில் திருத்தம் செய்ய வேண்டும் திருத்தம் செய்யப்படாவிட்டால் ஆணைக் குழுவால் மனித உரிமை (29ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு. வெள்ளப் பேரழிவுகள் குறித்து பஸில் தலைமையில் இன்று ஆராய்வு

### இடர்களைத் தவிர்க்க 2ஆயிரம் குளங்கள் புனரமைப்பு

மட்டக்களப்பு,பெப்.27

மட்டக்களப்பில் வெள்ளத்தால் நெற்பயிர் மற்றும் உப உணவு உற்பத்தி 97 சதவீதம் அதாவது முழுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது என்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

அதனை மீளக் கட்டியெழுப்பும் வழி வகைகள் குறித்து இன்று ஆராயப்படவிருக்கிறது.

மட்டக்களப்புக்கு இன்று வருகைதரும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தலைமையிலான குழுவினர் அரச அதிகாரிகளுடன் இது தொடர்பாக விரிவாக ஆராயவுள்ளனர். (29ஆம் பக்கம் பார்க்க)

### போர்க்குற்ற விசாரணையை வலியுறுத்தி

## 52,000 பேரின் கையொப்ப ஆவணம் ஐ.நா. அலுவலகத்தில் ஒப்படைப்பு

லண்டன், பெப்.27

இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பில் அனைத்துலக விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று 52 ஆயிரம் பேர் கையொப்பம் இட்டு வலியுறுத்தியுள்ளனர். சர்வதேச மன்னிப்புச் சபை இத்தகவலை வெளியிட்டுள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணைகள் மேற்கொள்ளவேண்டும் என்பதை வலியுறுத்தி சர்வதேச மன்னிப்புச் சபை கடந்த வருடம் மே மாதம் முதல் பிரசாரங்களை மேற்கொண்டது என்றும் -

இதுவரை 52 ஆயிரம் பேர் (29ஆம் பக்கம் பார்க்க)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உதயன்
27 பெப்ரவரி 2011 ஞாயிற்றுக்கிழமை

# இலங்கையை வென்றது பாகிஸ்தான்


டில்ஷான்

-அருண்மொழி-

பத்தாவது உலகக் கிண்ணப் போட்டித் தொடரில் பத்தாவது ஆட்டம் ஆர். பிரேமதாசா மைதானத்தில் நேற்று. இலங்கை - பாகிஸ்தான் மோதிக் கொண்டன. பரபரப்புக்கு குறைவில்லை, கூச்சலுக்கும் குறைவில்லை. இலங்கைக்குச் சொந்த மண், ரசிகர்களின் ஆதரவு அலை. இருந்தும் பலன் கிடைக்கவில்லை. பாகிஸ்தான் ஜொலித்தது சகல துறைகளிலும், பதித்தது வெற்றியை. நாணயச் சுழற்சி முக்கியம், இந்த மைதானத்தில். நாணயச் சுழற்சியிலும் வெற்றி பாகிஸ்தான். முடிவு அப்போதே ஊர்ஜிதம், பாக் வெற்றி என்பது. துடுப்பெடுத்தாட பாக் தீர்மானம்.


இலங்கை - பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான நேற்றைய போட்டியின் போது பாக். அணி சார்பில் அதிக பட்ச ஓட்டங்களைப் பெற்ற மிஸ்பா உல் ஹக்கின் 'றிவேஸ் ஸீவ்' ஆட்டம்

அஹமட்-மொஹமட் களம் புகுந்தனர். ஆரம்பம் முதலே இலங்கைச் சிங்கங்களின் பந்துகளை அடித்து விரட்டினர். மலிங்க இல்லை இந்த ஆட்டத்தில். இலங்கைக்கு இதனால் வந்தது பின்னடைவு. இருந்தும் சமாளித்து ஆடியது அவர்களின் திறமை.

நுவான் குலசேகர, பெரேரா வீசினர் பந்துகளை. இவர்களைச் சமாளித்து ஆடியது பாக்கின் ஆரம்பம். ஆரம்ப அதிரடிக்கு முற்றுப்புள்ளி வைத்தார், பெரேரா. அவரது பந்தில் அஹமட் பிடி கொடுத்தார் சங்காவிடம். கம்ரான் அக்மல் களத்துக்கு வந்தார். வந்தவர் பயன்படுத்தினார் 'முதல் பவர்பிளேயை ' . அக்மலின் அதிரடிக்குப் பஞ்சமில்லை. மொஹமட் நிதானமிழந்ததால் வந்தது ரன்அவுட். பந்து நால்வரின் கைபட்டு வீழ்த்தியது மொஹமட் விக்கெட்டை. முரளியின் பந்தை அடித்தார் அக்மல். மஹேலவின் கைக்கு சென்றது பந்து. அதற்குள் எடுத்தார் ஓட்டம் மொஹமட், மறுமுனையில் புறப்படவில்லை அக்மல். மஹேல எறிந்தார் பந்தை சங்காவின் கைக்கு. சங்கா, முரளியை நோக்கி எறிந்தார் பந்தை. தவறியது முரளியின் கையிலிருந்து. எடுத்தார் ஹேரத் எறிந்தார் விக்கெட்டுக்கு, முடிவுக்கு வந்தது ரன் அவுட் சர்ச்சை.


சயீட் அப்பிரிடி

அதிரடியாய் ஆடிய அக்மல் ஆசைப்பட்டார் சிக்ஸருக்கு. ஹேரத் பந்தில், முன்னோக்கி வந்தார் அக்மல். தவறியது அவரது அடி. சங்காவினால் 'ஸ்டொம்' ஆனார் அக்மல். இணைந்தன இரு இமயங்கள், யுனிஸ் கான் - மிஷ்பா உல் ஹக். ஆடினார் மெதுவாய். அதிரடி காட்டவில்லை, அதனால் ஓடிச் சேர்த்தனர் ஓட்டங்கள். மெதுவாய் ஏறியது ஓட்ட வேகம். ஹேரத்-முரளி இணைந்து சுற்றினர் சுழலை. அதிரடி காட்டவில்லை அவர்களின் பந்தில். பதிலுக்கு வேகப் பந்து வீச்சுக்கு அடித்து நொருக்கினர். இவர்களின் இணைவால் எட்டியது கௌரவ இலக்கு. யுனிஸின் ஆட்டத்தை முடித்து வைத்தார் ஹேரத். இறுதி வரை ஆட்டமிழக்கவில்லை மிஷ்பா.

மிஷ்பா தந்த பிடியை சங்கா மிஷ் பண்ணி விட்டார். இதன் விளைவு புரிந்திருக்கும் இப்போது. பின் வரிசையினர் அதிரடி ஆட்டத்தில் முனைப்புக்காட்டினர். இறுதியில் 277-7. இலங்கையின் பந்து வீச்சு சாதிக்கவில்லை. இருந்தும் சுழல் பந்து வீச்சுக்கள் சிறப்பாய் வீசினர்.

பதிலுக்கு இலங்கை ஆரம்பித்தது ஆட்டத்தை. தரங்க-டில்ஷான் ஆடினர் அமர்க்களமாய். அதிரடிகளுக்கு பஞ்சம். அவர்களின் நோக்காய் இருந்தது விக்கெட் இழப்பைத் தவிப்பதுவே. 76 ஓட்டங்களை சேர்த்து முதல் விக்கெட் இணைப்புக்காய். தரங்கவின் ஆட்டத்துக்கு விடை கொடுத்தார் மொஹமட். வந்தார் தலைவர் சங்கா. ஆடினார் நிதானமாய். அடுத்த விக்கெட்டும் சரிந்தது. அதிரடிக்கு முனைந்து பரிதாபமாய் வெளியேறினார் டில்ஷான். கத்துக்குட்டி கனடாவுடன் சதம் கடந்த ஜெயவர்தன வந்ததும் வெளியேறினார். அக்தரின் பந்து பதம் பார்த்தது ஜெயவர்தனாவின் விக்கெட்டை. தொடங்கியது சரிவு. நிறுத்துவார் யாருமில்லை. மறுமுனை புகுந்தார் சமரவீர. வந்ததும் அவரையும் வெளியேற்றி அனுப்பியது பாக். கறுவியது இலங்கை ரசிகர்களின் முகங்கள். நம்பிக்கை கொடுத்தது சாமரசில்வா -சங்கா ஜோடி. 73 ஓட்டங்களை பகிர்ந்தது இந்த ஜோடி. சங்காவின் ஆட்டம் 49 ஓட்டங்களுடன் முடிவுக்கு வந்தது. முடிவுக்கு கொண்டு வந்த அப்பிரிடி, 300 ஆவது விக்கெட்டுக்களை விழ்த்திச் சர்வதேச அரங்கில் புதுச்சாதனை. நம்பிக்கை இழந்தனர் இலங்கை ரசிகர்கள். வந்த பெரேரா அதிரடி காட்ட பரபரப்பாகியது ஆட்டம். அக்தர் பந்தில் பெரேரா அடித்த அடி தவறவிட்டது பாக். உற்சாக வெள்ளத்தில் மிதந்தது இலங்கை ரசிகர்கள். அடுத்த பந்திலேயே ஆட்டமிழந்தார் பெரேரா. மீண்டும் சோர்ந்தது இலங்கை ரசிகர் பட்டாளம். குலசேகர வந்து மிரட்டினார் பாகிஸ்தான் பந்துகளை. மாறியது ஆட்டத்தின் போக்கு. தொற்றியது பரபரப்பு. யார் கைக்கும் வெற்றி மாறலாம். பரபரப்பாகியது ஆட்டம். அதனை தகர்த்தெறிந்தது உமர் குல் பந்து. இலங்கையின் தோல்வியுடன் முடிவுக்கு வந்தது ஆட்டம்.

சிறப்பாய் சுழற்றினார் பந்தை, அப்பிரிடி. கைப்பற்றினார் நான்கு விக்கெட்டுக்களை கூடவே ஆட்ட நாயகன் விருதையும்.

## அணிகளின் நிலைகள்

| பிரிவு A | M | W | L | Pt | N/R |
|---|---|---|---|---|---|
| பாகிஸ்தான் | 2 | 2 | 0 | 4 | +2.160 |
| ஆஸ்திரேலியா | 2 | 2 | 0 | 4 | +1.813 |
| இலங்கை | 2 | 1 | 1 | 2 | +1.990 |
| நியூஸிலாந்து | 2 | 1 | 1 | 2 | +1.507 |
| சிம்பாப்வே | 1 | 0 | 1 | 0 | -1.820 |
| கனடா | 1 | 0 | 1 | 0 | -4.200 |
| கென்யா | 2 | 0 | 2 | 0 | -4.897 |

| பிரிவு B | M | W | L | Pt | N/R |
|---|---|---|---|---|---|
| இந்தியா | 1 | 1 | 0 | 2 | +1.740 |
| தென்னாபிரிக்கா | 1 | 1 | 0 | 2 | +0.766 |
| இங்கிலாந்து | 1 | 1 | 0 | 2 | +0.242 |
| பங்களாதேஷ் | 2 | 1 | 1 | 2 | -0.600 |
| நெதர்லாந்து | 1 | 0 | 1 | 0 | -0.242 |
| அயர்லாந்து | 1 | 0 | 1 | 0 | -0.540 |
| மே.தீவுகள் | 1 | 0 | 1 | 0 | -0.766 |

M போட்டி L தோல்வி N/R சராசரி
W வெற்றி Pt புள்ளிகள்

## 2011ஆம் ஆண்டு உலகக் கிண்ண பத்தாவது ஆட்டம்

ஆட்டம்: இலங்கை Vs பாகிஸ்தான் நாணயச் சுழற்சி: பாகிஸ்தான்
முடிவு: பாகிஸ்தான் 11 ஓட்டங்களால் வெற்றி ஆட்டநாயகன்: அப்பிரிடி

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| அஹமட் | c சங்கக்காரா b பெரேரா | 13 | 23 | 2 | 0 |
| மொஹமட் | Runout (ஹேரத்/ஜெயவர்த்தன/சங்கக்காரா/முரளி) | 32 | 32 | 4 | 1 |
| கம்ரான் அக்மல் | st சங்கக்காரா b ஹேரத் | 39 | 48 | 5 | 0 |
| யுனிஸ் கான் | c ஜெயவர்த்தன b ஹேரத் | 72 | 76 | 4 | 0 |
| மிஷ்பா – உல்ஹக் | ஆட்டமிழக்கவில்லை | 83 | 91 | 6 | 0 |
| உமர் அக்மல் | c டில்ஷான் b முரளிதரன் | 10 | 15 | 1 | 0 |
| சயீட் அப்பிரிடி | b டில்ஷான் b மத்தியூஸ் | 16 | 12 | 3 | 0 |
| அப்துல் ரஷாக் | c sub (கப்புக்கெதர) b பெரேரா | 03 | 04 | 0 | 0 |
| உமர் குல் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| அபதுர் ரெகிமான் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| சொலைப் அக்தர் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| உதிரிகள் | (lb 4, w 5) | 09 | | | |

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| குலசேகரா | 10 | 64 | 0 | 1 |
| பெரேரா | 09 | 62 | 2 | 0 |
| மத்தியூஸ் | 10 | 56 | 1 | 0 |
| முரளிதரன் | 10 | 35 | 1 | 0 |
| ஹேரத் | 10 | 46 | 2 | 0 |
| டில்ஷான் | 10 | 10 | 0 | 0 |

TOTAL - 277/7 (50)
1-28(அஹமட்), 2-76(மொஹமட்), 3-105(கம்ரான் அக்மல்), 4-213(யுனிஸ் கான்), 5-238(உமர் அக்மல்), 6-267(சயீட் அப்பிரிடி), 7-277(அப்துல் ரஷாக்).

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| தரங்க | c அப்பிரிடி b மொஹமட் | 33 | 43 | 6 | 0 |
| டில்ஷான் | b அப்பிரிடி | 14 | 55 | 5 | 0 |
| சங்கக்காரா | c அஹமட் b அப்பிரிடி | 49 | 61 | 2 | 1 |
| ஜெயவர்த்தனா | b சொலைப் அக்தர் | 02 | 10 | 0 | 0 |
| சமரவீரா | st கம்ரன் அக்மல் b அப்பிரிடி | 01 | 04 | 0 | 0 |
| சாமரசில்வா | st கம்ரன் அக்மல் b அப்துர் ரெகிமான் | 57 | 78 | 5 | 0 |
| மத்தியூஸ் | c அஹமட் b அப்பிரிடி | 18 | 20 | 2 | 0 |
| பெரேரா | b சொலைப் அக்தர் | 08 | 06 | 1 | 0 |
| குலசேகர | c உமர் அக்மல் b உமர் குல் | 24 | 14 | 2 | 1 |
| ஹேரத் | ஆட்டமிழக்கவில்லை | 04 | 10 | 0 | 0 |
| முரளிதரன் | ஆட்டமிழக்கவில்லை | 00 | 01 | 0 | 0 |
| உதிரிகள் | (b 1, lb 10, w 16, nb 2) | 29 | | | |

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| சொலைப் அக்தர் | 10 | 42 | 2 | 0 |
| அத்துல் ரஷாக் | 05 | 23 | 0 | 10 |
| உமர் குல் | 09 | 60 | 1 | 0 |
| மொஹமட் | 08 | 33 | 1 | 0 |
| சயீட் அப்பிரிடி | 10 | 34 | 4 | 4 |
| அப்துர் ரெகிமான் | 10 | 63 | 1 | 1 |

TOTAL - 266/9 (50)
1-76(தரங்க), 2-88(டில்ஷான்), 3-95(ஜெயவர்த்தனா), 4-96(சமரவீர), 5-169(சங்கக்காரா), 6-209(மத்தியூஸ்), 7-232(பெரேரா), 8-233(சில்வா), 9-265(குலசேகர).

c - பிடியெடுப்பு b - பந்துவீசியவர் st - ஸ்ரொம்

Watch cricket on LCD TV
EUROSTAR
Live your Life

CONSUMER ELECTRONICS, HOME & KITCHEN APPLIANCE
UKAAYE (PVT) LTD.
No. 216A, Sea Beach Road, Colombo 11
Tel: 011-2323646 Fax: 011-2459599 e-mail: ukaayece@sltnet.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சாதிக்கப் போவது யார்?

-அருண்மொழி-

எட்டு ஆண்டுகளின் பின்னர் உலகக் கிண்ண ஆட்டத்தில் இந்திய-இங்கிலாந்து அணிகள் மோதுகின்றன. ஆட்டம் பெங்களூரில் 2.30 மணிக்கு இன்று ஆரம்பமாகின்றது. 2003 ஆம் ஆண்டு ஆபிரிக்கக் கண்டத்தில் இடம்பெற்ற உலகக் கிண்ண ஆட்டத்திலேயே இவை இறுதியாக மோதிக்கொண்டன. அந்த ஆட்டத்தில் இந்திய அணி 82 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

2007ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டிகளில் இந்திய அணி முதல் சுற்றுடன் வெளியேறியதால் இங்கிலாந்து அணியை எதிர்கொள்வதற்கான வாய்ப்புக் கிடைக்கவில்லை. இந்தமுறை ஒரே குழுவில் இரண்டு அணிகளும் இடம் பிடித்திருப்பதால் எட்டு ஆண்டுகளின் பின்னர் மீண்டும் மோதுவதற்கான வாய்ப்புக் கிடைத்துள்ளது. அத்துடன் இந்தியா தன்சொந்த மண்ணில் இங்கிலாந்தை எதிர்க்கின்றது. இதனால் இந்த ஆட்டத்திற்கான ரிக்கெட்டுக்கள் அனைத்தும் விற்றுத் தீர்ந்துள்ளன.

இந்த ஆட்டத்தில் வெல்லப் போவது யார்? என்பதே அடுத்த எதிர்பார்ப்பு. இதற்குப் பெரும்பாலான ரசிகர்களின் தீர்ப்பு இந்தியாவின் பக்கமே இருக்கின்றது.

இந்தியா இந்த ஆட்டத்தில் வெல்லும் எனப் பலரும் எதிர்பார்ப்பதற்கு காரணங்களும் உண்டு. உலகக் கிண்ண முதலாவது ஆட்டத்தில் இந்திய அணி பங்களாதேஷ் அணிக்கு எதிராக பலமான வெற்றியைப் பதிவு செய்துள்ளது.

இங்கிலாந்து அணியோ கத்துக்குட்டி நெதர்லாந்தை 6 விக்கெட்டுக்களால் மிகுந்த பிரயத்தனத்தின் மத்தியில் வென்றது.

இந்திய அணியின் துடுப்பாட்ட வரிசை பலமானதாகவே இருக்கின்றது. ஆரம்பம் முதல் இறுதிவரை எதிரணியைத் திணறடிக்கும் வகையிலேயே இந்தியாவின் துடுப்பாட்டம் அமைந்திருக்கின்றது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான சச்சின் - சேவாக்கின் ஆட்டம் இன்றும் சிறப்பு.

சேவாக், பங்களாதேஷுக்கு எதிரான முதலாவது ஆட்டத்தில் அதிரடியாய் 175 ஓட்டங்கள் குவித்தார். அவர் தனது அதிரடியில் திறமையாய் இருக்கின்றார் என்பதையே எடுத்துக்காட்டுகின்றது.

மறுபுறம் ஹோலி, தனது திறமையான ஆட்டத்தின் மூலம் உலகக் கிண்ண கன்னிச் சதத்தினை பங்களாதேஷுக்கு எதிராகப் பெற்றார். இவ்வாறு இந்தியாவின் துடுப்பாட்ட வரிசையின் பலம் நீண்டு செல்கின்றது.

மறுபுறம் இந்தியாவின் பந்து வீச்சு தேய்ந்து செல்கின்றது. பங்களாதேஷுக்கு எதிரான ஆட்டத்தில் இந்திய அணியின் பந்து வீச்சு பலவீனமானதாகவே காணப்பட்டது. பங்களாதேஷ் அணி இந்தியாவின் பந்து வீச்சை சமாளித்து 283 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. இது இந்திய அணியின் பந்து வீச்சில் முன்னேற்றம் தேவையென்பதையே எடுத்துக்காட்டுகின்றது.

இங்கிலாந்து அணியினைப் பொறுத்தவரையில் அந்த அணியின் துடுப்பாட்டம், பந்து வீச்சு என்பன மத்திமமான நிலையிலேயே உள்ளன. இரண்டிலுமே முன்னேற்றம் தேவையாகவுள்ளது.

நெதர்லாந்து அணியுடனான ஆட்டத்திலும் இங்கிலாந்து அணியின் செயற்பாடு சொல்லும்படியாக இல்லை.

கத்துக்குட்டி அணியான நெதர்லாந்து அணியினையே இங்கிலாந்து போராடித்தான் வெற்றிபெற்றது எனில் இந்தியாவுடனான ஆட்டத்தில் அந்த அணியின் வெற்றி வாய்ப்புக் குறைவாகவே இருக்கின்றது.

இருப்பினும் நெதர்லாந்து அணியுடன் இங்கிலாந்து அணி போராடி வெற்றி பெற்றதைக் கொண்டு இந்திய அணி இங்கிலாந்து அணியை குறைத்து மதிப்பிடுமேயானால் அது இந்திய அணிக்குப் பாதகமாகி விடும்.

எனவே இந்த ஆட்டத்தில் எந்த அணி வெற்றிபெறப் போகும் என்பதை பொறுத்துத்தான் பார்க்கவேண்டும்.

## மாலைதீவு அதிபர், பாக். உயரதிகாரிகள் நேற்றைய ஆட்டத்தை நேரடியாக ரசித்தனர்

இலங்கை - பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான உலகக் கிண்ண பத்தாவது ஆட்டம் கெத்தாராம மாவத்தையில் உள்ள ஆர்.பிரேமதாஸ விளையாட்டரங்கில் நேற்று இடம் பெற்றது.

இந்த ஆட்டத்தினைக் காண்பதற்காக ஆசிய மற்றும் மேற்குலக ராஜதந்திரிகள் வருகை தந்திருந்தனர்.

மாலைதீவு அதிபர் மொஹமட் நஸீர் ஆட்டத்தினை நேரடியாகச் சென்று பார்வையிட்டார். இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்தித்த பின்னர் ஆட்டத்தினைக் காண்பதற்காக மாலைதீவு சென்றிருந்தார்.

இவருடன் விளையாட்டுத்துறை அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே, நாடாளுமன்ற உறுப்பினர் அஸ்வர், கீதாஞ்சலி குணவர்த்தன ஆகியோரும் சென்றிருந்தனர்.

மேலும் இலங்கைக்கான பாகிஸ்தான் தூதுவர் சிமாபி இலாகி பால்விச், அவருடன் பாகிஸ்தான் செனட் சபை உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரும் ஆட்டத்தினை நேரடியாகச் சென்று பார்வையிட்டனர்.(15)

## வாட்டி வதைக்கின்றது காயங்கள் வீரர்கள் திரும்புகின்றனர் நாடுகளுக்கு

உலகக் கிண்ணப் போட்டிகள் ஆரம்பித்து ஒரு வாரம் கடந்துவிட்டது. இந்த ஒரு வாரகாலப்பகுதியினுள் பலஆட்டங்கள் நிறைவடைந்திருக்கின்றன. அதனுடன் சேர்த்து பல கிரிக்கெட் வீரர்களின் ஆட்டமும் முடிவுக்கு வந்திருக்கின்றது.

காயம் காரணமாக பல அணிகளின் முன்னணி வீரர்கள் நாட்டுக்குத் திரும்பவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

ஆஸ்திரேலிய அணியின் முன்னணி வேகப்பந்துவீச்சாளர்களுள் ஒருவரான டக்பொலஞ்சர் கைவிரலில் ஏற்பட்ட காயம் காரணமாக நாடு திரும்பியுள்ளார்.

இவரது காயத்துக்கு சத்திர சிகிச்சை செய்யவேண்டியிருப்பதனால் இந்த உலகக் கிண்ணத் தொடரில் பொலஞ்சர் பங்கேற்கும் வாய்ப்புக்கள் அற்றுப்போயுள்ளன. ஆஸ்திரேலிய அணியில் ஏற்கனவே மைக்கல் ஹஸி, நதன் ஹரிஸ் உள்ளிட்ட முன்னணி வீரர்கள் காயம் காரணமாக போட்டிகளில் பங்கேற்கவில்லை.

இந்த நிலையிலேயே டக்பொலஞ்சரும் காயம் காரணமாக நாடுதிரும்பியுள்ளார்.

மேற்கிந்தியத் தீவுகளின் சகலதுறை ஆட்டக்காரர் டுவையின் பிராவோ தென்னாபிரிக்க அணியுடனான ஆட்டத்தின் போது, காயமடைந்தார். இவர் நான்கு வாரகாலம் ஓய்வெடுக்க வேண்டுமென வைத்தியர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.

எனவே பிராவோவும் உலகக் கிண்ண லீக் ஆட்டங்களில் பங்கேற்பது சாத்தியமில்லாமல் போய்விட்டது. ஏற்கனவே பரத், விக்கெட் காப்பாளர் போச் ஆகியோர் காயம் காரணமாக நாடு திரும்பியுள்ளனர்.

இவையனைத்தும் அந்தந்த நாடுகள் இனிப் பங்கேற்கும் போட்டிகளில் முக்கிய தாக்கத்தினைச் செலுத்தும்.

உலகக் கிண்ண ஆட்டங்கள் ஆரம்பித்து ஒரு வாரம் முடிவுற்ற நிலையிலேயே இவ்வாறு வீரர்கள் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

தொடர்ந்து ஆட்டங்கள் இடம் பெறுவதால் இன்னும் பல முன்னணி வீரர்கள் காயம் காரணமாக தொடரில் தொடர்ந்து ஆடமுடியாத சூழ்நிலை ஏற்படத்தான் போகின்றது. (15)

## இந்தியாவைச் சந்திக்கத் தயார்

இந்தியத் துடுப்பாட்ட வீரர்கள் மிகத் திறமையானவர்கள். எனவே நாங்கள் வகுத்துள்ள திட்டத்தை அவர்களுக்கு எதிராக செயல்படுத்துவோம். இந்திய மைதானங்கள் சுழற்பந்து வீச்சுக்குச் சாதகமாக இருப்பதனால், எல்லா அணிகளுக்குமே சோதனையாக அமையும்.

எல்லா ஆட்டங்களுமே எங்களுக்கு முக்கியம். இந்தியாவை அதன் சொந்த மண்ணில் எதிர்கொள்வது என்பது மிகப் பெரியவிடயம்.

இருப்பினும் அதைப்பற்றி நாங்கள் சிந்திப்பதில்லை.

ஒவ்வொரு பந்துவீச்சாளர் மற்றும் துடுப்பாட்ட வீரர்களுக்கு நாங்கள் சில திட்டங்களை வைத்துள்ளோம். ஆனாலும் அது எந்தளவுக்குக் கைகொடுக்கும் என்பது ஆட்டத்தின் போது தான் தெரியும் என்கிறார் இங்கிலாந்தின் சகலதுறை ஆட்டக்காரர் ரவி போப்ரா.



தற்போது விற்பனையில்...



தற்போது விறுவிறுப்பாக நடைபெற்றுக்கொண்டிருக்கும் உலகக்கிண்ணக் கிரிக்கெட் சுற்றுப்போட்டியை மகிழ்வுடன் வண்ணத் திரையில் காண்பதற்கு Sony LCD, LED 22", 26",32", 40"அளவு தொலைக்காட்சிப் பெட்டிகளை நியாயமான விலையில் இரண்டு வருட உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ள

வி.கே.இராசரத்தினம்
இல.01, C, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

உதயனின் கிரிக்கெட் கொண்டாட்டம் 2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## உலகக் கிண்ண வாசகர் கணை

## உதயனின் உலகக் கிண்ண கொண்டாட்டம் 2011

# எதிரிகளின் பலத்தை துவைத்திடுமா? இலங்கையின் துடுப்பாட்ட வரிசை

யோ.டன்ஸ்ரன்
சில்லாலை

உலகநாடுகளில் பெரும் வரவேற்பைப் பெற்ற துறைகளில் விளையாட்டுத்துறையும் ஒன்றென்பதை எதிர்க்கக்கூடிய கருத்துக்கள் எங்குமில்லை. அந்த வகையில் உலகமக்களின் ஆதரவைப் பெற்ற விளையாட்டுக்களில் ஒன்று கிரிக்கெட் போட்டி. அது ரசிகர்களினாலும் எதிர்பார்க்கப்படுவது என்பதிலும் ஐயமில்லை.

ஆம்! இந்த முறையும் ரசிகர்களின் ஆதரவுகளுடன் பல அணிகள் களமிறங்குகின்றன. பயிற்றப்பட்ட உத்வேகத்தில் பயிற்சி ஆட்டத்தில் சில அணிகள் சாதித்தும் உள்ளன. இந்த வகையில் உலகக் கிண்ணமானது. ''இலங்கை, இந்தியா பங்களாதேஷ்'' ஆகிய நாடுகளில் நடைபெற்று வருகின்றது. ஆகவே குமார் சங்கக்காராவின் தலைமையில் களமிறங்கும் எம் தாய் நாட்டு அணி தம் துடுப்புக்கரங்களினை வழமை போல காட்டுமா? என்பதனைக் காத்திருந்து நோக்கவேண்டியதோடு இலங்கை அணி பற்றியும், அது எதிர்கொள்ளவுள்ள அணிகள் பற்றியும் நாம் கருத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் பற்பல கோணங்களில் அமையப்பெற்றுள்ளன.

இலங்கை அணியின் நிலைமை என்பதற்கு சில விடயங்கள் உள்ளடக்கி விபரிக்கலாம். குறிப்பாக அணித்தெரிவு என்பது முக்கியமானதாக இந்த முறை அமையப் பெற்றாலும் இந்த அணியில் துடுப்புவேகம் ஜெயசூரியா, சமிந்த வாஸ் ஆகியோர் இடம்பெறாமை இலங்கைக் கிரிக்கெட் ரசிகர்கள் மத்தியில் பேரிடியாக அமையப் பெற்றுள்ளது. ஆயினும் கடந்தகால நிலைப்பாடே இவர்களின் நிலைக்குக் காரணமாய் ஆனதோ என்பதை விவரிக்க முடியாத நிலையில் ரசிகர்கள் இருந்தாலும், மறுபுறத்தில் ரிக்கெட் கொள்வனவில் அவர்களின் ஆர்வம் அதிகதிகமாய் இருக்கின்றமையும் குறிப்பிடத்தக்கது.

இருந்தும் இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரரும் 1996ஆம் ஆண்டு இலங்கை உலகக் கிண்ணத்தை வென்றபோது அணியில் இடம்பிடித்த வருமாகிய அர்ஜுன ரணதுங்க இலங்கையின் உலகக் கிண்ணக் கிரிக்கெட் அணி தரம் அற்றது என்பதை விலக்கப்பட்ட இரு வீரர்களை மேற்கோள்காட்டி மறைமுகமாக விளக்கியிருந்தார். ஆயினும் தற்போதைய கிரிக்கெட் அணித்தலைவர் ஹில்டன் ஹோட்டலில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் தற்போதைய அணி உலகக் கிண்ணத்திற்கு மிகப் பொருத்தமானது எனக் கூறியிருக்கின்றார். ஆகவே இவரின் கூற்றை வைத்து நோக்குகையில் தற்போதைய அணியானது நல்ல முறையில் பயிற்சி ஆட்டத்தின்போது மேற்கிந்தியத் தீவினை வெற்றி கொண்டமை நல்லதொரு சான்றாகும். ஆகவே இந்தப் போட்டிக்காக தற்போதைய அணியினரை வைத்து நோக்கினால் கொஞ்சம் பலம் தெரிகின்றது. இன்னுமாக இந்த முறை இலங்கை மைதானங்களில் போட்டி நடைபெறுகின்றமையும் மற்றுமோர் சிறப்பான விடயம்.



எவ்வாறானதொரு நிலை இருப்பினும் குமார் சங்கக்காரா தலைமயிலான குழுவைப் பற்றி விமர்சிக்க முடியாது. காரணம் அவர்களின் கடந்தகால துடுப்புக் கரம் குறிப்பாக டில்ஷான், உப்புல் தரங்க ஆகியோரது நிதானமான ஆட்டம் சிறப்பு வாய்ந்தது. அதாவது சிறப்பானதொரு தொடக்க ஆடுனர்களாக இருப்பதோடு அனுபவ வீரர்களும் கூட. இவர்களின் ஆட்ட நிலை கடந்த வருடம் நடைபெற்ற ரி-20 போட்டியிலும் நல்ல முறையிலேயே அமையப்பெற்றது. மஹேல ஜெயவர்த்தன, கப்புக்கெதர ஆகியோரும் நிதானமானதொரு ஆட்டக்காரர்களானாலும் ஒரு சில சந்தர்ப்பத்தில் தடுமாறியுள்ளனர் என்பது உண்மை. அதற்காக இவர்களை குறைத்து எண்ணி விடமுடியாது. மற்றும் இது போலவே இடைநிலை ஆட்டத்தை ஆடிக் கொடுப்பவர்கள், மற்றும் அணியின் பந்து வீச்சை நோக்குகையில் எதிரிகளும் நாமும் தப்பாக எடை போட்டுவிட முடியாது. முக்கியமாக சுழல் நாயகன் முத்தையா முரளிதரன், வேகப்பந்து மன்னன் லசித் மலிங்க, நுவான் குலசேகர ஆகியோர் இம்முறை அணியை நல்ல முறையில் நகரவிடுவார்கள் என்பதோடு தமது திறமையை எதிரிக்கு காட்ட முயல்வர் என்பதும் உறுதி.

கடந்த 2007ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டியில் இறுதிவரை முன்னேறி பலமறிந்து எதிர் அணிகளின் பலத்தை துடுப்புக் கரங்கள் மூலம் துவைத்த அனுபவமும் உள்ளதால், இந்த முறை அணியின் நிலை விறுவிறுப்பாய் அமையும்.

இவற்றோடு முக்கிய எதிர்ப்புள்ளிகளாகிய இந்தியா, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளோடு போட்டியிடும் நிலை மாறுபட்டதாய் அமையும். மேலும் ரசிகர்களின் ஆதரவைப் பெற எதிர் நோக்கியிருந்த இலங்கை அணிக்கு இந்த முறை அந்த ஆதரவுக்குக் குறையில்லை.

இயற்கையின் திடீர் மாறுபட்ட செயற்பாடு இலங்கைக்கு கைகொடுக்குமா? என்பது கேள்விக்குறி. ஆகவே 1996 இல் அர்ஜுன ரணதுங்க தலைமையில் நாட்டிற்கு கொண்டு வரப்பட்ட உலகக் கிண்ணம் அன்று உலகை எங்ஙனம் இலங்கை மேல் திசை திருப்பியதோ இந்த முறையும் சங்கக்கார தலைமையிலான அணியும் அவ்வாறு செயற்பட்டு இலங்கையிலேயே கிண்ணத்தைத் தக்க வைத்துக்கொள்ளவேண்டும். இன்னும் வீரத்தையும் வெளிப்படுத்தலாம் என்பது வீரர்களின் கையிலேயே தங்கியுள்ளதோடு ரணதுங்கவின் கிண்ணத்திற்கு (வில்ஸ்)சந்தர்ப்பம் சரியாகினால் ஒரு ஜோடிக் கிண்ணம் ஆகலாம்.



**பரிசுக் கூப்பன்களை எமது முகவர்களிடம் வைக்கப்பட்டுள்ள அதற்கான பெட்டியில் சேர்க்கலாம்**

துர்க்கா புத்தகசாலை
சுன்னாகம்.

ரூபன் பல்பொருள்
அளவெட்டி.

இணுவில் பத்திரிகை
முகவர்
இணுவில்.

இந்திரா பல்பொருள்
வாணிபம்
வேலணை.

அம்பாள் பல்பொருள் வாணிபம்
புங்குடு தீவு.

கந்தசாமி கடை
காரைநகர்.

சிறிமுருகன் களஞ்சியம்
மூளாய் வீதி,
வட்டுக்கோட்டை

மலர் கடை
இளவாலை.

நகுலேந்திரன் பல்பொருள்
வாணிபம்.
முழங்காவில்.

அன்பரசன் புத்தகசாலை
ஒட்டிசுட்டான்.

மதுரா ரெயிலர் கடை
நாச்சிக்குடாச் சந்தி
முன்பாக.

உதயன் அலுவலகம்
கரடிப்போக்குச் சந்தி.

சூரியா பார்மசி.
அச்சுவேலி.

கிருபா போட்டோ
மல்லாகம்.

**பருத்துறையில்**

கனன் போட்டோ
கவிதா ரெடர்ஸ்

**நெல்லியடியில்**

மொடோன் ஸ்ரோஸ்
ராஜலக்சுமி புத்தகசாலை
சதா பொன்ஸ்

**மந்திகையில்**

நாவலர் புத்தகசாலை

**உடுப்பிட்டியில்**

ரஜினி பீடா

**வல்வெட்டியில்**

கலைச்சோலை பான்சி கவுஸ்

**தென்மராட்சியில்**

அருள் விநாயகர் புத்தகசாலை
மணியம் ஸ்ரோஸ்
கஜனன் மல்ரி சேர்விஸ் சென்ரர்
அல்ரை ஆர்.டி.
உதயன் காரியாலயம்
சிறீராம் மல்ரி சென்ரர்

**கிளிநொச்சியில்**

பிள்ளையார் புத்தகசாலை
அறிவுமதி புத்தகசாலை
சேமசுந்தரம் மல்ரி சென்ரர்
புவனேஸ்வரி புத்தகசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோல்விக்கு நானே காரணம்


போர்டர்பீல்ட்

பங்களாதேஷிற்கு எதிரான கிரிக்கெட் போட்டியில், 27 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அயர்லாந்து அணி தோல்வியடைந்ததற்கு, தான் தான் முழுக் காரணம் என்று அயர்லாந்து அணித் தலைவர் வில்லியம் போர்டர்பீல்ட் தெரிவித்துள்ளார். ஆட்டம் முடிவடைந்த பின்னர், பத்திரிகையாளர்கள் சந்திப்பில் அவர் கூறியதாவது,

இந்த ஆட்டம் உலகக் கிண்ணத் தொடரில் எங்களின் முதல் ஆட்டம் என்றும், இந்த ஆட்டத்தில் எங்கள் அணி வீரர்கள் திறம்படச் செயற்பட்டனர். அணியின் சிறப்பான பந்துவீச்சு மூலம் 205 ஓட்டங்களுக்குள் பங்களாதேஷை சுருட்டினோம். 206 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய நாங்கள் 178 ஓட்டங்களுக்குள் ஆட்டமிழந்தோம். ஆரம்பத் துடுப்பாட்ட வீரராகக் களமிறங்கிய நான், 20 ஓட்டங்களை மட்டுமே எடுத்தேன். தவறு என்னுடையது தான். இந்தத் தோல்விக்கு நான் யாரையும் காரணப்படுத்த விரும்பவில்லை என்று அவர் கூறினார்.

பங்களாதேஷ் அணித் தலைவர் சகிப் அல் ஷசன் கூறியதாவது,

எங்களது முதல் ஆட்டத்தில் இந்திய அணியிடம் தோல்வியடைந்தோம். இந்த ஆட்டத்தில் வெற்றி பெற்றுள்ளோம். வெற்றியின் பாதையில் பயணிக்கத் தொடங்கியுள்ள நாங்கள் தொடர்ந்து இந்த வெற்றிப் பாதையில் பயணிப்போம் - என்றார்.(15)

# பலம் வாய்ந்த அணிகளுக்கு எதிராக 4 பந்துவீச்சாளர்கள் தேவை - இம்ரான்

உலகக் கிண்ணத்தில் பலம் வாய்ந்த அணிகளுக்கு எதிரான ஆட்டத்தில் 4 சிறப்பு பந்துவீச்சாளர்களுடன் பாகிஸ்தான் களமிறங்க வேண்டும்.

இவ்வாறு அந்த அணியின் முன்னாள் அணித் தலைவர்கள் இம்ரான்கான், வசிம் அக்ரம் ஆகியோர் அறிவுரை கூறியுள்ளனர்.

கண்டிப்பாக 6 பந்துவீச்சாளர்களுடன் களமிறங்குவது அவசியம். அவர்களில் 4 பேர் சிறப்புப் பந்துவீச்சாளர்களாக இருக்க வேண்டும். ஏனெனில் இப்போது விக்கெட்டுகளை வீழ்த்தும் அணிகளே வெற்றிபெறுகின்றன என இம்ரான்கான் தெரிவித்துள்ளார்.

கென்யாவுக்கு எதிரான வெற்றி பாகிஸ்தான் வீரர்களிடையே பெரிய நம்பிக்கையை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது. அதே சமயம் அணி நிர்வாகம் துடுப்பாட்டம் மற்றும் பந்துவீச்சில் சமபலம் நிறைந்த அணியைத் தேர்வு செய்ய வேண்டும். 4 சிறப்பு பந்துவீச்சாளர்களை சேர்ப்பதற்காக ஒரு துடுப்பாட்ட வீரரை இழப்பதில் தவறில்லை. ஆடுகளங்கள் துடுப்பாட்ட வீரர்களுக்குச் சாதகமாக இருக்கும் என்பதால் இரண்டு சகலதுறை ஆட்டக்காரர் சுழற்பந்து வீச்சாளர்களுடன் களமிறங்குவது நல்லது. காலிறுதிக்கு முன்னேறுவதில் எவ்வித சவாலும் இருப்பதாகத் தெரியவில்லை. காலிறுதியில் இருந்துதான் உண்மையான போட்டியே. அதனால் அதற்கு முன்பு ஆடும் பதினொரு பேரைச் சரியாக தேர்வு செய்து கொள்ள வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

அக்ரம் கூறியிருப்பதாவது:

ஹபீஸ் அல்லது ஷெஸத்துக்குப் பதிலாக கம்ரான் அக்மலை தொடக்க ஆட்டக்காரராக களமிறக்கலாம். 3ஆவதாக யுனிஸ் கானையும், அதனைத் தொடர்ந்து அப்துல் ரசாக்கையும் களமிறக்கலாம். ரசாக்கை 8ஆவது இடத்தில் களமிறக்குவது தேவையற்றது. ஏனென்றால் கடைசி ஓவர்கள் அவருக்குப் போதுமானவையாக இல்லை.

பலம் வாய்ந்த அணிகளுக்கு எதிராக 3 பந்துவீச்சாளர்களுடன் களமிறங்கினால் கடுமையாகப் போராட வேண்டியிருக்கும் - என்றார். (15)

## நாளைய ஆட்டம்

டெல்லி, பி.ப. 2.30

நெதர்லாந்து – மே.தீவுகள்



# சேவாக்கிற்கு பயிற்சியின் போது காயம்

பயிற்சியின்போது இந்திய வீரர் சேவாக்கின் விலா எலும்புப் பகுதியில் பந்து தாக்கியதில் காயமடைந்துள்ளார்.

பெங்களூரில் உள்ள தேசிய கிரிக்கெட் அக்கடமியில் இந்தியக் கிரிக்கெட் வீரர்கள் பயிற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்திய வீரர்களுக்குத் துடுப்பாட்டப் பயிற்சி வழங்கப்பட்டது. முதலில் துடுப்பெடுத்தாட வந்த சேவாக், உள்ளூர் வீரர் ஒருவரின் பந்தில் பயிற்சி மேற்கொண்டார். அப்போது திடீரென, சேவாக்கின் விலா எலும்புப் பகுதியில் பந்து தாக்கியது. இதனால் வலியால் துடித்த சேவாக், பயிற்சியிலிருந்து விலகினார். உடனடியாக இவரை, வீரர்கள் தங்கும் அறைக்கு அழைத்துச் சென்று பரிசோதித்தனர். இதில் அதிர்ஷ்டவசமாக பெரிய அளவில் காயம் எதுவும் ஏற்படவில்லை. சிறிது நேரம் கழித்து உடற்பயிற்சிக் கூடத்திற்கு சென்று பயிற்சி மேற்கொண்ட இவர், பின்னர் சக வீரர்களுடன் இணைந்து பயிற்சியை ஆரம்பித்தார்.

இதுகுறித்து இந்திய அணியின் முகாமையாளர் ரஞ்சிப் பிஸ்வால் கூறுகையில்,

அதிர்ஷ்டவசமாக சேவாக்கிற்கு காயம் எதுவும் ஏற்படவில்லை. இவர், இங்கிலாந்துக்கு எதிரான ஆட்டத்தில் நிச்சயம் பங்கேற்பார். தவிர இவருக்கு, 'ஸ்கான்' உள்ளிட்ட வேறு சிறப்புப் பரிசோதனைகள் எதுவும் தேவையில்லை - என்றார். (15)

## நாளைய ஆட்டம்

நாக்பூர், மு.ப. 9.30

கனடா – சிம்பாப்வே




## தினமொரு பரிசுப் போட்டி

நெதர்லாந்து - மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையிலான நாளைய (28.02.2011) ஆட்டத்தில் வெற்றி பெறும் அணி எது?

..........................................

பெயர் : ..........................................

தே.அ.இல : ..........................................

முகவரி : ..........................................

..........................................

இந்தக் கேள்விக்கான விடையை இதே கூப்பனில் எழுதி நாளை (28.02.2011) பிற்பகல் 2 மணிக்கு முன் தினமொரு பரிசு உதயன் பணிமனை, 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு தபாலிலோ அல்லது உதயன் அலுவலகத்தில் உள்ள இதற்கான பெட்டியிலோ சேர்க்கவும்.

தினமொரு பரிசுப் போட்டி
UTHAYAN IT ISLAND
CfiCT
GATEWAY CENTRE
JAFFNA
வழங்கும்
4½ லட்சம் ரூபா
பெறுமதியான பரிசுக் கூப்பன்கள்
48 பேருக்கு தலா 9 ஆயிரம் ரூபா பெறுமதியானவை

மாபெரும் காலிறுதிப் போட்டி
1ஆம் பரிசு
தொகையை முடிந்தால் கற்பனை செய்துபாருங்கள்

## மாபெரும் காலிறுதிப் போட்டி

காலிறுதி ஆட்டத்துக்குத் தகுதி பெறும் அணிகள் எவை?

1. .................. 5. ..................
2. .................. 6. ..................
3. .................. 7. ..................
4. .................. 8. ..................

பெயர் : ..........................................

தே.அ.இல. : ..........................................

முகவரி : ..........................................

..........................................

போட்டி முடிவுத் திகதி
10.03.2011

## மாபெரும் இறுதிப் போட்டி

உலகக் கிண்ணத்தை வெல்லும் அணி எது?

..........................................

போட்டியின் தொடர் ஆட்ட நாயகன் யார்?

..........................................

பெயர் : ..........................................

தே.அ.இல. : ..........................................


முகவரி : ..........................................

..........................................

போட்டி முடிவுத் திகதி
15.03.2011

கம்ப்யூட்டர் ருடே
வழங்கும்
தினமும் வெல்லும் ஒருவருக்கு
ஒரு வருடத்துக்கான
கம்ப்யூட்டர் ருடே இலவச சந்தா

இறுதிப் போட்டிக்கான
சிறப்பு பரிசு
EUROSTAR®
Live your Life®
CONSUMER ELECTRONICS, HOME & KITCHEN APPLIANCE




மாபெரும் இறுதிப் போட்டி
2ஆம் பரிசு
தாக்கங்கள்
மற்றும்
10 ஆறுதல் பரிசுக்கள்

## போட்டி விதிகள்

ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்பலாம். போட்டோ பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. தே.அ.அட்டை பெறும் வயதுக்குக் குறைந்தவர்கள் பெற்றோரின் தே.அ.அட்டை எண்ணைக் குறிப்பிடலாம். உதயன் மற்றும் உதயன் சார்ந்த நிறுவனங்களின் ஊழியர்களோ அவர்களது குடும்பத்தவர்களோ போட்டிகளில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள். நடுவர் குழுவின் தீர்ப்பே இறுதியானது. முடிவுகள் குறித்து எந்த விளக்கங்களுக்கும் தொடர்புகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. அனைத்து முடிவுகளும் ஏப்ரல் மாதம் 11ஆம் திகதி உதயனில் அறிவிக்கப்படும். சகல போட்டிகளுக்குமான பெயர்களை இடது மேல் மூலையில் குறிப்பிட்டு, உதயன் பணிமனை, 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது உதயன் அலுவலகத்தில் உள்ள இதற்கான பெட்டியில் சேர்க்கவும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயிற்சி வகுப்புகள் இன்று ஆரம்பம்

பச்சிலைப்பள்ளி அபிவிருத்திப் பேரவையின் ஏற்பாட்டில் பிரதேச இளைஞர், யுவதிகளுக்கு கணினி, தையல், ஆங்கில மொழி ஆகிய பயிற்சி வகுப்புகள் இன்று ஞாயிற்றுக்கிழமை 10 மணிக்குப் பேரவை அலுவலகத்தில் ஆரம்பமாகவுள்ளது. (ஒ-207)

# மரண அறிவித்தல்கள்

## நாகமணி இரத்தினவடிவு



இராமலிங்கம் வீதி, முடமாவடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகமணி இரத்தினவடிவு நேற்று (26.02.2011) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**449, இராமலிங்கம் வீதி,**
**முடமாவடி, நல்லூர்.**
**021 2222539**

**தகவல்:**
**சிவஞானம், ஜெகதீஸ்வரன்**
(வெள்ளை) (மகன்)

## வெள்ளையர் பிலிப்



கோப்பாயைப் பிறப்பிடமாகவும் மல்வத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட வெள்ளையர் பிலிப் நேற்று (26.02.2011) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வெள்ளையர் – எலிசம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற மாகிரட் – அக்கினேயின் அன்புக் கணவரும் அற்புதராஜா (சவூதி), வினோ, வினி (முன்பள்ளி ஆசிரியை, மல்வம்), விஜி, அன்றூ (மிருதங்க, தபேலா கலைஞர் – பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் லூசியா, சிவநேசன், மாசில் சுதர்சினி ஆகியோரின் அன்பு மாமனும் ஜறின், சியானி, லம்பேட், லக்சன், லக்சிகா, கீர்த்தனன், ஷேழினா, நிஷான், மிதுர்ஷன், சௌமியா, ஸ்ருதிகா, மிதுறிஷா ஆகியோரின் அன்புப் பேரனும் மரியநாயகத்தின் அன்புத் தம்பியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.02.2011) திங்கட்கிழமை காலை அவரது இல்லத்தில் நடைபெற்று மல்வம் திருக்குடும்ப ஆலயத்தில் அஞ்சலித் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்ட பின்னர் பிற்பகல் 2 மணியளவில் நல்லடக்கத்துக்காக மல்வம் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**வின்சன் கடையடி வீதி,**
**மல்வம், உடுவில்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## வர்த்தக ஊழியர்களுக்கு வியாழன் விடுமுறை

யாழ்ப்பாணம், பெப்.27

சிவராத்திரி தினத்தை ஒட்டி விரதமிருக்கும் வர்த்தக உரிமையாளர்கள் மற்றும் ஊழியர்கள் நன்மை கருதி மகா சிவராத்திரி தினத்துக்கு மறுநாள் வியாழக்கிழமை வர்த்தக ஊழியர்களுக்கு விடுமுறை வழங்குமாறு யாழ். வணிகர் கழகம் கேட்டுள்ளது. (ஒ-ஐ)

## முதியோர் இல்லத்தில் சிவராத்திரி விழா

யாழ்ப்பாணம்,பெப்.27

வழக்கம்பரை தொல்புரம் சிவபூமி முதியோர் இல்லத்தில் சிவராத்திரிதின சிறப்பு நிகழ்வுகள் எதிர்வரும் 2ஆம் திகதி புதன்கிழமை காலை 9மணிக்கு நடைபெறவுள்ளது.

தலைவர் ஆறு. திருமுருகன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வின்போது பன்னாகம் மெய்கண்டான் மகா வித்தியாலய மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெறும். (ற)

## மத்தியஸ்தர் சபை அமர்வு பிற்போடப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம்,பெப்.27

வலிகாமம் கிழக்கின் மத்தி யஸ்தர் சபை அமர்வு பிரதி ஞாயிற் றுக்கிழமை தோறும் முற்பகல் 10மணி முதல் பிற்பகல் 2மணிவரை நடைபெற்று வருகின்றது.

இந்த அமர்வு தவிர்க்க முடியாத காரணத்தால் இன்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெறமாட்டாது எனவும் எதிர்வரும் ஆறாம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம் பெறும் எனவும் வலிகாமம் கிழக்கு மத்தியஸ்தர் சபையின் தலைவர் எஸ்.தம் பித்துரை அறிவித் துள்ளார்.

(ற-313)


# வேலை வாய்ப்பு

**4 Ever Skin Naturals (Pvt) Ltd.**

நிறுவனத்தின் விற்பனை மேம்படுத்தலுக்காக பெண்கள் (Promotion Girls) கிளிநொச்சி, சாவகச்சேரி, கொடிகாமம், பருத்தித்துறை, நெல்லியடி, நல்லூர், யாழ்ப்பாணம், மானிப்பாய், சங்கானை ஆகிய பிரதேசங்களில் தேவைப்படுகின்றனர்.

சம்பள விவரங்கள் பேசித் தீர்மானிக்கப்படும்.
உடன் தொடர்புகொள்ளுங்கள்.

மேலதிக விவரங்களுக்கு:
Uthayakumar
தொ.பே: 0713809117

**Fine Selection**
No.77, K.K.S. Road,
Chunnakam.
T.P: 021 224 0005
0778689375


# மரண அறிவித்தல்

## திருமதி தெட்சணாமூர்த்தி தவமணி



சுன்னாகம் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் தற்போது கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட தெட்சணாமூர்த்தி தவமணி (25.02.2011) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை மற்றும் அன்னபாக்கியம் தம்பதியரின் மூத்த புதல்வியும் காலஞ்சென்ற தெட்சணாமூர்த்தியின் அன்பு மனைவியும், வாசுதேவன், மலர்ச்செல்வி, சகிலா ஆகியோ ரின் பாசமிகு தாயாரும் அருட்செல்வி, அமிர்தலிங்கம் (சிவா) ஆகியோரின் அன்பு மாமியாரும் மதுஷன், சுபஸ்திகா, அபினாஸ், அக்சிகன், அக்ஸ்வின் ஆகியோரின் பேர்த்தியும், புஸ்பகலாதேவி, யசோதா, வசந்தகுமார், பாலச்சந்திரன், தர்மராசா, காலஞ் சென்ற பாலகிருஸ்ணன் மற்றும் றஞ்சினிதேவி, குமுதாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் அவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.02.2011) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**ஸ்ரேசன் றோட்,**
**கோண்டாவில் மேற்கு,**
**கோண்டாவில்.**

**தகவல்:**
**மருமகன் சிவா மற்றும்**
**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்

## திருமதி சந்திராபதி தர்மலிங்கம்



வற்றாப்பளையைச் சேர்ந்த தர்மலிங்கம் சந்திராபதி 04.02.2011 வெள்ளிக்கிழமை லண்டனில் அகால மரணமடைந்தார்.

அன்னார் சபாபதி – சரஸ்வதி தம்பதியரின் பாசமிகு மகளும் காலஞ்சென்ற வைத்தியாம்பிள்ளை – தங்கம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும் காலஞ்சென்ற தர்மலிங்கத்தின் பாசமிகு மனைவியும் நந்தினி, கமலினி, சந்திரலிங்கம் (லண்டன்), சஞ்சயன் (வற்றாப்பளை), சஜீவன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயும் சுதாகரன், லக்கீஸ்வரன், நவநிதி (லண்டன்), பிரபாலினி (வற்றாப்பளை) ஆகியோரின் பாசமிகு மாமியும் நல்லபிள்ளை, குணசேகரம் (லண்டன்), தங்கமலர், கனகமணி, சந்திரசேகரம், செல்வகுமாரி, ராஜகுமாரி (ராஜி – கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் சஜீனா, கிஷாந், ஆதித்தன், ஈழவன், ஆருத்தன், தர்மவி, லக்ஷயா, தர்வின் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.02.2011) ஞாயிற்றுக்கிழமை லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**வற்றாப்பளை,**
**தொ.பே.: 021 320 8863**

**தகவல்:**
**சஞ்சயன், பிரபாலினி**
(மகன், மருமகள்)


## கடை வாடகைக்கு

254, ஸ்ரான்லி றோட்டில் ரயில் பாதைக்கு அருகில் உள்ள கடை வாடகைக்கு விடப்படும்.
தொடர்புகளுக்கு: பி.செல்வராணி, 52/2, வைமன் றோட், நல்லூர். தொலைபேசி இல. 021 222 2157

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கொக்குவில் கிழக்கு,
கோயில் வீதியில்
**4 பரப்புக் காணி தனி வீடு,**
நன்னீர் கிணறு மற்றும்
இதர வளங்களுடன் விற்பனைக்குண்டு.
**தொடர்பு : 0757219014**

## வேலை ஆள் தேவை

வீட்டு வேலை செய்யக்கூடிய
(பெண்) ஆண் தேவை.
கவர்ச்சிகரமான சம்பளம்
வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு: 0773086894

## வாடகைக்கு உண்டு

யாழ்.நகரில் பெரிய ஆஸ்பத்திரிக்கு பின்புறமாக ஸ்தாபனங்களுக்கு வியாபார நோக்கத்துக்கும் ஏற்ற 5 அடி பாதையுடன் 1200 சதுர அடிக்கு மேல் சகல வசதியுடன் கூடிய இடம் முதலாம் மாடியில் வாடகைக்கு உண்டு.
தொடர்பு:
**0777593794, 0777389799.**

## வீடு விற்பனைக்கு

தியேட்டர் வீதி, இணுவில் கிழக்கில் அமைதியான சூழலில் 4 பரப்புக் காணியுடன் கூடிய சகல வசதிகளும் நிறைந்த வீடு விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு:
0773604712, 021 5672567.

## SAN INTERNATIONAL Pvt (ltd)

*எமது சேவை உங்களுக்காக யாழ்.நகரில் ஆரம்பம்*

- Student Visa Arrangements for U.K. (March, April Intake)
- O/L உடன் UKBA Highly Trusted College இல் அனுமதிகள்
- Diploma, Degree Courses க்கான அனுமதிகள்
- U.K. இல் இருக்கும் எமது Staff மூலம் நேரடியாக Colleges admissions பெற்றுத் தரப்படும்.
- Filing ஒழுங்குகள் செய்து தரப்படும்.
- பகுதி நேர வேலை வாய்ப்புகள்.
- Sponsor வசதிகள்.
- Food and Accommodation வசதிகள்.

Note: April இன் பின் கட்டுப்பாடுகள் அறிமுகப்படுத்தப்படுவதால் அனுமதிகளுக்கு விரையுங்கள்.

மற்றும்..

**English Classes for**
Primary & Upper School Students,
School Leavers & Professionals
**By:** U.K. Qualified English Trained Teacher

From:
1st March
உங்கள் அனுமதிக்கு முந்துங்கள்

எமது ஏனைய சேவைகளையும் யாழ்ப்பாணத்தில் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.
Contact No: 021 222 3440 + 0774745642. No. 69, Arasady Road, Jaffna.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்

## குடாநாட்டுக் கல்விக்கு ஊட்டமளிக்கும் அரசாங்கத்தின் ஆரம்ப முயற்சி

குடாநாட்டில் - யாழ்ப்பாண நகரில் - நேற்றுமுன்தினம் இப்பிரதேசத்தின் கல்வி வளர்ச்சிக்கு உதவக்கூடிய அத்துறை சார்ந்த மூன்று நிலையங்கள் திறந்துவைக்கப்பட்டன.

தொழில்நுட்பவியல் கல்லூரிக்குப் புதிய வளாகம், தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவனத்தின் பிராந்திய நிலையம், யாழ். வேம்படி மகளிர் கல்லூரியின் புதிய வகுப்பறைத் தொகுதி ஆகியனவே அவையாகும்.

அமைச்சர் பஸில் ராஜபக்ஷவும், அமைச்சர் டலஸ் அழகப்பெருமவும் இந்த நிகழ்வுகளில் பிரதானிகளாகப் பங்குபற்றினர்.

அவர்கள் இருவரும், தமது உரைகளில் யாழ்ப்பாண மக்களின் கல்விப் பாரம்பரியத்தை விதந்து பேசியதோடு, அந்த நிலையை மீள உருவாக்கத் தமது அரசு உழைக்கும் என்று தெரிவித்தனர். அதற்கு முன்னோட்டமாகக் குறிப்பிட்ட மூன்று நிகழ்வுகளும் அமைவதாகக் கருத்து வெளியிட்டனர்.

தமது பிள்ளைகளின் எதிர்காலம் கல்வியிலேயே தங்கியுள்ளது என்பதனை இங்குள்ள பெற்றோர்கள் நம்புகின்றனர். அவர்கள் தமது பிள்ளைகளின் கல்வி நிலை குறித்தே அதிக அக்கறை கொண்டுள்ளார்கள். பிள்ளைகளின் எதிர்காலம் கல்வியில்தான் தங்கியுள்ளது எனக் கருதுகின்றனர் -

அதன் வெளிப்பாடாகவே பயங்கரமான யுத்தச் சூழலில் கூட, இங்கு கல்வி நிலையங்கள் இயங்கின; கற்றல் செயற்பாடுகள் தொடர்ந்த வண்ணம் இருந்தன - என்று அமைச்சர் அழகப்பெரும சிலாகித்துப் பேசியுள்ளார். குடாநாட்டு மக்களின் இதயத் துடிப்பை நாடி பிடித்து அவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

உண்மையே. குடாநாட்டு மக்கள் இன்றல்ல நேற்றல்ல, அந்நியர் ஆட்சிக்கு முன்னரே கல்வியைத் தமக்குத் தேவையான செல்வங்களில் முதன்மையாகக் கருதியவர்கள்.

அந்நியர் ஆட்சியின் போதும், பிச்சை புகினும் கற்கை நன்றே, எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும் என்ற முதுமொழிகளை முன்னிறுத்தி பதினேழாம் நூற்றாண்டிலேயே குடாநாட்டு மக்கள் - பெற்றோர் - குருகுலக் கல்வியை ஆரம்பித்தவர்கள். அதன் பின்னர் 18ஆம் நூற்றாண்டில் குடாநாட்டின் கிராமங்கள் தோறும் திண்ணைப் பள்ளிகளைக் கட்டி கல்வித் திறனைப் பேணினார்கள். பின்னர் அவை பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில், சிறு சிறு பாடசாலைகளாக - வித்தியாசாலைகளாக - குடாநாட்டின் கிராமங்களில் பொலிந்து விளங்கின. அவற்றில் சுமார் எழுபது சதவீதமானவை இப்போது கிராமங்கள், நகரங்களில் கல்லூரிகளாக உயர்ந்து நிற்கின்றன.

ஆழமாக நோக்கின், யாழ்ப்பாணத்தில் கல்விப் பாரம்பரியம், அது தொடர்பான அதீத அக்கறை, ஒன்றிப்பு விசேடமானது. அன்றைய கல்வி அமைச்சர் சி.டபிள்யூ.டபிள்யூ.கன்னங்கராவின் தூரநோக்கினால் அறிமுகப்படுத்தப்பட்ட இலவசக் கல்வி முறை, யாழ்ப்பாணத்தவர்களை மேன்மேலும், மிகப்பெரும் எண்ணிக்கையில் அத்துறையில் ஈடுபடச் செய்தது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிறிமாவோ அம்மையாரின் ஆட்சிக் காலத்திலேயே, யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டு, மாணவர்கள் தமது உயர் கல்வியை சொந்தமண்ணிலேயே பெறவும் வாய்ப்பு உண்டாயிற்று.

இவற்றுக்குக் கரும்புள்ளியிடுவது போல பல்கலைக்கழக அனுமதிக்குத் தரப்படுத்தல் அறிமுகப்படுத்தப்பட்டு தமிழ் மாணவர்களின் உயர்கல்விக்குப் பின்னடைவு உண்டாக்கப்பட்டதும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் ஆட்சியிலேயேதான் என்பதனை மறப்பதற்கில்லை.

கடந்த பல தசாப்தங்களாகப் பலப்பல சோதனைகளும், இழப்புகளும், இன்னல்களும், ஒடுக்குமுறைகளும், ஓரங்கட்டுதல்களும் அவர்களைப் பலவீனப்படுத்திய போதிலும் அவர்கள் தமது பிள்ளைகளின் கல்வியைக் காத்துக்கொள்வதில் காட்டிய, காட்டும் பற்றுறுதி தளர்ந்து விடவில்லை; தொடர்கிறது.

எப்படியோ, குடாநாட்டு மக்களின் கல்வி வளர்ச்சியில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் அவரின் அமைச்சர்களும் உரிய அக்கறை கொண்டு அதற்கு ஊட்டமளித்துச் செயற்படுவது வரவேற்கத்தக்கதும் பாராட்டப்பெற வேண்டியதுமாகும்.

கல்வி வளர்ச்சிக்கான செயற்பாடுகளை மேம்படுத்துவதினூடு குடாநாட்டு மக்கள் தொழில் வாய்ப்பில் உரிய இடங்களைப் பெற வகை செய்யப்படுவதும் நல்விளைவுகளுக்கு வித்திடும்.

இந்த வகையில் அமையும் செயலூக்கங்கள், போரில் அழிந்து போயுள்ள, வன்னியிலும் மற்றும் கிழக்கிலும் முன்னெடுக்கப்பட்டு, பாகுபாடின்றி, பாரபட்சம் இன்றி இதய சுத்தியுடன் ஆற்றுப்படுத்தப்பட்டால், தமிழர்களின் மனங்களை பெரிய அளவில் வெல்லலாம் என்பதில் சந்தேகம் எதுவுமில்லை.

# இந்திய மீனவர் பிரச்சினைக்கு விரைவில் நிரந்தரமான தீர்வு காண நடவடிக்கை

### வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் தகவல்



கொழும்பு, பெப்.27

கடற்றொழில் தொடர்பான பிரச்சினைக்கு இரு நாடுகளுக்குமிடையில் இணக்கப்பாட்டை ஏற்படுத்தி நிரந்தரத் தீர்வுகாண நடவடிக்கை எடுக்கப்படும் என வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் இரு நாடுகளுக்குமிடையில் கூட்டுக்குழுவொன்றை அமைக்கவும் திட்டமிட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நாடாளுமன்ற ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் கடந்த புதன்கிழமை உரையாற்றிய அமைச்சர் மேலும் கூறியதாவது:

மீனவர் தொடர்பான பிரச்சினையின் போது இரு நாட்டுக்குமிடையிலான நல்லுறவின் அடிப்படையில் கௌரவமாகவே நாம் நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

இந்திய மீனவர்கள் கொல்லப்பட்ட சம்பவம் குறித்து பூரண விசாரணை முன்னெடுக்கப்படுகிறது. இதற்கான முழு அதிகாரம் கடற்படைக்கு வழங்கப் பட்டுள்ளது. சம்பவம் நடைபெற்ற கடல் எல்லை குறித்தும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. சம்பவம் நடைபெற்ற இடத்துக்கு எமது கடற்படைப் படகுகள் எதுவும் செல்லவில்லை.

இந்திய மீன்பிடிப்படகுகளை சந்திக்க நேரிட்டால் எமது கடற்படையினர் மனிதாபிமானமாகவே செயற்பட்டு வந்துள்ளனர்.

யுத்தம் மற்றும் பாதுகாப்புப் பிரச்சினை காரணமாக வடக்கு கடலில் மீன்பிடிக்க தடைவிதிக் கப்பட்டிருந்தது. தற்பொழுது அந்த நிலை மாறியுள்ளது. வட பகுதி மக்கள் தமது வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்ப ஆரம்பித்துள்ளனர்.

மீன்பிடி பிரச்சினை தொடர்பில் நாம் இந்திய வெளியுறவுச் செயலாளருடன் பேச்சு நடத்தி வருகிறோம். மனிதாபிமான ரீதியில் இதற்குத் தீர்வு காண முயற்சி முன்னெடுக்கப்படுகிறது.

கடல் எல்லையைத் தாண்டிச் சென்று மீன்பிடிப்பது தொடர்பில் நிரந்தரத் தீர்வு எட்டப்பட வேண்டும்.

இதற்கு தற்காலிகத் தீர்வு காண்பது நல்லதல்ல. பல தடவைகள் இரு நாடுகளும் பேச்சு நடத்தியுள்ளன.

இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணக் கூடிய தெளிவான அரச இயந்திரம் உள்ளது. இதனூடாக இரு நாடுகளும் இணைந்து இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண உள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

(சி)

# உலகப் பொருளாதார நெருக்கடி நிலைக்கு மேற்குலக நாடுகள்தான் முழுக் காரணம்

### ஜனாதிபதி மஹிந்த சாடுகிறார்

கொழும்பு,பெப்.27

தற்போது ஏற்பட்டுள்ள உலகளாவிய பொருளாதார நெருக்கடி நிலைக்கு மேற்குலக நாடுகளே காரணம் என்று குற்றம் சாட்டியுள்ளார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

கொழும்பில் நேற்று முன்தினம் தென்கிழக்காசிய நாடுகளின் மத்திய வங்கி ஆளுநர்களின் 46 ஆவது கருத்தரங்கில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

அபிவிருத்தி அடைந்த நாடுகள் சிலவற்றின் பொறுப்பற்ற நிதி முகாமைத்துவத்தினாலயே வங்கிகள் முடங்கி உலகளாவிய பொருளாதாரத் தேக்கம் உருவானது.

இதனுடன் ஒப்பிடும்போது மேற்கு நாடுகளின் பொருளாதாரத்தை விடவும் ஆசிய நாடுகளின் பொருளாதாரம் மேன்மையானது.

உலகளாவிய பொருளாதார நெருக்கடி பல பாடங்களைக் கற்றுத் தந்துள்ளது.

ஒவ்வொரு நாட்டுக்கும் ஒவ்வொரு பாடங்கள் கிடைத்துள்ளன. இந்த நெருக்கடியில் இருந்து தப்பிக்க புதிய நிதி ஒழுங்கு முறை ஒன்றை நாம் உருவாக்க வேண்டியுள்ளது என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

# சீன வர்த்தகக் கண்காட்சிக்கு இலங்கையிலிருந்து 100 பேர்

கொழும்பு, பெப்.27

எதிர்வரும் ஜூன் மாதத்தில் சீனாவின் குண்மிங்க் நகரில் இடம்பெறவுள்ள சர்வதேச வர்த்தக் கண்காட்சிக்கு இலங்கையிலிருந்து நூற்றுக்கு மேற்பட்ட ஏற்றுமதியாளர்களைக் கலந்து கொள்ளச் செய்யவுள்ளதாக தொழில்துறைகள் மற்றும் வர்த்தகச் செயற்பாட்டு அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் பிரதான ஏற்றுமதித் துறைகளான மாணிக்கக்கற்கள், தங்க ஆபரணங்கள், தேயிலை, றப்பர், தைத்த ஆடைகள் ஏற்றுமதியாளர்கள் போன்றே சிறு மற்றும் மத்தியதர ஏற்றுமதித் துறைகளில் ஈடுபட்டுள்ளோரையும் கலந்துகொள்ளச் செய்யவுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மேற்படிக் கண்காட்சியில் கலந்துகொள்வது தொடர்பாக அமைச்சில் இடம்பெற்ற அகதிகள் மற்றும் வர்த்தகப் பிரதிநிதிகள் பங்கேற்ற கலந்துரையாடலில் வைத்தே அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்:- இலங்கைக்கும் சீனாவுக்குமிடையில் நிலவும் வர்த்தகத் தொடர்புகளை மேலும் பலப்படுத்துவதற்கு இக்கண்காட்சி பேருதவி புரியும். கடந்த இரண்டாண்டு காலத்தில் சீனாவுக்குப் பொருள்களை ஏற்றுமதி செய்துள்ளதன் மூலம் ஏற்றுமதி வருவாயில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியை இலங்கை அடைந்துள்ளது. 2009 ஆம் ஆண்டில் 59 மில்லியன் அமெரிக்க டொலர்களையும், 2010 ஆம் ஆண்டில் 80 மில்லியன் அமெரிக்க டொலர்களையும் இலங்கை சம்பாதித்துள்ளது என்றார்.

சீனாவுக்குப் பொருள்கள் ஏற்றுமதி செய்யும் ஐந்து ஆசிய நாடுகளுடன் கடந்த ஆண்டுகளில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைக் காட்டியுள்ள இலங்கையும் இணைந்து கொண்டுள்ளதாகவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

(த-22)

# நாளை நடைபெறும் நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், பெப்.27

அருட்திரு இராசேந்திரம் ஸ்ரலின் எழுதிய 'ஆளுமை மலர உள ஆற்றுப்படுத்தல்' என்னும் நூல் வெளியீட்டு விழா நாளை திங்கட்கிழமை பி.ப 3.30 மணிக்கு யாழ். பிரதான வீதியில் அமைந்துள்ள கலைத்தூதுக் கலையகத்தில் நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி - முல்லைத்தீவு மறைக் கோட்ட முதல்வர் அருட்திரு ஏ.ஜே.யாவிஸ் தலைமையில் நடைபெறும் இந்த வெளியீட்டு நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை கலந்துகொள்வார்.

வாழ்த்துரையை அருட்திரு நீ.மரியசேவியர் அடிகளும் அறிமுக உரையை வைத்திய கலாநிதி எஸ்.சிவயோகனும், வெளியீட்டுரையை அகவொளி குடும்ப வளத்துறை நிலையத்தின் இயக்குநர் அருட்திரு எஸ்.கே. இராஜநாயகம் அடிகளும் நிகழ்த்துவார்.

நயப்புரையை யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி த.கலாமணி நிகழ்த்துவார். ஆய்வுரையை அருட்திரு றெஜினோல்ட் பிரான்சிஸ் வழங்குவார்.(த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்று, நான்கு மாதங்கள் கடந்தும் வந்து சேராத கடவுச் சீட்டுக்கள்

யாழ்ப்பாணம்,பெப்.27

யாழ்.மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் கடவுச் சீட்டுப் பெறுவதற்காக விண்ணப்பித்தவர்களுக்கு கடந்த மூன்று மாதங்களுக்கும் மேலாகியும் கடவுச் சீட்டுகள் கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணத்தில் மக்களின் சிரமங்களைத் தவிர்க்கும் வகையில் பிரதேச செயலகங்கள் ஊடாக கடவுச் சீட்டுக்களுக்கான விண்ணப்பங்கள் அனுப்பி அவற்றை விரைவில் பெற்றுக் கொள்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது. இதனையடுத்து கொழும்புக்குச் சென்று ஏற்படக்கூடிய சிரமங்களைத் தவிர்க்கும் பொருட்டு பெரும்பாலானவர்கள் தமது பிரதேச செயலகங்கள் ஊடாகக் கடவுச்சீட்டுகளைப்பெற விண்ணப்பித்திருந்தனர்.

தமக்குரிய கடவுச் சீட்டுக்கள் விரைவில் கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் காத்திருந்த விண்ணப்பதாரிகள் தாம் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்து மூன்று, நான்கு மாதங்களுக்கு மேல் கடந்தும் கடவுச் சீட்டுக்கள் இன்னமும் கிடைக்கவில்லை எனவும், பிரதேச செயலகங்கள் மூலம் அனுப்பி வைப்பதில் எதிர்பார்த்த விரைவு கிட்டவில்லை எனவும் அதிருப்தி தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக பிரதேச செயலகங்கள் சிலவற்றுடன் தொடர்பு கொண்ட போது, தாங்கள் கிடைக்கும் விண்ணப்பங்களை சம்பந்தப்பட்ட திணைக்களத்துக்கு உடன் அனுப்பி வைத்து விடுவதாகவும் மூன்று மாதங்களுக்கு மேலாகியும் தமக்குரிய கடவுச்சீட்டுக் கிடைக்கவில்லை என விண்ணப்பித்தவர்கள் தம்மிடம் நேரடியாக வந்து புகார் சொல்வதாகவும் தெரிவிக்கப்பட்டது. (த-7)

# சமூக முன்னெடுத்தல் குழுக்களுக்கு கெயர் நிறுவனத்தின் நிதியுதவி

நாவற்குழி,பெப்.27

கெயர் நிறுவனம் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் லிவ்ற்-2 திட்டத்தின் கீழ் 8 கிராமங்களைச் சேர்ந்த சமூக முன்னெடுத் தல் குழுக்களுக்கு தலா 80 ஆயிரம் ரூபா வீதம் நன்கொடை கடந்த வெள்ளிக்கிழமை வழங்கியுள்ளது.

உதவிப் பிரதேச செயலர் செல்வி ச.பிரேமினி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கெயர் நிறுவன அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

மேற்படி திட்டத்தின் வாழ்வாதார பாதுகாப்பு பிரிவின் சேமிப்புக் கடன் செயற்பாடுகளுக்கான முதலாவது நன்கொடை தலா 70ஆயிரம் ரூபா வீதம் ஏற்கனவே வழங்கப்பட்டுவிட்டது. தற்போது இரண்டாம் கட்டக் கொடுப்பனவே வழங்கப்பட்டுள்ளது.

ஏழு கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த 8 கிராமங்களின் சமூக முன்னெடுத்தல் குழுக்களும் இந்த உதவிகளைப் பெற்றுள்ளன.

கோப்பாய் தெற்கில் இராமநாதன் கலட்டி, சிறுப்பிட்டி கிழக்கில் கலைமகள், புத்தூர் வடக்கு மந்திரிமலையில் தமிழ்மதி, புத்தூர் கிழக்கில் சொக்கத்திடல் சரஸ்வதி, அச்செழுவில் வேவிபுரம் கிராம அபிவிருத்திச் சங்கம், அச்சுவேலி தெற்கில் நவோதயா, அச்சுவேலி மேற்கில் செல்வநாயக புரம் ஆகிய கிராமங்களுக்குகே இவை வழங்கப்பட்டுள்ளன. (த-121)

## கவனிப்பாரின்றி...



போக்குவரத்துச் செய்ய முடியாத நிலையில்மோசமான பாதிப்புக்கு உள்ளாகிக்கிடக்கும் பொம்மை வெளி 8 ஆம் குறுக்கு வீதி. இந்த வீதியையும் உரிய அதிகாரிகள் கவனம் எடுப்பார்களா என்று மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (7)

# யாழ்ப்பாணத்தின் வளங்களைக் கொண்டு இளைஞர், யுவதிகள் முன்னேற வேண்டும்

## தென்கொரியத் தூதுவர் கூறுகிறார்

யாழ்ப்பாணம்,பெப்.27

யாழ்ப்பாணத்தில் உள்ள வளங்களைப் பயன்படுத்தி இங்குள்ள இளைஞர், யுவதிகள் முன்னேற வேண்டும். இதற்கு தென்கொரிய அரசின் உதவியுடன் அமைக்கப்பட்டுள்ள தொழில்நுட்பவியல் கல்லூரி பெரிதும் உதவும்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் இலங்கைக்கான தென்கொரியத்தூதுவர் சோகி சுவ்.

தென்கொரிய அரசின் 5.5 மில்லியன் ரூபா நிதியுதவியுடன் யாழ்.தொழில்நுட்பவியல் கல்லூரி வளாகத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கட்டடத் தொகுதி நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது. தென்கொரியத் தூதுவர் சோகி சுவ், பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஷில் ராஜபக்ஷவுடன் இணைத்து அதனைத் திறந்து வைத்தார்.

இதன் பின்னர் சிறப்புரை நிகழ்த்தும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்த நிகழ்வில் தென்கொரிய அரசின் பிரதிநிதியாகக் கலந்துகொண்டிருக்கிறேன். தொழில்நுட்பக் கல்லூரியில் இருந்து தொழில்நுட்பவியல் கல்லூரியாக இந்தக் கல்லூரி முன்னேறியுள்ளமை மகிழ்ச்சிக்குரியதாகும். இந்தக் கல்லூரி மூலம் இங்குள்ள இளம் சமூகத்தினர் உயர்கல்வியையும், இதுவரை கற்க முடியாதிருந்த தொழில் நுட்பத் துறைகளையும் கற்கக் கூடியதாக இருக்கும் என நம்புகிறேன்.

இங்குள்ள இளைஞர், யுவதிகள் இந்தக் கல்லூரியில் கற்பதன் மூலம் தொழில் வாய்ப்புகளைப் பெறக்கூடிய நிலை ஏற்படும். அதன் மூலம் இங்குள்ள வறுமையைக் குறைத்துக்கொள்ள முடியும். இந்தக் கல்லூரியில் உள்ளூரில் உள்ளவர்கள் மட்டுமன்றி வெளிமாவட்டங்களில் உள்ளவர்களும் கற்று துறைசார் வல்லுநர்களாக மாறவேண்டும். அதுவே தென்கொரிய அரசின் நோக்கமாகும் என்றார். (த-14)

# நாவற்குழிப் பாலத்தில் வாகன விபத்துகள் அதிகரிப்பு

நாவற்குழி,பெப்.27

யாழ். - கண்டி வீதியில் நாவற்குழி பாலத்துக்கு இரு கரையிலும் வேகத் தடுப்பு அணை மீண்டும் போடப்பட வேண்டுமென வீதியின் பாவனையாளர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

மழை காலங்களில், கடும் பனி காலங்களில் பாலத்தின் இரும்புருக்குத் தரை வழுக்கும் தன்மை உடையதாக உள்ளது. இதனால் வேகமாக வரும் வாகனங்கள் வழுக்கிச் சென்று விபத்துக்களுக்கு உள்ளாகின்றன.

மிக அண்மையில் விசுவமடுவிலிருந்து யாழ்ப்பாணம் திரும்பிய டொல்பின் வான் ஒன்று அதிகாலை பனி நீரால் வழுக்கி பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்கு உள்ளாகியது.

மோட்டார் சைக்கிள்களின் பயணிகள் அடிக்கடி சறுக்கி விழுந்து விபத்துக்கு ஆளாகி வருகின்றனர்.

இதனால் பாலத்தின் இரு கரைகளிலும் முன்னரைப் போன்று வேகத்தடை போடப்பட வேண்டுமென்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் வாகனத்தில் செல்வோர் மெதுவாகச் செல்ல வேண்டும்' என்ற அறிவித்லை மும்மொழிகளிலும் இடல் வேண்டும் எனவும் பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (த-121)

## கலாசாரப் போட்டிகள்

கரவெட்டிப் பிரதேச செயலகத்தின் கலாசாரப் பேரவையின் ஏற்பாட்டில் விரைவில் கலாசாரப் போட்டிகளை நடத்தவுள்ளதாகவும் போட்டிகளில் பங்குபற்ற விரும்புவோர் எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன் தமது விண்ணப்பப் படிவங்களை பிரதேச கலாசார உத்தியோகத்தரிடம் கையளிக்க முடியும் எனவும் பிரதேச செயலர் கூறினார்.

# சர்வதேச நாணயக் கண்காட்சி சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில்

நெல்லியடி, பெப்.27

இந்தியப் பேராசிரியர் எஸ்.எஸ். அந்தோனிசாமியின் ஏற்பாட்டில் சர்வதேச நாடுகளின் நாணயத்தாள்கள் காட்சிப்படுத்தும் கண்காட்சி நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில் கல்லூரி அதிபர் திருமதி டி.துஷிதரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது:-

240 நாடுகளைச் சேர்ந்த சர்வதேச நாணயங்கள் நாளை திங்கட்கிழமை 9 மணி தொடக்கம் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

பொத்துவில் பிரதேசத்தில் ஆரம்பித்த இக்கண்காட்சி 551 ஆவது பாடசாலையாக சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

உலகிலே அரிய நாணயங்கள், புரதான நாணயங்கள்,சங்க கால நாணயங்கள், காலணித்துவ நாணயங்கள் என்பன இந்தக் கண்காட்சியில் இடம்பெறவுள்ளன.

1870 ஆம் ஆண்டு தொடக்கம் 2011 ஆம் ஆண்டு வரை இலங் கையில் பயன்படுத்திய, பயன் படுத்தப்படுகின்ற சகல நாணயங்களும், நாணயத்தாள்களும் இங்கு காட்சிப்படுத்தப்படவுள்ளமை விசேட அம்சமாகும்.

இக் கண்காட்சியை குடா நாட்டிலுள்ள எல்லாப் பாடசாலைகளிலும் காட்சிப்ப[illegible] வடிக்கை எடுக்கப்ப[illegible]தாகத் தெரிகிறது. (த-319)

# நாளொன்றுக்கு 70 தொழிலாளர் முன்னறிவித்தல் எதுவுமின்றி லீவு

## யாழ்.மாநகரசபைக் கூட்டத்தில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.27

யாழ்.மாநகரசபையில் உள்ள நிரந்தர சுத்திகரிப்புத் தொழிலாளர்களில் 70 பேர் நாளொன்றுக்கு முன்னறிவித்தல் எதுவுமின்றி வேலைக்கு வராது நிற்பதாகத் தொழிலாளர்களின் மேற்பார்வை உத்தியோகத்தர் தெரிவித்தார்.

யாழ்.மாநகரசபையின் பெப்ரவரி மாதத்துக்கான பொதுக் கூட்டத்தில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தலைமையில் கடந்த வியாழக்கிழமை இந்தக் [illegible] எந்தவிதமான அங்கீகாரமுமின்றி மாநகரசபையின் நிர்வாகத்தினரால் பதில் சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் பலர் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கான கொடுப்பனவு சபையின் அனுமதியின்றி வழங் கப்படுவதாகவும் கூட்டத்தில் குற்றச்சாட்டு எழுந்தது. டிசெம்பர் மாதம் நடைபெற்ற வரவு செலவுத் திட்டம் சம்பந்தமாக விசேட பொதுக் குழுக் கூட்டத்தில் பதில் சுத்திகரிப்புத் தொழிலாளரை வேலையில் இருந்து நிறுத்த வேண்டும் என்ற தீர்மானத்தின் திருத்தப் பிரேரணை கடந்த வியாழக்கிழமை விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன் போதே நிரந்தர சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் பலர் முன்னறிவித்தல் இன்றி லீவு எடுப்பதாகப் பதிலளிக்கப்பட்டது.

இத் தீர்மானம் குறித்து ஆளும் தரப்பு எதிர்த்தரப்பினரிடையே பலத்த வாக்குவாதங்கள் இடம்பெற்றபோதும் இறுதியில் தீர்மானம் வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. பிரேரணைக்கு ஆதரவாக நால்வர் மட்டுமே வாக்களித்தனர். இதனையடுத்து இனி குறிப்பிட்ட பிரேரணை விவாதிக்கத் தேவையில்லை என அறிவிக்கப்பட்டது. (த-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொம்மைவெளி முஸ்லிம் மக்களின் வீடமைப்புக் கடன்கள் ரத்தாகும்

## வீடமைப்பு அதிகார சபை முகாமையாளர் தகவல்

யாழ்ப்பாணம், பெப்.27

யாழ்ப்பாணம், பொம்மை வெளிப் பகுதியில் உள்ள வீடமைப்பு அதிகார சபையின் 32 வீடுகளில் குடியிருக்கும் முஸ்லிம் மக்களின் வீடமைப்புக் கடன்கள் ரத்துச் செய்யப்படும் என வீடமைப்பு அதிகார சபையின் யாழ். மாவட்ட முகாமையாளர் நோயல் ஜெயசந்திரன் தெரிவித்தார். பொம்மை வெளியில் 32 வீடமைப்புத் திட்டத்துக்கான காணி உறுதிகள் வழங்குவதற்கான பதிவுகள் மேற்கொள்வது தொடர்பான கலந்துரையாடல் நேற்று பொம்மை வெளி 8 ஆம் குறுக்குத் தெருவில் இடம்பெற்றது.

ஏற்கனவே வீடமைப்பு அதிகார சபையினால் வழங்கப்பட்ட வீடமைப்புத் திட்டத்தில் இப்பகுதியில் 32 வீடுகள் வழங்கப்பட்டுள்ளன. கட்டடப் பொருள்களுக்கென 18 ஆயிரம் ரூபா வீதம் ஒவ்வொரு குடும்பத்துக்கும் வழங்கப்பட்டிருந்தது. தற்சமயம் அந்த வீடுகள் யுத்தத்தினால் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளன. பாதிக்கப்பட்ட வீட்டு உரிமையாளர்களிடம் கடனாக வழங்கப்பட்ட தொகையை அறவிடுவதில்லை என முடிவு செய்யப்பட்டுள்ளது.

மாவட்ட முகாமையாளர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-



இங்கு சட்ட ரீதியாகப் பாரப்படுத்தாத காணிகள் பிரதேச செயலகத்துக்குரியன. அதற்கான உறுதிகள் வழங்கும் நடவடிக்கை பிரதேச செயலரினாலேயே மேற்கொள்ளப்படும். வீடமைப்பு அதிகார சபையின் காணிகளைப் பெறாதவர்கள் அதை விற்பனை செய்து யாராவது வாங்கியிருந்தால் அதற்கான தண்டப்பணம் அறவிடப்பட்டே உறுதி வழங்கப்படும்.

ஒருவருக்கு ஒரு வீடு என்ற ஜனாதிபதியின் குறிக்கோளின் படி வீடுகள் வழங்கப்படுகின்றன. புத்தளத்திலும் இங்கும் ஒருவர் வீடுகளை வைத்திருக்க முடியாது. நீங்கள் எங்கே இருக்கப் போகிறீர்கள் என்பதைத் தீர்மானித்துக்கொள்ள வேண்டும். வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் விமல் வீரவன்ஸ வீடமைப்புத் திட்டங்கள் நல்ல முறையில் செயற்படுத்தப்பட்டு மிகவும் நேர்மையான வகையில் வழங்கப்பட வேண்டும் என்பதிலும் மக்களுக்கு பிரச்சினைகள் ஏற்படாத வகையில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பதிலும் உறுதியாக இருக்கின்றார் - என்றார்.

பொம்மை வெளிப் பகுதியில் உள்ள முஸ்லிம் மக்களிடம் பெறப்பட்ட காணி உறுதிகளை மீளவும் வழங்கும் நிகழ்வு நேற்று சனிக்கிழமை இடம்பெற்றது. யாழ். மாவட்ட வீடமைப்பு அதிகார சபையும் யாழ்ப்பாணம் பிரதேச செயலக காணிப் பதிவுப் பகுதியும் இணைந்து நடமாடும் சேவையை நடத்தி காணி உறுதிகளை மீளவும் மக்களிடம் கையளித்துள்ளன. அதன் போது 32 காணி உறுதிப்பத்திரங்கள் மீண்டும் மக்களிடம் வழங்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களின் மக்கள் பணிமனையின் தலைவரும் யாழ். மாநகர சபை உறுப்பினருமான மௌலவி சுபியானின் ஏற்பாட்டில் இந்த நடமாடும் சேவை இடம்பெற்றது.

பொம்மைவெளிப் பகுதியில் உள்ள 7 ஆம், 8 ஆம் குறுக்குத் தெருவில் உள்ள மக்களுக்கே இவ்வாறு காணி உறுதிகள் வழங்கப்பட்டன. தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் வீடு கட்டிக்கொடுப்பதற்காக இந்த மக்களிடம் இருந்து காணி உறுதிகள் பல வருடங்களுக்கு முன்னர் பெறப்பட்டிருந்தன. அவையே மீண்டும் நேற்றுக் கையளிக்கப்பட்டன. (த-7-14)

# பொம்மை வெளிப் பகுதிக்கு குழாய் மூலம் குடிதண்ணீர்

யாழ்ப்பாணம்,பெப்.27

பொம்மை வெளிப் பகுதியில் மீளக் குடியமர்ந்து வரும் முஸ்லிம் மக்களின் குடிதண்ணீர்த் தேவையை நிறைவு செய்யும் வகையில் குழாய் மூலம் குடிதண்ணீர் வழங்கும் சேவை நேற்று சனிக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

யாழ்.மாநகர சபையின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்பட்ட குடிதண்ணீர் வழங்கும் சேவையை யாழ்ப்பாணம், கிளிநொச்சி மக்கள் பணிமனையின் தலைவரும் மாநகர சபை உறுப்பினருமான மௌலவி சுபியான் ஆரம்பித்து வைத்தார்.

பொம்மைவெளிப் பகுதியில் தற்போது சுமார் 80முஸ்லிம் குடும்பங்கள் மீளக்குடியமர்ந்து வசித்து வருகின்றன. இந்த மக்களின் குடிதண்ணீர் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையிலேயே குழாய் மூலம் குடிதண்ணீர் விநியோகம் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது. யாழ்ப்பாணம் ஒஸ்மானியக் கல்லூரி தண்ணீர் தாங்கியிலிருந்தே இந்தக் குடிதண்ணீர் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. (த-14)

# 6 பிரதேச செயலர் பிரிவில் மர முந்திரிகை உற்பத்தி

யாழ்ப்பாணம்,பெப்.27

யாழ்.மாவட்டதிலுள்ள ஆறு பிரதேச செயலர் பிரிவுகளில் மரமுந்திரிகை உற்பத்தி மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் யாழ். செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதற்கென மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்தினால் உற்பத்தி செய்யப்பட்ட மரமுந்திரிகைக் கன்றுகள் அந்தந்தப் பிரதேசசெயலகங்களுக்கு நேரடியாக விநியோகிக்கப்பட்டுள்ளன.

மரமுந்திரிகை கன்றுகள் வளரக்கூடிய மண்வளம் உள்ள இடங்களை இனங்கண்டு ஒவ்வொரு பிரதேசத்திலும் தலா 100 பயனாளிகளைத் தெரிவு செய்து மரக் கன்றுகளை விநியோகிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறை, வேலணை, காரைநகர், தெல்லிப்பழை, சாவகச்சேரி, வடமராட்சி கிழக்கு ஆகிய பிரதேசங்களில் இவை உற்பத்தி செய்யப்படவுள்ளன.

ஒவ்வொரு பிரதேசத்துக்கும் 500 மரக்கன்றுகள் வீதம் விநியோகிப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (த-207)

# கைதடி இராஜபுரிக்கு மின்னிணைப்பு கிடைத்தது

''வடக்கின் வசந்தம்'' திட்டத்தின் கீழ் கைதடி இராஜபுரிக் கிராமத்துக்கு கடந்த வியாழக்கிழமை மின்னிணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி கிராமத்தில் மிக நீண்ட காலமாக மின்னிணைப்பு இல்லை எனவும் கைதடி மத்தி வளர்மதி சனசமூக நிலையம் எடுத்துக்கொண்ட தீவிர முயற்சியின் காரணமாக விஞ்ஞான தொழில்நுட்பத்துறை அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸவிதாரண, யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சந்திரகுமார் ஆகியோர் நேரடியாக வருகை தந்து இந்தக் கிராமத்தின் நிலைமையைப் பார்வையிட்டதன் மூலம் இந்த மின்னிணைப்புக் கிடைத்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

தற்போது இந்த மின்னிணைப்பு மூலம் 50இற்கு மேற்பட்ட குடும்பங்கள் பலன் பெற வாய்ப்புள்ளதாக வளர்மதி சனசமூக நிலையத்தின் செயலாளர் இ.சசிகுமார் தெரிவித்தார்.(த-288)

# அச்சுவேலி திரேசாள் கல்லூரியில் நெருக்கமான முறையில் வகுப்பறை

## மாணவிகள், ஆசிரியர்கள் சிரமம்

அச்சுவேலி,பெப்.27

அச்சுவேலி புனித திரேசாள் மகளிர் கல்லூரியில் மாணவர்களுக்கான கற்றல் செயற்பாடுகளை உரிய முறையில் முன்னெடுப்பதற்கு ஏற்றவாறு வகுப்பறை அமைப்புக்கள் இல்லை. இதனால் நெருக்கமான முறையில் மாணவிகளை வைத்துக் கற்பித்தல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதாக மாணவிகள் மற்றும் பெற்றோர் கவலை தெரிவிக்கின்றனர்.

கோப்பாய் கல்விக்கோட்டத்தில் ஒரே ஒரு மகளிர் கல்லூரியாக அச்சுவேலி புனித திரேசாள்கல்லூரி உள்ளது. கல்லூரியின் சிலியா மண்டபத்தில் 80×20 அடி பரப்பளவு உள்ள இடத்தில் 6வகுப்புகள் செயற்படுகின்றன. ஒவ்வொரு வகுப்பு பிலும் 35க்குக் குறைவான எண்ணிக்கையில் மாணவிகள் உள்ளனர்.

வகுப்பறை அமைப்பு ரீதியில் பிரிக்கப்படாத நீள் சதுரமான திறந்த வெளி மண்டபத்தில் 1600 சதுரஅடி விஸ்தீரணத்தில் 6 கனிஷ்ட, இடைநிலை வகுப்புகளில் சுமார் 220 மாணவிகள் கல்வி கற்கின்றனர். இதனால் சுதந்திரமான கற்றல் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாமல் மாணவிகளும் ஆசிரியர்களும் சிரமப்படுகின்றனர்.

மிகநெருக்கமான நிலையினால் வகுப்பறையில் இருந்து எழும் சத்தம் ஒரு புறம் இருக்க ஒரு வகுப்பறையில் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகள் ஏனைய வகுப்புகளின் கவனத்தை கலைப்பதாக அமைவதுடன் ஆசிரியர்கள் கற்பிப்பதை மாணவர்கள் கவனத்தில் நிலைநிறுத்த முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது.

இதனை உரியவர்கள் கவனத்திற்கொள்ள வேண்டும் என மாணவிகள் கோரியுள்ளனர். (த-11)

# யாழ். தேர்தல் திணைக்கள பணிகள் இடைநிறுத்தம்

யாழ்.தேர்தல் மாவட்டத்தில் உள்ளூராட்சிச் சபைத் தேர்தலுக்கு நீதிமன்றத்தினால் இடைக்காலத்தடை விதிக்கப்பட்டதையடுத்து யாழ்.தேர்தல் திணைக்களத்தின் தேர்தல் ஏற்பாடுகள் நிறுத்தப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் பொ.குகநாதன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

எதிர்வரும் மார்ச் மாதம் 17ஆம் திகதி உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடைபெறும் என்று தேர்தல் திணைக்களத்தால் அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் வேட்பு மனு நிரகரிக்கப்பட்டமை தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதையடுத்து தேர்தலுக்கு நீதிமன்றம் இடைக்காலத்தடை விதித்துள்ளது.

இதனையடுத்து தபால் மூலம் வாக்களிப்பு, தேர்தலில் வாக்களிப்பதற்கான தற்காலிக அடையாள அட்டை வழங்கல், தேர்தலில் கடமையாற்றவுள்ள அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்புகள் மற்றும் வாக்காளர் அட்டைகள் விநியோகம் எனப் பல்வேறு இன்னோரன்ன பணிகள் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளன.

யாழ்.மாவட்டத்தில் தேர்தலுக் இடைக்காலத் தடை விதிக்கப்பட்டது தொடர்பான உத்தியோகபூர்வமான அறிவித்தல் கடந்த 23ஆம் திகதி எமக்கு கிடைத்தது. அன்றிலிருந்து இந்தப் பணிகள் யாவும் நிறுத்தப்பட்டுள்ளன என்றார் அவர்.

இடைக்காலத்தடை நீக்கப்படுவது தொடர்பான அறிவித்தல் கிடைக்கப் பெற்றதும் பணிகள் நிறுத்தப்பட்ட இடத்தில் இருந்து ஆரம்பிக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# யாழ்ப்பாணத்தில் மாலையிலும் தபால் விநியோகப் பணிகள்

யாழ்.பிரதம தபாலகம் தபால் விநியோகிக்கும் பணிகளைத் தற்போது மாலையிலும் மேற்கொண்டு வருகின்றது.

இந்தப் புதிய நடைமுறை கடந்த 24ஆம் திகதி வியாழக்கிழமை முதல் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருவதாக பிரதம தபாலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். குடாநாட்டில் தபால் விநியோகம் காலையிலேயே இடம்பெற்று வந்தது. காலை 7மணிக்கு இது ஆரம்பமாகி நடைபெற்று வந்தது.

தற்போது வெளி மாவட்டங்களில் இருந்து யாழ்ப்பாணத்துக்கான தபால்கள் உடனடியாகவே இங்கு எடுத்துவரப்படுகின்றன. தினமும் இவை பெரும் எண்ணிக்கையில் யாழ்ப்பாணத்துக்கு வந்து சேர்கின்றன.

இதனையடுத்து இவ்வாறு வந்து சேரும் தபால்களை உடனடியாகத் தரம்பிரித்துப் பொது மக்களுக்கு அவற்றை உடன் விநியோகிப்பதற்காகவே மாலையிலும் தபால் விநியோகப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அந்த அதிகாரி மேலும் கூறினார்.

இந்தப் புதிய நடைமுறையை அடுத்துப் பொதுமக்களுக்கான தபால்கள் உடனுக்குடன் கிடைப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதன் காரணமாக அவசர கடிதங்கள், நேர்முகப் பரீட்சை அட்டைகள் என்பனவும் விரைவாக உரியவர்களுக்குக் கிடைக்கக்கூடிய வசதி ஏற்பட்டுள்ளது. (த-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி மத்திய கல்லூரியில் தங்கியிருக்கும் 28 குடும்பங்கள்

## கல்வித் திணைக்களம் பொறுப்பேற்காது கல்லூரி சீரழிகிறது

கிளிநொச்சி, பெப். 27

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள ஒரேயொரு மத்திய கல்லூரியான கிளிநொச்சி மத்திய கல்லூரி இதுவரை கல்வித் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்படாத காரணத்தால் எதுவித அபிவிருத்தியும் இன்றி சீரழிந்த நிலையில் காணப்படுகின்றது என கிளிநொச்சி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி பரவிப்பாஞ்சான் பகுதியில் குடியிருந்த 28 குடும்பங்கள் இதுவரை மீள்குடியமர்த்தப்படாமல் கிளிநொச்சி மத்திய கல்லூரியில் தங்கியுள்ளன. இதன் காரணமாகவே இக்கல்லூரியை கல்வித் திணைக்களத்திடம் ஒப்படைக்கவில்லை எனக் கூறப்படுகிறது.

இவ்விடயம் தொடர்பாகக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரனிடம் தொடர்புகொண்டு கேட்ட போது அவர் கூறியவை வருமாறு:-

கிளிநொச்சி மத்திய கல்லூரியில் இரண்டாயிரம் மாணவ மாணவிகள் கல்வி பயில்கின்றனர். இருந்தும் இக்கல்லூரியில் எதுவித அடிப்படை வசதிகளும் இல்லை. ஆசிரியைகள் இயற்கைக் கடன்களைக் கழிக்கக்கூட இந்தப் பாடசாலையில் எதுவித வசதியும் இல்லை. இந்தக் கல்லூரி யுத்தத்தால் பாதிக்கப்பட்ட நிலையில் காணப்படுகின்றது.

வைத்தியர்கள், பொறியியலாளர்கள், கணக்கியலாளர்களை உருவாக்கிய இந்தக் கல்லூரி மாதிரிப் பாடசாலை என்ற பெயர்ப் பலகையுடன் காட்சியளிப்பது வேதனையாக உள்ளது. பரவிப்பாஞ்சான் பிரதேசத்தில் உள்ள 300 குடும்பங்கள் இன்னும் மீள்குடியமர்த்தப்படவில்லை. இராணுவம் அந்தப் பிரதேசத்தில் முகாமொன்றை அமைக்கப் போவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மீள்குடியமர்த்தப்படாத 28 குடும்பங்கள் இந்தக் கல்லூரியில் தங்கவைக்கப்பட்டுள்ளன. இதன் காரணமாகவே கிளிநொச்சி மத்திய கல்லூரி எதுவித அபிவிருத்தியும் இன்றிக் காணப்படுகின்றது.

- இவ்வாறு அவர் தெரிவித்தார்.

### போரின் எச்சங்கள்...



அழிப்பு : வவுனியா மாவட்டத்தில் செட்டிகுளம் பிரதேச செயலர் பிரிவில் ஜப்பான் நாட்டின் நிதியுதவியுடன் ''ஜெய்க்கா'' திட்டத்தின்கீழ் எவ்.எஸ்.டி. நிறுவனத்தால் கடந்த 4 தினங்களாகப் பெரிய தம்பனைப் பிரதேசத்தில் மீட்கப்பட்ட வெடிபொருள்கள் எரியூட்டப்பட்டு அழிக்கப்படுகின்றன. (09)

# விவேகானந்த நகர் முன்பள்ளி புனரமைக்கப்பட்டு வருகிறது

கிளிநொச்சி,பெப்.27

கிளிநொச்சி விவேகானந்த நகர் முன்பள்ளிக் கட்டடத்தின் புனரமைப்புப் பணிகள் அங்குள்ள இராணுவப் படைப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

விவேகானந்த நகரில் முன்பள்ளிப் பாடசாலை புனரமைக்கப்படாமையால் அங்குள்ள சிறார்கள் தமது ஆரம்பக் கல்வியினைக் கிளிநொச்சி நகரத்திலுள்ள முன்பள்ளிப் பாடசாலைகளிலேயே மேற்கொண்டு வருகின்றார்கள்.

தற்போது விவேகானந்த நகர் முன்பள்ளிக் கட்டடத்தின் புனரமைப்புப் பணிகள் நடைபெற்றுவருவதால் இப்பிரதேசத்தைச் சேர்ந்த முன்பள்ளிச் சிறார்களுக்குப் பயனுள்ளதாக அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த முன்பள்ளியின் புனரமைப்புப் பணிகளுக்கு நிதி உதவிகளைக் கொழும்பிலுள்ள கன்னியாஸ்திரி அமைப்பு வழங்கியுள்ளதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது. (313)

# கிளிநொச்சி மாவட்ட நீர்ப்பாசனக் குளங்களைப் புனரமைக்க ஏற்பாடு

கிளிநொச்சி,பெப்.27

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள நீர்ப்பாசனக் குளங்கள் புனரமைக்கப்படவுள்ளதாக நீர்ப்பாசனத் திணைக்களம் அறிவித்துள்ளது.

அக்கராயன்குளம், கரியாலை நாகபடுவான்குளம், வன்னேரிக்குளம், புதுமுறிப்புக்குளம், கனகாம்பிகைக்குளம், கல்மடுக்குளம், பிரமந்தனாறுக்குளம் ஆகிய குளங்கள் புனரமைப்பதற்கு நிதி கிடைக்கப் பெற்றுள்ளதாகத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கல்மடுக்குளம், கரியாலை நாகபடுவான்குளம், வன்னேரிக்குளம், கனகாம்பிகைக்குளம் ஆகியன உலக வங்கி மற்றும் என்றிப் ஆகியவற்றின் நிதியுதவியுடனும் அக்கராயன் குளம் பீஸ் நிறுவனத்தின் நிதியுதவியுடனும், புதுமுறிப்புக் குளம் ஹெயர் நிறுவனத்தின் நிதியுதவியுடனும் பிரமந்தனாறுக்குளம் ரப் நிறுவனத்தின் நிதியுதவியுடனும் புனரமைக்கப்படவுள்ளதாக நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவிக்கின்றது.

### இறைச்சிக்கோழி விற்பனை

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர் சுத்தம் செய்தது. (1kg 430/=) கல்பேட் சுத்தம் செய்து காலை 6 மணி தொடக்கம் இரவு 8 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.
நல்லூர் பாம் சென்ரர்
19.முருகேசர் லேன், நல்லூர்.
(757) T.P: 021 222 6944

### மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பம், 1975.10.23, கார்த்திகை 4ஆம் பாதம், பாவம் 28, நட்புப் பெற்ற 7இல் செவ்வாய், B.Com, HNDA பட்டம் பெற்ற பிரான்சிலுள்ள மணமகனுக்கு லண்டன்/ சுவிஸ்/ பிரான்ஸ் இல் P.R உள்ள மணமகள் தேவை. தொடர்பு: 075 039 4152 (779)

### வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம், பொஸ்கோ பாடசாலை முன்பாக அமைந்த ஒன்றரைப் பரப்புக் காணி, வீட்டுடன் விற்பனைக்குண்டு. அறைகள் (4) குளியல் அறை, ஹோல், குசினி, வாகன தரிப்பிட வசதி உண்டு.
தொடர்பு: 0772923772

### மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 38 வயது, சுமாரான அழகு மணமகளுக்கு அரச உத்தியோகம் அல்லது சொந்தத் தொழில் செய்யும் மணமகனை எதிர்பார்க்கின்றோம்.யாழ். நகருக்கு 5 மைல் சுற்றாடலில் சகல வசதிகளுடன் வீடு மற்றும் தகுந்த சீதனம் கொடுக்கப்படும்.
தொடர்பு: 0774728010

### வீடு விற்பனைக்கு

சுண்டிக்குளி, விதானையார் வீதியில் 1½ பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு: எஸ்.எஸ். நாதன், 16/3, விதானையார் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.தொ.பே: 0776146434
(809)

### விற்பனைக்கு

கட்டுமண், பூச்சுமண் 1 கியூப் 11000/=, அத்திபாரகல் 6×9 கருங்கல் 1 கியூப் 9000/=, 1 அரிகல் 40/= ¾ கருங்கல் சல்லி 1 கியூப் 13000/=, அதிகம் தேவைப்படுவோருக்கு விலைக்கழிவுண்டு. யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி ஆகிய இடங்களுக்கு கொடுக்கப்படும்.
(810) தொடர்பு: 0776253719

### காணி விற்பனைக்கு

ஏ- 9 வீதியில் கைதடிச் சந்திக்கு அருகில் பொன்னம்பலம் எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கும் கைதடிப் பிள்ளையார் கோயிலுக்கும் இடையில் கண்டி வீதி முகப்புடன் 36 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0212263806, 0777734206
(812)

### கண்ணீர் அஞ்சலி



(சி/5764462)

சோதிநாதன் சிவசுந்தரம் (B.A.)
(ஓய்வுபெற்ற அதிபர்)

கடந்த 13.02.2011இல் லண்டனில் சிவபதமெய்திய அரியாலையூர் அமரர் சோதிநாதன் சிவசுந்தரம் அவர்கள் அரியாலை சித்துப்பாத்தி இந்து மயான முன்னாள் தலைவராக இருந்து அதன் பல அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டவர். அவரது மறைவுக்கு எமது சபை அரியாலை வாழ் மக்கள் சார்பாகக் கண்ணீர் அஞ்சலியைத் தெரிவிப்பதோடு, அவரை இழந்து துன்புறும் பிள்ளைகள், உற்றார், உறவினர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நிர்வாக சபையினர்,
அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானசபை, அரியாலை.

### சாவகச்சேரி நகரில் காணி விற்பனைக்கு

சாவகச்சேரி நகரில் 20 பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்கு உண்டு.

- சர்வதேச பாடசாலை அமைத்தல்
- தனியார் வைத்தியசாலை
- கிறிஸ்தவ ஆலயங்கள்
- நேர்சிங் கோம்
- களஞ்சியசாலை

போன்றவற்றுக்குச் சிறந்தது.

தொடர்பு: 0773526211
(சி/576240)



A wonderful opportunity...
STUDY WHILE YOU WORK IN UK

Don't give up your dream to study and work in the UK.

Here's a wonderful opportunity to gain International Exposure, an International Qualification as well as Job Opportunities in the UK.

BCBS guarantees you the opportunity of working in UK, providing you each and every support you need to carry on with your studies.

Come to experts in educational services and take the first step to be an Internationally Recognized Graduate today!

Our Partner in UK
- Teesside University
- University of Central Lancashire
- University of Worcester
- Croydon Metropolitan College
- London College of Management
- Harrow International College
- Icon College of Technology & Management

OUR SPECIALITY
- FREE Consultation
- Assistance with IELTS
- Student Loan Facilities
- Assistance with Accommodation, Travel & Transportation

IELTS not required for the Colleges

Don't forget to come early as rules and regulations change in April 2011. Why take risk of trimming a good opportunity?

Our Counsellors will be in Jaffna for Counseling & Spot Admissions.

Call Sivaja on 077 1097 997 to make an appointment.

BRITISH COLLEGE OF BUSINESS STUDIES
298B, R. A. De Mel Mawatha, Colombo 03.
Phone: 011 2301691, 077 222 7393

SKILLS Advertising

நீங்களும் ஒரு இளமாணி/ முதுமாணி பட்டதாரியாகலாம்
External Degree-ALAGAPPA UNIVERSITY (INDIA)
BA, BBA, B.COM,
BSc., MSc., MA, MCom, MBA
தமிழ், ஆங்கிலமொழி மூலம் வெளிவாரி பட்டப்படிப்பை நாடு முழுவதும் தபால் மூலமாகவும், நேரடியாகவும் தொடர ஓர் அரிய சந்தர்ப்பம்
தகைமை : A/L 3 சாதாரண சித்திகள் இப்பட்டப்படிப்பை தொடர்வதற்கு பதிவுகளையும், பாடகுறிப்புக்களையும் எமது கல்வியகத்தினூடாக மேற்கொள்ள முடியும்
Registered and Approved Study Centre
GENIUS ACADEMY
Colombo, Kandy, Puttalam, Vavuniya, Jaffna, Trincomalee
Tel : 077 9914260, 011 3134067

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3 ஆயிரம் மில்லியன் ரூபா செலவில் வவுனியாவில் நீர்மின் உபநிலையம்

## அனுர திலகரட்ண தெரிவிப்பு

வவுனியா,பெப்.27
வடமாகாணத்திற்கு 24 மணித்தியாலங்களும் மின்சாரம் வழங்குவதற்கு ஏற்ப ஜப்பான் நாட்டின் நிதியுதவியுடன் வவுனியாவில் பிரமாண்டமான தேசிய மின் கட்டமைப்பு உள்ள நீர்மின் உப நிலையம் அமைக்கப்படவுள்ளது.

வடக்கின் வசந்தம் திட்டத்தின்கீழ் 3 ஆயிரம் மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ளதாக இத்திட்டத்தின் செயற்றிட்ட முகாமையாளர் அனுர திலகரட்ண தெரிவித்தார்.

ஜப்பான் நாட்டின் நிதியுதவியுடன் இலங்கையில் மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்தித் திட்டம் தொடர்பாக விளக்கும் ஊடகவியலாளர் சுற்றுலாப் பயணம் ஒன்று நடத்தப்பட்டது. இதன்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். மேலும் குறிப்பிடுகையில்

வடக்கில் நிலையானதும் வலுவானதுமான மின்சாரத்தை வழங்கும் செயற்றிட்டத்தின் கீழ் ஒரு லட்சத்து 32 ஆயிரம் "வோல்டேஜ்" திறன் கொண்டதாக இருக்கும் இந்த மின் உப நிலையம் வவுனியா நகரின் வடக்குப் பகுதியில் உள்ள அரச காணியில் 73 சதுர கிலோ மீற்றர் பரப்பில் அமைக்கப்படவுள்ளது.

இலங்கைக்கும் ஜப்பானுக்குமிடையில் ஏற்பட்டுள்ள நட்புறவின் அடிப்படையில் 40 வருட கடன் அடிப்படையில் ஜப்பான் 3 ஆயிரம் மில்லியன் நிதியினை வழங்கியுள்ளது.

இந்த மின் உபநிலையத்தை அமைப்பதற்கு ஜப்பான் நாட்டிலிருந்து மின்பொறியியலாளர்கள் வருகை தரவுள்ளனர். இந்த மின்நிலையம் அமைக்கும் பணிகள் எதிர்வரும் 2012 ஆம் ஆண்டு ஜூலை மாதம் பூர்த்தியாகும் என்றும் அவர் தெரிவித்தார்.(9)

# கிளிநொச்சியில் பேடன் பவல் நினைவு நிகழ்வு

கிளிநொச்சி,பெப்.27
இலங்கை சாரணர் சங்கத்தின் கிளிநொச்சி மாவட்ட சாரணர்களால் சாரணர் ஸ்தாபகர் பேடன்பவல் பிரபு தின நினைவு நிகழ்வுகள் கடந்த 22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கிளிநொச்சி மத்திய கல்லூரியில் இடம்பெற்றது.

கல்லூரி அதிபர் திருமதி ஜெயராசா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராகக் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த. குருகுலராசாவும் சிறப்பு விருந்தினராகக் கிளிநொச்சி மாவட்ட சாரணர் ஆணையாளர் செ.சுப்பிரமணியமும் கலந்து கொண்டனர்.

நினைவு தினத்தையொட்டி வலயப் பாடசாலைகளின் மாணவர்களிடையே நடத்தப்பட்ட கட்டுரை, பொதுஅறிவு, பேச்சு ஆகிய போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்பட்டன. (207)

# ஆனையிறவில் உப்பு உற்பத்தி விரைவில் தொடங்கும்

கிளிநொச்சி,பெப்.27
ஆனையிறவு உப்பளத்தில் உப்பு உற்பத்தி நடவடிக்கைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பல வருடங்களாகச் செயலிழந்து போயிருந்த உப்பளத்தில் முன்னர் வருடத்துக்கு 79 ஆயிரம் முதல் 80 ஆயிரம் வரையிலான மெட்ரிக் தொன் உப்பு உற்பத்தி செய்யப்பட்டு வந்தது.

ஆனையிறவு உப்பள நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் இறக்குமதி செய்யப்படும் சோடியம் குளோரைட் உப்பின் இறக்குமதியை மட்டுப்படுத்த முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்மூலம் கணிசமான அந்நியச் செலவாணியைச் சேமிக்க முடியும் என்றும் 60 சதவீதமான உப்பு இலங்கையில் உற்பத்தியாகும் அதேவேளை 40 சதவீதமான உப்பினை இறக்குமதி செய்ய வருடாந்தம் அரசுக்கு 38 கோடி ரூபா அந்நிய செலவாணி செலவாகிறது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## சந்தோசம்...



ஊக்குவிப்பு : கிளிநொச்சி தென்னைப் பயிர்ச்செய்கைச் சபையினால் தென்னை புனரமைப்பு மானியத்திட்டத்தின் கீழ் தென்னைச் செய்கையாளர்களுக்கு மானியக் காசோலை வழங்கும் நிகழ்வு கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் 24 ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெற்றது. இதில் தென்னைச் செய்கையாளர் ஒருவருக்கு மானியக் காசோலையை கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி றூபாவதி கேதீஸ்வரன் வழங்கினார். அருகில் கிளிநொச்சி மாவட்ட தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜெ.சத்தி யேந்திரன் நிற்கிறார். (500)

# கூலர் ரக வாகன விபத்தில் மன்னாரில் பெண் சாவு

மன்னார்,பெப்.27
மன்னார் - தலைமன்னார் துள்ளுக்குடியிருப்பு கிராமப் பகுதியில் பிரதான வீதியோரமாக நடந்து சென்று கொண்டிருந்த பெண்ணொருவர் அவ்வழியே வந்த கூலர் ரக வாகனம் மோதி விபத்துக்குள்ளானதில் சம்பவ இடத்திலேயே பலியானார்.

துள்ளுக்குடியிருப்பு கிராமத்தைச் சேர்ந்த ஞானப்பிரகாசம் அக்னேஸ் (வயது 73) வயோதிபப் பெண் சம்பவ இடத்தில் பலியானதை அடுத்து அவ்விடத்தில் திரண்ட மக்கள் குறித்த வாகனச் சாரதியையும் கடுமையாகத் தாக்கியதோடு கூலர் ரக வாகனத்தினையும் சேதப்படுத்தினர் என்று தெரிவிக்கப்படுகிறது.

சம்பவ இடத்துக்கு வந்த மன்னார் பொலிஸார் வாகனச் சாரதியைக் கைது செய்ததோடு வயோதிபப் பெண்ணின் சடலத்தினை மன்னார் பொது வைத்தியசாலையில் ஒப்படைத்ததாகவும் மேலதிக விசாரணைகளைத் தலைமன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (313)

# 5 ஆயிரம் சிறுவர்களை பொறுப்பேற்க அரசு முடிவு

கிளிநொச்சி,பெப்.27
வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த 5 ஆயிரம் அநாதைச் சிறுவர்களைப் பொறுப்பேற்று வளர்க்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

கடந்த கால யுத்தத்தின் போது பெற்றோரை இழந்த சிறுவர்களும் விடுதலைப் புலிகளின் பராமரிப்பில் இருந்து கைவிடப்பட்ட சிறுவர்களும் இதில் சேர்க்கவுள்ளனர் என்று ஆளுநர் தெரிவித்துள்ளார்.

யுத்தத்தின் மூலம் பாதிக்கப்பட்டு அநாதரவாக இருக்கின்ற சிறுவர்கள் தான் கூடுதலாக இருப்பதாகவும் இவர்களின் எதிர்காலம் சிறந்து விளங்கும் நோக்குடன்தான் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில் வடமாகாணத்தில் 56 சிறுவர் இல்லங்கள் பதிவு செய்யப்பட்டு இயங்கி வருவதாகவும், 26 சிறுவர் இல்லங்கள் பதிவு செய்யப்படாமல் இயங்குவதாகப் பதிவுகள் தெரிவிக்கின்றன.

# பாம்பினால் கடியுண்டார்

கிளிநொச்சி,பெப்.27
நெல் அறுவடையில் ஈடுபட்ட ஒருவர் பாம்பினால் கடியுண்ட சம்பவம் ஒன்று கடந்த 24 ஆம் திகதி வியாழக்கிழமை பூநகரி நல்லூரில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த செல்லத்துரை குணசிங்கம் (வயது 53) என்பவரே பாம்பினால் கடியுண்டவராவார்.

இவர் பூநகரிப் பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக அம்புலன்ஸ் மூலம் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டார். (207)

# செயற்றிட்டக் கூட்டம்

கிளிநொச்சி,பெப்.27
கிளிநொச்சி மாவட்ட சமூக வலுவூட்டல் அமைப்பின் ஏற்பாட்டில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்கான செயற்றிட்டங்களை அமைப்பதற்கான கூட்டம் கடந்த 22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அமைப்பின் மண்டபத்தில் நடைபெற்றது.

மேற்படி கூட்டத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இருந்துள்ள தேவைகள், அவற்றை மேம்படுத்துவதற்கு அல்லது பூர்த்தி செய்வதற்கான வழிவகைகள் தொடர்பில் ஆராயப்பட்டதுடன் கிராம மட்டத்தில் சிறிய குழுக்கள் உருவாக்கப்பட்டு அவற்றின் மூலம் குடும்பம் ஒன்றிற்கு 6 ஆயிரம் ரூபா வீதம் முதற்கட்டமாக வழங்கப்படவுள்ளது.

# அம்புலன்ஸில் குழந்தையை பிரசவித்த தாய்

கிளிநொச்சி,பெப்.27
முழங்காவில் வைத்தியசாலையிலிருந்து அம்புலன்ஸ் மூலம் சாவகச்சேரி வைத்தியசாலைக்குக் கொண்டு வரப்பட்ட கர்ப்பிணி அம்புலன்ஸில் குழந்தையைப் பிரசவித்தார்.

எனினும், வைத்தியசாலையில் அனுமதிக்க முன்னர் குழந்தை இடைவழியில் இறந்துள்ளது. இச்சம்பவம் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது.

தாய் சாவகச்சேரி வைத்தியசாலையின் பிரசவ விடுதியில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் குழந்தை சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இச் சம்பவம் தொடர்பாகப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (207)

# கிளிநொச்சி மாவட்ட இரத்தினபுர மக்களுக்கு சொந்தக் காணியிலே வீடு அமைக்கப்படும்

## ஆளுநர் உறுதியளிப்பு

கிளிநொச்சி,பெப்.27
கிளிநொச்சி இரத்தினபுரம் மக்களுக்கு சொந்தக் காணிகளிலேயே வீடு அமைத்துத் தரப்படும் என்று வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி உறுதி அளித்துள்ளார்.

இந்தப்பகுதி மக்கள் அரச தரப்பினருக்குத் தொடர்ச்சியாகக் கொடுத்துவந்த அழுத்தங்களைத் தொடர்ந்து இந்த உறுதி அளிக்கப்பட்டுள்ளது.

கடந்த 24 ஆம் திகதி வியாழக்கிழமை இரத்தினபுரம் கிராமத்துக்கு வருகை தந்த வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார், மாவட்ட அரச அதிபர் திருமதி றூபாவதி கேதீஸ்வரன், கரைச்சி பிரதேசக் காணி அலுவலர் சிவகுமார் ஆகியோர் அந்தப் பகுதி மக்களிடம் மேற்படி உறுதிப்பாட்டை வழங்கியுள்ளனர்.

இரத்தினபுரம் கிராமத்தின் ஒருபகுதி தாழ்நிலம் எனக் குறிப்பிட்டு [illegible] பத்திரங்கள் வழங்குவதில் இழுத்தடிப்புக்களை காணி அதிகாரிகள் மேற்கொண்டதைத் தொடர்ந்து பாதிக்கப்பட்ட மக்கள் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு மனுக்களை அனுப்பியிருந்தனர்.

இதனைக் கருத்திற் கொண்ட ஆளுநர் குழு மேற்படி மக்களுக்குச் சொந்த இடத்திலேயே வீடமைக்கப் பரிந்துரை வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துயர் பகிர்கின்றோம்

எமது கல்லூரியின் ஆசிரியை திருமதி க.ஹறின் டொறினாவின் அன்புத் தாயாரும் எமது கல்லூரியின் முன்னாள் ஆசிரியையுமான

**திருமதி ம.அந்தோனியாப்பிள்ளை**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்..

கல்லூரிச் சமூகம்,
(29-27) யா/நெடுந்தீவு றோ.க.மகளிர் கல்லூரி, நெடுந்தீவு.

## சுயதொழில் ஓய்வூதியம் தொடர்பான கலந்துரையாடல்

நாவற்குழி,பெப்.27

இலங்கை சமூக பாதுகாப்புச் சபையின் சுயதொழில் ஓய்வூதியத் திட்டத்தை இந்த ஆண்டில் நடைமுறைப்படுத்துவது தொடர்பான கலந்துரையாடல்கள் பிரதேச செயலக ரீதியாக நடைபெற்று வருகின்றன.

சபையின் யாழ். மாவட்ட இணைப்பாளர் பி.பிரதீபன் பிரதேச செயலர்களின் அனுசரணை யைப் பெற்று கிராம உத்தியோகத்தர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோருக்குத் திட்டம் தொடர் பான விழிப்பு ணர்வை வழங்கி வருகின்றார்.

இந்த வருடம் அதிக பயனா ளிகளை இணைத்துக் கொள்ளும் நோக்குடன் விழிப் புணர்வ வூட்டல் வழங் கப்ப டுகின்றது. (த-121)

## G.C.E. (A/L) - 2011

CHEMISTRY, BIOLOGY தமிழ்/ ஆங்கில மொழிகளில் வீடுவந்து கற்பித்தல் தனி/குழு. மணித்தியாலத்துக்கு ரூபா 500/-.

அழையுங்கள்: வித்யா,சுழற்றுங்கள் 0777730838/2264814(இரவு) தாமதிக்காதீர்.

## ஊர்க் கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு

தரமான தடுப்பூசிகள் ஏற்றப்பட்ட ஒருநாள்/ கிழமை/ மாத ஊர்க் கோழிக்குஞ்சுகள் நியாயமான விலையில் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0217200616/ 0771341795

SOS CHILDREN'S VILLAGES SRI LANKA

## "சின்னஞ் சிறார்களுக்கு தாய்ப்பாசம்"

அன்புக்காக
ஏங்கித்தவிக்கும்
பிள்ளைகளுக்குத்
தாய்ப்பாசத்தை
வ ழங்கும்



### தாயாகத் தங்களுக்கும் ஒரு வாய்ப்பு!

அன்புத் தாயாகவும் வாழ்க்கையை இவர்களுக்காக அர்ப்பணிப்பதும் அவசியமாகும். தாய் என்ற ஸ்தானத்தை அடைய ஏங்குபவர்களோ ஏராளம். சமூகத்தின் பலதரப்பட்ட பிரச்சினைகளால் அநாதரவாக விடப்பட்டுள்ள பிள்ளைகளைப் பாதுகாக்க உங்களுக்கும் ஒரு அரிய சந்தர்ப்பம்.

உங்கள் வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக்க விரும்பினால் எஸ்.ஓ.எஸ் சிறுவர் கிராமத்தின் சிறு பிள்ளைகள் 8 – 10 வயதிற்குட்பட்டோரைப் பாதுகாக்கும் பொறுப்பு உங்கள் கையில். எஸ்.ஓ.எஸ் தாய்மார் பயிற்சிப் பாடசாலையில் பயிற்சியினைப் பெற்ற நீங்களும் மேன்மைபெற்ற தாயாகலாம்.

**நீங்கள்**

- வயது 30 – 40 வயதிற்குட்பட்ட நல்ல தேக ஆரோக்கியமுள்ள
- நல்ல பழக்கவழக்கங்களையுடைய சிறந்த கல்விப் பின்னணியுடையவராகவும்
- பிள்ளைகளுக்கு அன்புடையவராகவும், வீட்டுவேலைகளைச் செய்ய சிறந்த பயிற்சிபெற்றவராகவும்
- குடும்பப் பிணைப்பில்லாதவராகவும், வெளியாருடன் பிரச்சினைகள் இல்லாதவராகவும்.

❄ ❄ ❄ ❄ ❄ ❄

- பிள்ளைகளுடன் அன்பினால் பிணைக்கப்பட்ட ஒரு கூரையின் கீழ் வாழலாம்.
- பராமரிப்புடன் உணவு, வதிவிடம், வைத்தியப்பராமரிப்பும் வழங்கப்படும்.
- வாழ்நாள் முழுவதும் அரவணைப்புடன் வாழவும் ஓய்வூதியமும் பெறலாம்.
- ரூபா 6,250/= இல் தொடங்கி இரண்டு வருடங்களில் ரூபா 12,000/= படிப்படியாகவும் உயர்வடையும் வாய்ப்பு ஏற்படும்.

சமூகசேவை அமைச்சினால் பதிவுசெய்யப்பட்ட எமது எஸ்.ஓ.எஸ் சிறுவர் கிராமங்கள் இலங்கையில்
**பிலியந்தலை,நுவரெலியா,காலி,அநுராதபுரம்,மொனராகலை** ஆகிய இடங்களில் இயங்கிவருவதுடன் உலகளாவியரீதியில் 132 நாடுகளில் எஸ்.ஓ.எஸ் சிறுவர் கிராமங்கள் இயங்கி வருகின்றன.

தங்களது முழுவிபரங்களுடனான விண்ணப்பப்படிவத்தை 15 நாட்களுக்குள் எமக்கு கீழ்வரும் முகவரிக்கு அனுப்புங்கள்.

*திரு.சுவாமிநாதன் அரிச்சுனன்*
உதவிப் பணிப்பாளர்,
எஸ்.ஓ.எஸ் சிறுவர் கிராமம்,
பருத்தித்துறை வீதி, இருபாலை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல : 021 2230076 / 077 2366106

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
30 - 07 - 1939



விண்ணில்
27 - 02 - 2010

**திருமதி வசந்தாதேவி தண்டாயுதபாணி (ஆசிரியை)**

இன்று (27.02.2011) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் மு.ப.11.30 மணியளவில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அழைக்கின்றோம்.

நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி,
தொ.பே.: 0212270374

ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்
கணவர், பெறாமக்கள், சகோதரர்,
சகோதரிகள், மைத்துனர்.
(29-27)

## காவலரண் அமைப்பு

சுழிபுரம்,
பெப்.27

சுழிபுரம் வடகிழக்கு சம்புநாத லிங்கேஸ்வர ஆலய முன்பாகவுள்ள முச்சந்தியில் புதிதாகக் காவலரனொன்று இராணுவத்தினரால் அமைக்கப்பட்டுள்ளது.

இந்தக் காவலரணைச் சுற்றி வேலி அமைக்கப்பட்டு நிரந்தரமாக இது அமைக்கப்பட்டுள்ளது. இரவு பகலாக இராணுவத்தினரின் ரோந்தும் இடம்பெற்று வருகின்றது.

யாழ்.குடாநாட்டில் கடந்த காலங்களில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவங்களை அடுத்து படையினர் பல்வேறு இடங்களிலும் காவலரண்களை அமைத்து ரோந்து நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (4-28)

## பதவி வெற்றிடம்- ஊடக இணைப்பாளர்

வடமாகாண சபையின் இணையத்தளத்தில் நாளாந்தச் செய்திகளை உடனுக்குடன் வெளியிடுவதற்காக ஊடக இணைப்பாளர் ஒருவர் தேவைப்படுகின்றார்.

கீழ்வரும் தகைமைகளை உடையவர்கள் சுயவிவரக்கோவையை ''மாகாண திட்டமிடல் செயலகம்'' வடமாகாணம், GPS வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு 04.03.2011 இற்கு முன்னதாக அனுப்பி வைக்கவும்.

**தேவைப்படும் தகைமைகள்:**

01. வயதெல்லை: 25-55 வயதுக்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

**02. கல்வித் தகைமை:**

1. க.பொ.த.(சா/த) இல் ஆங்கிலம், தமிழ் ஆகிய பாடங்கள் அடங்கலாக 6 பாடங்களில் விசேட சித்தியும்.
2. க.பொ.த. (உ/த) இல் சித்தியும் அடைந்திருத்தல் வேண்டும்.
3. ஊடகப் பயிற்சி நெறி/ ஊடக டிப்ளோமா உடையவராக இருத்தல் விரும்பத்தக்கது.

**03. ஏனை தகைமைகள்:**

1 ஆங்கிலம், தமிழ் ஆகியவற்றில் ஊடக அறிக்கை தயாரிக்கும் அனுபவம்.
2. கணினித் தட்டச்சு (ஆங்கிலம், தமிழ்) "Microsoft Office" இல் போதிய பரீட்சயம் மற்றும் இணைய, மின்னஞ்சல் பயன்பாட்டிலும் போதிய முன் அனுபவம் உடையவராக இருத்தல் வேண்டும்.
3. ஊடகத்துறையில் முன்அனுபவம் இருத்தல் விரும்பத்தக்கது.

இப்பதவி ஒப்பந்த அடிப்படையிலானதாக அமையும்.

தொலைபேசி இலக்கம்: 0212230355
தொலை நகல்: 0212230354
மின் அஞ்சல்:npplan@sltnet.lk/northplanning@gmail.com

**பிரதிப்பிரதம செயலாளர்- திட்டமிடல்,**
**மாகாண திட்டமிடல் செயலகம், வடமாகாணம்.**

(சி/576447)(38-21-23)

## நல்லூர் சரவணா ரெக்ஸ்

### மாபெரும் மலிவு விற்பனை

இன்று மட்டும்! இன்று மட்டும்! இன்று மட்டும்! இன்று மட்டும்!

அலை, அலையாக வாரீர்! அள்ளி,அள்ளி செல்லுங்கள்

சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்

புத்தம் புதிய சாறிகள், பஞ்சாபிகள் எண்ணற்ற டிசைன்களில் பெற்றுக்கொள்ளலாம். கொட்டன் சாறிகள், பஞ்சாபிகள், சில்க்சாறிகள் மற்றும் ஆண்களுக்கான சேட் என்பன.
ஏராளம், ஏராளம், சந்தர்ப்பம் இன்று மட்டும்.

புத்தம் புதிய தெரிவுகள்

இடம் : நல்லூர் (பூங்கனிச் சோலைக்கு முன்பாக)
காலம் : இன்று 27.02.2011 மட்டுமே...!
நேரம் : காலை 9மணி முதல் இரவு 9மணி வரை

(48-19-22)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொய்யுரையே துன்பத்தின் வேர்

இலக்கியக் காட்சி – 76

தர்மினி பார்த்திபன்



என்றும் மகிழ்ந்திருக்கவே விரும்புபவன் மனிதன். ஆனால் பல வேளைகளில் துன்பத்திலேயே உழலும் நிலையில், அத்தகைய துன்பங்கள் நேர்வதற்கான காரணத்தை அறியாமல் அறிய இயலாமல் அல்லலுறும் சந்தர்ப்பங்கள் நிறையவே உள்ளன. அத்தகைய சந்தர்ப்பங்களில் நாம் பலவாறு பிதற்றுவதோடு ஆண்டவனையும் நொந்து கொள்ளுகின்றோம்.

முன்னைய நாள்களில் வாழ்ந்த இரட்டையர்கள் என அழைக்கப்பட்ட அந்தனான கவிஞனும் நொண்டியான கவிஞனும் இணை பிரியாமல் அலைந்தலைந்து அரசர்களைப் புகழ்ந்து பாடி அரசர்கள் தரும் பரிசில்களைப் பெற்றுத் தங்கள் வாழ்க்கையை ஓட்டி வந்தனர்.

ஒரு நாள் ஓர் அரசவையினுள் நுழைந்து அரசரைப் புகழ்ந்து அவர்கள் பாடிய வேளை, அவர்களின் புலமையைப் பாராட்டிப் பரிசுகளை வழங்க அரசர் முன்வந்தார். ஆனால் அங்கே இருந்த அரசவை அமைச்சர் அதனைத் தடுத்தார். அதனால் மனமுடைந்த இரட்டையர்கள்

*"புராதனமான தமிழ்ப் புலவீர் இந்தப்புன்குரங்கு*
*மராமரம் விட்டிங்கு வந்ததென்னோ*
*வந்தவாறுசொல்வேன்*
*தராதலம் வென்ற தமிழ்மாறனையுந் தன்தம்பியையும்*
*இராகவனென்றும் இலக்குவனென்றும் வந்தெய்தியதே"*

என்கின்றனர்

அந்தப் பரிசைக் கொடுப்பதற்கு முன்வந்த அரசரைத் தடுத்த அமைச்சரை இந்தப் பாடலின் மூலம், ஏசுவதைக் காண்கின்றோம். இராகவனோடும் இலக்குவனோடும் இருந்த குரங்குகளில் ஒன்று எப்போது அந்தக் காட்டு மரங்களை விட்டு இந்த அரசவைக்கு வந்தது எனக் கேட்கின்றனர்.

தமிழை மதித்தும் இரட்டையர்களின் கவிதையை இரசித்தும் அரசர் தமிழ்மாறனும் அவரது தம்பியும் தமக்களித்ததைத் தடுத்த அமைச்சரின் செயல் அவர்களுக்கு வேதனையைத் தருகின்றது

அரசர்களைப் புகழ்ந்து பாடிப் பாடியே இரந்துண்டு வாழும் அவர்களின் வாழ்க்கையில் இவ்வாறான இடர்களும் சில வேளைகளில் ஏற்படுவதுண்டு

ஒரு நாள் குன்றுங் குழியுமான ஒரு பாதையிலே அவர்கள் போய்க் கொண்டிருக்கின்றனர். அப்பாதையில் நடப்பதோ கஷ்டம். மிகுந்த வேதனைகளைத் தாங்கிக் கொண்டே நடக்கின்றனர். தமக்கேன் இத்தகைய துன்பம் வந்துற்றதென வருந்துகின்றனர். தமக்கு நேர்ந்துவரும் துன்பமெலாம் நீங்காதோ என்று ஏங்குகின்றனர்

குருடரான கவிஞர் முடவரான கவிஞரைத் தூக்கிச் செல்ல, செல்லும் பாதையைக் காட்டிய படி முடவர் தோளில் அமர்ந்திருப்பார். இதுதான் அவர்கள் பயணிக்கும் முறை. இவர்கள் ஒருதாய் வயிற்றில் பிறந்த இரட்டையர்கள். ஒருவர் ஒரு பாட்டின் ஒரு பகுதியைப் பாட, மற்றவர் மறு பாதியைப் பாடிப் பாடலை நிறைவு செய்வார். அன்று அந்தக் கரடு முரடான பாதையில் நடந்ததால் ஏற்பட்ட துன்பமும் சுமையும் குருடரான கவிஞரை வருத்துகிறது உடனே அவர்

*"குன்றும் குழியும் குறுகி வழிநடந்து*
*சென்று திரிவதென்றுந் தீராதோ"*

என்று பாடினார். உடனே அதற்குப் பதிலாக முடவர்

*"ஒன்றும் கொடாதானைக் கொவென்றும்*
*காவென்றும் கூறில் இடாதோ நமக்கிவ் விடர் "*

என்கின்றார்.

கொடாதானைக் காமதேனு என்றும் வள்ளல் என்றும் கற்பகதரு என்றும் இல்லாததெல்லாம் இருப்பதாகச் சொல்லிப் புகழ்ந்த குற்றத்துக்குக் கடவுள் இத்துன்பங்கள் எல்லாவற்றையும் தந்து விட்டார். பொய்யுரைத்தால் இத்துன்பங்களெல்லாம் நம்மை வந்து சேரத் தடையில்லையே! "பொய்யுரைத்த வாய்க்குப் பொரியும் கிடையாது" என்பர். இத்தகைய பொய்யுரைத்தலே இன்று பலரது வாழ்வாகிப் போன நிலையில் எம்மவர் துன்பத்துக்கு உள்ளாகி அதற் குள்ளே அமிழ்ந்து துடிப்பதைத் தடுத்தல் இயலாதே!.

உண்மையின் - சத்தியத்தின் உட்பொருளை விளக்கி வைக்கும் இரட்டையரின் வெண்பா வரிகள் பொய்மையால் விளையும் துன்பத்தை அழுத்தி உரைப்பதைக் காணுகின்றோம்.

பொய்மையையே எமக்குப் புளுகுகளாக்கிக் கூக்குரலிட்டு நம்மை ஆளும் சூழலைப் பாருங்கள் இன்றைய எமது இத்தகைய துன்ப நிலைக்குப் பொய்யுரைக்கும் பித்தர்களின் பொய்மையும் காரணமாகலாம். ✱

# கல்லுக்குள் கண்ணீர்



க.நீலாம்பரி

உதயன் 25
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
வெள்ளிவிழா சிறுகதைப் போட்டியில்
பாராட்டுப் பெற்ற சிறுகதை 7

சலசலத்தோடிய சரயூ நதியின் மென்மையான நீரோட்டம் அதிகாலையில் உடலை ஆரத்தழுவியணைத்து ஓடியபோதும் அதில் ஏதோ ஒரு விதமான எல்லையற்ற அனுபவம் இருப்பதாகவே அவள் உணர்ந்தாள்.

அவள் நீராடும் ஒவ்வொரு நாளிலும் அதில் புதிய புதிய சுகங்கள் இருப்பதாகவே அவளுக்குத் தோன்றும். அவளின் நீண்ட கூந்தல் அந்த நீர்ப்பரப்பில் விரிந்து தவழும் போது நீரோட்டத்தை எதிர்த்து நீச்சலடிக்கும் சிறுமீன்களின் கூட்டம் அவளின் நினைவுக்கும் வரும்.

விடிந்தும் விடியாததுமான அந்தக் காலைப் பொழுதில் ஆற்றங்கரை மதமதப்பில் ஓங்கி வளர்ந்திருந்த விருட்சங்களில் குடிக்கொண்டிருக்கும் பட்சிகளின் குரல்கள் லயம் பிசகாத ஒரு சீரான இசையை மீட்டுவதாகவே அவளுக்குத் தோன்றியது. யாக குண்டத்தில் இசைக்கப்படும் சாமவேத பாராயணத்தின் இசையின்பத்தைப் பிரித்தெடுத்து அவை திருடித் தங்களுக்குச் சொந்தமாக்கி விட்டனவோ? என்ற சந்தேகம் கூட அவளுக்கு எழுவதுண்டு.

எங்கிருந்தோ பறந்து வந்த தோகை மயிலொன்று தொலைவில் தெரிந்த பட்டமரத்தில் அமர்ந்து கொண்டது. அதன் அழகிய தோகை அவளுக்குத் தனது கூந்தலை நினைவூட்டவே அவள் உள்ளூர ஒரு பெருமிதத்தில் மிதந்தாள். இருந்த போதிலும் ஏனோ ஒரு பெருமூச்சு அவளையறியாமலே அவளிடமிருந்து வெளிப்பட்டது. எல்லா அழகும் அவளைச் சுற்றியிருந்த போதிலும் ஏதோ ஒரு இல்லாமை அவளுக்குள் இளையோடுவதாக அவள் பல சமயங்களில் உணர்வதுண்டு: ஆனால் அது என்னவென்று அவளால் புரிந்துகொள்ள முடியவதில்லை.

கண்களை அலக விரித்தவாறு நீருள் தலையைத் தாழ்த்தி சில நொடிகள் வைத்திருந்து விட்டு வெளியே எடுத்தாள் அவள். முகத்தை மூடிய கருங்கூந்தலைப் பின் தள்ளிவிட்டு முகத்தை நிமிர்த்திய போதுதான் மரங்களின் இலைகள் மெல்ல மெல்ல பொன்னிறமாவதைப் புரிந்து கொண்டாள்.

இப்போது கௌதம முனிவர் சந்தியாவந்தனத்தில் இருப்பார். அந்தச் சூரிய நமஸ்காரம் முடிந்த பின்பு சிறிது நேரம் நிஷ்டையில் இருந்து விட்டு அவர் பர்ணசாலைக்குத் திரும்பி வரும்போது பூசைக்கு மலர்கள் பறித்துத் தயாராக வைத்திருக்க வேண்டும்.

அவள் ஆற்றுநீரை விட்டு வெளியே வந்தபோது அவளின் ஆடைகள் ஏதுமற்ற மஞ்சள் நிற மேனி சூரிய ஒளியில் மெல்லிய செந்நிறம் பூண்டிருந்தது. இன்னும் நீர்த்திவலைகள் படிந்திருந்த அவளின் மேனியை மெல்லிய தென்றல் தடவிய போது மனமும் ஒருவித சுகத்தை அனுபவித்தது.

திடீரென ஒரு கூச்சம் அவளில் பரவுகிறது.

அகலிகை திடுக்கிட்டுத் தடுமாறுகின்றாள். அவள் தினமும் இப்படித்தான் நீராடுவாள். அதே கோலத்துடன் தான் ஆற்றைவிட்டு வெளியே வந்து ஆடையணிவாள்.

இன்று மட்டும் ஏன் இந்தக் கூச்சம்! ஏன் அவளின் உடல் சிலிர்த்து மயிர்க்கண்கள் குத்திடுகின்றன! நெஞ்சு ஏன் படபடக்கின்றது? அவளையறியாமலே யாரோ அவளைக் கண்வெட்டாமல் பார்ப்பது போல் அவளுள் ஓர் உணர்வு எழுகின்றது. கண்வெட்டாமல் என்றால் அவளை ஒரு கந்தர்வன் பார்க்கின்றானா?

அவள் சுற்றுமுற்றும் பார்த்தபோது எவருமே கண்ணில் படவில்லை. மெல்லக் கூச்சம் தானாகவே விலகுகிறது!

அவள் ஆடைகளை உடுத்திக் கொண்டு குடத்தில் நீரை நிரப்பியெடுத்து பர்ணசாலையை நோக்கி வேகமாக நடக்கின்றாள்.

அந்தக் கோலத்தில் அவளை யாரோ ஒருவன் பார்த்துவிட்டான்.

அவன் யாராக இருக்கும் என்ற கேள்வி அவளுள் மீண்டும் மீண்டும் எழுந்து கொண்டிருந்தது.

*(20 ஆம் பக்கம் பார்க்க)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்தியேட்டி அழைப்பு

அன்னை மடியில்
12.05.1918



அரனின் அணைப்பில்
30.01.2011

அமரர்

## கதிர்காமு வினாயகம்பிள்ளை

(முன்னாள் உரிமையாளர்- ஜெயகேசன் அன்கோ, அநுராதபுரம், வேளாண்திலகர்- வ/ஆறுமுகத்தான் புதுக்குளம், ஓமந்தை)

"கல்விச் செல்வந்தனை அள்ளித்தந்து,
கண்ணெனக் காத்து மண்ணில் மாண்புறச் செய்த தந்தையே!
இனி எப்பிறப்பில் காண்போம் உமை"

கடந்த 30.01.2011 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர் அமரர் கதிர்காமு வினாயகம்பிள்ளை அவர்களின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்ட அனைவருக்கும் தொலைபேசி வழியாகத் துயரைப் பகிர்ந்து கொண்டவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்களை வெளியிட்டவர்களுக்கும், ஏனைய வழிகளில் எமக்கு உதவியவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (27.02.2011) ஞாயிற்றுக்கிழமை காலை 7மணிக்கு தும்பளை முத்து மாரியம்மன் கோயிலில் நடைபெறும் அந்தியேட்டிக்கிரியைகளிலும், அதனைத் தொடர்ந்து முற்பகல் 11 மணியளவில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும், மதியபோசன உபசாரத்திலும் பங்குகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பிராமண வீதி,
தும்பளை, பருத்தித்துறை. (49-19-21) குடும்பத்தினர்.

### போட்டிக்கு ஆக்கம் கோரல்

யாழ்ப்பாணம், பெப்.27

மகளிர் தினத்தை முன்னிட்டு கியூடெக்-கரித்தாஸ் நிறுவனத்தால் சிறுகதை, கவிதைப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன. கலந்துகொள்ள விரும்புவோர் எதிர்வரும் 5ஆம் திகதி சனிக்கிழமைக்கு முன்னர் தமது ஆக்கங்களை 'இயக்குநர், கியூடெக்-கரித்தாஸ், யாழ்ப்பாணம்' என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

'உன்னை வலுப்படுத்தும், உலகம் வளம்பெறும்' என்னும் கருப்பொருளில் ஏ-4 தாளில் 4 பக்கத்துக்கு மேற்படாமல் சிறுகதையும், புதுக்கவிதை அல்லது மரபுக் கவிதை 16 வரிகளுக்கு மேற்படாமல் இருக்க வேண்டும். உளசமூக நெருக்கீடுகளும் அதனை எதிர்கொண்டு வெல்லும் சிந்தனை வெளிப்படும் ஆக்கங்களில் பிரதிபலிக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-ற)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



பிறப்பு:
20.09.1920

இறப்பு:
29.01.2011

திருமதி
## கமலேஸ்வரி இரத்தினசிங்கம்

பிறவுண் வீதி, கலட்டியைப் பிறப்பிடமாகவும், அண்ணாமலை வீதி, சுதுமலையை வசிப்பிடமாகவும் கொண்ட எமது அன்புக்குரிய திருமதி கமலேஸ்வரி இரத்தினசிங்கம் அவர்களின் மரணச் சடங்கில் கலந்துகொண்டவர்களுக்கும் தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதோடு, நாளை (28.02.2011) திங்கட்கிழமை சுதுமலை இல்லத்தில் நடைபெறவிருக்கும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அண்ணாமலை வீதி,சுதுமலை. (39-27) திருமதி உமையாள் மணிவண்ணன் குடும்பத்தினர்.

# VACANCY

## Assistant Manager

Looking for a male Assistant Manager with a minimum of 5 years working experience with an excellent knowledge on Computer (age 35 to 45 from Jaffna) for Elephant House Ice-cream re-distribution operation in Jaffna/Mullaitivu. Managing of the operation /Office/Staff/Cool trucks.

A good knowledge of Sales/ Accounts/Stocks/Banking. (English and Tamil Compulsory) Sinhala is optional.

## Accounts Clerk:

Looking for a male Accounts Clerk with Computer knowledge (MS Office Package)Minimum two years experience.
(English and Tamil compulsory) Sinhala is optional.

ICEMAN Technologies (Pvt) Ltd.
Contact:- 0776086667/ 0115231444
(Contact- 8.00am- to 5.00pm Only). (49-22)

# 3½ வருட உத்தரவாதமான மாணவர் விசா

இன்று வெளிநாடு செல்வதில் பல தடைகள் இருந்தாலும் எதுவித சிரமமும் இன்றி அனைத்து ஏற்பாடுகளையும் உடனடியாக செய்துகொள்ளக் கூடிய முறையில் அனைத்து வித செலவுகளையும் Visa கிடைத்த பின் செய்துகொள்ளக் கூடிய முறையில் இயங்கும் ஒரே ஒரு

1. எம்மால் குறைந்த செலவில் 3½ வருட Visa உத்தரவாதமாகப் பெற்றுத்தரப்படும்.

★ நீங்கள் எமைத் தொடர்புகொண்டு எம்மிடம் பதிவு செய்தபின் சட்டத்தரணியூடாக ஒப்பந்தம் பதிவு செய்யப்பட்டு Visa பெறும் ஆவணங்கள் கையேற்கப்படும்.

★ College Fees, Sponsor Fees தூதரக Visa கட்டணம், தேவையான ஆவணங்களுக்குரிய கட்டணம், சேவைக் கட்டணம் (Consulting Fees) என்பன முற்றிலும் Ani international Education Consultant Service இனால் செலுத்தப்பட்டு, Visa உங்கள் கையில் கிடைத்த பின்னரே, நீங்கள் பணம் செலுத்தும்

எம் நிறுவனத்தின் நேரான வழிகாட்டலில் 3½ வருட Visa பெற்றுக்கொண்டவர்களின் விவரம்


இரத்தினம் பிரகாஷ்
அளவெட்டி


தியாகராஜா துஷ்யந்தன்
காரவெட்டி


செல்வரட்ணம் யுவராஜ்
சுன்னாகம்


தவலக்ஷ்மி தவபாலன்
நல்லூர்


செலின் அழகரட்ணம்
யாழ்ப்பாணம்


சண்முகராஜா திலகரஞ்சன்
கோப்பாய்


மகேந்திரன் நிஷாலினி
(கிளிநொச்சி) திருகோணமலை

UK Boarder Agency இன் இறுக்கமான கட்டுப்பாடுகள் 30.04.2011 இல் அமுலாவதால் அதற்கு முன்னரே UK பயணமாவதற்குரிய அரிய சந்தர்ப்பம்!!

15 வருடங்களுக்கு மேல் அனுபவம் வாய்ந்த

## அனி இன்டர்நேஷனல் எடியுகேஷன் கன்சல்டன்ட் சர்விஸ்

269/3, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்மலர்
17 . 07 . 1930



விண்மலர்
19 . 02 . 2009

## அமரர் சின்னத்தம்பி செல்லையா

திதி: மாசிமாத அபரபக்க தசமி (27.02.2011)

எங்களை விட்டுச் சென்றாலும்
எங்கள் நினைவைத்
தொட்டுக் கொண்டுதான் வாழ்கிறீர்கள்
நொந்து போன எம் இதயத்தில்.....

நுணாவில் மத்தி,
சாவகச்சேரி. குடும்பத்தினர். (49-26)

# மரண அறிவித்தல்

## செல்வி செல்வநாயகம் விமலநாயகி



கொக்குவில் கிழக்கு, அச்சுக்கூட ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும், பழைய தபாற்கந்தோர் வீதி, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி செல்வநாயகம் விமலநாயகி நேற்றுமுன்தினம் (25.02.2011) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் செல்வநாயகம் பரிபூரணம் தம்பதியரின் புத்திரியும் காலஞ்சென்ற அருமைநாயகி மற்றும் யோகேஸ்வரன், ஸ்ரீலோகநாயகி, ஸ்ரீலோகநாதன் (ஆசிரியர், புனித பத்திரிசியார் கல்லூரி), கெங்கநாயகி ஆகியோரின் சகோதரியும் செல்வரஞ்சி (விவசாய போதனாசிரியர், திருநெல்வேலி), குணசேகரம் (சமுர்த்தி உத்தியோகத்தர்), வசந்தகுலமணி ஆகியோரின் மைத்துனியும் சோபிதன், டிலக்ஷன், வித்தகன் ஆகியோரின் ஆசை மாமியும் விதுசன், கல்பனா ஆகியோரின் பாசமிகு பெரியதாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.02.2011) ஞாயிற்றுக்கிழமை மு.ப.10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற் றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கு.கெங்கநாயகி (சகோதரி)
ம.குணசேகரம்.

பழைய தபாற்கந்தோர் வீதி,
கொக்குவில். (39-22-23) (803)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசித்தல் ① ஒரு கண்ணோட்டம்

இன்றைய இளஞ்சந்ததியினரிடையே வாசிப்பு என்பது மிகவும் அருகிப்போய்க் காணப்படுகின்றது. இதனால் பரந்துபட்ட அளவிலான தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியாத ஒரு நிலைப்பாடு தோன்றியுள்ளது.

வாசித்தலில் உள்ள இன்பமும் அதனால் கிடைக்கும் நலன்களையும் எமது சந்ததி உணர்ந்துகொள்ள வேண்டியது அவசியம்.

### வாசிப்புப் பழக்கம்

கற்றலில் பிரகாசித்து, பாடசாலையில் உரிய இடத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டுமானால் மாணவர்கள் சரியான நிலையை வகிக்க வேண்டும். இதற்குக் கற்றலில் முன்னிலை பெறவேண்டும். அதற்கு வாசிப்புப் பழக்கம் பெரிதும் துணைபுரிய வல்லது.

''வாசிப்பதால் மனிதன் பூரணத்துவம் அடைகின்றான்'', ''புத்தகங்களைப்போல் நல்ல நண்பர்கள் கிடைக்கமாட்டார்கள்''. நன்றாக வாசிக்கவேண்டும், விரைவாக வாசிக்க வேண்டும், வினைத்திறனுடன் அதிகம் வாசித்து முடிக்க வேண்டும். இவ்வாறு செயற்பட்டால் நீங்கள் கற்றலில் சரியான பாதையில் செல்கின்றீர்கள் என்று கூறமுடியும்.

மாணவர்கள் பாடநூல்களையும் ஆசிரியர் தரும் குறிப்புக்களையும் துணைப்பாட நூல்களையும் மற்றும் பொதுஅறிவு வளர்க்கும் நூல்களையும் விரும்பிக் கற்கப் பழக்கப்படுத்திக் கொள்ளவேண்டும்.

ஆஸ்திரேலியா நாட்டில் வாசிப்புத் தொடர்பாக நாம் நேரடியாக அவதானித்த ஒரு விடயம் என்னவென்றால்,

**மாணவரிடையே வாசிப்புப் பழக்கம் மேம்பட வேண்டும்**

அங்கு மாணவர்கள், பெரியவர்கள், வயது முதிர்ந்தவர்கள் அனைவரும் வாசிப்பில் மிகுந்த ஈடுபாட்டுடன் காணப்படுகின்றார்கள். அவர்கள் வாசிப்புக்கெனத் தனிநேரத்தை ஒதுக்கியுள்ளார்கள். அது தவிர அவர்களது ஓய்வுநேரம், பிரயாணநேரம் ஆகியவற்றில் எல்லாம் வாசிப்பதைப் பழக்கமாக்கிக் கொண்டுள்ளார்கள்.

பொதுப்போக்குவரத்துச் சாதனங்களில் பயணஞ் செய்தாலும் நூல்களை வாசித்த வண்ணமே இருப்பார்கள். அவர்கள் எங்கு புறப்படும் போதும் தவறாது புத்தகத்தையும் எடுத்துக் கொள்வார்கள்.

அரட்டை அடித்துக் கொண்டு பயணம் செய்பவர்கள் மிகக் குறைந்தளவினரே. ஏனையோர் இருக்கையில் அமர்ந்தவுடன் வாசிக்கத் தொடங்கிவிடுவார்கள். புத்தகத்தினை ஆழ்ந்து வாசித்துக் கொண்டேயிருப்பார்கள். இறங்க வேண்டிய இடம் வந்ததும் தவறாது இறங்கிக் கொள்வார்கள்.

இவற்றை அவதானித்து நான் அதிசயித்தது உண்டு. நாம் எவ்வாறு எமது பயணத்தை மேற்கொள்கின்றோம் என்று சிந்தித்துப் பார்த்ததும் உண்டு. வாசிப்புப் பழக்கம் அந்தளவுக்கு அவர்களைக் கவர்ந்துள்ளது. வாசிப்பினை அவர்கள் விரும்புகின்றார்கள் என்று கூறுவதைவிட வாசிப்பு அவர்களை விரும்புகின்றது என்று கூறுவதுதான் பொருத்தமுடையது. அந்தளவுக்கு வாசிப்பு அவர்களுடன் இணைந்துவிட்டது.

அதனால் கல்வித்துறையில் அவர்களது வளர்ச்சி அபரிமிதமானது. வாசிப்பு இதை மேம்படுத்தவதற்கு உதவியாக அவர்கள் கற்றல் முறைமை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

கற்றலுக்கான தகவல்களை நூல்களிலும் இணையத்தளங்களிலும் தேடி வாசித்தல், வாசித்தவற்றை ஒப்படைகளாகக் காலத்துக்குக் காலம் எழுதிச் சமர்ப்பித்தல், பின்னர் அவற்றினை அவையில் சமர்ப்பித்தல் மூலம் பேச்சுத்திறனை வளர்த்தல் என்ற முறையில் தான் அவர்கள் கற்றல் முறைமை ஊக்குவிக்கப்படுகின்றது.

வாசிப்புப் பழக்கம் எமது மாணவர்களிடமும் வளர்க்கப்படல் வேண்டும். அதற்குப் பெற்றோர்கள், ஆசிரியர்கள், சமூக நிறுவனங்கள் ஒத்துழைப்பு வழங்கவேண்டும். மாணவர்கள் தங்களது அன்றாடக் கடமைகளில் ஒன்றாக வாசிப்புப் பழக்கத்தையும் சேர்த்துக் கொள்ளவேண்டும்.

நூல்களை வாசிப்பதைச் சிரமமானதாகக் கருதவேண்டாம். அதை எமது வாழ்வுடன் இணைத்துகொண்டால், அது எமக்குப் பழகிப்போய்விடும். இரசித்து வாசிக்கும் பழக்கம் ஏற்பட்டால் அதனால் எமக்குப் பயன் அதிகம் கிடைக்கும்.

எந்த வேலையையும் ஆரம்பிக்கும்போது சற்று சிரமமாக இருக்கலாம். ஆரம்பித்து அதைப் பழகிக் கொண்டால் அது சுவையாகிவிடும்.

வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்தும் ஆரம்பக் கட்டத்தில், கட்டாய வாசிப்புக்கென ஒரு குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்குகிறீர்கள். அதனை உங்கள் நேர அட்டவணையில் உள்ளடக்குங்கள். அந்த நேரத்தில் தினமும் தவறாது வாசித்துக்கொள்ளுங்கள். இதற்காக அதிக நேரம் ஒதுக்கத் தேவையில்லை. 15-20 நிமிடங்கள் ஆரம்பத்தில் போதுமானது. நாளடைவில் வாசிப்புச் செயல் உங்களுடன் ஐக்கியப்பட்டுக் கொள்ளும். வாசிக்காது உங்களின் ஒவ்வொரு நாளும் முடிவுறாது. அவ்வாறு வாசிப்பதால் மன மகிழ்ச்சியுமடைவீர்கள்.

''வாசிப்பு என்பது ஒரு கலை'' எனச் சிறப்பித்துக் கூறப்படுவதுண்டு. பொதுவாகக் கலைகளை உணர்ந்தவர்கள், கலைகளை இரசிக்கத் தெரிந்தவர்கள், கலைகளோடு ஈடுபாடு கொண்டவர்கள், ஆத்மார்த்த ரீதியான பல நன்மைகளைப் பெற்றுக் கொள்கின்றார்கள்.

உதாரணமாகச் சங்கீதத்தை இரசிக்கத் தெரிந்தவர்களுக்கு அதைச் செவிமடுக்கும்போது மனமகிழ்ச்சி கிடைக்கின்றது. மனநிம்மதியும் ஏற்படுகின்றது. கலைகளை உள்ளார்ந்தமாக உணர்ந்து அதில் ஈடுபட்டவர்கள் உயர்ந்த கலைஞர்களாகப் புகழ்பெற்றுள்ளார்கள்.

**கலாநிதி தி.கமலநாதன்,**
முன்னாள் பீடாதிபதி,
யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி.

# திசை திருப்பப்படும் யாழ்.மாணவர்கள்

ஒரு காலத்தில் யாழ்ப்பாணம் என்றால் அது கல்விக்குப் புகழ்போன பல்வேறு அறிஞர்களைத் தோற்றுவித்த ஒன்றாகவே விளங்கியது.

கல்விதான் இங்குள்ளவர்களின் செல்வமாக இருந்த ஒருகாலமும் உள்ளது. அந்தநிலை மாற்றப்பட்டுக் கல்வியில் மாணவர்கள் நாட்டம் காட்டும் நிலை குறைவடைந்து செல்வதையே அவதானிக்க முடிகிறது.

யுத்தசூழல் கல்வியின் பிரதான தடைக்கல்லாக இருந்த காலம் நீங்கி, அமைதியான, அச்சமற்ற சூழல் எம் மாணவச் சமூகத்துக்கு மலர்ந்துள்ளது.

எந்நேரமும் கற்றல், கற்பித்தல் நடவடிக்கையை மேற்கொள்ள முடிகின்ற காலம் ஏற்பட்டுள்ளது.

கனவாகவே எண்ணியிருந்த ஒரு சூழல் இன்று நிஜமாகியிருக்கிறது. யுத்தசூழலற்ற ஏனைய பிரதேச மாணவர்களைப் போன்று கல்வி கற்கும் சூழல் எமக்குக் கிடைத்துள்ளது.இவற்றுக்கு மேலாக கற்றல் செயற்பாடுகளுக்குச் சாதகமான பல புறச்சூழல்களும் உருவாகியுள்ளன.

இந்த நிலையில் எமது மாணவர்கள் இவ்வாறான சூழல்களை எந்த வகையில் எதிர்கொள்கிறார்கள், எந்தவகையில் தமக்குச் சாதகமாக மாற்றியமைக்கிறார்கள் என்பவை ஆராயப்படவேண்டிய விடயங்களே.

யுத்த சத்தங்களுக்கு மத்தியில், குப்பி விளக்குகளைக் காற்று அணைக்க, ஓலைக்குடிசைக்குள் இருந்து கற்று, கல்வியில் கரை கண்டவர்கள் எமது முன்னைய சந்ததியினர்.

ஊரடங்குச்சட்ட அமுலாக்கம் , திடீர்ச் சுற்றிவளைப்புகள், சோதனைக் கெடுபிடிகள், கைதுகள், கடத்தல்கள், கொலைகள் என்று நெருக்கடிகளுக்குள்ளும் கல்வியைத் தொடர்ந்தவர்கள் எமது சந்ததியினர் என்பதை நினைவிற்கொள்ளல் வேண்டும்.

இந்த இரண்டு சூழல்களையும் ஒப்பிடும்போது குடாநாட்டின் கல்வித் தரத்தில் தற்போதைய நிலையில் பெரியளவில் முன்னேற்ற நிலை ஏற்பட்டிருக்கவேண்டும்.

இந்தச் சூழல்மாற்றம் நிகழ்ந்து இரண்டு வருடங்கள் ஆகின்றபோதும் எதிர்பார்த்த முன்னேற்றங்கள் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. மாறாகக் கிடைத்திருக்கின்ற சந்தர்ப்பத்தை மாணவர்கள் தமக்குச் சாதகமான முறையில் மாற்றியமைக்கவில்லை என்பதையே ஊகிக்க முடிகிறது.

இலங்கையின் ஏனைய பாகங்களுடன் ஒப்பிடும்போது, யாழ்ப்பாணம் கல்வித்துறையில் தலைசிறந்து விளங்கியது. பின்னர் யுத்தகாலத்தில் சிறியளவு வீழ்ச்சி நிலைமை யாழ்.கல்வித் துறைக்கு ஏற்பட்டது. இதற்குப் போராட்டச் சூழலைக் காரணம் காட்டினோம். அது ஏற்றுக்கொள்ளப்படக்கூடியதே. இனிவரும் காலத்தில் சாட்டுப்போக்குச் சொல்வதற்கு எம்மிடம் எந்தக் காரணமும் இல்லை. கல்விகற்றல் என்ற ஒரேயொரு இலக்கை மட்டும் மனதிற் கொண்டு நகர்ந்தால் நிச்சயம் வெற்றி கிட்டும்.

இன்றைய எமது யாழ்ப்பாணச் சூழல் மாணவர்களைத் திசை திருப்பும் பல அம்சங்களைக் கொண்டுள்ளது. மிகவும் ஆடம்பரமாகவும் வர்ணமயமாகவும் எமது சூழல் மாற்றமடைந்துள்ளது.

மனதைக் கவர்ந்து வேறு வழிகளில் மாணவர்களைத் திசைதிருப்பக் கூடிய வகையில் மாற்றங்கள் நிகழ்கின்றன.

சமாதானச் சூழல், சுற்றுலாப் பயணிகள் வருகை, வணிகம், தொழில்நுட்ப வளர்ச்சியென்று எமது யாழ்ப்பாணம் பல கோணங்களில் மாற்றமடைகின்றது. நாகரிகம், சமூகம், பண்பாடு என்பனவையும் உலக ஓட்டத்துக்கு ஏற்ப மாற்றமடைகின்றன.

சில சில மாற்றங்களை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. உலக அசைவுகளுக்கேற்ப நாமும் சில விடயங்களில் இசைந்து செல்ல வேண்டியுள்ளது. அபிவிருத்தி விடயங்களில் முரண்பட்டோமாயின் எமது சமூகம் மீண்டும் பின்னோக்கிச் செல்லவேண்டி ஏற்படும். அது போல் எமது பண்பாடு, கலாசாரம் சார்ந்த விடயங்களை நாம் ஒருபோதும் விட்டுக் கொடுக்க முடியாது.

எமது மண்ணின் தனித்துவத்தையும் எமது இனத்தின் சரித்திரத்தையும் நாம் அடகு வைத்து விடமுடியாது.

பல்வேறு கோணங்களில் பல பல வடிவங்களில் மாணவர்களை இலக்குவைத்த வணிக நடவடிக்கைகள் குடாநாட்டில் மேற்கொள்ளப்படுகின்றன.

நன்கு திட்டமிடப்பட்டு கவர்ச்சிகரமான வகையில் மாணவ சமூகத்தை மையப்படுத்தி இலாபமீட்டக்கூடிய வியாபாரங்கள் குடாநாட்டில் இடம்பெறுகின்றன.

படிப்பை மட்டும் மனதில் நிறுத்திக் கொள்ள வேண்டிய மாணவர்கள் மனதில் ஆடம்பர ஆசைகள் ஊட்டப்படுகின்றன. மாணவப்பருவம் ஆடம்பரங்களை நாட வேண்டிய பருவம் அல்ல. நாங்கள் ஆடம்பர வாழ்வுக்குப் பழக்கப்பட்டவர்களும் அல்ல. இருந்தும் சூழல் மாற்ற முயல்கிறது. ஆயினும் மாறிடுதல் நல்லதல்ல.

வாழ்க்கையில் கல்விக்கென ஒதுக்கப்பட்ட காலத்தை கல்விக்காக மட்டும் அர்ப்பணித்தால் போதும். ஆடம்பரமாக வாழ வேண்டிய காலத்தில் அதைப்பற்றிச் சிந்திக்கலாம். கல்விக்குரிய காலத்தில் மாணவர்கள் கல்வி என்ற வட்டத்துக்குள் நின்றால் போதும். உணர்வுகளுக்குக் கடிவாளமிட்டு தமது வழிகளில் பயணித்தால், நிச்சயமாக எமது கல்வித்தரத்தை அதிசயிக்கத்தக்க வகையில் மாற்றியமைக்கமுடியும்.

மாணவர்களைப் பொறுத்த வரையில் இதுவும் ஒரு போராட்ட காலமே. அதாவது கல்விக்குள் மட்டும் மனதைச் செலுத்தக் கடுமையாகப் போராட வேண்டியுள்ளது. காலத்துக்கேற்ப பயிர் வைத்தால்தான் உச்ச விளைவைப் பெறமுடியும்.

**சரிதன், கூடலூர்.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
27 பெப்ரவரி 2011 ஞாயிற்றுக்கிழமை

## வங்கத்து உப்பில் நம் வகிபாகம்

ஆழி பிடிச் சண்டைக்கா வாள் எடுத்தோமின்று
வயிற்றினால் மட்டும் தனித்துப் பிறந்தோனே?
நெஞ்சிருந்து நெடுமுள் உறுத்துகையில்
துஞ்சாது தோள் கொடுத்தோனே!
கண்களில் கனல் விழுந்து கதறியழுத போது
''கண்ணப்பனாகி'' விடவும் தயங்காதோனே!
கொத்துக் குண்டுகளால் குலையறுந்து கதறுகையில்,
'முத்துக்குமரன்' முதற் பத்து மேனிகளில்
தணல் சுமந்தோரே!
எப்படி மறப்பது மெய் நன்றி உங்கள் மேல்?
சொல்லிலே சோதரராய்,
செயலிலே செவ்விய நட்புடைவராய்,
சிந்தனைப் பொறி உமிழும் புரட்சித் தீயாய்,
விரல் கோர்த்து இன்னமும்
வேதனை பகிரும் வேண்டுநர்களே!
அலை மடியில் உவர்ப்பு சுவைக்கும்-எங்களின்
வியர்வைகளில் எப்படியடா எல்லை பிரிப்பது?
இங்கிருந்து அழுதவிழி நீரும்,
அங்கிருந்து விழுந்த மெய் நீரும்,
வங்கத்து உப்பில் வகிபாகம் சமமன்றோ?

எல்லை தாண்டுவதாய் உங்களின் உயிர் பறிப்பதில்
இல்லை நிச்சயமாய் ஒரு துளியும் நீதி!
தொல்லைகள் சுரண்டாமல், தொழில் முடிப்பதிலும்
இல்லையேடா எம்மிடம் புரிந்துணர்வு வேலி?
நின் 'தலை' கனக்கும் ''ராம ஆரியமும்''
என் 'கால்' இழுக்கும் ''சிங்ஹ விஜயமும்''
திராவிடப் பாலில் துளி விஷம் தோழா!!
அரசியல் சாக்கடை, ஆன்மீகப் புனைகதை
ஆரியப் பொய்யென முக்கூட்டுச் சுழி கடந்து
முன்னேறுவது எப்படி நாம்?
...''ஜனகனினல்ல! இராவணன் மகளே ஜானகி'' என்பது
'செவிவழி'மட்டுமே எம் வரலாற்றில் ...
முந்நூறாம் பாட்டனை,
கடத்தல்கார காமுகனாய்,
கற்பைக் காவு கேட்டவனாய்,
காவியம் புனைந்தவனுக்கே
'கழகம்'வைத்திருக்கின்றோம் நாம்?
இமயமும் அசைத்த இலங்கேஸ்வரனுக்கு
என்ன கொடுத்தோம் இறுதியாய்....
....''பத்துத் தலைகளில் வலி போயே போச்சு''....
வலி நிவாரணி 'விளம்பரப்பட வாய்ப்பு' மட்டும் தானே?
அன்று ஊரெரிக்க உதவிய 'நேரிய பாலம்' தானே,
இன்றும் எம் உயிர் எடுக்கும் 'கூரிய கணை!

''குரங்குப்பாலம்'' குறுக்கிருப்பதால்
பல்தேசிய கப்பல்கள் பாக்குநீரிணையை
பார்க்க மறுப்பதால்தானே,
''நாகையும், வல்வெட்டியும்'' இன்னமும்
மீன் கிள்ளும் வெறும் துறைகள்?
சுற்றியே போகும் சுதேசியக் கலங்களால் தான்,
''கொழும்பும், கொல்கத்தாவும்''இன்றும்
பொன் அள்ளும் பெருந்துறைகள்??
சதி பெரிதோ? விதி வலிதோ
என்னவோ செய்தாகவே வேண்டும் வாடா,
இனியொரு உயிர் கூடப் போகாமல் இதற்காய்!!

அபிதவன்,
அச்சுவேலி.

## கனவுகளைச் சுமந்தோம்

காலப்பெருவெளியில்
நாம் சுமந்த
காட்டாற்றுத் துயர அலைகளின்
ஓசைகள்
இன்னும் எம் செவிகளில்
கால்கள் போனதிசையில்
காடு மேடெல்லாம்
நாம் நடந்தோம்
துயரச் சிலுவைகளை சுமந்தோம்
இருப்பினும்
நம்பிக்கைச் சுவர்கள் எம்முன்
இன்னும் பலமாகவே
ஆறாத ரணங்களின்
வலிகளினால்
நடைப்பிணங்களானோம்
ஆனால் இங்கு
எம் காலடித் தடங்களும்
சிதைவுற்ற குடில்களும்
கண்காட்சிகளாகிப் போயின
கனவுகளைத்தான் சுமந்தோம்
இந்த அவலங்களுடனான வாழ்வு
எழுச்சி பெறும் வரை
கனவுகளையே சுமப்போம்
கனவுகளில் வாழ்வோம்



வெற்றி-துஷ்யந்தன்,
அல்வாய்.

## என் தாலி மீண்டும் கழுத்தேறுமா?



நான்கு ஆண்டுகள்
காதல் மழையில் நனைந்து
ஏராளமான ஆசைகளை
இதயத்தில் சுமந்து
மணவறை புகுந்தோம்
மணமாலை
வாசமிழக்கு முன்
வாசமிழந்தது
மண வாழ்க்கை
இலங்கையின்
குடியுரிமைப் பட்டியலில்
எமது பெயர் இருந்தும்
தனித் தனிப் பட்டியலில்
பதிவானது எமது பெயர்
நான் அகதிப் பட்டியலில்
நீங்கள்
காணாமற் போனவர் பட்டியலில்
காணாமற் போன உங்களை
காணும் முயற்சியில்
காதான் கையான் கழுத்தானுடன்
திருமதியாய்ப் பதவி உயர்வு தந்து
என் கழுத்தில்
நீங்கள் போட்ட தாலியும்
வட்டிக் கடைக்குப் போனது
ஈடு வைக்கப்பட்ட தாலி
மீண்டும்
என் கழுத்தில் ஏறுமா?
இல்லை
நெற்றிக் குங்குமமும்
கரைந்து போகுமா?

[illegible]

## ஞாபகம்

உனக்கு என்னை ஞாபகம்
இருக்கோ தெரியாது - ஆனால்
எனக்கு ஞாபகம் இருக்கு
உனக்காக நான் காத்திருப்பேன்
என்று நீ சொன்னது...

## அன்பு

இருபத்து ஐந்து வருடம்
என் அன்னையிடம் பெற்ற
அன்பை விடவும் இப்போது
நீ என்மேல் காட்டும் அன்பால்
என் இதயம் கனக்கிறது.



## இதயம் இல்லாதவள்

கல்லூரியில் உன்னைக் கடந்து
செல்பவர்கள் சொன்ன வார்த்தைகள்
என் காதுகளுக்கு நன்றாகக் கேட்டது
மீனா இதயமே இல்லாதவள் என்று
உண்மை எனக்கு மட்டும் தானே தெரியும்
அவர்களுக்கு எப்படிப் புரியும்
உன் இதயம் என்னிடம் அல்லவா உண்டு..


முகமாலையூர் நாதன்

## தொலைந்த நிம்மதி

நிஜங்கள்
பறிக்கப்பட்டு
பொம்மைகளாய்
நடமாடுகிறது-மனிதம்...

பொருளாதாரம்
முதலாளித்துவம் பேசி
ஏழைகளுக்கு
வழங்குகிறது-மரணப்பரிசு....

காலம்
பிரபஞ்சத்தைக் கடத்திச்செல்ல



நிர்வாண அசிங்கமாகிறது
கலாசாரம்......

நிம்மதி
தொலைந்த உறவில்
விம்மி அழுது போகிறது
பெண்ணியம்....

யுத்தம்
முடிந்தும் சுதந்திரம்
இல்லாத மனிதர்களாய்-இங்கு
தமிழினம்...

ஜே.எஸ்.ராஜ்,
யாழ்.பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கேட்காததைக் கொடுக்காத ஜனாதிபதியின் ராஜதந்திரம்

விடுதலைப் புலிகள் தனி நாடு கேட்டார்கள். அவர்கள் கேட்டதை நாம் கொடுக்கப் போவதில்லை. இது விடயமாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுக்களை நடத்துகிறோம். தொடர்ந்தும் பேசுவோம். அதுமட்டுமன்றி ஈ.பி.டி.பி, தமிழர் விடுதலைக் கூட்டணி, புளொட் ஆகிய கட்சிகளுடனும் பேசுவோம்.''

இது அண்மையில் அலரி மாளிகையில் பத்திரிகையாளர் சந்திப்பின் போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வெளியிட்ட கருத்து.

புலிகள் கேட்டதைக் கொடுக்கமாட்டோம் என்பது இப்போது இரண்டாவது தடவையாக ஜனாதிபதி வெளியிடும் கருத்து. அவரின் வார்த்தைகளை உன்னிப்பாக அவதானித்தால் அதற்குள் ஏராளம் அர்த்தம் இருப்பதாகவே தோன்றுகிறது.

புலிகள் கேட்டதைக் கொடுக்கப் போவதில்லை என்பதை ஏன் திரும்பத் திரும்பச் சொல்கிறார் என்பதுதான் இங்குள்ள கேள்வி. இப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்போ அல்லது ஏனைய எந்த அரசியல் கட்சியோ புலிகள் கேட்ட தனிநாட்டுக் கோரிக்கையை - தமிழ்ஈழம் - முன்வைக்கவில்லை. அனைவருமே ஐக்கியப்பட்ட இலங்கைக்குள் தமிழ் மக்களது உரிமைகளை நியாயமான முறையில் வழங்கக் கூடிய ஒரு தீர்வையே கேட்கின்றனர்; எதிர்பார்க்கின்றனர்.

அப்படியான நிலையில் ஏன் திரும்பத் திரும்பப் புலிகள் கேட்டதைக் கொடுக்கமாட்டேன் என்று ஜனாதிபதி கூற வேண்டும்? ஒன்றைக் கொடுக்கமாட்டேன் என்று கூறும்போது எதைக் கொடுக்கப்போகிறேன் என்றாவது சொல்ல வேண்டும் அல்லவா? அதுவும் கிடையாது.

தேர்தல் காலத்தில் பதின்மூன்றாவது திருத்தச் சட்டம் 'பிளஸ்' வழங்கப் போவதாகச் சொன்னார். இன்று வரை அந்த 'பிளஸ்' என்ன என்ற மர்மத்தை வெளியிடவில்லை. பின்பு இனப்பிரச்சினை தொடர்பாகத் தன் மனதுக்குள் ஒரு திட்டம் இருப்பதாகக் கூறினார். அந்த மனதும் இன்னும் திறக்கப்படவில்லை. எனினும் தொடர்ந்து பேசப் போகிறார்களாம்.

அவர் சொல்லவேண்டிய எல்லாவற்றையும் சொல்லாமல் விட்டபோதிலும் இரு விடயங்களை மட்டும் தெளிவாகச் சொல்லிவிட்டார்.

ஒன்று புலிகள் கேட்டதை - இப்போது யாரும் கேட்காததை - அவர் கொடுக்கமாட்டார். மற்றது நாங்கள் கொடுப்பவர்கள், நாங்கள் கொடுப்பதைத்தான் நீங்கள் கைநீட்டி வாங்கவேண்டும்.

புலிகள் தனிநாட்டை எவரிடமும் கேட்கவில்லை. அவர்கள் தமிழரின் தாய் நாட்டை மீட்கப் போராடினார்கள். தோல்வியடைந்தார்கள் என்பது வேறு விடயம். ஆனால் கடைசி நிலை வரை போராடினார்கள்; எந்த விட்டுக்கொடுப்புகளுக்கும் இடமில்லாமல் போராடினார்கள்.

அதேபோன்றே புலம்பெயர்ந்த தமிழர்கள் எவரிடமும் கேட்காமலேயே கடல் கடந்த அரசை அவர்கள் அமைத்திருக்கிறார்கள். தனிநாடு என்பது எவரிடமும் யாசித்துப் பெறுவதல்ல; அது போராடிப் பெறுவது!

ஐரோப்பியரின் வருகையின் முன்பு தமிழர்கள் ஒரு தனித்தேசமாக இங்கு வாழ்ந்தவர்கள். ஐரோப்பியரின் வருகையின் பின் இன்றுவரை ஒரு தனித் தேசிய இனமாக வாழ்கிறார்கள். நாம் ஒரு தேசிய இனத்துக்கான சகல உரிமைகளுடனும் வாழ்வதற்குத் தகுதி பெற்றவர்கள்.

ஆனால், இலங்கை சுதந்திரமடைந்த பின்பு எமது நில உரிமை, மொழி உரிமை, மனித உரிமைகள் என்பன படிப்படியாகப் பறிக்கப்பட்டன. இன்னும் பறிக்கப்பட்டுக் கொண்டே இருக்கின்றன. அதனால்தான் ஜனநாயக வழியில் ஆரம்பித்த எமது போராட்டங்கள் ஆயுத வன்முறை மூலம் அடக்கப்பட்ட போது ஆயுதப் போராட்டமாக விரிவடைந்தது.

எனினும் பெரும் சர்வதேச் சதியில் எமது ஆயுதப் போராட்டம் பயங்கரவாத முத்திரை பொறிக்கப்பட்டு தோற்கடிக்கப்பட்டது. ஆனால் போராட்டம் முடிந்துவிடவில்லை. அது இப்போது ஜனநாயக வழிமுறைகளில் தொடர்கிறது. அரசுடன் இன்று நடத்தும் பேச்சுக்கூட ஜனநாயக வழியிலான ஒரு போராட்டத்தின் ஒரு அம்சம்தான். இது கொடுப்பதைக் கைகட்டி வாய் மூடி வாங்கும் பிச்சையல்ல.

ஜனாதிபதி ஒரு புறத்தில்தான் கொடுக்கப் போவதாகக் கூறுபவற்றுக்கு நேர்மாறான நிலைமைகளை தானே உருவாக்கி வருவதை நாம் அவதானிக்க முடியும்.

13 ஆவது திருத்தச் சட்டத்தின் அடிப்படையில் ஒன்றாயிருந்த வடக்கு, கிழக்கு மாகாணம் ஒரு நீதிமன்றத் தீர்ப்பின் மூலம் இரண்டாகப் பிரிக்கப்பட்டது. பதினெட்டாவது திருத்தச் சட்டத்தின் மூலம் மாகாண சபைகளுக்கு பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தில் வழங்கப்பட்ட பொது நிர்வாகம், பொலிஸ் தொடர்பான அதிகாரங்கள் பறிக்கப்பட்டன. இறுதியாக உள்ளூராட்சிச் சபைகள் திருத்தச் சட்டத்தின் மூலம் எஞ்சியிருந்த அதிகாரங்களும் பறிக்கப்பட்டன.

அவர் வழங்கப்போவதாகச் சொல்லிய பதின்மூன்றாவது திருத்தச் சட்டப் 'பிளஸில்' இப்போது எஞ்சியிருப்பது பதின்மூன்றாவது திருத்தச் சட்டம் 'மைனஸ்' மட்டுமே.

உண்மையாகவே நடப்பது என்னவெனில் இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாகப் பேச்சு நடத்துவதாகக் காலத்தைக் கடத்திக் கொண்டு, ஏற்கனவே மிகக் குறைந்தளவு உரிமைகளையும் ஒவ்வொன்றாகப் பறிக்கப்படுவதுதான். இதுதான் இன்றைய யதார்த்தம்.

உண்மையிலேயே தீர்வு நோக்கிய பேச்சு என்பது ஒரு தீர்வுத் திட்டத்தின் அடிப்படையில் இடம்பெற வேண்டும். பின்பு பேச்சுக்களின் போது சமரசமான முறையில் விட்டுக் கொடுப்புக்கள், புதிய இணைப்புக்கள் என்பன மூலம் ஒரு திட்டவட்டமான தீர்வுக்கு வர முடியும்.

ஆனால், இப்போது நடப்பது எதைப் பேசுவது என்பதை முடிவெடுப்பதற்கான சந்திப்புக்களே. அதற்கே பல சுற்றுச் சந்திப்புக்கள் தேவைப்படுகின்றன. இதுதான் காலத்தின் கோலமாகக் கிடக்கிறது.

ஓர் அடிப்படையாக வைத்துப் பேசுவதற்கென ஏற்கனவே அரசினாலும் தமிழர் தரப்பாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட தீர்வுத் திட்டங்கள் இல்லையென்று சொல்லிவிட முடியாது.

இன்றைய ஜனாதிபதியின் கட்சியான ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் நிறுவுநரான எஸ்.டபிள்யூ. ஆர்.டி.பண்டாரநாயக்கவுக்கும் இன்றைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதான கட்சியான தமிழரசுக் கட்சியின் நிறுவுநரான எஸ்.ஜே.வி.செல்வநாயகத்துக்கும் இடையே மேற்கொள்ளப்பட்ட பண்டா - செல்வா ஒப்பந்தம் ஒரு நியாயமான தீர்வுத் திட்டமாகவே இன்றுவரை கருதப்பட்டு வருகிறது. அதை அடிப்படையாகக் கொண்டு பேச்சுக்களை ஆரம்பிக்கலாம்.

1965 ஆம் ஆண்டில் பண்டா- செல்வா ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. அன்று இரு தரப்பாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட அதை வைத்தும் கூடப் பேச்சுக்களை ஆரம்பிக்கலாம்.

இன்றைய ஜனாதிபதி பிரதமராக இருந்தபோது முன்னாள் ஜனாதிபதி திருமதி சந்திரிகா விஜயகுமாரணதுங்கவால் ஒரு தீர்வுப்பொதி முன்வைக்கப்பட்டது. அதன் அடிப்படையிலும் ஆரம்பிக்கலாம்.

எல்லாவற்றையும்விட இன்றைய ஜனாதிபதியாலேயே இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக பேராசிரியர் திஸ்ஸ விதாரண தலைமையில் சர்வகட்சிக் குழு அமைக்கப்பட்டது. அது ஒரு தீர்வுத் திட்டத்தை முன்வைத்தது. குறைந்த பட்சம் அதன் அடிப்படையிலாவது பேச்சுக்களை ஆரம்பிக்கலாம்.

இவை எல்லாவற்றையும் விட்டு விட்டு வெட்டவெளியில் நின்று பேச்சுக்களை நடத்துவதும் அதைக் கொடுப்பேன் இதைக் கொடுக்கமாட்டேன் எனக் குழப்பியடிப்பதும் வெறும் காலத்தைக் கடத்தி இன ஒடுக்குமுறையை மேலும் வலுவாக்கச் சந்தர்ப்பங்களை உருவாக்கும் நோக்கம் கொண்டதாகவே அமைய முடியும்.

இந்தவேளையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தமிழ்க் கட்சிகளின் அரங்கமும் இணைந்து ஒரு தீர்வுத் திட்டத்தை முன்வைப்பதற்கான பேச்சுக்களை ஆரம்பித்தபோது உடனடியாகவே அரசு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பேச்சுக்கு அழைத்தது. அதிலிருந்தே தமிழர் தரப்பு ஐக்கியப்பட்டு ஒரு நிலைப்பாடு எடுப்பதை தடுக்கும் உள்நோக்கம் அரசிடம் இருப்பதும் தெளிவாகவே புலப்படுகிறது. தனித்தனியே ஒவ்வொரு அமைப்புகளுடனும் பேசும் போது அவரைச் சாட்டி இவரையும் இவரைச் சாட்டி அவரைத் தட்டிக் கழிக்கலாமல்லவா?

**சந்திரசேகர ஆசாத்**

இப்படியான நிலையில் தமிழ் மக்களின் பெரும் நம்பிக்கையையும் ஆதரவையும் பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஒரு பெரும் பொறுப்பு உண்டு.

இன்று பேச்சுக்களை ஆணித்தரமாகவும் உறுதியுடனும் முன்னெடுப்பதற்கான ஒரு சூழல் தோன்றியுள்ளது. சர்வதேச அளவில் இலங்கை அரசுக்குப் போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஏற்பட்டுள்ள நெருக்கடிகள், புலம்பெயர் தமிழ் மக்களின் நடவடிக்கைகள், கடல் கடந்த தமிழீழ அரசுக்கு தென்சூடான் வழங்கிய அங்கீகாரம் என்பன இலங்கை அரசை இக்கட்டான சூழலுக்குள் தள்ளியுள்ளன.


இவற்றின் தாக்கத்தைத் தணிப்பதற்கு இலங்கை அரசு இரு வழிகளைக் கையாள்கிறது. ஒன்று தமிழர் தரப்புடன் பேச்சுக்களை ஆரம்பித்துக் காலம் கடத்துவது. மற்றது ஒருபுறம் சர்வதேச நாடுகளுக்கிடையே உள்ள முரண்பாடுகளைப் பயன்படுத்திப் போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் தொடர்பான நெருக்கடிகளைச் சமாளித்துக் கொண்டு உளவு, சதி நடவடிக்கைகள் மூலம் புலம்பெயர் தமிழர்கள் மத்தியில் பிளவுகளையும் மோதல்களையும் ஏற்படுத்துவது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஏனைய தமிழ் தரப்புகளும் அரசின் இந்தக் கபட நோக்கம் தொடர்பாக

*(29 ஆம் பக்கம் பார்க்க)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்சிலம்பம் - போட்டி இல: 152



அனுப்புபவர் பெயர்:..................................................

விலாசம்:..................................................

..................................................

கையொப்பம்:..................................................

### இடமிருந்து வலம்

1.வழமைக்கு மாறான சம்பவம்
6.தேசம்
7.வீமனின் ஆயுதம்
9.வேலியில் நடுவது
11.செழிப்பின் வடிவம்
13.கூடிய
14.பனை தரும் பானம்-கள் அல்ல
16.தலைவி
18.செறிவு கூடிய பானம்
19.நறுமணம் தருவது
20. திருமணத்தில் கதாநாயகி
21.ஊர்ந்தாலும் பிடி தளராதது
22.மத்தியில் அமைவது

### மேலிருந்து கீழ்

1.நாகரிகமற்றது
2.திடீரென
3.கசப்பான மரக்கறி வகை
4.ரக
5.கணவன்- மனைவி
8.ஒரு தானியம்
10. பலரும் விரும்பும் நகரங்களில் இதுவும் ஒன்று
12.நற்சுகமுடையன்
13.குழு
15.பிரிப்பு
17.இந்துக்களின் அர்ச்சனையில் பூவுக்குப் பதிலாக இந்த மரத்து இலையையும் பயன்படுத்துவர்.
19. கிட்டவாக
20.சிறிய நீர்த்தேக்கம்

★ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 150 இற்கான சரியான விடைகள் வருமாறு:

### இடமிருந்து வலம்

(1)கதிர்காமம். (6)தடு (7) தலை. (8)குரு (9)கம்பம் (11) சடுதி. (12)ராகம் (13)கடகம். (15) பகு. (17)தண்ணளி (18) விம்மு .(19)குணம். (20)ஐயா (21)தின் (22)வயோதிபம்.

### மேலிருந்து கீழ்

(1)கதகளி. (2)திடும். (3)காதம். (4)மலை. (5)குருதி. (8)குடும்பம் (10)பட்டணம்.(11)சக. (12)ராம். (13)கண்ணன் (14)களி. (16)குமுதம் (17)தகுதி. (18)வியாதி. (20)ஐயோ.

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 150 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல்மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு** செல்வி பொ.சிவகாமி, 'இலக்குமிபதி', சங்கானை.

**2 ஆம் பரிசு** சபாரத்தினம் கணேஸ்வரி, 'திருப்பரங்குன்றம்', வடக்கு நவாலி, மானிப்பாய்.

**3 ஆம் பரிசு** செல்வன் மு.பிரதீப், தும்பளை, பருத்தித்துறை.

**4 ஆம் பரிசு** பே.ரெட்னேஸ்வரன், இல.41,குமாரசாமி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

**5 ஆம் பரிசு** இ.சதாசிவம், வக்கமோடை வீதி, தும்பளை கிழக்கு, பருத்தித்துறை.

### பாராட்டுப் பெறுவோர்

(1) **ஜே.வித்யானி,** கொமர்ஷல் வங்கி , ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(2) **திருமதி மு.தேவகி,** மணல் ஒழுங்கை, தும்பளை, பருத்தித்துறை.

(3) **சி.பாலசுந்தரம்,** கல்வளை, சண்டிலிப்பாய்.

பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.
யாழ். மாவட்டத்தைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலிருந்து பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்பட்டோருக்கான பணப்பரிசில்கள் காசோலை மூலம் காலக்கிரமத்தில் அவர்களது விலாசத்துக்குப் பதிவுத் தபால்மூலம் அனுப்பிவைக்கப்படும்.

## போட்டி விதிகள்

*1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.*
*2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்*
*3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.*
*4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவான தாகும்.*
*5. வெற்றி பெறும் முதல் ஐந்து பேர்களுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200/=, ரூபா150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.*
*6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,*

**சொற்சிலம்பம் போட்டி இல. 152**

*நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்)லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன் கிழமைக்கு முன்னர், 09.03.2011 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்பட வேண்டும்.*
*7. சொற்சிலம்பம் போட்டி இல.152 இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 13.03.2011 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.*

# கல்லுக்குள்....

*(13 ஆம் பக்கத் தொடர்ச்சி)*

அவன் பார்த்தது தற்செயலாகவா, அல்லது வேண்டுமென்றா என்பதையும் புரிந்துகொள்ள முடியாமல் குழம்பினாள் அவள்!

அன்று பகல் முழுவதுமே அவளின் மனம் பெரும் குழப்பத்தில் சிக்கி அல்லற்பட்டுக் கொண்டிருந்தது. ஆற்றங்கரையில் ஏற்பட்ட கூச்ச உணர்வும், திடீரென உடல் சில்லிட்டமையும் தன்னை ஆடைகள் ஏதுமற்ற நிலையில் கண் வெட்டாது பார்த்தது போன்ற தவிப்பும் எவ்வளவுதான் வலிந்து மறக்க முயன்றாலும் மீண்டும் மீண்டும் அவளின் நினைவில் வந்து கொண்டேயிருந்தன.

அன்று இரவும் கூட அவள் எண்ணங்களிலிருந்து விடுபட முடியாமலே தூங்கிப் போனாள்.

அகலிகை ஆழ்ந்த உறக்கத்தில் படுத்திருந்த போது சேவல் கூவிய ஓசைக்கேட்டுத் திடீரென விழித்தெழுந்தாள். முனிவரும் எழுந்து கமண்டலத்தையும், தர்ப்பைப் பிடியையும் எடுத்துக் கொண்டு குளக்கரையை நோக்கிப் புறப்பட்டார்.

அவள் படுக்கையை விட்டு எழுந்துவிட்ட போதிலும் தூக்கக்கலக்கம் இன்னமும் அவளை விட்டுக் கலைய மறுத்தது. எனினும் எழுந்து தன் கடமைகளைச் செய்ய ஆரம்பித்தாள்.

அவள் குடத்தை எடுத்துக்கொண்டு நிமிர்ந்த போது பர்ணசாலையின் வாசலில் கௌதமன் நிற்பதைக் கண்டு ஒரு கணம் திகைத்தாள். அவனின் முகத்தில் ஒரு மந்தகாசம் பரவியது. திருமணமாகி எத்தனையோ ஆண்டுகளில் அவனிடம் அப்படியொரு புன்னகையை அவள் கண்டதில்லை.

உடலெங்கும் திடீரென ஒரு கூச்சம் பரவ உடல் சில்லிட்டது. முனிவன் கண்களை வெட்டவே இல்லை.

காலையில் ஆற்றங்கரையில் தோன்றிய அதே உணர்வில், தான் ஆள்படுவதை அவளால் புரிய முடிந்தது.

முனிவன் மெல்ல அவளை அணைத்தவாறே குடத்தை வாங்கி நிலத்தில் வைக்கின்றான்.

ஏதோ மந்திரத்தில் கண்டுண்டவளாக அவனின் அரவணைப்பில் படுக்கையை நோக்கி நடக்கின்றாள். ஒரு இனம் புரியாத மயக்கத்தில் அவள் அவனுடன் சங்கமமாகின்றாள்.

''துரோகி''

இடியாய் முழங்கிய குரல் கேட்டு இருவரும் படுக்கையை விட்டுப் பதைத்து எழுகின்றனர்.

வாசலில் கண்களில் தீப்பொறி கக்க கௌதம முனிவன் நிற்கின்றான்.

அவளுக்கு எதுவுமே புரியவில்லை. அருகில் நிற்பவனைப் பார்க்கின்றாள். அந்த உருவம் அவளுக்கு மங்கலாகவே தெரிகின்றது. கண்களைக் கசக்கிவிட்டு உற்றுப் பார்க்கின்றாள். அவன் தெய்வேந்திரன், தேவர்களின் அரசன் தெய்வேந்திரன். அவள் திகைத்தாள்! இவ்வளவு நேரமும் அவன் அணைப்பில் கிடந்து அவனிடம் தன்னைப் பறிகொடுத்துவிட்டதை எண்ணியபோது இடிந்தே போய்விட்டாள்.

முனிவர் குரல் முழங்கியது!

''என் மனைவியிடம் எதை இச்சித்து இந்த ஈனச் செயலைச் செய்தாயோ அதுவே உன் உடலெங்கும் ஆயிரமாய் விளையட்டும்'' இந்திரன் பதறிப்போய் அவரின் காலில் விழுந்தான்.

''குருவே! நான் தேவர்களின் அரசன். எப்படி இந்தக் கோலத்தில் நான் மன்னனாயிருக்க முடியும். என்னை மன்னித்தருள வேண்டும்'' அவர் இரங்கியிருக்க வேண்டும்.

''அவை ஆயிரமும் பார்ப்பவர்களுக்குக் கண்களாகவே தெரியட்டும்'' பின் முனிவன் அகலிகையின் பக்கம் திரும்பினான்.

'' எந்த உடலை இன்னொருவன் சுகிக்க இடம் கொடுத்தாயே அந்த உடல் கல்லாய்ப் போகட்டும்''

அவள் அழவில்லை! கதறவில்லை ! விமோசனம் வேண்டிக் காலில் விழவில்லை! கௌதமனை விரக்தியுடன் பார்த்தாள். வழமைபோல் அவளிடம் மௌனமே குடிகொண்டிருந்தது.

''ஒன்றுக்கு ஆசைப்பட்டவனுக்கு ஆயிரம் கொடுப்பதும் சாபம்? ஒன்றையும் அறியாமல் ஏமாந்து போனவளைக் கல்லாக்குவதும் சாபம்?'' அவளின் மனம் மட்டும் கெக்கட்டம் விட்டுச் சிரித்தது.

முனிவன் மீண்டும் சொன்னான். ''இராமன் வந்து அவன் கால் உன்மீது படும் போது நீ மீண்டும் பெண்ணாவாய்'' மீண்டும் அவள் மனம் அலறியது. மீண்டும் ஒரு ஆணா? வேண்டாம்! வேண்டாம்!''

அவளின் மௌனம் மட்டும் கலையவில்லை...!

அவர்கள் போய் விட்டனர்.

அவள் மெல்ல மெல்லக் கல்லாக மாற ஆரம்பித்தாள். அவள் அதற்காக எள்ளளவும் துயரப்படவில்லை. ஆனால் அவளின் கண்ணீரெல்லாம் மீண்டும் ஒரு ஆணின் ஸ்பரிசம் தன் மேல் படப்போகிறதே என்பதுதான்...!

முனிவனின் மனைவியாக அவள் இருந்த காலத்தில் கூட அவனுக்குத் தொண்டு செய்வதும், அவனுக்குத் தேவையேற்படும் போது மட்டுமே அருகில் படுப்பதும் என்றளவுக்கே அவள் வாழ்வு இருந்தது. இந்திரன், தான் இச்சைப்பட்டபோது அவளை அனுபவித்துவிட்டுப் போய்விட்டான். அவள் உடலாலும், மனத்தாலும் ஒரு மனித ஜீவனாகப் பார்க்கப்படவில்லை. அவள் ஒரு கல்லாகவே நோக்கப்பட்டாள். அவளின் கண்ணீர் அந்தக் கல்லுக்குள்ளேயே அடங்கிவிட்டது.

இப்போது அவள் முற்றாகவே கல்லாக மாறிவிட்டாள்...!

அவள் கண்ணீரும் அந்தக் கல்லுக்குள்ளேயே அடங்கிவிட்டது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் கதிர்

## தமிழுக்கு ஆங்கிலம் (5)

தமிழ்ச் சொற்களுக்கான ஆங்கிலக் கருத்துச் சொற்கள் ஆங்கிலம் கற்கும் மாணவர்களுக்குப் பயன்படும் வகையில் தொகுத்து வழங்கப்படுகின்றன.

'ஊ' வரிசையில்:

ஊகம்:Guess
ஊக்கம்:Spiritedness
ஊசி:Needle
ஊடுருவு:Penetrate
ஊட்டு: Feed
ஊதியம்:Profit,Salary
ஊது:Blow
ஊத்தை:Dirt
ஊமை:Dumpness
ஊர்:Village, City
ஊழல்: Corruption
ஊழியம்: Service
ஊற்று:Spring, Pour
ஊன்று:Plant
ஊனம்:Defect
ஊதாரி:Spendthrift
ஊடகம்:Media
ஊரி:Snail
ஊன்:Flesh
ஊண்: Food
ஊறுகாய்:Pickled fruit
ஊஞ்சல்:Swing

'எ'வரிசை

எழுத்து: Letter
எள்ளு: Despise,Gingely
எட்டு: Reach, Eight
எரி:Burn
எறி:Throw
எளிது:Easy
எண்ணு:Think, Count
எங்கு:Where
எவர்:Who
எது:Which
எடு:Take
என்ன:What
எச்சில்: Saliva
எறும்பு: Ant
எருது: Ox
எரு: Manure
எளிமை: Simple
எமன்: God of death
எங்கள்: Our
எச்சரி: Warn
எடை: Weight
எதிரி: Enemy
எதிரொலி: Echo
எல்லை: Border
எலும்பு: Bone
எலுமிச்சை: Lemon

தொகுப்பு: ரம்யன்

## பெற்றோருக்காக உழைத்த மகன்

ஒரு நாட்டிற்கு அருகில் உள்ள காட்டில் வறுமையான குடும்பம் இருந்தது. பெற்றோர்கள் கால்கள் இயங்க முடியாத நிலையில் வீட்டில் இருந்தனர். அவர்களின் மகன் பாடசாலைக்குச் சென்று படித்து விட்டு வீடு வந்துதான் சமைத்துத் தானும் உண்டு பெற்றோருக்குக்கும் ஊட்டி விடுவான். அதன் பின் சாக்கடை நீரை அகற்றும் வேலையைச் செய்துதான். அவன் பணம் பெறுவான். அவன் வீட்டில் பெற்றோரின் நிலைமையையும் தன்நிலைமையையும் உணர்ந்து இரவும் பகலும் படித்துக் கொண்டே இருப்பான். இவனைப்பார்த்து அவனின் பெற்றோர் மிகச் சந்தோசப்படுவர்.

அவன் படிப்பில் சிறந்தவனாக விளங்கி பல்கலைக்கழகத்திலும் கற்று நல்ல வேலையிலும் இணைந்தான். பெரிய நிலைமையை அடைந்து பெற்றோருக்கு நல்ல சிகிச்சை வழங்கி அவர்களின் கால்களைச் சரியாக்கினான். நல்ல உழைப்போடு பழக்கவழக்கத்திலும் நல்லவனாக மற்றவருக்கு முன்மாதிரியாக வாழ்ந்து தன் பெற்றோரைக் கண்ணும் கருத்துமாகப் பாதுகாத்து சமூகத்தில் பெரும் மதிப்புப் பெற்று நல்ல நிலையை அடைந்தான்.

எல்லோருக்கும் நல்ல மனம் உண்டானால்
நல்ல நிலையை அடைய இறைவன் உதவிபுரிவான்.

கி.கஜீவன், தரம் 7,
சென்.ஜோன்ஸ் கல்லூரி.

## விடை தெரியுமா? 97

1.ஜேர்மனிய பாதுகாப்பு அமைச்சரின் பெயர் என்ன?
2.புதுடில்லியின் கனரக மற்றும் பொதுத்துறை அமைச்சரின் பெயர் என்ன?
3.இங்கிலாந்து அணி வீரர்களில் வலது கை சுழற்பந்து வீச்சாளர் யார்?
4.பூமியைத் தாக்க இருப்பதாகக் கருதப்படும் சிறிய கோளின் பெயர் என்ன? எத்தனையாம் ஆண்டு தாக்கலாம் என விஞ்ஞானிகள் கருதுகின்றனர்?
5.எகிப்திய நாட்டில் குழந்தைகள் வைத்தியசாலை எனப் பெயர் சூட்டப்பட்ட வைத்தியசாலை தற்போது பெயர் மாற்றப்பட்டு எப்பெயரில் இயங்கி வருகிறது?

**விடை தெரியுமா?**

தெரிந்தால் 05.03.2011 இற்கு முன்னர் சரியான விடைகள் அனுப்பும் 6 மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75 வீதமும் பரிசுகள் நூல்களாக வழங்கப்படும்.

## உங்களுக்கும் பரிசில்கள்

### விடை 95

1.லியனடோ டாவின்சி
(1490 ஆம் ஆண்டு)
2.ஜலநாத்கானல்
3.அவதார் பட இயக்குநர் ஜேம்ஸ்கெமரூன்
4.அர்ஜீன ரணதுங்க
5.ஒலெப்ரோகோய்

### வெற்றி பெற்றவர் விவரம்


1. ப.ஹம்ஷா, தரம்-9 'சி'
யாழ்.கொக்குவில் இந்துக்கல்லூரி.
2. தெ.துசாந்த், தரம்-7 'சி'
யாழ்.விக்னேஸ்வராக் கல்லூரி, கரவெட்டி.
3. யோ.சுபாஷினி, தரம்- 4,
யாழ்.மட்டுவில் கமலாசனி கனிஷ்ட ம.வி.
4.கு.ரூபிகா, தரம் -1,
யாழ். இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை.
5. கு.தசாயன், தரம்-3,
யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை .

## அறிந்து கொள்ளுங்கள்

1.இரசாயன ஆயுத விலங்கு-
நச்சு அம்புத் தவளை
2.மீகொங் ஆற்றின் இராட்சத மீன்-
மீகொங் கற்பிஸ்
3.குதிரை வடிவ மீனினம்-
கடற்குதிரை
4. பறவை உலகின் கட்டடக் கலைஞன்-
தூக்கணாங்குருவி
5.குருதியுறுஞ்சும் வௌவால்-
வம்பயர் வௌவால்
6.விலங்குளின் செல்லக் குழந்தை-
இராட்சத பண்டா
7.வெட்ட வெட்ட உயிர் பெறும் தட்டைப்புழு-
பிளனேரியா
8.எமது நாட்டுக்குரித்தான தேரை-
பியூபோ கொட்டகமாய்

சு.கம்சாயினி,
தரம்- 9'A',
வடமராட்சி,மத்திய மகளிர் கல்லூரி.


## மாணவத் தூரிகை



கி.விதுசன், தரம்-5,
மகாஜனக் கல்லூரி.




சா.பபிதா, தரம்-8,
யாழ்.கோண்டாவில் இராமகிருஷ்ணா
மகா வித்தியாலயம்.



இலக்சன், தரம்-9,
யாழ். இந்துக் கல்லூரி.

## கப்பல்

கப்பல் நல்ல கப்பலாம்
கடலில் செல்லும் கப்பலாம்
அக்கரைக்குச் செல்லவே
ஆள்கள் ஏற்றும் கப்பலாம்
பொருள்கள் ஏற்றும் கப்பலாம்
சண்டை செய்யும் கப்பலாம்
கப்பல் வகையில் பலவிதம்
கடலில் மிது திரியுமாம்
தூர தேசம் செல்லும்
துறைமுகத்தில் தங்குமாம்
கலங்கரை விளக்கினால்
கரையைக் கண்டு சேருமாம்

தி.உமையாலா,
தரம்-3 'ஏ',
யாழ்ப்பாணக் கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் கோட்டத்துக்கு நிழற் பிரதி இயந்திரம்

யாழ்ப்பாணம்,பெப்.27

நல்லூர் கோட்டக்கல்விப் பணிமனைக்கு அதன் செயற்றிட்டத்துக்கும் வளர்ச்சிக்காகவும் இரண்டரை லட்சம் ரூபா பெறுமதியான நிழற்பிரதி எடுக்கும் இயந்திரம் கடந்த திங்கட்கிழமை வழங்கப்பட்டது.

இந்த நிழற்பிரதி இயந்திரத்தை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அன்பளிப்பாக நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.மாணிக்கராஜாவிடம் வழங்கினார்.

இதுகுறித்து நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் தெரிவிக்கையில், இதுவரையில் நிழற்பிரதிகள் இயந்திரங்கள் இல்லாது பெரிதும் சிரமப்பட்டோம். யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் உள்ள நிழற்பிரதி இயந்திரத்தினையே பயன்படுத்தி வந்தோம். இது பெரிதும் உதவியாக அமைந்துள்ளது எனத் தெரிவித்தார். (ம-311)

# எரிகாயங்களுக்கு ஆளான பெண் உயிரிழந்தார்

யாழ்ப்பாணம்,பெப்.27

எரிகாயங்களுக்கு ஆளாகி யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த மாதகலைச் சேர்ந்த பெண் ஒருவர் சிகிச்சை பயனின்றி வியாழக்கிழமை உயிரிழந்துள்ளார்.

கடந்த 17ஆம் திகதி இரவு 6.30 மணியளவில் வீட்டில் உள்ள விளக்குத் தவறுதலாகத் தட்டுப்பட்டு வீழ்ந்ததில் எரிகாயங்களுக்கு உள்ளானார் எனக் கூறப்பட்டது.சங்கானை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுப் பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக அம்புலன்ஸ்மூலம் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். (ம-15)


## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ விவாகரத்துப்பெற்ற லண்டன் P.R. பெற்ற பட்டதாரி வயது 42 சித்திரை நட்சத்திரம் உயரம் 5' 2'' சைவம் விரும்பத்தக்கது.

தொடர்பு: 0777768835, 00447556040928

Email: ragaa92@live.cm

இல. 24, உருத்திரா மாவத்தை, கொழும்பு - 06.

## போலிகள் எச்சரிக்கையாக இருக்கவும்



ஆகாசவாணி செய்திகள் வாசிப்பவர் வரதராஜன்
யாழ்.நகரில்
1. பொன்னான மேனியும்
2. பொலிவான கூந்தலையும் தந்து
3. சகல ரோக நிவாரணியாகத் திகழும்

போலியானது



சரியானது

சித்தாரா பொன்னாங்காணித் தைலத்தில் போலிகள் நடமாடுவது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. போலிகளின் நடமாட்டத்தைத் தடுக்க இன்றிலிருந்து தைலப் போத்தலின் மேல் மூடி கண்ணைக் கவரும் வர்ண மூடியாக அச்சிடப்பட்டு சித்தாரா டிஸ்பென்சரி வைத்திய முத்திரை பொறிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றது. போலிகளைக் களைவதற்கு வேலியாக அமைவது வர்ணத்தில் வைத்திய முத்திரை பொறிக்கப்பட்ட மூடிகளே, பிளேன் மூடித் தைலம் இனி உங்களுக்கு வேண்டாம். ஆகவே சித்தாரா பொன்னாங்காணித் தைலம் வாங்கும் போது வர்ணமூடியுடன் சித்தாரா டிஸ் பென்சரி வைத்திய முத்திரை குறியீடு உள்ளதா எனப் பொதி செய்யப்பட்ட பெட்டியைத் திறந்து சரிபார்த்து வாங்குங்கள்.

யாழ்.மாவட்ட ஏகவிநியோகத்தர்:
சிவா நறுமணப்பூங்கா
இல.228, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2567
குறிப்பு: சத்திரச் சந்திக்கு அருகில்

Manufactured By:
Sithara Product
Puttalam Road, Chilaw.
(Reg.No: 6382) ARPR/No:228

## விற்பனையாளர்கள் தேவை

எமது ஸ்தாபனத்துக்கு விற்பனையாளர்கள் தேவை.
★ பழக விரும்புவோர்களும் விண்ணப்பிக்கலாம்.
★ முன் அனுபவம், மின்சாரப்பொருள்கள் தொடர்பான அறிவு மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும்.
திறமைக்கேற்ப சம்பளம் வழங்கப்படும்.
சுய விவரப் படிவத்துடன் காலை 9 தொடக்கம் மாலை 4 மணிவரை நேரில் சமுகம் தரவும்.
(28.02.2011, 01.03.2011, 02.03.2011)
தொடர்புகளுக்கு: -
செல்வா எலக்ரிக்கல்ஸ்,
இல. 21, பலாலி வீதி, திருநெல்வேலி.
T.P. No. 021 321 8617

## K.G. INVESTMENTS LIMITED,
545. Sri Sangaraja Mawatha, Colombo - 10

பொது மக்களுக்கு முக்கிய அறிவித்தல்

புத்தூரில் "யார்வத்தை" பெயருடைய காணி நிலப்பரப்பு 201

புன்னாலைக் கட்டுவனிலிருந்து சிறுப்பிட்டி போகும் பாதையில் இருக்கும் எமது நிறுவனத்துக்குச் சொந்தமான மேற்குறிப்பிட்ட காணியை சிலர் அத்துமீறிச் சட்டவிரோதமாகப் பொது மக்களை ஏமாற்றிப் பகுதி பகுதியாக விற்க,முயற்சிப்பதாக அறிகிறோம். இத்தால் சகலருக்கும் அறிவிப்பதாவது அத்துமீறிக் குடியிருப்பவர்களுக்கும் சட்டவிரோதமாக விற்க வாங்க முயற்சிப்பவர்களுக்கும் எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். விவரங்களுக்கு எமது சட்டத்தரணிகளைத் தொடர்புகொள்ளவும்:-

MURUGESU & NEELAKANDAN,
Attorneys-at-Law & Notaries Public,
No. 2. Deal Place, Colombo 03.
T/P. 011-2371100.

நிர்வாக இயக்குநர்
கே.ஜி. இன்வெஸ்ட்மென்ட்ஸ் லிமிட்டெட்
தொலைபேசி: 0777 399799
KN/TB/Ct.38(220)

## காணி விற்பனைக்கு

உரும்பிராய் கற்பகப்பிள்ளையார் கோயிலுக்கு நேர் எதிரில், பலாலி வீதியில் 9¼ பரப்புக்காணி கிணற்றுடன் மற்றும் தொழிற்சாலைக் கட்டடத்துடன் விற்பனைக்குண்டு. காணியை முழுமையாகவோ இரண்டு துண்டுகளாகவோ பிரித்துக் கொடுக்கலாம்.

(C/376229) தொடர்பு: 0771378665

## WANTED

Computer Technicians.
Age 22 -25, Male
Experienced/Non experienced,
For Colombo based Company's
Jaffna Branch.
(49-22-24)
FWD CV to: rajiv.egs@gmail.com / 0777802534
(Selected candidates sent Colombo for Special Training)

## மணமகள் தேவை

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட அரச ஆயுள்வேத மருத்துவமனையில் வைத்தியராகப் பணிபுரியும் 1977 ஆம் ஆண்டு பிறந்த ஆணுக்கு இலங்கையில் படித்த தொழில் புரியும் மணமகளை எதிர்பார்க்கின்றனர்.

தொடர்பு: 021 225 5130

## German Swiss மொழிகள்

German Swiss மொழிகள் தமிழ் மொழி பெயர்ப்புடன் நடைபெறுகிறது.
தொடர்பு: 10, Palaly Road, Jaffna
T.P.: 0771604823

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம் வயது 39, நட்சத்திரம் அனுஷம் 3 ஆம் பாதம் கிரக பாவம் 24, London PR பெற்ற மணமகனுக்கு மணமகள் தேவை. எதிர்பார்க்கும் வயது 34 குறைந்தோர், அழகிய மெல்லிய மணமகளை எதிர்பார்க்கின்றனர் (சைவம் விரும்பத்தக்கது)

தொடர்பு: போன் 0777768835, 0779411635
Fax - 011 2399050
Email: Ro.Nada@yahoo.co.uk.

## வீடு வாடகைக்கு உண்டு

5 அறைகளும் 2Hall உம் கொண்ட புதிதாகத் திருத்தப்பட்ட சகல வசதிகளுடன் கூடிய வீடு சாவகச்சேரியிலிருந்து 1Km தூரத்தில் கண்டி வீதியில் வாடகைக்கு உண்டு. நிறுவனங்கள் விரும்பத்தக்கது. வாகனங்கள் நிறுத்தக்கூடிய இடவசதிகளும் உண்டு.

தொடர்பு: 0772484434

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த மணமகனுக்கு மணமகள் தேவை. உள்நாட்டில் கணக்காளராகப் பணிபுரிபவர். 35 வயதுக்குட்பட்டவர்கள் தொடர்பு கொள்ளவும்.
தரகர்கள் தொடர்புகொள்ள வேண்டாம்.

தொடர்பு: 0754248677

## வீடு விற்பனைக்கு

மானிப்பாய், இணுவில் வீதி, கராஜ் ஒழுங்கையில் (2 பரப்பும் 3.8 குழி கொண்ட காணியில்) 3 அறை கொண்ட நல்ல நிலையுள்ள அழகான வீடு விற்பனைக்கு உண்டு. தரகர் இல்லை.

தொடர்பு: 0773544915, 0772565676, 0777619146

## சிலைகள் விற்பனைக்கு

இந்தியாவில் இருந்து தருவிக்கப்பட்ட அழகிய வேலைப்பாடுகள் அமைந்த கருங்கல் சிலைகள் விற்பனைக்குண்டு.

விவரம்

| | |
|---|---|
| முருகன், வள்ளி, தெய்வானை | 21'' |
| பிள்ளையார் | 18'' |
| நந்தனப் பிள்ளையார் | 18'' |
| மகாலட்சுமி | 21'' |
| கருமாரி | 23'' |
| துர்க்கை | 18'' |

விவரங்களுக்கு: 0734373786, 021 222 9908

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம் வயது 34, நட்சத்திரம் மூலம் முதலாம் பாதம், London PR பெற்ற மணமகனுக்கு மணமகள் தேவை. எதிர்பார்க்கும் வயது 27 குறைந்தோர், அழகிய மெல்லிய மணமகளை எதிர்பார்க்கின்றனர் (சைவம் விரும்பத்தக்கது)

தொடர்பு: போன் 0777768835, 0779411635
Fax - 011 2399050
Email: Ro.Nada@yahoo.co.uk.

## MCN கணினி பூங்காவில் வேலை பார்ப்பதற்கு வேலையாள்கள் தேவை

01. முறையாகப் பரதநாட்டியம் பயின்ற பரத நாட்டிய ஆசிரியை
02. முறையாக Orgen பயின்ற Orgen ஆசிரியர் Or ஆசிரியை
03. வெளிக்கள உத்தியோகத்தர் வேலைக்கு 50 பேர் வரை தேவை.

தகைமை: O/L

புதிதாக ஆரம்பமாகவிருக்கும் வகுப்புக்கள்

| | மாதம் | வருடம் |
|---|---|---|
| 01. பரத நாட்டியம் | 500 | 5000 |
| 02. Orgen | 500 | 5000 |
| 03. சிங்களம் | 300 | 3000 |
| 04. சங்கீதம் | 300 | 3000 |

MCN அங்கத்தவராக இருந்தால் 10% சலுகை

MCN இன் அங்கத்தவராக இருந்தால் உங்கள் ரெலிபோனிற்கு மாதம் ஒன்றுக்கு 100 ரூபா வீதம் 12 மாதங்களுக்கு ரீலோட் போட்டுத் தரப்படும்.

தொடர்பு T.P NO: 021 226 2744
வெள்ளிருவை, அல்வாய் கிழக்கு, அல்வாய்.

## வேலையாள்கள் தேவை

நெல்லியடி பிரதான வீதியில் இயங்கவிருக்கும் பார்மஸி நிறுவனத்துக்கு மருந்துப் பொருள்கள் விற்பனையில் அனுபவமுள்ள ஆண், பெண் பிள்ளைகள் தேவை. உடன் தொடர்பு கொள்ளவும்.

T.P.: 0770238140, 021 4911723, 021 2264519

## கோழிக்குஞ்சு விநியோகம்

தடுப்பு மருந்து போடப்பட்ட தரமான பிறிமா NO.1புறொயிலர் கோழிக்குஞ்சுகள் நியாயமான விலையில் 03.03.2011 காலை விநியோகிக்கப்படும். முன்பதிவு செய்யவும்.

- சுட்டிபாம் சென்ரர், வட்டுக்கோட்டை - 0778996085
- சன்னதி பாம் சென்ரர், தொண்டமனாறு - 0776904590
- நெல்லியடி பல்பொருள் விற்பனை நிலையம், நெல்லியடி - 0774656377
- முகுந்தன், பருத்தித்துறை - 0771392593

நல்லூரர் பாம் சென்ரர், 19, முருகேசர் லேன், நல்லூரர்.
தொ.பே. 0212226944
(758)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 05.06.1953
உதிர்வு: 10.03.2010

அமரர் இராசையா தெய்வபுலேந்திரா
(வேலை நிர்மாண முன்னாள் அத்தியட்சகர், யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம்)

திதி:
அபரபக்க தசமி
27.02.2010

அன்புத் தந்தையே தெய்வமே!
ஆண்டொன்று ஓடி மறைந்தாலும்
ஆறவில்லை எம் துயரம்
அன்புடனே அறிவுரைகள் பல கூறி
அல்லும் பகலும் அரும்பாடு பட்டு
அகிலத்தில் நாம் வாழ வழிதந்தீர்
வீதி வழி செல்கையில் விறுக்கெனவே
அழைத்தானோ- காலன் இவன்
கதிகலங்க எம்மைவிட்டு
கதிரவனே எங்கு சென்றாய்
ஆண்டு பல சென்றாலும் உங்கள்
நினைவுகள் எம்மை விட்டு நீங்கா.

மனைவி, பிள்ளைகள்.
பொன்கந்தையா வீதி,
நெல்லியடி, கரவெட்டி.
(48,19,21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நித்தியசுகத்தை நோக்கி... உதயன் வைத்தியமலர் 9

# மருத்துவத்துறையில் நோயாளர்களுக்கு இருக்கும் உரிமைகள்

ஒவ்வொரு துறையிலும் எமக்கு இருக்கும் உரிமைகளைத் தெரிந்து வைத்திருக்க வேண்டியது எமது கடமையாகும். அத்துடன் அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு நாம் எம்மால் இயன்றவற்றை செய்துதான் ஆக வேண்டும். உரிமை என்ற பேச்சை எடுப்பதற்கே அச்சப்படும் ஒரு நிலை காணப்படுகிறது. எமது உரிமைகள் மீறப்படுவதாக நாம் உணரும் பொழுது அது சம்பந்தமாகப் பேசுவதற்கு அச்சப்படவோ வெட்கப்படவோ வேண்டியதில்லை. உரிமைகளை மறுப்பவன் தான் உண்மையிலே மனித குலத்தின் முன் வெட்கப்பட வேண்டியவன்.

மருத்துவத்துறையிலே நோயாளர்களின் உரிமைகள் பற்றிப் பேசுவது மருத்துவக் குழுவுக்கும் நோயாளர்களுக்கும் இடையே முரண்பாடுகளைத் தோற்றிவிப்பதாக அமைந்து விடக் கூடாது. உண்மையிலே இது ஒரு பரந்துபட்ட புரிந்துணர்வை ஏற்படுத்தி மருத்துவக் கவனிப்பு முறைகளை மேம்படுத்தும் ஓர் உந்து சக்தியாகவே அமைய வேண்டும்.

நோயாளர்களின் கவனிப்புமுறை உணர்வு சம்பந்தப்பட்டது. மனிதாபிமானம் சம்பந்தப்பட்டது. பல மனங்களின் உணர்ச்சி சம்பந்தப்பட்டது. மனச்சாட்சி சம்பந்தப்பட்டது. இவற்றை சட்ட வரையறைக்குள் அடக்கிவிட முடியாது.

5

ஒவ்வொரு நோயாளியும் குணப்பட்டுச் செல்லும்பொழுது அவனும் அவனது குடும்பமும் மட்டுமல்ல மருத்துவக் குழுவும் மகிழ்ச்சி அடையும்.

ஒரு நோயாளி இறந்துவிட்டால் அவனது குடும்பத்துடன் சேர்ந்து மருத்துவக்குழுவின் உள்மனமும் அழும்.

ஆனால் தொடர்ந்து அழுது கொண்டிருக்க முடியாது.

காரணம் அடுத்த நோயாளியை பார்க்க வேண்டும் என்ற கடமை இருக்கும். எத்தனையோ மரணங்களையும் துயரங்களையும் பார்த்து விட்ட காரணத்தால் நோயாளிகள் தமது அறிவுரைகளைக் கடைப்பிடிக்காத பொழுது அவர்களுக்கும் அதேகதி நேர்ந்துவிடுமோ என்று மருத்துவக் குழுவின் மனம் பதைபதைக்கும்.

இவ்வாறான மன உணர்வுகளை எந்தச் சட்டக்கோவையினுள் உள்வாங்குவது.

மருத்துவத்துறையில் மட்டுமல்ல எந்தத்துறைகளிலும் இருக்கின்ற குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்குப் புரிந் துணர்வும் மனிதாபிமான உணர்வும் கூட்டுமுயற்சியும் அவசியமாகும்.

நோயாளர்களின் உரிமைகள் மீறப்படுகின்றன என்ற சிந்தனை எழுந்தால்

**டாக்டர்.சி.சிவன்சுதன்,**
**வைத்திய நிபுணர், யாழ்.போதனா வைத்தியசாலை**

அது சம்பந்தமாகச் சம்பந்தப்பட்டவர்களுடன் கலந்துரையாடி அந்த நிலயை மாற்ற ஒவ்வொருவரும் முயலவேண்டும். ★

*உதயனின் இந்த வைத்திய மலர் யாழ்.போதனா வைத்தியசாலையின் நீரிழிவுச் சிகிச்சைப் பிரிவினால் தொகுத்து வழங்கப்படுகிறது.மலர் சம்பந்தமான உங்கள் அபிப்பிராயங்களையும் மருத்துவம் சம்பந்தமான உங்கள் சந்தேகங்களையும் - நித்திய சுகத்தை நோக்கி... **நீரிழிவு சிகிச்சை நிலையம், போதனா வைத்திய சாலை,யாழ்ப்பாணம்.** என்ற முகவரிக்கு அனுப்பிவையுங்கள். உங்கள் வினாக் களும் அதற்கான பதில்களும் இந்தப் பகுதியில் பிரசுரமாகும்.*

# நீரிழிவு, இருதய நோயாளிகள் உருளைக்கிழங்கு உண்ணலாமா?

உருளைக்கிழங்கை விரும்பி உண்ணாதவர்கள் எவருமே இருக்கமாட்டார்கள். சுவையில் மட்டுமல்ல போசணையிலும் உருளைக்கிழங்கு சிறந்த உணவாகும். நீரிழிவு மற்றும் இருதயநோய் உடையவர்களும் உடல் எடையைக் குறைக்க விரும்புவோரும் உருளைக் கிழங்கு ஒரு எட்டாக்கனியாக இருப்பதாக எண்ணி வருந்தத் தேவையில்லை. நீங்களும் உங்கள் உணவில் உருளைக்கிழங்கை சேர்த்துக் கொள்ளலாம். எவ்வாறு?

எமது பிரதேசத்தின் பிரதான உணவான அசிரியை சோறாகவும், அதன் மாவினைப் பிட்டு, இடியப்பமாக ஆக்கியும் நாம் உண்கிறோம். அரிசிலுள்ள பிரதான உணவுக் கூறு காபோவைதரேற்று. உருளைக்கிழங்கிலுள்ள பிரதான உணவுக் கூறும் காபோவைதரேற்றே ஆகும்.

ஒருவர் ஒரு நேர உணவின் போது சராசரியாக உண்ணும் அவித்த உருளைக்கிழங்கிலுள்ள காபோவைதரேற்றின் அளவானது 1/3 டம்ளர் சமைத்த குத்தரிசிக்கு அண்ணளவாகச் சமனாகிறது. எனவே நாம் உருளைக் கிழங்குக் கறியை எமது உணவில் சேர்க்க விரும்பினால் 1/3 டம்ளர் சோற்றைக் குறைத்து அல்லது ஒரு இடியப்பத்தைக் குறைத்து உண்ணலாம். இதன்மூலம் நாம் மேலதிகமாக எடுக்கும் காபோவைதரேற்று தவிர்க்கப்படுகிறது.

மேலும் அவித்த உருளைக்கிழங்கிற்கும் குத்தரிசிச் சோறு மற்றும் தீட்டாத அசிரி மா போன்றவற்றிற்கும் கிளைசீமிக் இன்டெக்ஸ்(Glycaemicindex)என்று சொல்லப்படுகின்ற அதாவது, உண்ட பின் குருதியில் குளுக்கோஸ் அதிகரிப்பு ஏற்படும் வீதம் அண்ணளவாகச் சமனாக உள்ளது. இது நீரிழிவு நோயாளிகளுக்கு உகந்ததாக உள்ளது. கிளைசீமிக் இன்டெக்ஸை குறைப்பதற்கு நீரிழிவு நோயாளிகள் இவ்வுணவுடன் மரக்கறி வகைகள் மற்றும் இலைக்கறி வகைகளையும் சேர்த்துக்கொள்ளலாம். தீட்டாத அரிசியுடன் (Brown rice)ஒப்பிடும்போது உருளைக்கிழங்கு குறைந்தளவு கொழுப்புச் சத்தைக் கொண்டுள்ளது. அரிசியில் காணப்படாத சில கனியுப்புக்களைக் கொண்டுள்ளது. இவற்றை விட உருளைக்கிழங்கு மிகவும் குறைந்த அளவிலேயே சோடியத்தைக் கொண்டுள்ளது. எமது குருதிய முக்கத்தைச் சரியான முறையில் பேணுவதற்கு சோடியம் உப்புக் குறைவான உணவுகளும் உதவிபுரிகின்றன.

இவ்வாறு பல நன்மைகள் அவித்த உருளைக்கிழங்கில் இருப்பினும் கறியாகச் சமைக்கும்போது அதில் சேர்க்கப்படும் தேங்காயப்பால், உப்பு, எண்ணெய் என்பன உருளைக்கிழங்கின் ஆரோக்கியமான போசணைக் கூறுகளை மாற்றியமைத்து விடுகின்றன.

**டாக்டர் யனோஜனி லக்ஸ்மன்**

எனவே, உருளைக்கிழங்கை உணவில் சேர்த்துக் கொள்ளும் போது மேற்கூறப்பட்ட விடயங்களைக் கருத்திற் கொண்டால் சுவையாக உண்டு ஆரோக்கியமாக வாழலாம். ★

# நோயாளர்கள் மருந்துவகைகளை பாவிக்கும்போது விடக்கூடிய தவறுகள்

நோயாளர்கள் மருந்து வகைகளைப் பாவிக்கும் போது பல்வேறு தவறுகளை விடுகின்றனர். அது மட்டுமன்றி வைத்திய சிகிச்சையை இடைநடுவே தமது சுயவிருப்பின் பெயரில் நிறுத்திக் கொள்ளலும், குறிப்பிட்ட நேரத்தில் பரிந்துரைக்கப்பட்ட மருந்துகளை உபயோகிக்காமையும் இவற்றில் சுட்டிக்காட்டப்பட வேண்டியவையாகும். இது தொடர்பாக விழிப்புணர்வூட்டும் முகமாகவே இந்த ஆக்கம் தரப்படுகின்றது.

1.“ நோய் குணமான பின்பும் மருந்து வில்லைகளை உபயோகிக்க வேண்டும்?”

சில நோய்கள் மட்டுமே குறுகிய மருந்துகள் மூலம் முற்றாகக் குணப்படுத்தக் கூடியன. சில நோய்களுக்கு நீண்ட கால அடிப்படையில் மருந்துகளைத் தவறாது உள்ளெடுப்பதன் மூலம் தான் அதனால் ஏற்படும் பக்கவிளைவுகளையும் தாக்கத்தினையும் கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியும். இவ்வாறான நோய்களாக உயர் குருதி அமுக்கம், நீரிழிவு (சலரோகம்), போன்றவற்றைக் கூறலாம்.

சில நோய்கள் குணமாவதற்கு நீண்ட கால அடிப்படையில் இடைவிடாத சிகிச்சை பெறவேண்டும். நோய் மீண்டும் வருவதற்குச் சிகிச்சையை இடைநிறுத்துதல் காரணமாக அமையலாம். உதாரணமாகக் காசநோய்.

★சில நோய்கள் எதிர்காலத்தில் வரலாம் என்ற ஆபத்துடையவர்கள், சில மருந்து வகைகளை முன்கூட்டியே எடுத்து அவ்வாறான நோய்களிலிருந்து பாதுகாப்புப் பெறுகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. எனவே சிகிச்சையை இடைநடுவே நிறுத்துதல் எங்கள் நோய் நிலைமையை மேலும் மோசமானதாக்கும் என்பதனை கவனத்திற் கொள்வோம்.

2. ‘‘மருந்து மாத்திரைகளைப் போட்டவுடன் எனது தலை சுற்றுகிறது. வயிறு எரிகின்றது, அன்றாடக் கடமைகளை ஒழுங்காகச் செய்ய முடியவில்லை. அதனால் அந்த மருந்துவகைகளை நான் பாவிப்பதே இல்லை’’ என்று கூறுகின்றனர். வைத்தியரால் வழங்கப்படும் மாத்திரைகள், நல்ல விளைவுகளுக்கு மேலதிகமாக, சிலருக்கு மட்டும் சில வேண்டத்தகாத பக்கவிளைவுகளை ஏற்படுத்த வல்லன. சிலருக்கு ஒவ்வாமை, தலைச்சுற்று, தலைவலி, வாந்தி வருவது போல் இருத்தல், வயிறு எரிவு, நெஞ்சு எரிவு, போன்ற சில பக்க விளைவுகள் ஏற்படலாம். அவ்வாறு ஏற்படின் அதனை நாம் மறைக்காமல், வைத்தியரிடம் கூறி அந்த மருந்துக்குப் பதிலாக வேறு மாற்று மருந்துகளை பெற்று பூரண சுகம் பெறலாம். நாமாகவே சிகிச்சையை இடை நிறுத்தும் பட்சத்தில் ஏற்படும் விளைவுகள், பக்க விளைவுகளினை விடப் பல மடங்கு [illegible] என்பதனை மனதில் வைத்திருங்கள். உதாரணமாகக் கட்டுப்பாட்டில் இல்லாத உயர்குருதி அமுக்கம், பாரிசவாதம் போன்ற நோய்களுக்கு இட்டுச் செல்லும்.

3.“இவ்வளவு மருந்து மாத்திரைகளையும் போட்டால் எனது உடம்பு என்னத் துக்காகும்?”

அதிக நோய்களைக் கூட்டாக உடையவர்கள் இவ்வாறு நினைக்கிறோம். உதாரணமாக உயர்குருதி அமுக்கம், சலரோகம், இதயநோய்கள் இவை மூன்றையும் கூட்டாக உடையவர்கள் ஒரே தடவையில் ஐந்துக்கு மேற்பட்ட வெவ்வேறு மாத்திரைகளை எடுத்துக்கொள்ள நேர லாம். மருந்து வில்லைகள் எங்கள் உடல் நிலைமையை மேம்படுத்துவதற்காக அன்றி மோசமானதாக்குவதற்கு அல்ல என்பதனைக் கருத்தில் கொள்வோம். அத்துடன் வைத்தியர் எமக்கு வழங்கும் மாத்திரைகள் நோயைக் குணப்படுத்த மட்டுமன்றி அவற்றில் எங்களுக்குத் தேவையான விற்றமின்கள், கனியுப்புக்கள் அடங்கிய மாத்திரைகளும் அடங்குகின்றன.

ii) எமது நோய்க்கான மருந்துகளை நாமாகவே மருந்துக்கடையில் (Pharmacy) இல் வாங்கிப் பாவித்தல்-

வைத்திய ஆலோசனையின்றி தேவையற்ற -எங்களுக்குத் தெரியாத மருந்துகளை பாவனை செய்யும்போது, எங்கள் [illegible] மேலதிகமாக, மேலும் நோய்களை [illegible]த்துக் கொள்ளும் ஆபத்துள்ளது. நாங்கள் உபயோகிக்கும் அல்லது வைத்தியரால் பரிந்துரை செய்யப்படும் மருந்துகளை மருந்துக்கடைகளில் வாங்கி பாவிக்கும்போது அங்கு (Pharmacy) இல் வழங்கப்பட்ட மருந்தும், வைத்தியரால் பரிந்துரைக்கப்பட்ட மருந்தும் ஒன்றா என்பதனை மீண்டும் உறுதி செய்து கொள்வோம். நோயாளர்களாகிய நாம் அனைவரும் வைத்தியரிடம் நாம் உபயோகிக்கும் மருந்து பற்றிக் கேட்டுத் தெரிந்து வைத்துக்கொள்ள வேண்டியவை.

1.எந்த நோய்க்காக மருந்து வழங்கப்படுகின்றது?

2. மருந்தின் பெயர்

3. மருந்தின் நோக்கம்

-நோயைக் குணமாக்க

- நோய்க் குணங்குறிகளை அகற்ற/ இரண்டுக்குமாக.

4.எப்போது/எவ்வாறு, எந்நேரங்களில் மருந்துகளை உள்ளெடுத்தல்.

**எஸ். வித்தியஷாகரன்**
**எஸ். தனிஷன்**
**28 ஆவது பிரிவு மருத்துவ மாணவர்கள்.**

5. ஒருமுறை போட மறந்தால் என்ன செய்வது-

6. எவ்வளவு காலத்துக்கு மருந்துகளை உள்ளெடுக்க வேண்டும்.

7. வேண்டத்தகாத பக்க விளைவுகளை அறிந்து கொள்வது எவ்வாறு?

மருந்தில் ஏற்படுத்தும் பாதிப்பு. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனை வளத்தின் அபிவிருத்திக்கு வழி பிறக்குமா...? ⑥

பனை உற்பத்திப் பொருள்களை வெளிநாட்டுச் சந்தைகளில் விடுவதற்கான வாய்ப்புக்கள் அதிகமாகவே உள்ளன. இந்த வாய்ப்புக்கள் உலகச் சந்தையில் போட்டியை உருவாக்கவே செய்யும். ஆனாலும் எமது பண்டங்கள், எமது பிரதேசத்துப் பொருள்கள் என எமது புலம் பெயர்ந்த உறவுகளின் கவனத்தை ஈர்க்கும்போது மட்டுமே இது சாத்தியமாகும். ஆனாலும் காலம் போகிற போக்கில் அநேகமான புலம்பெயர்ந்த உறவுகளின் சந்ததிகளுக்கு எமது பிரதேசத்துத் தொடர்புகள் அறுந்துபோகும் வாய்ப்புக்களுண்டு என்பதையும் நாம் கவனிக்கத் தவறக் கூடாது. இப்படியாகும்போது எமது பாட்டன், பாட்டியின் பூர்வீகத்தையே மறந்து எங்களூர் சுதேசியப் பொருள்களிலுள்ள ஈடுபாடும் வெகுவாகக் குறைந்துவிடும். மாறாக எமது பிரதேசத்தின் மகிமை பற்றியும் எங்கள் உறவுகள் பற்றியும் சொல்லித் தமது பிள்ளைகளை வளர்க்கும் மக்களும் இருக்கவே செய்கிறார்கள். இவர்களுக்கிடையிலான உறவுப் பாலம் உரமாகும் வண்ணம் நாமனைவரும் இன்னும் சிந்தித்துச் செயலாற்ற வேண்டியிருக்கிறது.

### கலைப்பொருள்களில் புதுமைகளை உள்வாங்குதல்

கற்பகதருவிலிருந்து பெறக்கூடிய தாவரப் பாகங்களிலிருந்து கலைநயம் மிக்க பொருள்களை உருவாக்குதலில் பயிற்சிகளை வழங்குதல், இன்னும் இப்பொருள்களிலிருந்து விதம் விதமான பொருள்களை உருவாக்க வழி செய்யும். இதில் கணினித் தொழில்நுட்பம் முறையில் பொருள்களை வடிவமைத்தல் சித்திரமும் வடிவமைப்பும் கற்கை நெறியினையும் உள்வாங்கலாம். அழகுப் பொருள்கள், ஓவியங்கள் இன்னும் விதம் விதமான பரிசுப் பொருள்கள்,ஞாபக சின்னங்கள் எனப் பலவிதமான பொருள்களை உருவாக்க இதனை சிறந்த குடிசைக் கைத்தொழிலாக மாற்றியமைக்கலாம்.

போரினால் கணவனையிழந்து நிர்க்கதியாகியிருக்கும் விதவைகளின் குடும்பங்கள், பெண்களை தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்கள் இவற்றுடன் அவயவங்களை இழந்து வாழ்க்கையே கேள்விக்குறியாகியிருக்கும் எங்களின் உறவுகளுக்கு அவர்களின் மனவுளைச்சலைப் போக்கிடவும், சுயவருமான மீட்டும் தொழிலாகவும் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். எமது பிரதேசத்தினது அபிவிருத்தியில் வெளியாரும் பெரும் நிறுவனங்களும் எமது வளங்களை உறிஞ்சி இலாபம் பெறும் வாய்ப்புக்களைத் தவிர்த்து இங்குள்ள வளங்களைத் தெரிவுசெய்து பேணிப்பாதுகாக்கும் அதேவேளையில் இங்குள்ள வளங்கள் நொந்து போன இங்குள்ள மக்களுக்கு வேலைவாய்ப்பையும் வருமானத்தையும் ஈட்டித்தருவதுடன் சொத்துக்களையும் சொந்தங்களையும் இழந்து வழிதேடிக் கொண்டிருக்கும் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதாகவும் இருக்கவேண்டுமென்பதே அனைவரதும் எதிர்பார்ப்பாகும். இந்தவகையிலே இப்போது நடைபெற்றுவரும் அபிவிருத்தியின் பாதையை வடிவமைக்கும் கருத்தரங்குகளில் இது சார்ந்த புலமையாளர்களினதும் மக்களினதும் விருப்புக்களும் செவிமடுக்கப்பட்டு அனைவரும் ஏற்றுக்கொள்ளும் திட்டங்களாகத் தீட்டப்பட்டுச் செயற்படுத்தப்பட வேண்டும். இது காலத்தின் கட்டாயமுங்கூட.

### கற்பகதருவினை வளம்படுத்தும் கைத்தொழில்

வடபகுதியின் வளங்களைச் சிறந்த முறையில் பயன்படுத்தும் அதேவேளையில் இவ்வளங்களை அடிப்படையாகக் கொண்ட விவசாயக் கைத்தொழில் முயற்சிகள் மேன்மேலும் ஊக்குவிக்கப்பட வேண்டும். இவ்வாறான கைத்தொழிலின் பெருக்கம் வேலை வாய்ப்புக்களை விரைந்துருவாக்குவதுடன் இத்தொழில் முயற்சிகளில் ஈடுபடும் இளைஞர் சமூகத்துக்குத் தேவையான தன்னம்பிக்கையும் கொடுக்கும். இளையோரின் பலத்தையும் தொழிலில் ஈடுபடும் திறனையும் விருத்திசெய்யும் கைத்தொழில் விருத்திக்கு அத்திவாரமிடவேண்டிய நேரமிது. இனியும் வேலை வாய்ப்புத் தேடி எங்களுறவுகள் புலம் பெயர்ந்து செல்வதைத் தடுத்து நிறுத்தும் ஆக்கபூர்வமான செயற்பாடுகளில் அவர்களுக்கான வேலைவாய்ப்பும், தனிநபர் வருமான அதிகரிப்பும் முக்கியமானவை. பல்துறை சார் விற்பன்னர்களின் ஆளுமைக்குள் கைத்தொழில் விருத்தி சாத்தியமானதே.



### பனைவளஞ் சார் கற்கை நெறியின் அவசியம்

பனை வளத்தைப் பற்றிய மேலதிக அறிவுக்கு இது சார்ந்த கற்கை நெறிகளின் அவசியத்தைப் புலமையாளர்கள் பரிந்துரைத்துள்ளனர். ஆங்காங்கே உதிரிகளாகப் பாடஅலகுகளுள் சேர்க்கப்பட்டிருப்பினும் இதனது வளத்தினை முழுமையாக விருத்தி செய்வதற்கான கற்கைகள் என எதையுமே குறிப்பிட்டுக் கூறுவதற்கில்லை. பனை தொடர்பான சான்றிதழ்க் கற்கை நெறி யாழ்.பல்கலைக்கழக விவசாயப்பீடத்தில் ஒரு தடவை வழங்கப்பட்டது. இது தவிர ஊவா வெலஸ்ஸ பல்கலைக்கழகத்தில் ''பனையினத்தாவரம் மற்றும் இறப்பர் பால் தொழில்நுட்பமும் பெறுமதி சேர்ப்பும்'' எனும் பட்டப்பயில் நெறி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதேபோன்று பனை வளத்தை முழுமையாகக் கொண்ட வட பகுதிக்கான பல்கலைக்கழகமாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இருப்பதனால் பனை, தென்னை,கமுகு இவற்றுடன் அழகுக்காக வளர்க்கப்படும் பனையினத் தாவரங்களை உள்ளடக்கியதான டிப்ளோமா பட்டப் பயில் கற்கை நெறி ஆரம்பிக்க வேண்டியதன் தேவையினைப் புலமையாளர்கள் முன்மொழிந்துள்ளார்கள்.



பேராசிரியர் கு.மிகுந்தன்,
தலைவர், விவசாய உயிரியல் துறை,விவசாயபீடம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

# இருவாட்சிப் பூவும் இலையும் மருத்துவத் தேவைக்குப் பயன்படுபவை

## இருவாட்சி

**வேறுபெயர்: இருள்வாசி,நள்ளிருள்,நாறி,மயிலை, நவ மல்லிகை.**
**தாவரவியற் பெயர்**- Jasminum sambac
**ஜஸ்மினம் சம்பக்**
**குடும்பம்** - (Oleaceae) **ஒலியேசியே**
**ஆங்கிலப் பெயர்**- Arabian Jasmin


இருவாட்சி பெருமளவில் முல்லைக் கொடியை ஒத்த அமைப்புடையது.

இதன் இலை, பூ, வேர் என்பன மருத்துவத்தில் பயன்படுகின்றன.

மல்லிகையைப் போலவே இதன் இலை, பூ, வேர் என்பன பால் சுரப்பதைக் கட்டுப்படுத்தக் கூடியன. இவற்றை அரைத்து மார்பகத்தின் மீது வைத்துக் கட்டி வர தாய்ப்பால் சுரப்பது நிற்கும்.

இதன் பூவிலிருந்து எடுக்கப்படும் எண்ணெயை சீழ், நாற்றமுள்ள புண்களுக்குப் பூசலாம்.

இதன் பூவைக் குடிநீர் செய்து இரத்த வாந்திக்குக் கொடுத்து வர மாறும். இதன் இலையை நல்லெண்ணையிட்டுக் காய்ச்சி தலைக்கு வைத்து வர கண் சம்பந்தமான நோய்கள், தலைவலி என்பன மாறும். கண்பார்வையும் தெளிவாகும்.



## நிலவேம்பு

**வேறுபெயர்: சிரட்குச்சி, காண்டகம்**
**தாவரவியற் பெயர்**- Andrographis Paniculata
**அன்டரே கிராபிஸ் பனி குலேற்றா**
**குடும்பம்** - Acanthaceae **அக்காந்தேசியே**
**சிங்களப் பெயர்: காலமேக, பிங்கோம்ப**
**சமஸ்கிருதப் பெயர்: பூநிம்ப, கிராத்த**
**ஆங்கிலப் பெயர்**- Creat



இது சிறு செடி வகுப்புக்குரியது. தண்டு உருண்டு வழவழப்பாகவும், பழுப்பு நிறமாகவும் கிளைகளுள்ளதாகவும் இருக்கும். தனி இலைகள் எதிரான இலை ஒழுங்கு. கக்கத்தில் இருந்து பூக்கள் உண்டாகும். பூக்கள் இளம் சிவப்பு நிறம் அல்லது வெள்ளை நிறத்தில் ஊதா வரிகளையுடையதாக பூக்கள் இளம்

**நலம்தரும் தெய்வீக மூலிகைகள்**

இருக்கும். இலை, தண்டு என்பன மருத்துவத்தில் பயன்படுகின்றன.

இலைச்சாற்றை குழந்தைகளுக்குண்டாகும் வயிற்றுப்பொருமல், கழிச்சலுக்குக் கொடுக்கமாறும். நில வேம்பு, கொத்தமல்லி, [illegible] வற்றைச் சேர்த்து குடிநீர் செய்து நீர்க்கோவை, சுரம், சீழ்பிடிப்பு என்பவற்றுக்குக் கொடுத்துவர அவை மாறும்.

## சீதேவியார் செங்கழுநீர்

**வேறுபெயர்: சகதேவி,மால்தேவி, நெய்ச்சட்டிக் கீரை**
**தாவரவியற் பெயர்**- Vernonia cinerea
**வேர்னோனியா சினேரியா**
**குடும்பம்** - Compositae **கொம்பொசிற்றே**
**சிங்களப்பெயர்: மொணராக் குடும்பிய**
**சமஸ்கிருதப் பெயர்: சகதேவி**
**ஆங்கிலப் பெயர்**- Fleabane

ஸ்ரீதேவியான இலக்குமியின் பெயரிலமைந்த அம்மூலிகை பூண்டு வகுப்புக்குரியதாகும். தனி இலைகள். இலை, தண்டு என்பன பச்சை நிறமாக இருக்கும். பூக்கள் ஊதாநிறம். முழுப் பூண்டுமே மருத்துவத்தில் பயன்படுகிறது. இப்பூண்டை நீரில் ஊறப்போட்டு அந்நீரைப் பருகிவரின் நாவரட்சி நீங்கும். உடலுக்குக் குளிர்ச்சியும் ஏற்படும்.



(வளரும்...)



Dr. சே.சிவசண்முகராஜா M.D (S),
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் ஒருமுறை நிரூபிக்கப்பட்ட அடக்குமுறை

**ஓர்** இனம் எதிர்நோக்கும் இன்னல்களைக் கண்டு மற்றைய இனம் மகிழ்ச்சி கொள்ளும் அளவுக்கு இலங்கையின் இனப்பிரச்சினை இன்றும் காணப்படுகின்றது. எல்லா மக்களுக்கும் சமஉரிமை எனப் பிரகடனப்படுத்திய அரசு அதனை நிஜ உலகில் மறுத்திருக்கின்றது. மொத்தத்தில் ஒரு இறந்த உடலுக்கு மானுடன் ஒருவன் செலுத்தவேண்டிய இறுதி வணக்கத்துக்குக்கூட இடையூறாக இருந்து தமிழ் மக்களின் அடிப்படை உரிமையை மீறியிருக்கின்றது இலங்கையின் அரசும் அதன் படைகளும்.

கடந்த 19 ஆம் திகதி இறைபதம் எய்திய விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் அவர்களின் தாயார் வேலுப்பிள்ளை பார்வதியம்மாளின் இறுதி வணக்க நிகழ்வுகள் வல்வெட்டித்துறையில் இடம்பெற்றன.

இந்தத் தாயின் இறுதி வணக்க நிகழ்வுக்குக் கடல் கடந்த நாடுகளில் இருந்தும், தூர இடங்களில் இருந்தும் பங்கு கொள்ளமுடியாத துர்ப்பாக்கிய நிலையில் பல்லாயிரக்கணக்கான தமிழ் உறவுகள் துடிதுடித்துப் போனார்கள்.

இந்த நிலையில்தான் இனத்துவேசம் நிறைந்த இலங்கை அரசால் ஒரு குடிமகனின் அல்லது ஒரு சமூகத்தினது அடிப்படை உரிமை மறுக்கப்பட்டிருக்கின்றது.

பார்வதி அம்மாளின் இறுதி வணக்க நிகழ்வில் கலந்துகொள்வதற்காக யாழ். பல்கலைக்கழகச் சமூகத்தினர் அங்கு செல்ல வாடகைக்கு அமர்த்தப்பட்ட பஸ்ஸில் தயாராகிய வேளை பல்கலைக்கழக வளாகத்துக்குள் அத்துமீறி நுழைந்த யாழ். நகரப் பொலிஸார் பஸ் சாரதியை கடுமையாக எச்சரித்து வெளியேற்றியுள்ளனர். மாணவர்களையும் கடும் தொனியில் எச்சரித்து அவர்களை இறுதிநிகழ்வில் கலந்துகொள்ளவிடாமல் தடுத்துள்ளனர்.

பல்கலைக்கழகச் சமூகத்தவரை அச்சுறுத்தும் வகையில் கவசவாகனங்கள், மோட்டார் சைக்கிள் சகிதம் இராணுவத்தினரின் துணையுடன் திட்டமிட்டு இராணுவப் புலனாய்வாளர்களின் பின்னணியில் பொலிஸாரால் இந்தக் காரியம் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது.

பொலிஸார் பல்கலைக்கழக மாணவர்களுடன் அன்றையதினம் நடந்துகொண்ட விதம் - அவர்களின் அச்சுறுத்தல் பாணி என்பன தமிழ் மக்களுக்கு எதிர்காலத்தில் ஏற்படப்போகும் நிலையைப் புரியவைத்திருக்கின்றது.

பார்வதியம்மாள் யார் உங்களுக்கு? யார் நீங்கள்? யாராவது அவரின் உறவினர்களா? நீங்கள் எதற்காக அங்கு செல்லவேண்டும்? நாங்கள் நாட்டில் பயங்கரவாதத்தை ஒழித்திருக்கிறோம். இங்கு நீங்கள் பயங்கரவாதத்தைக் கட்டியெழுப்ப முடியாது. அதற்கு நாங்கள் இடமளிக்கப் போவதில்லை. இவற்றையும் மீறி நீங்கள் மரணச் சடங்கில் கலந்து கொள்வீர்களானால் உங்களுக்கு நெருக்கடிகளை ஏற்படுத்துவோம் எனக் கடும் தொனியில் மாணவர்களைப் பொலிஸார் மிரட்டியுள்ளனர்.



> **யாழ். குடாநாட்டில் போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட நிலையில் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் பொலிஸாரால் அச்சுறுத்தப்பட்டுள்ளனர். பார்வதி அம்மாளின் இறுதிக் கிரியைகளில் அவர்கள் கலந்துகொள்ளச் செல்வதற்கு ஆயத்தமான போதே இவ்வாறான சம்பவம் இடம்பெற்றுள்ளது. இது ஒட்டுமொத்த தமிழ் இனத்துக்கே விடுக்கப்பட்டுள்ள ஒரு சவாலாகவே கொள்ளப்படுகின்றது.**

பார்வதியம்மா நோய்வாய்ப்பட்டிருந்த வேளை அவர் இந்தியாவுக்குச் சிகிச்சைக்காக அழைத்துச் செல்லப்பட்டபோது சென்னை விமான நிலையத்தில் வைத்து திருப்பி அனுப்பியதன்மூலம் இந்தியா தனது இரண்டாவது கோரமுகத்தைத் தமிழ் மக்களுக்குக் காட்டியிருந்தது.

இந்தச் சந்தர்ப்பத்தில் இலங்கை அரசு, பார்வதியம்மாளுக்கு இலங்கையில் எப்பாகத்திலும் எந்த வைத்தியசாலையிலும் சிகிச்சை அளிக்க அனுமதி கொடுத்திருந்தது.

இது வெளியுலகுக்கும், தமிழ் மக்களுக்கும் ஒரு மாய வெளிப்பாடாக இருந்துள்ளது. பார்வதியம்மாள் அன்றிலிருந்து இறக்கும் நாள்வரை தனது சொந்த இடத்தில் சிகிச்சை பெற்று வந்தார். பார்வதி அம்மாளின் மரணச் சடங்கில் தமிழ் மக்கள் உணர்வுடன் பங்கு பற்றுவார்கள் என்பது அனைவருக்கும் தெரிந்த விடயம்.

இதற்கும் மேலாகத் தமது உறவினரோ, அயலவரோ, ஊர்க்காரரோ, பழக்கமானவரோ இறந்துவிட்டால் அந்த நிகழ்வில் பங்குபற்றுவது மட்டுமன்றி தங்களாலான பங்களிப்பை வழங்குவது தமிழ் மக்களது மரபு.

இங்கு தீண்டத்தகாதவர், வேண்டாதவர், எதிரி, ஏழை என்ற பாகுபாட்டை மறந்து செயற்படுவது தமிழ்மக்களின் சமூகக் கடமையாகக் காலாகாலமாக இருந்து வருகின்றது.

இந்தக் கடமையை நிறைவேற்றுவதற்காக மலர்வளையம், மலர் மாலைகள் என்பவற்றுடன் பல்கலைக் கழக மாணவர்கள் புறப்படத் தயாரான வேளை மிலேச்சத்தனமாகப் பொலிஸார் உள்நுழைந்து மாணவர்களைத் தடுத்து எச்சரித்தது என்பது அடிப்படை மனித உரிமை மீறலாகவே பார்க்கப்படுகின்றது.

அண்மையில் கொண்டாடப்பட்ட சுதந்திர தின நிகழ்வு, இந்தியாவில் இருந்து எடுத்துவரப்பட்ட வெள்ளரசுக் கிளையின் ஊர்வலம் என்பவற்றில் எமது தமிழ் மக்கள் வலுக்கட்டாயமாக ஈடுபடுத்தப்பட்டனர்.

பாடசாலை மாணவர்கள் வெள்ளரசு மரக்கிளை ஊர்வலத்தின்போது வீதியின் இருமருங்கும் நிறுத்தப்பட்டு மலர்தூவி வரவேற்பளிக்க நிர்ப்பந்திக்கப்பட்டனர்.

இதன்போது எந்த எதிர்ப்பும் யாராலும் காட்டப்படவில்லை. ஆக பௌத்த மதம், சிங்களதேசியம் போன்றவற்றுக்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்று வற்புறுத்தி பேரின வாதத்தை திணிக்கும் அரசு, தமிழ் மக்களது பாரம்பரியங்களையும் கடமைகளையும் உணர்வுகளையும் கட்டுப்படுத்தி அடக்கியாள முற்படுகின்றது என்பதே தெளிவாகின்றது.

உண்மையில் மாணவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்துவதற்கோ, வன்முறையில் ஈடுபடுவதற்கோ வேறு களியாட்ட நிகழ்வுக்கோ செல்லவில்லை. அமைதியாக மரணச்சடங்கில் பங்குகொள்வதற்காகவே பல்கலைக்கழக மாணவர்கள் ஆயத்தமானார்கள்.

மாணவர்களின் உணர்வுபூர்வமான இந்தக்கடமையைத் தடுத்து நிறுத்தியதன் மூலம் இலங்கை அரசு பகிரங்கமாகவே தமிழ்மக்கள் மீது இப்போதும் கொண்டிருக்கும் போக்கு தெட்டத் தெளிவாகிறது.

அடக்குமுறைகளில் இருந்துதான் போராட்டங்கள் உருவாகின்றன. தமிழ் மக்களின் உரிமைப்போராட்டமும் இவ்வாறுதான் தோற்றம் பெற்றது என்பதை இன்றும் அடக்கு முறையாளர்கள் உணரத் தயாராக இல்லை.

ஒரு மரணச்சடங்கில் கலந்து கொள்ளவிடாது மாணவர்கள் பொலிஸாரால் தடுக்கப்பட்ட சம்பவம் வெறுமனே பார்க்கப்படவேண்டிய விடயம் அல்ல. அது ஓர் இனத்தின் மீதான அடக்குமுறை என்றுதான் நோக்கவேண்டியுள்ளது.

யாழ். பல்கலைக் கழகம் தமிழ் மக்களின் கல்விக்கூடம். அங்கு வடக்கு, கிழக்கைச் சேர்ந்த தமிழ் மாணவர்களின் பிரதிநிதித்துவம் மிகவும் முக்கியமானது.

இலங்கை அரசு காலாகாலமாகத் தமிழ் மாணவர்களின் உரிமையைப் பறித்து அடக்கி ஆள்வதில் முனைப்புடன் செயற்பட்டு வருகின்றது.

காரணம் கல்வியியலாளர்களால் தான் தமிழினம் உயிர்பெறுகின்றது. இதனால் தான் அவர்கள் தமது உரிமைகளுக்காகப் போராட முற்படுகின்றனர்.

எனவே இவர்களின் உரிமைகளையும் உணர்வுகளையும் கட்டுப்படுத்த வேண்டிய அழிக்கவேண்டிய, களையப்பட வேண்டிய இடங்கள் கல்விக்கூடங்கள்தான் என்பதில் இலங்கை அரசு தெளிவாகச் செயற்பட்டு வருகின்றது.

கடந்த ஆண்டுகளில் பல் கலைக் கழகத்தில் நடந்த துன்பியல் சம்பவங்களும் இதன் பொருட்டே மேற்கொள்ளப்பட்டன.

பல்வேறு துன்பியல் நிகழ்வுகளுக்கு மத்தியில் அமைதியாக இருந்த ஒரு சமூகத்தை இந்தச் சம்பவத்தின் மூலம் அரசு தூண்டிவிட்டிருக்கின்றது மட்டுமல்லாது அவர்களைப் பலிக்கடாக்களாக்க வெளியில் காத்திருக்கின்றது.

எது எவ்வாறானாலும் மாணவர்களைப் பொறுத்தவரை அமைதியான முறையில் ஓர் இறந்தவரின் உடலுக்கு வணக்கம் செலுத்துவதே முழு நோக்கமாக இருந்தது.

அவர்கள் வெளியில் சென்று நேரடியாக இறுதிக்கிரியைகளில் கலந்துகொள்ள உரிமை மறுக்கப்பட்டதன் காரணமாக அவர்கள் பல்கலைக்கழக வளாகத்துக்குள்ளேயே பிரத்தியேகமான இடம் ஒன்றில் அஞ்சலி நிகழ்வொன்றை ஏற்பாடு செய்து நிகழ்த்துவதற்குப் பொலிஸாரும் இராணுவத்தினரும் வழிசெய்தனர்.

மாணவர்கள் தாம் செய்ய வேண்டிய கடமையை செய்து முடித்தார்கள்.

வன்முறைப்போக்கில், அடக்குமுறையால் உரிமையை மறுத்ததன் மூலம் இலங்கை அரசு பெற்றுக்கொண்ட பாடந்தான் என்னவோ.....?

**எம்.எஸ்.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சித்திரக் கலைஞர் விவரம் திரட்டல்

யாழ்ப்பாணம், பெப்.27

இலங்கையில் இரண்டாவதாக நிறுவப்பட்ட கனகரத்தினம் மகா வித்தியாலய கலைக் கூடத்தில் மூத்த கலைஞர்களின் சித்திர ஆக்கங்களைச் சேகரித்து நிரந்தரமாகக் காட்சிப்படுத்த வலயக் கல்வி அலுவலகத்தின் கல்வி அபிவிருத்திப் பிரிவு திட்டமிட்டுள்ளது.

ஆக்கங்களை அனுப்ப விரும்புவோர் அல்லது சேகரித்து வைத்திருப்போர் கலைஞர் பற்றிய விவரத்துடன் எதிர்வரும் மார்ச் மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் யாழ்.வலயக்கல்வி அலுவலகத்துக்கு அனுப்பிவைக்குமாறு பிரதிக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

(ம-ற)


## Micro Construction (Pte) Ltd.
## a subsidiary of Micro cars Ltd

கீழ்க் குறிப்பிட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு வெற்றிடம் உள்ளது. உரிய தகுதி உடையவர்கள் தங்களுடைய விண்ணப்பம் மற்றும் உரியசான்றிதழ்களுடன் இன்று (27.02.2011) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிமுதல் நேர்முகத்தேர்வுக்கு கீழ் குறிப்பிட்டுள்ள முகவரிக்கு சமுகமளிக்கவும்.

**1. QualityAssurance Engineer**
(தரக்கட்டுப்பாட்டு பொறியியலாளர்)
தகைமை :- B.Sc (Eng) or N.D.T (Civil)
அனுபவம் :- கட்டட பொறியியலில் தரக் கட்டுப்பாட்டு முன் அனுபவம் (Quality Assurance)
மேலதிக தகைமை :- கணினி அனுபவம் (MS Project for Planning, Cost Control)

**02. Quantity Surveyor**
தகைமை :- B.Sc (Quantity Surveyor) or NDT
அனுபவம் :- குறைந்தது 05 வருட முன் அனுபவம்

**03. Technical officer (Building)**
தொழில்நுட்ப உத்தியோகத்தர் (கட்டடம்)
தகைமை :- N.D.T. (Civil)
அனுபவம் :- குறைந்தது 7வருட முன் அனுபவம் கட்டடத் துறை சார்ந்த தொழிலில் (RCC Building Construction and finish work)

**Northern Central Hospital (Pvt) Ltd**
No. 342, Palaly Road,
Thirunelvely, Jaffna.
(48,22,23)


## பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம்

யாழ்ப்பாணம்,பெப்.27

நல்லூர் கல்விக் கோட்டத்தில் உள்ள அனைத்து பாடசாலை அதிபர்களுக்குமான கூட்டம் எதிர்வரும் மார்ச் 4ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியின் விசாலாட்சி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் நல்லூர்க் கோட்ட அனைத்துப் பாடசாலை அதிபர்களையும் கலந்து கொள்ளுமாறு நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி. மாணிக்கராஜா தெரிவித்துள்ளார்.

(ம-311)

# மரண அறிவித்தல்

## சண்முகம் யோகநாதன்



சுன்னாகம் தெற்கைப்பிறப்பிடமாகவும் வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் யோகநாதன் (Tyre Corporation) 24.02.2011 வியாழக்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகம் (இளைப்பாறிய தபாலதிபர்) - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் (நிலஅளவை அத்தியட்சகர்) - பொன்னம்மா தம்பதியரின் மருமகனும், செம்மனச்செல்வியின் அன்புக் கணவரும் இரவீந்திரன் (லண்டன்), உஷா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், விமலன் வேலாயுதம்பிள்ளையின் அன்பு மாமனும் தாரணி, சேனன் ஆகியோரின் பேரனும் பேரின்பநாதன் (லண்டன்), சிவகுருநாதன் (சுன்னாகம் தெற்கு) ஆகியோரின் சகோதரரும் சிவலிங்கம், கணேசலிங்கம், நேசமணி, சந்திரமதி, கனகம், யோகாம்பிகை, புஸ்பமல்லிகா, மகேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் செல்வபாஸ்கரன் (ஓய்வுபெற்ற பொது சுகாதாரப் பரிசோதகர், (லண்டன்), கமலநாதன் (ஓய்வுபெற்ற அதிபர் கொக்குவில் இந்துக் கல்லூரி) ஆகியோரின் சகலனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் இன்று (27.02.2011) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிமுதல் மாலை 5.00 மணிவரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (28.02.2011) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு இறுதிக் கிரியைகள் நடைபெற்று பிற்பகல் 2.00 மணிக்கு கல்கிசை பொது மயானத்துக்கு தகனக்கிரிகைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்.

**10,7/3,37ஆவது ஒழுங்கை,**
**வெள்ளவத்தை.**

(19,24) (576222241)


### காணி விற்பனைக்கு

நாவற்குழியில் A-9 வீதியில் இருந்து 200 மீற்றர் தூரத்தில் சேதமடைந்த வீட்டின் அத்திபாரம், கிணறுடன் கூடிய நிலம் நெப. 38 குளி 11.85 விற்பனைக்குண்டு. கனரக வாகனம் போகக்கூடிய பாதை உண்டு.
தொடர்பு: 0776021799, 0212227046

### Bride wanted

Well qualified SriLankan Tamil/ Hindu/ Christian Bride and Groom and in canada, USA, UK, Europe Look for Partners.
E - mail with Full particulars and recently taken photograph
uravugal 1000@ gmail.com
Con - 0779715313

### காணி விற்பனைக்குண்டு

கச்சேரி நல்லூர் றோட்டில் (மாநகர சபை அருகில்) சுற்று மதில் நன்னீர் கிணற்றுடன் 2 பரப்புக் காணி உடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:021 2226944, 0772557605

### மணமகள் தேவை

ஐரோப்பிய நாட்டில் வசிக்கும் இந்து கௌரவ பெற்றோர் தமது மகனுக்கு (35) பொருத்தமான மணமகளைத் தேடுகின்றனர். பொருந்தாத நட்சத்திரங்கள் அச்சுவினி, மகம், மூலம், ஆயிலியம், கேட்டை, ரேவதி, அவிட்டம், பூரட்டாதி.
தொடர்பு:Ksanush@hotmail.com,0774153487

### காணி விற்பனைக்கு

சுன்னாகம் கே.கே.எஸ். வீதியில் வீடு கட்டக்கூடிய காணி விற்பனைக்கு உண்டு.
விவரங்களுக்கு 0718002907
(C/57238)

### மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம் USA இல் உயர் கல்வி கற்கும் அங்கு பதிவு செய்யப்பட்ட Male Nurse 29 வயது கனடா, ஆஸ்திரேலியா, UK, USA PR மணமகள் தேவை. 16 பாவம் செவ்வாய் இல்லை.
தொடர்பு: 0112 336918

### விற்பனைக்கு

**இரும்பினாலான கோழிக் கூடு**

இரும்புப் பட்டம் மற்றும், 2"x2" கம்பி வலைகளால் செய்யப்பட்ட 12 தடுப்பு அறைகளையுடைய Battery System 50 முட்டையிடும் கோழிகள் வளர்க்கக் கூடிய கோழிக்கூடு விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:- 0773561991

### வீடு, வளவு விற்பனைக்கு

சுண்டுக்குளி தெற்கு இல.75, மத்தியூஸ் வீதியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு, வளவு விற்பனைக்குண்டு. தொ.பே.இல: 021 2225943
0771028107

### சாரதி தேவை

TATA DIMO ரக வாகனம் செலுத்துவதற்கு 60 வயதுக்கு மேற்பட்ட சாரதி அனுமதிப் பத்திரம் உடைய சாரதி தேவை.
(815) தொடர்பு- கெவின் 0750430062

### வெளிவந்து விட்டது

சகல இசைக் கருவிகளிலும் சினிமாப்பாடல்களை வாசிக்க இசை மணி கீதப்பிரியனின் "கருவிகளில் கானங்கள் III" கிடைக்கும் இடங்கள்:
01.பூபாலசிங்கம் புத்தகசாலை - யாழ்ப்பாணம்
02. ஸ்ரீலங்கா புத்தகசாலை - யாழ்ப்பாணம்
03. துர்க்கா புத்தகசாலை - பஸ்நிலையம், சுன்னாகம்
04. நியூ வீணா கானம் இசைநிறுவனம் - கச்சேரி , யாழ்ப்பாணம்
தொடர்பு: 0773565059

### காணிவிற்பனைக்கு

சாவகச்சேரி A-9 வீதியில் இருந்து ஆரம்பப் பாடசாலைக்கு செல்லும் வீதி பிரியும் சந்திக்கு சமீபமாக வீடு, கிணறு, பயன்தரு மரங்களுடன் கூடிய காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0777291673

### ATS ELGI
Think Long Run

30 வருடங்களுக்கு மேலாக இலங்கையின் சந்தையில் முதல்வன்


Greasa Pump

வாகனங்கள் சுத்திகரிக்கும் நிலையங்களுக்கு உபயோகிக்கப்படும் இயந்திரங்கள்

Car Washer



நோத் அன்ட் ஈஸ்ற் இஞ்ஜினியறிங்,
யாழ் வீதி, மானிப்பாய்.

தொ.பே: 021 720 0290 Mobile: 0777568685

OPPORTUNITY

TOKYO SUPER | TOKYO SUPER MIX READY MIXED CONCRETE | NIPPON CEMENT

### READY MIXED CONCRETE PLANT - JAFFNA

Tokyo Cement Company (Lanka) PLC., a prestigious public quoted company with foreign collaboration and a reputation as one of Sri Lanka's premier cement manufacturers and importers need suitably qualified individuals for the following position.

### PLANT MANAGER

The ideal candidate for this position should be a graduate possessing a degree in B.Sc. Engineering (Civil), (Mechanical) or equivalent with a minimum of 5 years experience in the construction industry. Being in overall charge you would see to all engineering, production and marketing of the business. Previous exposure in a similar capacity would be an added advantage. Residents of Jaffna preferred.

Age below 50 years.

The chosen candidate would be entitled to an attractive salary, medical benefits along with other perquisites and a company maintained vehicle.

Applications with names and addresses of 2 non-related referees should be sent by post, fax or e-mail to reach the under mentioned within 7 days.

**Manager - HR & Administration,**
**TOKYO CEMENT CO. (LANKA) PLC.**
469 1/1, Galle Road, Colombo 03.
Fax: 2500897
E-mail: jeyaraj@tokyocement.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரன்முறைகளை தகர்த்தெறிய முற்படும் கலாசார விழாக்கள்

கலைத்துறையில் தொன்மையான பல வரலாறுகளைத் தன்னகத்தே கொண்டு சிறப்புப்பெற்று உலகின் திசைகள் அனைத்திலும் அனைவராலும் அறியப்பட்ட பிரதேசமாக விளங்கியது யாழ்ப்பாணம். இனியும் அந்தப் பெயர் நிலைக்குமா என்பது சந்தேகத்துக்கு இடமாகி வருகிறது.

அண்மைக்காலமாக இங்கு பல இடங்களிலும் கலாசார விழா என்னும் பெயரில் கோலாகலக் களியாட்ட நிகழ்வுகள் பல தொடர்ச்சியாக நடைபெற்று வருவதை அவதானிக்க முடிகின்றது. இதன் உச்சக்கட்டமாகவே இந்த மாதம் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் 22, 23ஆம் திகதிகளில் நடைபெற்ற 'புலர்ந்தது புது வசந்தம்' என்னும் நிகழ்வானது நிகழ்த்தப்பட்டது என்பதை உறுதியாகக் கூற முடியும்.

### தமிழர் கலாசாரத்தை அறிந்திராதவர்கள்

தமிழர் கலாசாரம் எது என்பதைத் துளியளவும் அறிந்திராதவர்களால் இந்த நிகழ்வானது ஒழுங்கு செய்யப்பட்டது என்பதை இரு நாள் நிகழ்வுகளும் நிரூபித்துநின்றன. முதல்நாள் நிகழ்வுகளில், தொடக்கம் வாத்திய இசையாகவும் கடைசி நிகழ்வு நாடகமாகவும் இருந்தன. இந்த இரண்டின் இடையேயும் பன்னிரண்டு விதமான நடன நிகழ்வுகள் மேடையேற்றப்பட்டன. பெரும் எடுப்பில் கொண்டாடப்பட்ட இந்த விழாவில் எமது செழுமையான, உண்மையான, மரபுவழியான, உயிர்ப்புள்ள எந்தவொரு கலைநிகழ்வும் இடம்பெறவில்லை என்பதும் மேடையேற்றப்பட்ட நிகழ்வுகள் கூட அரங்க ஆற்றுகை விதிமுறைகளையும் நெறிமுறைகளையும் துளியளவும் பின்பற்றவில்லை என்பதும் வேதனைக்குரிய விடயமே.

### தகர்த்தெறியப்பட்ட பாரம்பரிய ஆற்றுகை

இந்த விழாவில் நடன நிகழ்வுகளை வழங்கவந்த கலைஞர்கள் தமது பாரம்பரிய ஆற்றுகை முறைகளைத் தகர்த்து எறிந்தனர் என்று கூறலாம். இது அவர்கள் திட்டமிட்டுச் செய்ததா அல்லது தவறாக நிகழ்ந்ததா என்பது புரியவில்லை. திட்டமிட்டே செய்திருந்தால் அதன் பின்னால் அவர்களுக்கு ஒரு நோக்கம் இருந்திருக்கும் என்று எடுத்துக் கொள்ளலாம். தவறுதலாக எனில்......... முடிவை உங்களிடமே விட்டு விடுகின்றேன்.

உயிரின் ஓசை, செவ்வியல் நடனம், மலர்ந்தன மலர்கள், கைகோர்ப்போம், தேவலோகத்தில் , வசந்த உதானசிரிய போன்ற தலைப்புகளில் இடம்பெற்ற நடன நிகழ்வுகள் அனைத்தும் பக்கவாத்தியக் கலைஞர்கள் இல்லாமலேயே நிகழ்த்தப்பட்டன. ஒலிபெருக்கியில் செவிப்பறை கிழிய ஒலிக்கவிடப்பட்ட சினிமாப் பாணியில் அமைந்த பாடல்களுக்குச் சிறுவர், இளையவர் எனப் பலரும் மேடையதிரக் குத்தாட்டம் போட்டுக் களியாட்டம் புரிந்தனர். அத்துடன் நேரடியாக இடம்பெற்ற ஒரு பாடலுக்கு சல்லாரி என்னும் நடனத்தை ஆடியவர்களும் இவ்வாறே ஆடிமுடித்தனர்.

### சினிமாப்பாணியில் ஆடல் முறைகள்

இதைவிட நாட்டியத் துறையில் உயர் நிலையினராகக் கருதப்படும் கலைஞர்களால் அளிக்கை செய்யப்பட்ட நர்த்தனாஞ்சலி, விநாயகர்ஸ்துதி, வசந்த உற்சவம் போன்ற நடன நிகழ்வுகளும் அனுசரணைக் கலைஞர்கள் இல்லாமல் ஒலிப்பதிவின் துணையுடன் நிகழ்ந்து முடிந்தன. இந்த நடனங்களிலும் சினிமாப் பாணியிலான ஆடல் முறைகளையே காணமுடிந்தது.

நாட்டியத்திற்கென எம்முன்னோரால் எடுத்தியம்பப்பட்ட அரங்க முறைமைகளை அடியோடு மறந்து எமது கலைவளங்களைத் திட்டமிட்டு அழிக்க முற்படுகின்ற சிலரின் பொருத்தமில்லாத, முறையற்ற ஆலோசனைகளுக்கு இவர்கள் பலியாகி விட்டனரோ என்ற எண்ணம் நிகழ்ச்சி முழுவதையும் இருந்து பார்த்தபின்னர் தோன்றியது.

நாட்டிய நிகழ்வு என்பது நேரடியாகப் பாடப்படும் பாடலுக்கு அல்லது இசைக்கு நிகழ்த்தப்படும் போதே அதன் உயிர்ப்பைச் சபையோரால் கண்டுணர முடியும். இதுவே பாரம்பரியமாகவும் இருந்து வருகிறது. மரபுகளை மீறக்கூடாது, புதியன புனையக் கூடாது என்பதல்ல. அவ்வாறு செய்வதற்கான காரணங்கள் தெளிவாக இருக்கவேண்டும். பரீட்சார்த்த முயற்சிகளாயின் அதற்கான விளக்கங்களும் சரியானவையாக இருக்கவேண்டும். அதை விடுத்து யாரோ சிலரைத் திருப்திப்படுத்துவதற்காக எமது கலைகளையும் அவற்றின் மதிப்புகளையும் விட்டுக் கொடுக்கக்கூடாது.

### தேவைகளும் சூழலும் நிர்ப்பந்தித்திருக்கலாம்

கற்பனைவளம் மிக்க அபிநய பாவத்தைச் சபையோரின் நிலையறிந்து கூடுதலாகவோ குறைவாகவோ சமயோசிதமாக ஒரு நாட்டியக் கலைஞர் நிகழ்த்த வேண்டுமாயின் நடன அறிவுமிகுந்த பாடகரின் இசையாற்றுகை நிச்சயமாக மேடையில் தேவைப்படும். சுருங்கக் கூறின் ஒலிப்பதிவுகளுக்கு மேடையில் நிகழ்த்தப்படும் ஆடல்கள் தரமானவைகளாக இருப்பதற்கான வாய்ப்புக்கள் மிக மிகக் குறைவாகும் என்பதை மேற்படி நடன ஆசிரியர்கள், கலைஞர்கள் தெரிந்து வைக்காமல் இருப்பார்கள் என்று சொல்வதற்கு இல்லை. தேவைகளும் சூழலும் அவர்களை இதனைச் செய்ய நிர்ப்பந்தித்திருக்கக்கூடும். எதற்காக என்றாலும் எமது கலைகளையும் பண்பாட்டையும் விட்டுக்கொடுக்கப் போகிறோமா என்பதையே சிந்திக்க வேண்டியுள்ளது.

### டப்பாங்குத்துகள்

இவை எல்லாவற்றிற்கும் மேலாகச் செவ்வியல் நடனம் என்னும் பெயரில் இடம்பெற்ற நடனத்துக்கு வழங்கப்பட்ட ஒலிப்பதிவு செய்யப்பட்ட இசைப்பதிவின் தரம் கேள்விக்குரியது. இவ்வாறானவற்றைத் தரமான நடன ஆசிரியர்களும் சிரத்தையுடன் கற்கும் மாணவிகளும் ஏன் அனுமதிக்கிறார்கள் என்பது புரியவில்லை. இந்த நிகழ்வைத் தயாரித்தவர் 'செவ்வியல்' எனும் சொல்லின் பொருளை உணர மறந்துவிட்டார்.

இவற்றினிடையே 'வடக்கின் இசை' என்னும் பெயரில் இரு இளைஞர்களின் கறோக்கி இசையுடன் கூடிய டப்பாங்குத்துப் பாடல் இடம்பெற்றது. இந்தவகையிலான நடனம் எப்போது வடக்கின் இசையானது என்பதும் யார் இதற்கு வடக்கின் இசை என்ற பரிமாணத்தைக் கொடுத்தார்கள் என்பதும் தெரியவில்லை. நான் அறிந்த வகையில் எந்தவொரு அறிஞர் பெருமக்களும் யாழ்ப்பாணத்தின் முன்னணிக் கலைஞர்களும் இத்தகைய 'வடக்கின் இசையை' முழங்கியதாகத் தெரியவில்லை. முன்னாயத்தம் எதுவுமின்றி மேடைக்கு வந்த இளையோர் சிலர் வழங்கியதாகவே அதனைக் கொள்ள முடிந்தது.

### மனதுக்கு நிம்மதி தந்தவை

இவ்வாறு எமது கலைப் பண்பாடுகளின் வரன்முறைகளைப் புறந்தள்ளி நின்ற இவ்விழாவில் நிகழ்த்தப்பட்ட இரு நாட்டிய நிகழ்வுகள் மனதிற்கு நிம்மதியைத் தந்து நின்றன. எமது மண்வாசனையையும் கலைஞான ஆளுமையையும் சிறப்புற அவை வெளிப்படுத்தி நின்றதை நிச்சயம் பாராட்டித்தான் ஆகவேண்டும். மல்லாரி, புதியதோர் உலகம் செய்வோம் போன்ற நிகழ்வுகளை வழங்கியோரின் நடன ஆற்றுகைகளில் பரதநாட்டியத்தின் மரபுவழிப் பண்புகள் நிறைந்து காணப்பட்டதை யாரும் மறுக்கமுடியாது.

எனினும் மல்லாரியில் பங்குகொண்ட நர்த்தகர்கள் குடை, கொடி, ஆலவட்டம், சாமரை, திருவாசி போன்ற பொருள்களை உண்மையாகவே தமது கைகளில் ஏந்தியவாறு மேடையில் நின்றபோது இதை அபிநய பாவத்தினூடாக் காட்டியிருக்கக் கூடாதா என்ற கேள்வி எழுந்ததைத் தவிர்க்க முடியவில்லை.

ஏனெனில் நாதஸ்வரம், தவில் வாசிப்பு அபிநயத்தினூடாகவே காண்பிக்கப்பட்டன.

அதேபோல் புதியதோர் உலகம் செய்வோம் என்னும் நிகழ்வின் ஆற்றுகையாளர்களின் பக்கவாத்தியக் கலைஞர்கள் அமர்ந்திருந்த முறை சரியானதாக இருக்கவில்லை என்பதும் கீபோட், தபேலா போன்ற கருவிகளைப் பயன்படுத்தியமை தேவையற்றது என்பதும் எனது கருத்து.

முதல்நாள் நிகழ்வுகளாக இடம்பெற்றிருந்த நிகழ்வுகளே அடுத்த நாளும் அதே அரங்கில் நடைபெற்றன. இரண்டு நாள் கலாசாரப் பெருவிழா என்று அறிவிக்கப்பட்டபோதும் இரண்டாம் நாள் நிகழ்வில் புதியவை எவையும் இடம்பெற்றிருக்கவில்லை. பல இலட்சக் கணக்கில் பணத்தைக் கொட்டி நடத்தப்பட்ட இந்த நிகழ்வானது கலைஞர்களையோ கலைகளையோ மதிப்பதற்காகவோ, வளர்ப்பதற்காகவோ ஏற்பாடு செய்யப்படவில்லை என்பதை விழா ஒழுங்கு செய்யப்பட்ட முறையில் இருந்து கண்டுகொள்ள முடிந்தது. இது பெரும் கவலைக்குரியது. இதனை ஏற்பாடு செய்தவர்கள் பெரும்பான்மை இனத்தவர்கள் அல்லர் என்பதை நான் இங்கே கட்டாயம் குறிப்பிட்டாக வேண்டும்.

### ஒலி அமைப்பின் சீர்கேட்டு நிலை

இந்தக் கலாசாரத் திருவிழாவில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த ஒலியமைப்பானது அனைத்து நிகழ்வுகளின் தன்மையையும் சீர்கெடுத்தது என்ற குறை பார்வையாளர் என்றவகையில் முன்னே அமர்ந்திருந்த எனக்கு உறுத்தலாக இருந்தது. இரண்டு நாள்களும் இடம்பெற்ற வாத்திய பிருந்தா என்னும் நிகழ்வில் மிருதங்கம், கடம், தபேலா போன்ற கருவிகளின் ஒலிவாங்கிகள் இயங்கவில்லை. இதைவிட நடனங்களுக்காக ஒலிக்கவிடப்பட்ட பாடல்களில் ஒரு வரிகூட மண்டபத்தினுள் இருந்தவர்களுக்குப் புரியவில்லை. இவ்வாறான ஒலியமைப்புக்கு ஏற்றாற் போல் இடம்பெற்றிருந்த 'அசோகா' என்னும் வார்த்தைகள் அற்ற நாடகம் முதல்நாள் நிகழ்வுகளில் சிறப்பாக அமைந்திருந்தது. இரண்டாம் நாள் இந்த நாடகத்தைப் பார்ப்பதற்கென வந்தவர்கள் ஏமாற்றத்துடன் செல்ல வேண்டியிருந்ததன் காரணம் எவருக்கும் புரியவில்லை. ஆனால், நாடகம் போடப்படவில்லை.

இவ்வாறாக மெல்லிசைப் பாடல்களுக்கான நடனங்களை மட்டும் பெருமளவாக ஒழுங்குசெய்து அதற்குக் கலாசாரப் பெருவிழா என்று பெயரிட்டு இரண்டு நாள்கள் ஒரே இடத்தில் ஒரே நிகழ்வுகளை மேடையேற்றியதன் தேவை அல்லது காரணம் என்னவென்பதை இந்நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள்தான் சொல்ல வேண்டும்.

அரசியல் இலாபங்களுக்காகக் கலைஞர்கள் பயன்படுத்தப்படுகிறார்களோ என்றும் எண்ணத்தோன்றுகின்றது. நியாயம் கேட்பதற்கு எவருமில்லை என்றுதான் எம்மை நாமே நொந்துகொள்ள வேண்டும்.

ஏனென்றால் ஆளுநர், பாரம்பரியக் கைத்தொழில் அமைச்சர், அரச அதிபர், நகரத்தின் முதல் பெண்மணி போன்ற முக்கிய புள்ளிகள் அனைவரும் முதல் நாள் இடம்பெற்ற இந்தக் களியாட்ட நிகழ்வுகளைத் தொடக்கம் முதல் முடிவு வரை இருந்த இடத்திலிருந்து விலகாமல், கண்வெட்டாமல் கண்டு களித்தனர். பண்பாடு பற்றியும் கலாசாரம் பற்றியும் இவர்களே அதிகம் வெளிப்படையாகப் பேசுகிறார்கள் என்பதும் கண்கூடு.

### பண்பாடு, கலாசாரம் பேணப்படவேண்டும்

வேலியே பயிரை மேய்ந்தால் விவசாயி என்ன செய்வான்?. நாம் எல்லா வகையாலும் நசுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றோம். எல்லாவற்றையும் இழந்து நிற்கும் இவ்வேளையில் எமது கல்வி, கலை, பண்பாடு போன்றவற்றையேனும் நாம் பாதுகாக்க முன்வரவேண்டும்.

மேலிடங்களுக்கு வால் பிடிப்பதற்காகச் சிலர் ஒழுங்குசெய்கின்ற இவ்வாறான விழாக்களை எமது உண்மையான கலைஞர்கள் இனங்கண்டு விலகிக்கொள்ளப் பழகவேண்டும்.

இந்த மண்ணின் கலைஞர்கள் கலைஞானச் செருக்கோடும் தன்னம்பிக்கையோடும் தன்மானத்தோடும் தமிழகத்தையே திரும்பிப் பார்க்க வைத்த பெருமைக்குரியவர்கள். நீங்கள் அவர்களின் வழித் தோன்றல்கள். அபரிமிதமான திறமைகள் உங்களிடம் நிறைந்து கிடக்கின்றன. இதுவரை அவற்றை வெளிப்படுத்த வாய்ப்புகளும் மேடைகளும் கிடைக்கவில்லை என்பது உண்மைதான். அதற்காகக் கிடைக்கும் மேடைகள் அனைத்தையும் பயன்படுத்த வேண்டும் என்று எண்ணத் தலைப்படுவதா? சிந்தியுங்கள்.

கலைஞானச் செருக்கோடு நீங்கள் வழங்கும் நிகழ்வுகளுக்கு இவர்களை அழைத்து இருத்தி முறையான கலை என்ன என்பதை அவர்களுக்குச் சொல்லிக் கொடுங்கள். எமது சாஸ்திரீய முறைகள் பாதுகாக்கப்படவேண்டும். அவர் வருகிறார் இவர் வருகிறார் என்று கூறி ஆசைகாட்டி மோசம் செய்யும் ஆசாமிகளுக்கு ஆண்டவர் வந்தாலும் எமது மரபுகளை மீறும் வகையிலான நடனங்களை வழங்க மாட்டோம் என்று அடித்துக் கூறும் துணிவுள்ளவர்களாக எமது கலைஞர்கள் இருக்கவேண்டும். இருந்திருக்கிறார்கள். இனியும் இருப்பார்கள். நம்பிக்கை இருக்கிறது.

30 வருட காலப் போர் அழுத்தி வைத்திருந்தவற்றை எல்லாம் மீண்டும் கட்டி எழுப்ப எத்தனிக்கும் இன்றைய நிலையில் அவற்றின் போக்கு முழுமையான தறிகெடலாக இருக்கக்கூடாது என்பதற்காகவே இவற்றை இங்கே எழுதினேன். இது எந்த ஒரு கலைஞனையும் புண்படுத்துவதற்கானது அல்ல. நேர்மைத் திறத்துடன் விமர்சனங்களை எதிர்கொள்ளுங்கள். நெஞ்சுரத்துடன் உங்கள் கலைகளைப் படையுங்கள். வரலாறு உங்கள் புகழ்சொல்லும். *

இராச கிறுக்கன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Distributor Wanted !

Reputed distributors required for distribution of pharmaceuticals in Northern and Eastern parts of the country.

Potential distributors must be able to provide Bank guarantees.



**NEOMED INTERNATIONAL**
E-mail: neoint@sltnet.lk
P. O. Box 1896, Colombo

## மரண அறிவித்தல்

### வைரமுத்து தங்கராசா (சோமு)



சிறுவிளானைப் பிறப்பிடமாகவும் 6ஆம் ஒழுங்கை, வேப்பங்குளம், வவுனியாவை வதிவிடமாகவும் கொண்ட வைரமுத்து தங்கராசா (சோமு) 25.02.2011 வெள்ளிக்கிழமை காலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைரமுத்து-கனகம்மா தம்பதியரின் அன்பு மகனும் புஸ்பராணியின் அன்புக் கணவரும் நீலாம்பிகை, தர்மசோதி, கலாநிதி, ஜெயமலர், ஜெயராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும் அஜந்தன், அமலராஜ், அனந்தசயன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் கதிர்காமதேவன், சற்குணபாலன், சண்முகராசா, விஜயலஷ்மி, கணேசதுரை, கெங்காபரம், ஜெயக்கொடி, ராஜ்குமார், தேவன், செல்விராணி, ரவீந்திரநாத், குகசீலன், குகாசன் ஆகியோரின் மைத்துனரும் தாமிரா, வாசுகி, வசந்தி, நீரஜா, நிரோஜன், நிதர்சன், தர்சன், சயந்தா, கஜனி, மனோ, ரகு, ரவி, புவி, கிதுஷன், மதுஷன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஜெயப்பிரகாஷ், ஜெயப்பிரதீப், ஜெயப்பிரியா, கார்த்திகாயினி ஆகியோரின் பெரிய தகப்பனாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (27.02.2011) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது சகோதரியின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தட்சணாங்குளம் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

164, குட்செட் வீதி, வவுனியா.
தொ.பே.இல: 024 5684102
077 8175359 (39-22-24) (சி/576460)

தகவல்:
குடும்பத்தினர்.

## பணிநயப்பு விழா

யாழ்ப்பாணம், பெப்.27

கொற்றாவத்தை அ.த.க.பாடசாலையின் அதிபராகக் கடமையாற்றி ஓய்வுபெற்ற பா.வெற்றிவேலின் பணிநயப்பு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறும். பாடசாலை அதிபர் என்.செல்வானந்தன் தலைமையில் நடைபெறும். இந்த விழாவில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் து.செல்வராசா கலந்துகொள்வார். சிறப்பு விருந்தினராக பருத்தித்துறைக் கோட்டக் கல்வி அதிகாரி பா.இரகுநாதன் கலந்துகொள்வார். (த-236)

## மெய்வன்மைப் போட்டிகள்

யாழ்ப்பாணம், பெப்.27

கோண்டாவில் இராமகிருஷ்ண வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் பாடசாலை அதிபர் வாமதேவன் தலைமையில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வில் யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் பிரதம விருந்தினராகவும் சுகாதாரப் பரிசோதகர் பிறேம்குமார் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர். (ம-311)

* * *

யாழ்ப்பாணம், பெப்.27

வல்வெட்டித்துறை றோ.க.த.க. பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அதிபர் சொ.ஜெயதேவா தலைமையில் நடைபெறும். அதில் பிரதம விருந்தினராக இளைப்பாறிய அதிபர் ஆமுத்தையா கலந்துகொள்வார். (த-236)

* * *

நாவற்குழி பெப்.27

கைதடி சேதுகாவலர் வித்தியாலயின் வருடாந்த இல்ல மென்வன்மைப் போட்டிகள் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறவுள்ளது. வித்தியாலய முதல்வர் திருமதி இ.திருஞானசிவம் தலைமையில் நடைபெறும். நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கலந்துகொள்வார். அன்றையதினம் பாடசாலையின் பெயர்ப்பலகை திறப்பு விழாவும் நடைபெறவுள்ளது. அமரர் வேலாயுதர் பாராளன் நினைவாக அவரது சகோதரர் வேலாயுதர் குணாளன் இப்பெயர் பலகையை அமைத்துக் கொடுத்துள்ளார். (ம-121)


* * *

தென்மராட்சி, பெப்.27

மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டிகள் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பி.ப1.30 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் இடம்பெறும்.

வித்தியாலய அதிபர் வே.விநாயகமூர்த்தி தலைமையில் நடைபெறும் போட்டிகளுக்கு முதன்மை விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் கலந்துகொள்வார். (த-207)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம்:
17.08.1942

மறைவு:
27.01.2011



அமரர் இராமு சுப்பிரமணியம்
(சின்னத்தம்பி)

கடந்த 27.01.2011 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் மரணச்செய்தி கேட்டு ஓடோடிவந்து உதவியவர்களுக்கும் ஆறுதல் கூறியவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும் ஆறுதல் கூறி ஆகாரம் அளித்தவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலிப் பிரசுரம் வழங்கியவர்களுக்கும் தொலைபேசி,கடிதம், இணையத்தளம் மூலமாக ஆறுதல் கூறியவர்களுக்கும் யாழ். போதனா வைத்தியசாலை வைத்தியர்கள், மற்றும் ஊழியர்கள் மற்றும் அனைத்து வழிகளிலும் உதவிய அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதோடு இன்று (27.02.2011) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரண வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அழைப்புக் கிடைக்கப் பெறாதவர்கள் இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுவருகை தரவும்.

596, பு.கே.எஸ், வீதி,
நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். (48,19,22)

குடும்பத்தினர்.

## சேவை (Service)

யாழ்ப்பாணத்தில் உள்ள சகல விதமான வியாபார நிறுவனங்களின் Accounts, Auditing, VAT, NBT, EPF, ETF, WHT, ESC Income Tax ஆகியன முறைப்படி செய்து தரப்படும்.

தொடர்பு-தொ.பே: 0776220087

## மனோதத்துவ வைத்தியம்

### GENERAL PHYCHOTHERAPHY

பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம்

**27.02.2011 முதல் 03.03.2011 யாழில்**

ஆரம்ப நிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம். நீரிழிவு நோய்க்குத் திறமான மூலிகை மருந்து உண்டு. ஆஸ்துமா, மாதவிடாய் கோளாறுகள், வெள்ளை போகுதல், குழந்தைப் பேறின்மை, வாதநோய், தலையிடி, பல்முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு வைத்தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத்திறன் குறைவு, கல்வியில் நாட்டம் குன்றிப் பயம், நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றி பெறப் பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள். எந்தவித மோசமான தாம்பத்தியக் கோளாறுகளையும் மனோதத்துவ ரீதியிலும் திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாள்களில் சுகமாக்கலாம். பலர் சுகமாகியுள்ளனர்.

பதிவுக் கட்டணம் 300/=

கமல் ரூறிஸ்ற் இன்
(வெலிங்டன் சந்திக்கும் பெருமாள் கோயிலுக்கும் இடையில்)
(சிவநேஷன் எலக்ரோனிக் மேல்மாடி)
392, மனிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 0719315664, 0777569205
(39) (சி/576463)

## கட்டடம் வாடகைக்கு



A-9 வீதி சாவகச்சேரியில் பஸ் தரிப்பு நிலையம் நீதிமன்றம், நகர சபைக்கு அடுத்துள்ள மூன்று மாடிக் கட்டடம் 4 கடைகளுடன் வாடகைக்குண்டு.

T.P: 0773636129
0776205628
(C/576464)

## நேர்காணல் + உடனடி உட்சேர்ப்பு

ஏப்ரல் / ஜூலை / செப்டெம்பர் உட்சேர்ப்பு

### Spot admissions in Jaffna

will be granted by representatives of Trans Global Education, London, UK.




**Accountancy / ACCA / Business Management / Hospitality Management / Information Technology / English / CIM / Banking & Finance / LAW / A-Levels**

**IELTS NOT NEEDED FOR THE FOLLOWING COURSES**

- International ESOL (1 Year) LSST (O/L English 'S' Pass Needed)
- APDMS - CMC - CIMA / ACCA (for those over 22 years of age)
- BA Innovative Business (3 Years) BITE (O/L English 'C' Pass Needed)
- Bsc Technology E-Commerce (3 Years) BITE (O/L English 'C' Pass Needed)


திகதி: 02 மார்ச்
நேரம்: காலை 10.00 முதல் மாலை 2.30 மணி வரை
இடம்: Green Grass
No. 33, Aseeravatham Lane, off hospital Road, Jaffna

ROTEC
Head Office
2nd Floor, Esses Pharmacy Building, No. 343, Galle Road, Colombo 04.

மேலதிக விபரங்களுக்கும் பதிவு செய்வதற்கும் தொடர்பு கொள்க
Sabry சப்ரி : 0777-484068 Ram ராம் : 075-7190367

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழிவாங்கப்படும் சாம்பல்



இப்பிடிக் கிடந்து உலையிறதிலும் பாக்க பேசாமல் செத்துப்போனால்தான் நிம்மதியா இருக்கலாம். வாழ்க்கையில் நொந்து போனவர்களின் அல்லது வாழ்வின் கடைசிக் கந்தாயத்தில் இருப்பவர்களின் உதடுகளில் இருந்து அடிக்கடி பிறக்கின்ற சொற்கள் இவை.

வாழ்வின் எல்லாத் துயரங்களிலிருந்தும் ஒரேயடியாக விடுபடுவதற்கான வழியாகப் பலர் சாவை நோக்கியே கை காட்டுகிறார்கள்.

உயிரோடு இருக்கும் போது ஏனென்றும் கேட்காமல் இருப்பவர்கள்- செத்த வீட்டுக்கும் வர மாட்டேன் என்று சபதம் செய்து அதுவரையும் கீரியும் பாம்புமாக இருந்தவர்கள் கூட - ஒருவர் இறந்தவுடன் எங்கிருந்தாலும் ஓடோடி வந்து, ஒப்பாரி வைத்து, செத்தவீடு, எட்டுச்செலவு, அந்தியேட்டி என்று இறந்தவர்களுக்கான இறுதிச்சடங்குகள் அனைத்தையும் ஒன்றும் விடாமல் நிறைவேற்றிவிடுவார்கள். இல்லாவிட்டால் இறந்தவரின் ஆத்மா சாந்தியடையாமல் அந்தரத்துடன் சுற்றிக் கொண்டிருக்கும் என்பது இந்துக்களின் ஐதீகம்.

ஆனால் ஆடி அடங்கும் வாழ்க்கையில் எஞ்சுவது வெறும் ஆறடி மண் மட்டுமே என்ற தத்துவங்கள் கூட பொய்த்துப்போகும் காலத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோமோ என நினைக்குமளவுக்கு சம்பவங்கள் நடந்து கொண்டிருக்கின்றன.

தன்னுடைய பரமவைரியான எல்லாளன் கொல்லப்பட்ட மறுகணமே அவனுக்குரிய சகல மரியாதைகளையும் வழங்கியதுடன், எல்லாளன் கொல்லப்பட்ட இடத்தைக் கடந்து செல்பவர்கள் அவ்விடத்தில் அவனுக்கு இறங்கி மரியாதை செலுத்த வேண்டுமெனவும் கட்டளையிட்டவன் துட்டகைமுனு மன்னன் என்று சிங்கள வரலாறுகள் இன்றளவும் வாய் ஓயாமல் சொல்லி வருகின்றன.

தன்னுடைய எதிரியாக இருந்தாலும் மரணத்தின் பின் அவனை ஒருசக மனிதனாக மதித்தல் என்பது உலகப் பொதுவான ஒரு விடயம். ஆனால் நவீன துட்டகைமுனு என்று வர்ணிக்கப்படுகின்ற ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியில் இந்த விடயங்கள் எல்லாமே காற்றில் பறக்கவிடப்பட்டு வருகின்றன.

விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் தாயார் பார்வதியம்மாளின் மரணத்தின் பின் , அவரது சாம்பலைக் கூட அவமானப்படுத்துமளவுக்கு நாட்டில் ஜனநாயகமும், மனிதநேயமும் ஓங்கி உயர்ந்துள்ளன(?).

இத்தனைக்கும் பார்வதியம்மாள் அரசின் வார்த்தைகளில் சொல்வதானால் ஒரு முன்னாள் பயங்கரவாதிகூட இல்லை. அவர் புலிகள் இயக்கத்தின் தலைவரைத் தன் வயிற்றில் சுமந்து, பெற்றெடுத்தார் என்பதைத் தவிர 80 வயதைத் தாண்டிய அந்த முதியதாயின் அஸ்தியை அவமானப்படுத்துவதற்கான வேறெந்தக் காரணமும் இருப்பதாகத் தெரியவில்லை.

இறுதி யுத்தத்தின் பின்னர் படையினரின் பகுதிக்கு வந்து சேர்ந்த பிரபாகரனின் பெற்றோர் படைத்தரப்பால் கைது செய்யப்பட்டு படைமுகாமிலேயே தடுத்துவைக்கப்பட்டிருந்தனர். இருவருமே 80 வயதைத் தாண்டிய முதியவர்கள். ஆனாலும் அவர்களால் ஏதோ பெரும் ஆபத்து ஏற்பட்டு விடும் என்ற நினைப்பில் அதிபயங்கரக் குற்றவாளிகள் போல - ஏதோ அவர்கள் தான் - இந்தத் தள்ளாத வயதில் -வருங்காலத்தில் போராட்டத்தை முன்னெடுக்கப் போகிறார்கள் என்கிற கணக்காக அடைக்கப்பட்டிருந்தனர். அங்கு அவர்கள் உரிய பராமரிப்பின்மையால் கடுமையாக நோய்வாய்ப்பட்டனர். இறுதியில் பிரபாகரனின் தந்தை வேலுப்பிள்ளை உடல்நலக் குறைவால் மரணமடைய அதன் பின்னும் பார்வதியம்மாளை அடைத்து வைத்திருப்பதில் பயனில்லை எனக் கருதிய அரசு அவரை விடுவித்திருந்தது. ஆயினும் அவர் விடுவிக்கப்பட்டபோது ஒரு செயலிழந்த முதிய பெண்ணாகவே இருந்தார். இரத்த அழுத்தம், நீரிழிவு என்பன அவரை அவ்விதம் பாதித்திருந்தன.

இலங்கையில் சிகிச்சை பெறுவதால் பயனில்லை என்று கருதிய அவர் தனக்கு முன்னர் சிகிச்சையளித்த வைத்தியரிடம் செல்வதற்காக இந்தியா செல்ல முயற்சித்த போதும் அது தோல்வியிலேயே முடிந்தது. அதனால் மலேசியாவில் தங்கியிருந்துவிட்டு மீளவும் இலங்கைக்கே வந்து வல்வெட்டித்துறை ஊறணி வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வந்தார். இந்த நிலையிலேயே அவர் தன்னுடைய 81 ஆவது வயதில் பெப்ரவரி 20 ஆம் திகதி காலமானார்.

பிரபாகரனின் தாயார் இறந்த செய்தி பரவியதுமே உலகெங்கிலுமுள்ள தமிழின ஆதரவாளர்கள் முண்டியடித்துக் கொண்டு தமது இரங்கல்களை அனுப்பி வைக்கத் தொடங்கினர். புலம்பெயர் தேசங்களில் நினைவுக் கீதங்கள் வெளியிடப்பட்டு, மிகவும் உணர்வு பூர்வமாக அவருக்கு அஞ்சலி செய்யப்பட்டது.

பிரபாகரனின் தந்தையார் இறந்தபோது அதில் கலந்து கொண்ட தமிழகத்தின் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியைச் சேர்ந்த திருமாவளவன் , பார்வதியம்மாளின் மரணச்சடங்கிலும் பங்கேற்பதற்கென வந்தபோது கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்தே - சூட்டோடு சூடாகத்- திருப்பி அனுப்பப்பட்டார். எனினும் திருமாவளவன் யாழ்ப்பாணம் சென்றால் அவர் மீது தமிழ் மக்கள் தாக்குதல் நடத்தக்கூடுமென்பதாலேயே திருப்பி அனுப்பவேண்டிய நிலை ஏற்பட்டு விட்டது என்றொரு உலகமகா கண்டுபிடிப்பையும் தன் செயலுக்கான நொண்டிச் சாட்டையும் இலங்கை அரசு கூறியது. அப்போதே நிலைமையின் இறுக்கம் மக்களுக்குப் புரிந்துவிட்டது.

திடீரென வடமாராட்சிப்பகுதியில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டன. யாழ்ப்பாணத்தில் இருந்து வடமராட்சிப் பகுதிக்குச் செல்வோரெல்லாம் பார்வதியம்மாளின் மரணச் சடங்குக்குச் செல்பவர்கள் போலவே நோக்கப்பட்டார்கள். சிலவேளைகளில் அவ்வாறு பயணிப்பவர்களுக்கே பார்வதியம்மாள் இறந்தசெய்தி தெரியாவிட்டாலும் படையினரே அதை ஞாபகமூட்டினர். போதாக் குறைக்கு வடமராட்சியில் இருந்து தென்னிலங்கைக்குச் சென்ற பஸ் ஒன்றும் அங்கு கல்வீச்சுக்கு இலக்கானது. எனினும் அத்தனை தடைகளையும் மீறி அவருக்கு அஞ்சலி செய்தவர்களும் இருக்கவே செய்தார்கள். அரசே எதிர்பார்க்காத வகையில் பார்வதியம்மாளின் மரணச்சடங்கு எவ்விதக்குறைவும் இல்லாமல் நடந்தது. சில சினிமாப்படங்களில் வருவது போன்று, பஞ்சாயத்து ஒன்றினால் ஊரில் இருந்தே ஒதுக்கி வைக்கப்பட்ட ஒருவர் மரணித்த பின்னர் சீண்டுவார் எவருமின்றி சடலமாக நாறுவது போல பார்வதியம்மாளின் சடலமும் அநாதைப்பிணமாக அரச செலவிலேயே அடக்கம் செய்யப்படக் கூடிய நிலையே உருவாகும் என அரசு நினைத்திருந்தது.

ஏனெனில் யுத்தம் முடிவுற்று இரண்டு வருடங்கள் பூர்த்தியாகவுள்ள நிலையில் தமிழ்த்தேசியம் பற்றிய சிந்தனைகள் தமிழ் மக்களின் மனங்களில் இருந்து தூக்கியெறியப்பட்டு, அவர்கள் இப்போது மஹிந்த சிந்தனையை ஏற்றுக்கொண்ட சமூகத்தினர் என்பதாகவே அரசுத் தரப்பு எண்ணியிருந்தது. அந்த எண்ணத்தில் பார்வதியம்மாளின் இறுதிச்சடங்கு மண்ணையள்ளிப் போட்டுவிட்டது. அதனால் எழுந்த கோபத்தின் வெளிப்பாடு அன்றிரவே பேயுருவம் கொண்டது.

நள்ளிரவில் சுடலைப் பக்கமாக துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்களும், கூடவே நாய்களின் ஓலமும் ஏககாலத்தில் கேட்டன. விடிந்ததும் பார்வதியம்மாளின் சாம்பலை எடுக்கச் சென்றவர்களுக்கு அதிர்ச்சியே காத்திருந்தது. அவரது சிதை அலங்கோலப்படுத்தப் பட்டிருந்ததுடன், மூன்று நாய்களும் அவ்விடத்தில் சுட்டுக் கொல்லப்பட்ட நிலையில் போடப்பட்டிருந்தன.

எல்லாத் திசைகளிலும் காற்றைக்கூட விசாரித்துவிட்டே உள்ளே அனுமதிக்குமளவுக்கு படையினரின் கண்காணிப்பையும் தாண்டி, மயானத்தில் உள் நுழைந்து, துப்பாக்கிகளால் நாய்களைச் சுட்டுக் கொன்று, பார்வதியம்மாளின் சாம்பலை சிதைத்து, அவமானப்படுத்தும் துணிச்சல் யாருக்குண்டு என்பது மக்களுக்கு நன்றாகவே தெரிந்த விடயம்தான்.

மரணத்தின் பின்னரும் தம் மனவக்கிரங்களைத் தீர்ப்பதில் பேரினவாதிகள் சளைத்தவர்களல்லர். போர்க்களத்தில் உயிரிழந்த பெண் போராளிகளின் உடலை மானபங்கப்படுத்தி, அவர்களின் நிர்வாணச் சடலங்களைத் தம் கையடக்கத் தொலைபேசியில் பதிவு செய்து பார்த்து மகிழும் உண்மையை அண்மையில் வெளியாகிய காணொளிகள் பட்டவர்த்தனமாக்கியிருந்தன. இதுதவிர மாவீரர் மயானங்களில் போரில் உயிரிழந்த விடுதலைப் புலிகளின் உடல்கள் புதைக்கப்பட்டிருந்த கல்லறைகள் எல்லாவற்றையும் கிளறி, அவை இருந்த இடமே தெரியாமல் செய்யப்பட்டன. கொடிகாமம், வடமராட்சி எல்லங்குளம் பகுதிகளில் இருந்த மாவீரர் துயிலும் இல்லங்களின் கல்லறைகள் பெயர்க்கப்பட்டு அங்கு புதிதாகப் படைத்தளங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. கோப்பாய் மாவீரர் மயானத்தில் சிறைச்சாலை உருவாக்கப்படுவதாகக் கதைகள் வருகின்றன. யாழ்ப்பாணம், வன்னி போன்ற பகுதிகளில் போரில் உயிரிழந்த போராளிகள் நினைவாக நிறுவப்பட்டிருந்த நினைவுத் தூபிகள் எல்லோரும் பார்த்துக் கொண்டிருக்கையிலேயே இடித்தழிக்கப்பட்டன.

ஔண்யன்

போர் பற்றிய நினைவுகளை அழிப்பதனூடாக மக்களின் எண்ணத்தை தன் பக்கம் ஈர்த்துவிடலாம் என அரசு எண்ணுகிறது. ஆனால் திட்டமிட்டே மறக்க வைக்கப்படுகின்ற நினைவுகள் மக்களின் மனங்களில் இன்னும் தீவிரமாக ஞாபகத்திலிருக்கும் என்ற உண்மை இவர்களுக்குத் தெரியவில்லை.

இன்னமும் எஞ்சிக் கிடக்கும் இனவெறியின் வடிவமே இவ்வாறு சாவுக்குப் பின்னரும் பழி தீர்க்கும் செயல்களாக உருவெடுக்கின்றது.

ஆனாலும் ஒரு முதியபெண்ணின் சாம்பலைக் கூட விட்டு வைக்காது அவமானப்படுத்தும் செயல் பலரையும் சீற்றம் கொள்ளவைத்திருக்கின்றது. வாஷிங்டன் போஸ்ட் முதலான சர்வதேச ஊடகங்கள் பலவும் இச்சம்பவத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து செய்தி வெளியிட்டுள்ளன. இதனால் இன்னொரு முறை உலகின் முன்னால் தலைகுனியும்நிலை இலங்கைக்கு ஏற்பட்டுள்ளது. அப்படி நேரும் போது அரசு, பார்வதியம்மாளின் சாம்பலைச் சில கட்டாக்காலி நாய்கள் கிளறப்பார்த்தன.

நல்லவேளையாக அந்த இடத்துக்கு வந்த படையினர் அந்த நாய்களுடன் கடுமையாகப் போரிட்டு இறுதியில் அவற்றைக் கொன்றுவிட்டனர். இதையே ஊடகங்களும் அரசுக்கு எதிரானவர்களும் திரித்துச் சொல்கிறார்கள் என்று ஓர் அறிக்கை வெளியிடக்கூடும். ஏனெனில் பார்வதியம்மாளின் சாம்பலும், இறந்துபோன மூன்று நாய்களும் மீள உயிர்பெற்று வந்து நடந்த உண்மைகளைக் கூறமுடியாதல்லவா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கனரக வாகன ஓட்டுநர் தேவை

1. Ten WHEEL 2. Dippar 3.Tractor

ஆகிய வாகனங்களுக்கு அனுபவமுள்ள ஓட்டுநர் தேவை.
தொடர்புகொள்ள வேண்டிய முகவரி
No. 263, Navalar Road, Jaffna. Mob. 0772844505

## பிறந்த நாள் வாழ்த்துக்கள்



இன்று (27.02.2011)
ஞாயிற்றுக்கிழமை
28 ஆவது வயதை எட்டும்
யாழ். மாநகரசபை உறுப்பினர்
**S.விஜயகாந்த்**
அவர்களுக்கு எமது மன
நிறைந்த பிறந்த நாள் நல்
வாழ்த்துக்களை
தெரிவித்துக் கொள்கிறோம்.

அரியாலை ஸ்ரீ கலைமகள்
ச.ச. நிலைய விளையாட்டுக் கழகம்.

## மாபிள் வகைகள் விற்பனைக்கு



வெளிநாட்டில் இருந்து இறக்கு மதி செய்யப்பட்ட நில மாபிள்கள், சுவர் மாபிள்கள் மற்றும் கொமட் செற் வகைகள், குளியலறை சாத னங்கள், பிளாஸ்ரிக்கிலான கதவு வகைகள் அனைத்தும் உங்களுக்குத் தேவையான வர்ணங் களில் நியாயமான விலையில் மொத்தமாகவும் சில்லறையா கவும் பெற்றுக்கொள்ளலாம்.

**Sajei Ceramics**
281 C, Clock Tower Road, Jaffna.
0750404314, 0771230845.

## ஆண்டு 4 ஆனதுவே



அமரர் ஐயம்பிள்ளை
செல்லக்கிளி

அம்மாமடி 13.07.1936
அம்பாள் பாதம் 14.03.2007

*திதி: மாசிமாத அபரபக்க தசமி (27.02.2011 ஞாயிற்றுக்கிழமை)*

அம்பாள் பாதமடைந்து ஆண்டு நான்கானதப்பா
ஆலயங்கள் கட்டி அழகுடன் மிளிர்ந்து
கும்பாபிஷேகமும் கண்டிட வேண்டுமப்பா
எங்கள் எண்ணம் நிறைவேற
உங்கள் ஆசியும் துணையும் தேவையப்பா.
தந்தையின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

*முதலி கோயில் வீதி, கொக்குவில் மேற்கு.*
*மறவன்புலோ மத்தி, சாவகச்சேரி.*

## மரண அறிவித்தல்

### *திருமதி மகேஸ்வரி பரமானந்தம்*



மயிலிட்டி தெற்கைப் பிறப்பிடமாகவும் பட்டிஓலை, உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமானந்தம் மகேஸ்வரி 25.02.2011 வெள்ளிக் கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பரமானந்தத்தின் மனைவியும் கலாநந்தி, யோகாநந்தி, பிறேமானந்தம் (பிரான்ஸ்), தயானந்தி (லண்டன்), ஜீவானந்தி, மகேந்திரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் கிருபாமூர்த்தி, சிறீதரன், ராஜகுமார், சிவராணி ஆகியோரின் அன்பு மாமியாரும் பிரசாந்தன் (யூனியன் கல்லூரி மாணவன்), கஜன், லவன், நிசானி, நிசாந் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும் காலஞ்சென்றவர்களான சிவனேசசுந்தரம், சிவஞானசுந்தரம், நாகேஸ்வரி மற்றும் றாயேஸ்வரி, யோகேஸ்வரி (பேபி), ஞானேஸ்வரி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது தற்காலிக இல்லத்தில் இன்று (27.02.2011) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் இப்பில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

*பட்டிஓலை, உடுவில் தெற்கு, உடுவில்.*

## அடிப்படையிலிருந்து ஆங்கிலம்

3 மாதங்களில் கே.யூ வின் தனிப்பட்ட கல்வி முறைமூலம் உங்களை ஆங்கிலம் அறிந்தவர்களாக்குகிறோம்.விபரங்கள் நேரில்.

Ku's Spoken English© (No Grammar) ESOL 1 ESOL 2 ESOL 3

இலக்கண வேதனையற்ற மிகவும் இலகுவான, விடியோ,ஓடியோ முறை மூலம் ,தனிப்பட்ட முறையில் கல்வி.

விபரங்களுக்கு: 0777-302882

நொலிட்ஸ் யூனிவேர்ஸ்

இல 75,கோவில் வீதி,யாழ்ப்பாணம்.
www.kugroup.info | enq@kugroup.info

## வீடு வாடகைக்கும் இஞ்சின் விற்பனைக்கும்

யாழ்.பல்கலைக்கழக சுற்றாடலில் சகல வசதிகளுடனான வீடு வாடகைக்கும் இங்கிலண்ட் பிளக் ஸ்ரோன் லிஸ்ரர் இஞ்சின்கள் விற்பனைக் கும். தொ.பே: 0777061892, 0774047912

## வீடு விற்பனைக்கு

உயரப்புலம் ஆனைக் கோட்டை பிடாரி கோயில் பின்வீதியில் உள்ள 1 ½பரப்புக் காணியுடன் கூடியவீடு விற்பனைக் குண்டு.
தொடர்புகளுக்கு: 0778689500, 0772529419

## விற்பனைக்கு

நல்லநிலையில் உள்ள Isri தொடர் இலக்க முடைய Minor 1000 கார் உடன் விற்ப னைக்குண்டு. தொடர்பு: 0778297928

## காணி விற்பனைக்கு

முதலி கோயிலடி, கொக்குவில் மேற்கில் (கே.கே.எஸ். வீதியிலிருந்து 50 மீற்றர் தூரத்தில் சேர்ச் முன்ஒழுங்கை) 2 ½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0776366308, 0779522027.

## கார் விற்பனைக்கு

நல்லநிலையில் உள்ள மாப்பியன் மொறிஸ் மைனர் கார் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0776132585

## வேலைக்கு ஆள் தேவை

யாழ்.நகரில் இயங்கும் பான்சிக் கடைக்கு முன் அனுபவமுள்ள ஆண், பெண் இருபாலாரும் தேவை.
தொடர்பு: 0777593794

## வீடு வாடகைக்கு

பிறவுண் வீதி, சிவகுருநாதர் லேனில் வீடு வாடகைக்கு உண்டு. (நிறுவனங்களும் விரும்பத்தக்கது)
T.P. No. 0778584011

## விற்பனைக்கு

பான்சிக் கடைக்குரிய அனைத்துத் தளபாடங்களும் (அலுமினியம் கலர் பிற்றிங்) பான்சிப் பொருள்களும் உடன் விற்பனைக்குண்டு.
0774366704

## காணி விற்பனைக்கு

திருநெல்வேலி, நாவலடி வீதியில் 5½ பரப்புக் காணியும், மானிப்பாய் முதலியார் வீதியில் 4½ பரப்புக் காணியும் உடன் விற்பனைக்குண்டு.
தொடர்புக்கு: 0756430864

## Siva Brothers
## தேவை

கொக்கோ கோலா குளிர்பானம் விற்பனை செய்வதற்கு விற்பனைப் பிரதிநிதி தேவை. முன் அனுபவமுள்ளவர்கள் மட்டும் நேரில் வரவும். உதவியாளர், காசாளர், சாரதி தேவை.

*முகவரி: 205,*
*ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.*
*தொலைபேசி இல. 021 222 5497*

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான No.1 புறொயிலர் குஞ்சுகள் விநியோகம் செய்யப்படும். அத்துடன் சிறந்த Gold Coin கோழித் தீவனங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

**சிற்றி பாம் ரேடர்ஸ்**
ஆடியபாதம் வீதி, கல்வியங்காடு. தொ.பே.: 0777238573.

**மகமாயி ஸ்ரோர்ஸ்**
866, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.

## காணியும் கட்டடமும் விற்பனைக்கு

உடுவில் றோட்டில் தொழிற்சாலைக் கட்டடமும் அதனுடன் சேர்ந்த காணியும் 16 பரப்பளவில் விற்பனைக்கு உண்டு. இது தொழிற்சாலை, மில் மற்றும் Stores ஆகிய வற்றுக்கு வசதியானது. காணி முழுமையாக வோ அல்லது பாதை அமைத்து தனித்தனியாக 5,4,3, பரப்புகள் கொண்ட 4 துண்டுகளாகவும் அல்லது வேறு விதமாகவும் பிரித்துக் கொடுக்கலாம்.
தொடர்பு: [illegible]

## உன்னதமான எதிர்காலம் உங்கள் கையில் !
ஆங்கில மொழித் தேர்ச்சி அதற்கு வழி கோலும்.

IELTS
General English
IELTS Intensive Course
City & Guilds Examinations

British Council & City & Guilds Trained Teacher
With Over 30 Years of Experience
(University of Cambridge, UK Certified Teacher)

Every other Saturdays & Sundays

*IELTS Registration Centre for British Council*
*City & Guilds Approved Centre*

**Kalaimagal International College**
**Church Road, Kokuvil**

தொடர்பு கொள்க
071-5745175 Rtn. Lazarus Perinpanayagam
077-6565258 Rtn. A. Panchalingam

ROTEC Head Office - Colombo
RISHSI Overseas Travel & Education Centre

## 28 ஆவது பிறந்தநாள் வாழ்த்து

27.02.2011 இன்று ஞாயிற்றுக்கிழமை தனது பிறந்தநாளைக் கொண்டாடும் தோழர்

**எஸ்.விஜயகாந்த்** அவர்களை

யாழ்.மாநகர சபை உறுப்பினர், (ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி)

பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடனும்
வாழ்கவென வாழ்த்துகின்றோம்.



தேசத்தில் நேசம் கொள்வதோடு
எங்கள் தேவையிலும் நேசம் கொள்ளும்
அன்புள்ளம் கொண்டவரே.

தேவைகளைக் கேட்டறிந்து
குறிப்புணர்ந்து செயற்படும்
தங்கள் பெருமை யாரிடமுண்டு

நீண்ட ஆயுளோடும்
நிம்மதியான வாழ்வோடும்
நீங்கள் தலைநிமிர்ந்து வாழ
தங்கள் 28ஆவது அகவையில்
மனம் நிறைந்து
வாழ்த்துகின்றோம்.

வாழ்த்தும் அன்புத்
தம்பிமார்கள்:
திலீபன், சிறி, முந்தன், நிமல், நிக்சன்,
மயூரன், தக்க, ரீரோ, கரன், கீபன், சீசோன்,
நிசாத், நவராஜ், பிறைனஸ்

(C4847)

## யா/கொற்றாவத்தை அ.மி.த.க. பாடசாலை ஓய்வுபெற்ற அதிபர்



திரு.பா.வெற்றிவேல் (SLPS-1) அவர்களின்

**பணிநயப்பு பெருவிழா**

காலம்: இன்று (2011.02.27)
ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3 மணி
இடம்: யா/கொற்றாவத்தை அ.மி.த.க.
பாடசாலை
தலைமை
**திரு.ச.செல்வானந்தன்**
(அதிபர், யா/கொற்றாவத்தை அ.மி.த.க. பாடசாலை)
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
பாடசாலைச் சமூகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொக்குவில் இந்துவில் இன்று பார்வையாளர் அரங்கு திறப்பு

பதி சிறந்த கொக்குவில் கிராமத்தின் கொண்மணி மகுடமாக எழில் கொஞ்சும் வானளாவிய கட்டடங்களுடன் யாழ்ப்பாண நகரிலிருந்து நான்கு கிலோமீற்றர் தூரத்தில் காங்கேசன்துறைச் சாலைக்கு கிழக்கே கொக்குவில் இந்துக் கல்லூரி அமைந்துள்ளது. இக்கல்லூரி பல தடைகளைத் தாண்டி நூற்றாண்டைக் கண்டு வீறுநடைபோட்டுக் கொண்டிருக்கிறது. கல்விச் செல்வத்தை வாரிவாரி அள்ளி வழங்கிக்கொண்டிருக்கிறது. எத்தனையோ வைத்தியர்களை, பொறியியாளர்களை, கல்வியாளர்களை, சட்டத்தரணிகளை, அதிபர்களை, ஆசிரியர்களை இன்னும் பல்வேறு துறை சார்ந்த நிபுணர்களை உருவாக்கிய பெருமைகொண்டது. தொடர்ந்தும் உருவாக்கும் பணியில் முன்னணியாகத் திகழ்கின்றது.

கொக்குவில் இந்துக்கல்லூரியில் கல்வி சற்ற பழைய மாணவர்கள் எப்பொழுதும் கல்லூரித்தாயை மறந்தது கிடையாது. அவர்கள் எங்கெல்லாம் சென்று வாழ்ந்தாலும் அன்னையின் வளர்ச்சியில் அக்கறை கொண்டவராகவே உள்ளார்கள். அன்னையின் உயர்ச்சிக்கு அயராது உழைத்துக் கொண்டிருக்கிறார்கள். கல்லூரிக்குத் தேவையான பௌதிக வளங்களை வழங்கிக்கொண்டிருக்கின்றார்கள். இக்கல்லூரிக்குப் பௌதிக வளங்களை வாரி வழங்கும் வரிசையில் முதன்மையானவராக ஒப்பற்றவராகக் கொடை வள்ளல் உயர்திரு.மாணிக்கம் சுப்பிரமணியம் அவர்கள் காணப்படுகின்றார். இவர் கொக்குவில் மேற்கைச் சேர்ந்த புகழ்பூத்த குடும்பமாகிய மாணிக்கம் பாக்கியம் தம்பதிகளின் புதல்வன் ஆவார்.

திரு.மாணிக்கம் சுப்பிரமணியம் அவர்கள் கல்விகற்ற காலத்தில் கொக்குவில் இந்துக்கல்லூரி ஓலைக் கூரையைக்கொண்ட கல்விக்கூடமாகவே இருந்தது. அக்கல்விக் கூடம் சில விசமிகளால் காலத்திற்குக் காலம் எரியூட்டப்பட்டது. இவர் கல்விகற்ற காலத்தில் கல்லூரி அனுபவித்த சிரமங்கள், பௌதீக வளப் பிரச்சினைகள் எல்லாம் இவரின் மனதில் குடிகொண்டது. மாணவப் பராயத்திலேயே கல்லூரிக்கு கட்டடங்கள் அமைக்கவேண்டும் என்ற எண்ணம் உதயமாகிவிட்டது. அதோடு ஓலைக் கூரைகள், பாடசாலைத் தளபாடங்கள் எரிந்து சாம்பலாகியபின் முன்னாள் அதிபர்களான திரு.ஹன்டி பேரின்பநாயம், திரு.சி.கே.கந்தசுவாமி போன்றோர்கள் மூன்று மாடிக்கட்டடம் ஒன்றை அமைப்பதற்குப் பட்ட கஷ்டங்கள், அவர்கள் பணம் சேகரிப்பதில் ஏற்பட்ட சிரமங்கள் என்பவைகளெல்லாம் அவரின் மனதில் ஆழப்பதிந்து காணப்பட்டது. இதனால் இவர் தான் தேடிய செல்வங்கைளயெல்லாம் கல்விப்பணியிலும், சமய சமூகப் பணியிலும் வாரிவாரி வழங்கிவருகின்றார்.




தான் பிறந்து உலாவிய பிரதேசமாகிய கொக்குவில் மேற்கில் சனமூக நிலையம், முன்பள்ளி, ஆரம்ப சுகாதார நிலையம் என்பவற்றை இயக்குவதற்கு இரண்டு மாடிக்கட்டடம் ஒன்றை அமைத்துக்கொடுத்துள்ளார். இக்கட்டடம் ஆனைக்கோட்டை வீதியில் கம்பீரமாகக் காட்சியளித்துக்கொண்டிருக்கிறது. அதில் சகல செயற்பாடுகளும் சிறந்த முறையில் இயங்கிக்கொண்டிருக்கிறது.

தற்பொழுது கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு மைதானத்தில் ஒரு பார்வையாளர் அரங்கையும், ஒரு திறந்தவெளி அரங்கையும் பல மில்லியன் ரூபா செலவில் அமைத்துக்கொடுத்துள்ளார். அக்கட்டடங்கள் மைதானத்தில் எழில் கொண்டவையாகக், கம்பீரமாகக் காட்சியளிக்கின்றன. மைதானத்தில் நடைபெறும் விளையாட்டுக்களைப் பார்ப்பதற்குரிய பார்வையாளர் அரங்கம் இல்லாத குறைகாணப்பட்டது. இந்தக் குறையைக் கொடைவள்ளல் அவர்கள் நிவர்த்திசெய்துள்ளார். இன்று சுப்பிரமணியம் விளையாட்டு அரங்கும், மாலதி திறந்தவெளி அரங்கும் திறந்து வைக்கப்படவுள்ளன. இது இக்கல்லூரியின் தேவையை நிறைவுசெய்கின்ற ஒன்றாகக் காணப்படுகின்றது. தற்காலத்தில் மனிதர்களில் சுயநலம் மேலோங்கிக் காணப்படுகின்ற நிலையில் திரு.மாணிக்கம் சுப்பிரமணியம் போன்ற ஒரு சிலரே பொதுநலத்தை நோக்கிச் செல்வதைக் காணக்கூடியதாக உள்ளது. இவ் வரிசையில் இவரின் பணி முதன்மைப்படுத்தி போற்றப்படவேண்டியது ஆகும். தமிழ் மண்ணில் நாவலர் பெருமான், சேர் பொன்.இராமநாதன் போன்றோரின்பின் கல்விப்பணியையும், சமூக சமயப் பணியையும் ஆற்றுவதற்குத் தோன்றிய பெரியார் திரு.மாணிக்கம் சுப்பிரமணியம் எனக் கூறினால் மிகையாகாது.

கல்விப்பணியில் பூரண அறிவு கொண்டவன் ஒருநாளும் தன்னைப் பற்றிப் புகழ்ந்து கூறமாட்டான். அதே போல திரு.மாணிக்கம் சுப்பிரமணியம் அவர்களும் தான் செய்கின்ற வள்ளல் தன்மையைப் பற்றி ஒருபோதும் பெருமை கொண்டது கிடையாது. தான்செய்த கைங்கரியத்தைப் பற்றிப் பேசுவதே கிடையாது. அதை நிறுவனத்திடம் ஒப்படைத்துவிட்டால் பின்னர் அதில் தலையிடுவதே கிடையாது. இதுவே வள்ளல் தன்மைக்கான சிறந்த இலக்கணமாகும்.

**சி.செந்தில்குமரன்**

இவ்வளவு சிறப்புக்களைக் கொண்ட பேராளன் மா.சுப்பிரமணியம் அவர்கள் அவதரித்த கொக்குவில் கிராமமும், அவர் கல்விகற்ற கொக்குவில் இந்துக் கல்லூரியும் பெருமையடைகின்றது. மேலும் அவர்களின் உயர்வுக்குக் காரணமாகவிருந்த அவரது துணைவியாரும், குடும்பத்தினரும் சமூகத்தால் போற்றப்படுகின்றார்கள்.

கல்விக்கு உயிர்கொடுத்தவன் ஒருபோதும் மரணிப்பதில்லை. அதேபோல திரு.மாணிக்கம் சுப்பிரமணியம் அவர்கள் இவ்மானிலத்திலே தொடர்ந்து வாழ்ந்துகொண்டேயிருப்பார். கொக்குவில் இந்துக் கல்லூரிச் சமூகம் அக்கல்லூரிக்கு இவ்வள்ளலாளர் செய்த, உதவித் தொகைக்கு எதைப்பிரதி உபகாரம் செய்தாலும் அதை ஈடுசெய்ய முடியாது. அவரின் வள்ளல் தன்மைக்கு நிகரான பிரதி உபகாரம் எதுவுமே இல்லை.

## கேட்காததை... (17 பக்கத் தொடர்ச்சி)

தெளிவாகப் புரிந்து கொண்டு துரிதமாகச் செயற்படத் தவறினால் மீண்டும் ஒருமுறை சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தத் தவறிய பழியைத் தமிழ் இனம் சுமக்க வேண்டிவரும்.

அரசுடன் நகமும் சதையுமாக இரண்டறக் கலந்துவிட்ட ஈ.பி.டி.பி. அமைச்சரவையிலும், அரச கட்சி நாடாளுமன்றக் குழுவிலும் தமது கோரிக்கைகளை முன்வைக்கலாம். அவர்களுக்கு அதற்கான வாய்ப்பும் உரிமையும் உண்டு. வேண்டுமானால் பேச்சுக்களில்கூட அரச தரப்பில் ஒருவராகக் கலந்துகொள்ளலாம். அதற்கான வாய்ப்பை அவர்கள் வாதாடிப் பெறலாம். அதற்கான முழு உரிமையும் அவர்களுக்கு உண்டு. அந்தளவுக்கு சிரம் தாழ்த்தி இணக்க அரசியல் நடத்துகிறார்கள் அவர்கள். தமது பலத்தைப் பயன்படுத்தித் தமிழ் மக்களுக்காகச் செய்ய வேண்டியவற்றை அவர்கள் செய்வதில்லை என்பதும் அரசின் அங்கமாக இருந்து கொண்டே அரசு தங்களுடன் பேச வேண்டும் என்ற முரண்பாடான கொள்கையை அவர்கள் வெளிப்படுத்துகிறார்கள் என்பதும் தமிழர்களின் சாபக்கேடு.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஏனைய தமிழ்க் கட்சிகளுடன் இணைந்து முன்னைய தீர்வுத் திட்டங்களின் அடிப்படையிலோ அல்லது புதிதாகவோ உடனடியாக ஒரு தீர்வுத் திட்டத்தை முன்வைக்க வேண்டும். இதை முஸ்லிம் மக்களின் கட்சிகளிடமும், மலையக மக்களின் கட்சிகளுடனும் கலந்துரையாடி அனைவரும் ஏற்றுக் கொள்ளும் வகையில் வலுப்படுத்த வேண்டும். அத்திட்டத்தின் அடிப்படையில் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும்.

அத்திட்டத்திற்கான புலம்பெயர் தமிழர்களின் ஆதரவைத் திரட்ட வேண்டும். அந்தந்த நாடுகளில் ஏற்படும் எழுச்சிகள் சர்வதேச நாடுகள் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் நிலையை உருவாக்கும். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வெவ்வேறு விதமான கருத்துக்களை வெளியிட்டும் தனது அடிவருடிகளாகச் செயற்படும் சில தமிழர்களை வைத்துக் கொண்டும் குழப்பங்களை உருவாக்கிக் கொண்டும் தனக்குப் பாதகமான இனச்சூழலை நீர்த்துப் போக வைப்பதில் வல்லவர் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

எனவே நிலைமையைப் புரிந்து கொண்டு ஐக்கியப்படக்கூடிய சகல சக்திகளையும் ஐக்கியப்படுத்தி துரிதமான நடவடிக்கையில் இறங்க வேண்டிய தலைமைப் பொறுப்புத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு உண்டு என்பது உணரப்பட வேண்டும். இது காலம் தாழ்த்தவோ, கைவிடப்படவோ முடியாத தேசியக் கடமையாகும்.

## 52,000 பேரின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கையொப்பம் இட்டு இக் கோரிக்கைக்கு வலுச் சேர்க்கும் வகையில் செயற்பட்டுள்ளனர் என்றும் - சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது.

கடந்த 26 வருடங்களாக இடம்பெற்ற போரில் சம்பந்தப்பட்ட இரு தரப்பினரும் மேற்கொண்ட மனித உரிமைகள் மீறல்கள் குறித்தும் விசாரணை நடத்த வேண்டும் என்று சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்திருந்தது.

ஐக்கிய நாடுகள் சபை அலுவலகத்தில் இதன் கையொப்ப ஆவணம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சிறிலங்காவில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் குறித்த விசாரணைகளை மேற்கொள்வதற்கு ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூன் ஓர் ஆலோசணைக் குழுவை அமைக்க வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை அனைத்துலக மன்னிப்புச் சபையின் சிறீலங்கா விவகாரங்களுக்கான பிரதிநிதி ஜேலந்தா பொஸ்ரர் மற்றும் வைத்தியர் காசிப்பிள்ளை மனோகரன் ஆகியோருடன் மேலும் சிலர் ஐ.நா. அலுவலகத்திற்கு சென்று பொதுமக்கள் கையொப்பமிட்ட ஆவணங்களை சமர்ப்பித்துள்ளனர்.

2006 ஆம் ஆண்டு திருமலையில் சிறிலங்கா சிறப்பு அதிரடிப் படையினரால் படுகொலை செய்யப்பட்ட ஐந்து பல்கலைக்கழக மாணவர்களில் ஒருவரின் தந்தையே மனோகரன். தமது விண்ணப்பம் தொடர்பில் ஐ.நா. விரைவான நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டும் எனவும், உரிய விசாரணைக்குழு அமைக்கப்படும் வரையில் தமது நடவடிக்கை தொடரும் என்று அனைத்துலக மன்னிப்புச் சபையின் பிரதிநிதிகள் ஐ.நா. அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளனர். (ஓ-ஐ)

## மட்டு..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழமையாக மட்டக்களப்பில் வருடாந்தம் 1600 மி.மீற்றர் மழையே பதிவாகி வந்தது. ஆனால் கடந்த டிசெம்பர் மாதத்தில் மட்டும் 1400 மி.மீற்றர் மழை கொட்டித் தீர்த்தது. போதாக்குறைக்கு ஜனவரியில் 1600 மி.மீற்றர் மழை பதிவாகியது.

இவ்வாறு கொட்டிய மழையால் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக மாவட்டத்தின் 97 சதவீத உணவு உற்பத்தி பாதிக்கப்பட்டது. 40 ஆயிரம் மாடுகள் உயிரிழந்துள்ளன.

இதன் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள மக்களின் மறுவாழ்வுக்கு என்ன செய்வது என்பது குறித்து ஆராய விசேட கூட்டம் இன்று இடம்பெறுகின்றது.

மட்டக்களப்பு செயலகத்தில் இடம்பெறும் இக்கூட்டத்தில் கலந்துகொள்ளும் அமைச்சர் பஸில் தலைமையிலான குழு ஆய்வுகளை மெற்கொள்ளவுள்ளது.

எதிர்காலத்தில் இத்தகைய அனர்த்தங்களைத் தடுப்பதற்காக 2000 சிறு குளங்களைப் புனரமைக்கும் பணி இன்று ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

வெல்லாவெளியில் இத்திட்டத்தை அமைச்சர் பஸில் ஆரம்பித்துவைக்கவிருக்கிறார். (ஓ-ஐ)

## மனித உரிமைகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீறல்கள் குறித்து எதையும் செய்ய முடியாது என்று தலைவர் பிரியந்த பெரேரா தெரிவித்தார். ஆணைக் குழுவின் ஏனைய உறுப்பினர்களும் இதனை ஏகமனதாக ஏற்றுக்கொண்டனர்.

இந்த விடயத்தை அரசுக்கு தெரியப்படுத்துவது எனவும் முடிவு செய்யப்பட்டது.

இதேவேளை, மனித உரிமை மீறல்கள் தொடர்பாக செய்யப்பட்ட 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் நிலுவையில் உள்ளதாக ஆணைக்குழுவின் செயலாளர் தெரிவித்தார். (ஓ-ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: admin@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




அனைத்து மாவட்டங்களிலும் தெளிவான வானிலையுடனான காலநிலை காணப்படும்.

## சிப்பாயின் சடலம் யாழ்.ஆஸ்பத்திரியில்

துப்பாக்கியால் தன்னைத் தானே சுட்டுத் தற்கொலை செய்ததாகத் தெரிவித்து இராணுவச் சிப்பாய் ஒருவரின் சடலம் நேற்று யாழ்.போதனா வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டது.

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலைக்கு அருகில் உள்ள இராணுவ முகாம் சிப்பாயே நேற்றுமுன்தினம் தற்கொலை செய்துகொண்டுள்ளார்.

யாழ். ஆஸ்பத்திரியில் சடலத்தைப் பார்வையிட்ட மல்லாகம் மாவட்ட நீதிமன்ற நீதிவான் எஸ்.கஜந்திரபாலன் பிரேத பரிசோதனையின் பின்னர் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார்.

மரணமான சிப்பாயின் உறவினர்கள் இன்று வருகைதரவுள்ளனர் என்றும் அதன் பின்னர் பிரேத பரிசோதனை நடைபெறும் என்றும் யாழ்.போதனா வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-9)

# தமிழர் கொல்லப்படுவதும் கடத்திச் சடலங்களாக மீட்பதும் அமைச்சர் டக்ளஸ் கூறுவது போன்று சிறு விடயங்களா?

## நாடாளுமன்றில் சரவணபவன் எம்.பி. காரசாரம்

கொழும்பு,பெப்.27

நாட்டின் சகல மக்களையும் அவசரகாலச்சட்டம் பாதுகாப்பதாகவும் ஒருசிலர் சிறுசிறு விடயங்களை ஊதிப்பெருப்பித்து அரசியல் லாபம் தேடுவதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இச்சபையில் கூறியிருந்தார்.

தமிழ்மக்கள் கொல்லப்படுவதும் கடத்தப்பட்டுச் சடலங்களாக மீட்கப்படுவதும் அல்லது புலனாய்வுப் பிரிவினரால் மர்மமான முறையில் கைதுசெய்யப்படுவதும் சிறு சிறு விடயங்களா?

இப்படிக் கேள்வி எழுப்பியுள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன்.

அவசரகாலச் சட்ட நீடிப்புத் தொடர்பான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இருபத்தைந்து வருடங்களுக்கு இந்நாட்டை அவசர காலச் சட்டம் தொடர்ந்தும் தன் பிடிக்குள் வைத்திருப்பது மட்டுமின்றி மாறி மாறி நாடாளுமன்றத்தில் அங்கீகாரத்தையும் பெற்று வருகின்றது.

நான் தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் தமிழ் மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு பல விதங்களிலும் இடையூறாக இருக்கும் இச்சட்டம் நீக்கப்பட வேண்டிய அவசியத்தை இச்சபையில் வலியுறுத்த விரும்புகின்றேன். ஜே.வி.பி. கொண்டு வந்த பிரேரணையை ஆதரிக்கின்றேன்.

இந்நாட்டில் முப்பது வருடங்களாக நிலவிவந்த போர்ச் சூழல் நீக்கப்பட்டு ஒன்றரை ஆண்டுகள் முடிவடைந்து விட்ட நிலையிலும் பாதுகாப்புக் காரணங்கள் கூறப்பட்டு இச்சட்டம் நீடிக்கப் பட்டுள்ளது. இந்நாட்டில் வாழும் ஒவ்வொரு குடிமகனின் பாதுகாப்பும் இயல்பு வாழ்வும் பேணப் படவேண்டும் என்பதில் எவ்வித முரண்பாட்டுக்கும் இடமில்லை. ஆனால் இச்சட்டம் எமது நாட்டு மக்களின் சுதந்திரத்தையும் இயல்பு வாழ்வையும் பாதுகாக்கின்றதா அல்லது இடையூறு விளைவிக்கின்றதா என்பதுதான் இங்கு எழும் கேள்வி. இங்கு தமிழ்மக்களால் தெரிவுசெய்யப்பட்டு தங்களுடைய லாப நோக்கத்துக்காக அரசுடன் இணைந்து கொண்டுள்ள ஒரு சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்களின் பாதுகாப்புக்கு இச்சட்டம் அவசியம் எனக் கூறி வருவதை இச்சபை நன்கறியும்.

நான் இச்சபையில் கேட்டுக் கொள்வது, இச்சட்டம் எவ்வாறு தமிழ் மக்களைப் பாதுகாக்கிறது? எவ்வாறு தமிழ் மக்களின் இயல்பு வாழ்வுக்கு துணை நிற்கின்றது? என்பதுதான். நான் இங்கு கேட்டுக்கொள்ள விரும்புவது இச்சட்டம் தமிழ் மக்களை யாரிடம் இருந்து பாதுகாக்கின்றது? எவ்விதம் பாதுகாக்கின்றது?

இனந்தெரியாதவர்கள் என்ற பெயரில் யாழ்.குடாநாட்டில் ஒரு சிலரால் கொலைகள், கொள்ளைகள், ஆள்கடத்தல்கள், கப்பம் கோரல்கள் முன்பும் இடம்பெற்றன. இப்போதும் இடம்பெறுகின்றன. இச்சட்டத்தால் இவர்கள் யார் எனக் கண்டுபிடிக்க முடியாதா? இவர்களின் கைகளுக்கு ஆயுதங்கள் எங்கிருந்து வருகின்றன என்பதைக் கண்டுபிடிக்க முடியாதா? இவர்களுக்கு அடைக்கலம் கொடுப்பவர்கள் யார்என்று கண்டுபிடிக்க முடியாதா?

### கைதானவர்கள் யார்?

இவர்களில் ஒரு சிலர் கைது செய்யப்பட்டதாகச் செய்திகள் வெளிவருகின்றன. இவர்கள் யார் என்பதோ இவர்களுக்குப் பின்னணியில் நின்ற கட்சிகள் எவை என்பதோ இவர்களுக்கு மேற்கொண்டு என்ன நடந்தது என்பதோ இதுவரை வெளிவரவில்லை. இவ்விடயங்களில் இந்த அவசரகாலச் சட்டம் ஏன் பலவீனமடைந்து போயுள்ளதென்பதை என்னால் புரிந்து கொள்ளமுடியவில்லை. ஆனால் இச்சட்டத்தின் அடிப் படையில் தமிழ்மக்கள் அனைவரும் சந்தேகத்துக்குரியவர்களாக்கப்படுகின்றனர். அடிக்கடி மேற்கொள்ளப் படும் வீதிச் சோதனைகள் எமது மக்களின் இயல்பான நடமாட்டத்திற்குக் குந்தகம் விளைவிக்கின்றன. குடும்பப் படங்கள் எடுக்கப் பட்டு பதிவுகள் மேற்கொள்ளப் படவேண்டும் என வலியுறுத்தப் படுகின்றது. இவை இச்சட்டத்தால் தமிழ் மக்களுக்கு வழங்கப் பட்ட பாதுகாப்பும் இயல்பு வாழ்வும்தானே என நான் கேட்டு வைக்க விரும்புகின்றேன்.

அண்மையில் கிளிநொச்சி அம்பாள்குளத்தில் வெள்ளை வானில் வந்த ஒருசிலரால் ஒரு வர்த்தகர் கடத்தப்பட்டார். அது தொடர்பாக அவரின் குடும்பத்தினர் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யச்சென்றபோது அவர்கள் அதை ஏற்க மறுத்து விட்டனர். மீண்டும் அவர்கள் அந்த பொலிஸ் நிலையம் சென்ற போது அவர் புலன் விசாரணைகளுக்காக கொழும்பு கொண்டு செல்லப்பட்டு விட்டதாகக்கூறப்பட்டது.

ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்படுவதென்றால் அப்பகுதி பொலிஸாருடனோ அல்லது கிராம சேவையாளருடனோ சென்று கைது செய்யப்படவேண்டும். ஆனால் அவசரகாலச் சட்டமோ இப்படியான மர்மமான கைதுகளுக்கு இடம் கொடுக்கின்றது.

இப்படி வெள்ளைவான்களில் கடத்தப்பட்ட பலர் காணாமற்போயினர். இன்னும் சிலர் வீதியில் கொன்று வீசப்பட்டனர். இவை இனந்தெரியாத நபர்களால் அல்லது பாதாளக் கோஷ்டியினால் மேற்கொள்ளப்பட்டவை எனக் கூறப்பட்டது. அண்மையில் உரும்பிராயில் கடத்தப்பட்ட இளம் குடும்பஸ்தர் ஒருவர் பிணமாக பாழடைந்த கிணறு ஒன்றிலிருந்து மீட்கப்பட்டார்.

### இதுதான் இயல்வு வாழ்வா?

இதுவா தமிழ் மக்களுக்கு அவசரகாலச் சட்டம் வழங்கும் பாதுகாப்பு என இச்சபையில் நான் கேட்டுவைக்க விரும்புகின்றேன். இதுவா தமிழ் மக்களுக்கு வழங்கப்பட்ட இயல்பு வாழ்வு?

கடந்த 08.02.2011 அன்று இச்சபையில் உரையாற்றிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நாட்டின் சகல மக்களையும் இச்சட்டம் பாதுகாப்பதாகவும் ஒரு சிலர் சிறு சிறு விடயங்களை ஊதிப்பெருப்பித்து அரசியல் லாபம் தேடுவதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

தமிழ் மக்கள் கொல்லப்படுவதும், கடத்தப்பட்டுச் சடலங்களாக மீட்கப்படுவதும் அல்லது புலனாய்வுப் பிரிவினரால் மர்மமான முறையில் கைதுசெய்யப் படுவதும் சிறுசிறு விடயங்களா?

ஆயுதங்களைக் கையில் ஏந்திக்கொண்டு வீதிகளிலும் வீடுகளுக்குள்ளும் புகுந்து விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் என்று சந்தேகப்பட்டவர்களைச் சுட்டுக்கொன்று இரத்தத்தில் குளித்தவர்களுக்கும் கப்பம் கேட்டுப் பள்ளி மாணவனைக் கடத்திக் கொன்று புதைத்தவர்களுக்கும் தங்கள் அணிக்குள்ளேயே முரண்படுபவர்களை கொன்று தள்ளியவர்களுக்கும் இவைகள் சிறிய விவரங்களாகத் தெரியலாம்.

ஆனால் பொதுமக்களைப் பொறுத்தவரை இவை உயிர் தொடர்பான பிரச்சினை. உறவுகளை இழப்பது தொடர்பான பிரச்சினை. நிம்மதியற்ற அச்சமும் பீதியும் கலந்த நாள்கள் தொடர்பான பிரச்சினை. இவற்றை நான் ஊதிப்பெருப்பிக்க வேண்டியதில்லை. ஏனெனில் இவை ஏற்கனவே ஊதிப்பெருத்து வெடித்து உதிரம் கசிபவை. உரிமை உரிமை என்று கூச்சலிடும் நாம் என்ன உரிமைகளைத் தமிழ் மக்களுக்குப் பெற்றுக்கொடுத்தோம் என்ற கேள்வியை அமைச்சர் இங்கே எழுப்பினார்? நியாயமான கேள்விதான.

### சும்மா கிடைப்பதற்கு சுதந்திரம் என் சுக்கா, மிளகா?

சும்மா கிடைப்பதற்கு சுதந்திரம் என்ன சுக்கா மிளகா? என்ற பாரதியார் பாடல்தான் எனக்கு இங்கே நினைவுக்கு வருகிறது.

உரிமைகள் என்பது ஒரு நாளில் கிடைத்துவிடுவதில்லை. உரிமைகளுக்கான போராட்டம் என்பது தொடர்ச்சியானதும் நீண்டதும். இது வேகமாக முன்செல்லும். இடையில் எதிர்பாராத பின்னடைவுகளையும் சந்திக்கும். இது தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தில் மட்டுமல்ல உலக விடுதலைப் போராட்டங்களே பெற்றுக் கொண்ட அனுபவம். எனவே எமது ஒவ்வொரு அடிவைப்பும் ஆணித்தரமானவை. அசைந்து கொடுக்காத இலட்சிய உறுதி கொண்டவை. விலைபோய் விடாத விசுவாசம் கொண்டவை.

இதன் காரணமாகவே நாம் இன்றும் அரசுடன் பேசுகின்றோம். சில கோரிக்கைகளை முன் வைக்கின்றோம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுதியான நிலைப்பாடு காரணமாகவும் எமது மக்கள் எமக்கு வழங்கும் பேராதரவு காரணமாகவும் எம்மை அரசு பேச்சுக்களுக்கு அழைத்திருக்கின்றது. அதற்காக நாம் ஒரு நாளில் உரிமைகளைப் பெற்று விடுவோம் என்று சத்தியம் செய்யவில்லை. ஜனநாயக தந்திரோபாய போராட்டங்கள் மூலம் எமது உரிமைகளைப் பெற முன்செல்வோம்.

ஆனால், நாம் ஏற்கனவே 13 ஆவது திருத்தச் சட்டத்தால் வழங்கப்பட்ட உரிமைகள் பறிக்கப்படுவதற்கு நாம் கையுயர்த்தி ஆதரவு வழங்கவில்லை. 18 ஆவது திருத்தச் சட்ட மூலம் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டிருந்த பொலிஸ் அதிகாரம், பொது நிர்வாக அதிகாரம் பறிக்கப்பட்டன. உள்ராட்சி திருத்தச் சட்டத்தின் மூலம் மாகாணசபைகளின் அதிகாரம் மேலும் பறிக்கப்பட்டது. இதை நாம் கடுமையாக இச்சபையில் எதிர்த்து குரல்கொடுத்தோம். ஆனால் அமைச்சரும் அவரது கட்சியினரும் தமிழ் மக்களுக்கென வழங்கப்பட்ட சில உரிமைகள் கூட பறிக்கப்பட்டமைக்கு ஆதரவு தெரிவித்தனர்.

### சரணடைவு அரசியலுக்கு நாம் தயாரில்லை

இப்படியான ஒரு நிலையில் அமைச்சர் எம்மையும் இந்த அரசியலுக்கு வரும்படி அழைக்கின்றார். நாம் எப்போதுமே தமிழ் மக்களுக்கு நன்மை பயக்கும் விடயங்களில் இறங்கிப் போகவும் தமிழ் மக்களின் உரிமைகள் பறிக்கப்படும்போது எதிர்ப்பதும் என்ற வகையில் எங்கள் அரசியலை முன்னெடுத்து வருகின்றோம். அரசாங்கம் செய்யும் அனைத்தையும் ஆதரிப்பதன் மூலம் இணக்க அரசியல் என்ற பெயரில் ஓர் அப்பட்டமான சரணடைவு அரசியல் செய்ய நாம் என்றுமே தயாரில்லை என்பதை இச்சபையில் உறுதியாகத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

எமது மக்களின் உரிமைகளுக்காக விட்டுக்கொடுக்காது போராடுவது, தவிர்த்து இணக்க அரசியல் என்ற பேரில் முற்று முழுதாக சரணாகதி அடைந்து தாங்கள் சொந்த லாபங்களையும் பதவிகளையும் காப்பாற்றும் பாதையில் செல்வது என்பதற்கு பெயர் இணக்க அரசியல் என்றால் அதையே நாம் தொடர்ந்தும் செய்ய வேண்டுமா? - என்று தெரிவித்தார்.

# நிகழ்வுகள்

### பொதுச் சபைக் கூட்டம்

யாழ்ப்பாணம்,பெப்.27

யாழ்.கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தின் 2011 ஆம் ஆண்டுக்கான பொதுச்சபைக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் தலைமையில் நடைபெறவுள்ளது.

கல்லூரியின் பழைய மாணவர்களை இந்தக் கூட்டத்தில் கலந்து கல்லூரியின் வளர்ச்சி பற்றிய ஆக்கபூர்வ கருத்துக்களை பகிர்ந்து கொள்ளுமாறு பழைய மாணவர் சங்கத்தலைவர் ஆ.நா.செல்வராசா அறிவித்துள்ளார். (ற)

### கவிதை நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம்,பெப்.27

மட்டுவில் ஞானக்குமாரனின் ''சிறகு முளைத்த தீயாக'' என்னும் கவிதை நூல்வெளியீட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5மணிக்கு கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் சட்டத்தரணி இராஜ குலேந்திரா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வின் போது நூல் வெளியீட்டின் முதற் பிரதியைப் புலவர் ஹாசிம் உமர், பூபாலசிங்கம் புத்தகசாலை அதிபர் பூ.ஸ்ரீதர்சிங் ஆகியோர் பெற்றுக் கொள்ளவுள்ளனர்.

### வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம்,பெப்.27

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவர் ... வெளியீட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை மாணவன் க.உஷாந்தன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக சட்டத்தரணி க.செவ்வேள் கலந்துகொள்வார். (ற-313)

### முன்பள்ளி ஆண்டு விழா

யாழ்ப்பாணம்,பெப்.27

எவர்சைன் மழலைகள் உலகம் முன்பள்ளிப் பாடசாலையின் ஆறாவது ஆண்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு ஜெயபால சிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ். செட்டித்தெரு மெதடிஸ்த மிஷன் பாடசாலையின் அதிபர் செல்வி.எஸ்.மாணிக்கம் கலந்துகொள்வார்.(ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தம் தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடியோரை இன்று கைவிடுகிறது தமிழினம்



இரத்மலானையில் புனர்வாழ்வு பெற்றுவரும் முன்னாள் பெண் போராளிகள் இருவர்.....

இலங்கையின் வடக்குப் பகுதியில் பொது வாழ்வில் ஈடுபடமுனையும் விடுதலைப் புலிகளின் முன்னாள் பெண் போராளிகள் திருமணம், கல்வி மற்றும் வேலைவாய்ப்பு போன்ற விடயங்களில் பெரும் சவால்களை எதிர்கொண்டு நிற்கிறார்கள்.

''இந்தப் போராளி உறுப்பினர்களைச் சமூகம் ஆக்கபூர்வமான வகையில் நோக்க வில்லை'' எனத் தென்னிந்தியத் திருச்சபையின் யாழ்ப்பாண மறைமாவட்டத்தைச் சேர்ந்த தயா தங்கராசா கூறுகிறார். கலாசார மற்றும் சமூக ரீதியிலான தடைகள்தான் முன்னாள் போராளிகள் சமூகத்துடன் ஒன்றிணைவதற்குப் பெரும் தடையாக இருக்கின்றன என்கிறார் அவர். விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளிகளுக்கான திருமண வாய்ப்புகள் மிகவும் அரிதாகவே இருக்கின்றன என்று தென்னிந்தியத் திருச்சபையினைச் சேர்ந்த செல்வநாயகம் செல்வேந்தன் என்ற தொண்டு நிறுவனப் பணியாளர் கூறுகிறார்.

''தமிழ்ச் சமூகத்தினைப் பொறுத்தவரையில் அது பாரம்பரியப் பண்புகளைக் கொண்டது. முன்னாள் பெண் போராளிகளைத் தங்களது ஆண் பிள்ளைகள் திருமணம் செய்வதைப் பெற்றோர் விரும்ப வில்லை'' என அவர் தொடர்ந்தார். தமிழ்ச் சமூகத்தினர் திருமணத்தினை மிகவும் முதன்மையானதொரு சடங்காகக் கருதுகின்றனர் என்றும் அவர் குறிப்பிட்டார். முன்னாள் பெண் போராளிகளை மீளவும் சமூகத்துடன் இணைப்பதுதான் சவால் நிறைந்த பணியாக இருக்கிறது எனக் கொழும்பினைத் தளமாகக் கொண்ட பெண் உரிமைச் செயற்பாட்டாளரான சுனிலா அபயசேகர கூறுகிறார்.

''திருமணத்திற்குக் குறைந்த முக்கியத்துவம் கொடுத்த பெண்களாகவே ஆயுதங்களைக் கையில் எடுத்த இந்தப் பெண் போராளிகள் சமூகத்தினால் நோக்கப்படுகிறார்கள். இது போன்றதொரு சூழலில் சமூகத்துடன் ஒன்றிவாழ்வதற்கு இந்தப் பெண் போராளிகளிடமும் அதிக சங்கடங்கள் காணப்படுகின்றன'' என அவர் தொடர்ந்தார்.

3,000 வரையிலான விடுதலைப் புலிகளின் முன்னாள் பெண் போராளிகள் தமிழ்ச் சமூகத்தின் மத்தியில் இருப்பதாகக் கூறும் இந்தச் செயற்பாட்டாளர் இவர்களில் எத்தனை பேர் இன்னமும் திருமணம் செய்யாமல் இருக்கிறார்கள் என்ற புள்ளிவிவரம் எதுவுமில்லை எனக் கூறுகிறார்.

''விடுதலைப் புலிகள் அமைப்பானது வன்முறைசார் பாதையினைப் பின்பற்றியதொரு அமைப்பு. தமிழ்ச் சமூகத்தின் மத்தியிலுள்ள பலர் இந்த அமைப்பினால் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். தற்போது விடுதலைப் புலிகள் இல்லாததொரு சூழலில் அந்த அமைப்புடன் இணைந்திருந்தவர்கள் தொடர்பில் தமிழ் மக்கள் தாம் நினைப்பதைச் சுதந்திரமாகக் கூறுகிறார்கள். விடுதலைப் புலிகளின் முன்னாள் ஆண், பெண் போராளிகள் எதிர்கொள்ளும் பிரச்சினையிது'' என அபயசேகர தொடர்ந்து தெரிவித்தார்.

முன்னாள் ஆண் போராளிகளை விட பெண் போராளிகள்தான் அதிக பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்கிறார்கள், சமூகத்தவர்களால் அதிகம் வசைபாடப்படுபவர்களும் இவர்கள்தான். அவர்கள் மீண்டும் சமூக வாழ்வுக்குத் திரும்பியிருக்கும் இந்த ஆரம்ப நிலையில்கூடப் பல பிரச்சினைகளை எதிர்கொள்கிறார்கள் என அனைத்துலக குடிபெயர்தலுக்கான அமைப்பினது மூத்த திட்ட முகாமையாளர் கிளிவ் ஜக்நிக் கூறுகிறார்.

''வேலை வாய்ப்பின்மை, தொடர்ந்து கல்வியினை முன்னெடுக்க முடியாத நிலை, சிறந்ததொரு வாழ்வுக்கான தேர்வுகள் எதுவுமற்ற தன்மையென பெரும் சவால்களை வீடுதிரும்பிய நான் எதிர்கொண்டேன்'' என 2007ஆம் ஆண்டு முதல் விடுதலைப் புலிகள் அமைப்புடன் இணைந்திருந்த ஜெயா கமலராஜன் என்ற முன்னாள் பெண் போராளி கூறுகிறார். ''விடுதலைப் புலிகளுடன் இணைந்திருந்தமையினால் நானொரு கூடாத பெண் எனக்கருதி மக்கள் எவரும் எனக்கு வேலை தர முன்வர வில்லை. கடந்த காலச் சம்பவங்கள் அனைத்தையும் மறந்து புதியதொரு வாழ்க்கையினைத் தொடரவே நான் விரும்புகிறேன்'' என்றார் அவர்.

'புலி' என்ற முத்திரை தனது பொது வாழ்வின் ஒவ்வொரு அம்சத்தினையும் பாதிப்பதாக முல்லைத்தீவு மாவட்டத்தினைச் சேர்ந்த 19 வயதான நளினி கூறுகிறார். ''நான் புலிகளுடன் இணைந்திருந்தமைக்காக இந்த மக்கள் என்னை வெறுக்கிறார்கள். ஆனாலும் இதுபோன்ற சமூகக் கட்டமைப்பினைக் கொண்ட மக்கள் மத்தியில் தான் எனது வாழ்வினைத் தொடர்ந்தும் முன்னெடுக்கவே நான் விரும்புகிறேன்'' என்றார் அவர். * *பெண் போராளிகளின் பெயர் உண்மையானதல்ல.*

*(மூலம்: IRIN, நன்றி: புதினப்பலகை)*



## சந்தியடிச் சோமு

### நாங்கள் பரமசிவன் கழுத்திலயிருந்து பேசுறம்

டிக் டிக் யார் வந்தார்?
அவரும் இவரும் அவவும் வந்தார்
ஏன் வந்தார் ?
இவரிட்ட அவர் மாலை வாங்க
அவரிட்ட இவர் பாராட்டு வாங்க
அவரும் இவருமா பொன்னுடை வாங்கிக் குளிர்காய

இது கொட்டில்ல கொஞ்ச இளசுகள் புதுசா முண்டிப்போட்டு என்ன செய்யிறது ஏது செய்யிறது எண்டு கண் மண் தெரியாம சிரட்டையத் தட்டித் தட்டிப் பாடின பாட்டுப் பாருங்கோ. கொட்டில் பாட்டெல்லாம் தத்துவப்பாட்டெண்டு உங்களுக்குத் தெரியும் தானே! பெடியள் ஏன் இப்படிப் பாடி இருப்பாங்கள் எண்டு நினைக்கிறீங்கள்?

விசயத்தைச் சொல்ல முன்னால ஒண்டச் சொல்ல வேணும் உங்களுக்கு

உங்களுக்குத் தெரியுமே முந்தி இஞ்ச உடையார், மணியகாரன் எண்டு இருந்தவை. அவைதான் ஊர் உலகத்தில பெரிய ஆக்களாத் திரிஞ்சவை. தங்களுக்குத் தேவையான வரியச் சரியாச் சேத்துத் தர்றத்துக்காக – சனத்தக் கஷ்டப்படுத்துறத்துக்காக – வெள்ளைக்காரன் நியமிச்ச ஆக்கள் அவை. அவையின்ர காலத்தில அவையில்லாம ஊரில ஒரு காரியம் நடக்கேலாதாம். வெள்ளைத் துரைமாருக்குச் சேவகம் செய்த உந்த மணியகாரன்மாரும் உடையாரவையும் சமூகத்தில பெரியாக்களா தங்களைத் தாங்களே வரிஞ்சு கட்டிக் கொண்டு திரிஞ்சவை.

உண்மையச் சொன்னால் சனத்தை வெள்ளக்காரனுக்குக் காட்டிக் குடுத்தோட நில்லாமல், நிலஉடமைக் காலத்தில தாங்கள் நல்லாச் சீவிக்கிறத்துக்காக சனத்திட்ட வரி எண்ட பேரில காசப் புடுங்கி வெள்ளக்காரனுக்குக் குடுத்துப் போட்டு அதில கொஞ்சத்தத் தாங்களும் சுருட்டின பேர்வழியள்தான் இவையள். துரைக்கு சேவகம்செய்த இந்த மாதிரி ஆக்களை பெரியமனிசர் எண்டு மதித்து கலியாண வீடு, சாமத்திய வீடு, வீட்டுசடங்கு என்ற எல்லா நல்ல காரியத்துக்கும் எங்கட அப்பாவிச் சனங்கள் கூப்பிட்டிருக்கு.

சனத்த வறுகியே வயிறு வளர்த்த இந்தக் கூட்டம் தாங்கள் வசதியா வாழுறத்தக்காக வெள்ளைக்காரனுக்கு முன்னால நெத்தி மண்ணில பட குனியிறத்துக்கும் தயங்கினதில்ல. இந்தக் கூட்டம் காலவோட்டத்தில காலாவதியாகிப் போச்செண்ட வச்சுக்கொள்ளுங்கோவன்.

நானும் இதுநாள் வரைக்கும் அப்படித்தான் நினைச்சுக் கொண்டு திரிஞ்சனான். ஆனால் இப்ப சமூகத்தில புதுசா துரைமாருக்குச் சேவகம் செய்ய எண்டு ஒரு கூட்டம் கிளம்பியிருக்குது பாருங்கோ. அதுதான் கொட்டிலில அந்த இளவட்டப் பெடியள் அப்படிப் பாடினவங்கள்.

அதுக்கான விசயம் இதுதான் பாருங்கோ! இப்ப எங்க விழா நடந்தாலும் அல்லது நடக்கப் போகுதெண்டாலும் அந்த இடத்துக்கு ஒரு ரெலிபோன் கோல் வருமாம் நாங்கள் பேசுறம். (நாங்கள் எண்டால் உங்களுக்குத் தெரியாதே யார் எண்டு, என்னப் பாக்கிறீங்கள்) நிகழ்ச்சிக்கு எங்களக் கூப்பிட வேணுமெண்டு தெரியாதோ ? ஏற்கனவே அனுப்பின சேர்க்குலரை வாசிக்கேலையோ எண்டு அதட்டலான தொனியில் ரெலிபோன் கதைக்குமாம். அதுக்குப் பிறகு விழா நடத்திறவையின்ர கையில ஒரு லிஸ்ட் குடுபடுமாம். பிறகென்ன அவையளை அழைச்சுத்தான் விழா நடக்கும்.

யார் யாரோ நல்ல மனசோட குடுக்கிற உதவியெல்லாம் பரமசிவன் பேரால அவற்ற தூதனால வழங்கப்படுகுது எண்டு கட்டியம் கூறப்படும். தியட்டர் எண்டா படம் காட்டத்தானே செய்வாங்கள்.. அத நாங்கள் தப்பாப் பாக்கக் கூடாது.!

அவையள் மேடையில சொல்லுறது எல்லாத்தையும் மகா ஜனங்களும் நம்புறது போலக் காட்டிக்கொள்ளும். பிறகு கொட்டில்களில தானே நியாயம் பிளப்பனம் உள்ளூர்ச் சண்டியர்மார். அதாலதான பெடியள் கொட்டிலில அப்படி பாட்டுப் பாடினவங்கள். அவங்களும்தான் பாடாமல் என்ன செய்யிறது?

இப்படித்தான் போன செவ்வாயும் புதனும் வீரசிங்கம் மண்டபத்தில ஒரு விழா நடத்திச்சினம். சரி பொழுது போகாத நேரத்தில பாப்பம் எண்டு போனன். புலரும் வசந்தம் எண்டு பேர் அதுக்கு. ஐயோ அதையேன் கேப்பான். மேடையில மாறிமாறி ஒரே பொன்னாடை போர்த்தல்தான். அவர் இவருக்கு போர்த்த இவர் உவருக்கு போர்த்த உவர் மற்றவருக்கு போர்த்த மற்றவர் வேறொருவருத் தருக்குப் போர்த்த ஒரே தாமாஷ்தான்; காமெடிதான் எண்டு வடிவேலு சொல்லுறது மாதிரித்தான் கிடந்தது. உதெல்லாம் சீதேவி கடாட்சமென்றும் அங்க இருந்தவையள் பேசிக் கொண்டினம்.

நானும் வாய்க்குள்ள ஈ பூந்தது தெரியாமப் பார்த்துக் கொண்டிருந்தன். வயசு போனாப் பிறகு உப்படியானதுகளப் பாத்தால் எங்களுக்கும் போர்த்தால் என்ன எண்ட ஆச வரத்தான் செய்யுது பாருங்கோ சரி! என்ர சோகக் கதையள ஏன் உங்களுக்கு.

அங்க நடந்தது இரண்டு நாள் களியாட்ட விழா. முதல் நாள் அசோகா எண்டொரு நாடகம் போட்டவை. அந்த நாடகம் ரெண்டாம் நாளும் நடக்கிறதாத் தான் இருந்ததாம். ஆனால் அடுத்த நாள் அதப்போட விடேல்லை.

வெள்ளை வேஷ்டிப் பேராசிரியர் ஒருத்தர் மூலமாத்தானாம் நாடகத்தை அடுத்த நாள் போடவேண்டாம் எண்டு சொல்லியிருக்கினம். அவரும் பக்குவமா எடுத்துச் சொல்லி நாடகத்தைப் போடாமல் பண்ணிப் போட்டார். இதுக்கு என்ன காரணமென்று கேட்டா உத்தியோகபூர்வமாச் சொன்ன பதில்தான் வேடிக்கையா இருக்குது. இந்த நிகழ்ச்சி ஒரு களியாட்டமாத்தான் ஒழுங்குபடுத்துப்பட்டது. இந்த நாடகம் படு ஸ்டான்டட்டா இருக்குது. நிகழ்ச்சியப் பாக்க வந்திருக்கிற சனங்களுக்கு அது விளங்காது எண்டதால மாகாண ஆளுகை வேண்டாமெண்டு சொல்லிப்போட்டார். இதுதான் அந்தப் பதில்.

இத்தனைக்கும் இந்த நாடகத்தை பண்பாட்டு அமைச்சின்ர செயலாளர் இரண்டு முறை பார்த்து தானாம் போட விட்டவ. அந்த நாடகமோ மொழியில்லாத நாடகம். மாகாண ஆளுகைக்கு அதப் பாத்த உடன அது ஸ்டான்டட்டான நாடகம், உது இந்தத் தமிழ்ச் சனத்துக்கு விளங்காது எண்டது விளங்கிப் போச்சுது பாருங்கோ ஆள் வலு கெட்டிக்காரன்தான்.

ஆனால் நான் விடுவனே.! உள்ள பூந்து உண்மையான காரணம் என்னவாமெண்டு கிண்டினன். நாடகத்தின்ர கதை அசோக மன்னனைப் பற்றினது. அதில் போர் களக் காட்சியள் எல்லாம் வருகுது. கதையில அரசியலிருக்குது எண்டு ஆளுகை கோபப்பட்டதாலதானாம் கட்டளை நறுக்கென்று விழுந்ததாம்.

கலைஞர்மார் காலுக்க கிடந்தா நினைச்ச மாதிரி ஏறி உழக்குவாங்கள் தானே எண்டு கதிரண்ணை அடிக்கடி சொல்லுறது சரியாதான் கிடக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அரச கரும மொழிப் பரீட்சை மட்டம் III (சிங்களம்)**

பரீட்சைக்குத் தோற்றுவோருக்கான Paper Class (மாதிரி வினாத்தாள் உட்பட) இன்று ஞாயிற்றுக்கிழமை (27.02.2011) பி.ப 2 மணி தொடக்கம் 4 மணி வரை நடைபெறும்.
இடம்:- ஸ்ரீ இரண்டாம்மொழி கல்வி நிலையம், இல.41, றக்காலேன், சுண்டிக்குழி, யாழ்ப்பாணம், ஸ்ரீமாஸ்டர், தொ.பே:-0777033729.

# தமிழர் தரப்புடனான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று காரணம் கூறி பிற்போடப்பட்டது. தற்போது உள்ளூ ராட்சி சபைத் தேர்தல் பணிகளில் அமைச்சர்கள் ஈடுபட்டுள்ளனர் என்று தெரிவித்து சந்திப்பைப் பிற்போட்டுள்ளனர். தேர் தல் முடிந்த பின்பே சந்திப்பு எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் திட்டவட்டமான திகதி ஏதும் தெரிவிக்கப்படவில்லை.

உப குழுவின் செயலாளரின் அறிவிப்பை அடுத்து மாற்று ஏற்பாடு குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் குழுவில் இடம்பெற்றுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

உப-குழுவின் சந்திப்பை அமைச்சரவைக் கூட்டம் நடைபெறும் தினத்தில் அல்லது நாடாளுமன்ற அமர்வு இடம்பெறும் தினத்தில் ஏற்பாடு செய்யுமாறும் சுமந்திரன் தனது கடிதத்தில் கேட்டுள்ளார்.

''நியமிக்கப்பட்ட உப - குழுவின் மூலம் விரைந்து தீர்வு நோக்கிப் பயணிக்க முயற்சிக்கிறோம். ஆனால் அரசு காலத்தை இழுத்தடிக்கப் பார்க்கிறதா? என்று சந்தேகம் எழுகிறது'' - என்று கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

''60 வருடங்களாக எத்தனையோ பேச்சுக்கள் நடந்தேறி விட்டன. பேச்சுக்களில் பல்வேறு விடயங்கள் பேசப்பட்டுள்ளன. இனியும் பேசிக்கொண்டிருப்பதால் பயன் இல்லை. விரைந்து தீர்வு காண்பதற்கான வழிமுறையை எட்ட வேண்டும். இதுவே இன்றைய தேவை'' என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை -

''அரசு - கூட்டமைப்பின் பேச்சின் முன்னேற்றத்தை சர்வதேசம் உன்னிப்பாக அவதானித்துக்கொண்டிருக்கிறது. இந்தப் பேச்சு நல்லமுறையில் இடம்பெற்று நாட்டில் அமைதி ஏற்பட வேண்டும் என்பதிலும் சர்வதேசம் அக்கறையுடன் இருக்கிறது'' - என்கின்றன இராஜதந்திர வட்டாரங்கள். (உ-ஐ)

# இரு நாட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடற்படை மேற்கொள்ளும் சூட்டுச் சம்பவத்தை நிறுத்தவேண்டும் என்று கோரிய அதிகாரிகள் கடந்த ஜனவரியில் இந்திய மீனவர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலை நியாயப்படுத்த முடியாது என்றும் தெரிவித்தனர்.

இந்திய அரசின் அனுசரணை மற்றும் ஆலோசனையின் பேரில் இந்திய மீனவர் சங்கக் குழுவை இலங்கைக்கு அனுப்புவது என்றும் முடிவு செய்யப்பட்டது. (ஒ-ஐ)

**THE SCIENCE CORNER**
CLOCK TOWER LANE, JAFFNA
PHYSICS → K.SELVAN Bsc (Hons)
2013 A/L MECHANICS
ஆரம்பம்:- 28.02.2011 (திங்கள்-3.00 pm)
MON, TUE :- (3.00-4.00)pm

**Deutsch, Dutch, French, Italian**
கொழும்பு விவேகானந்தா அக்கடமியின் யாழ்.கிளையில் தற்பொழுது ஜேர்மன் எம்பஸி பரீட்சைக்கான Deutsch மற்றும் நெதர்லாந்து Dutch, Italian, French வகுப்புக்களும் நடைபெறுகின்றன.
Vivekananda Academy
(Centre For International Language Studies)
No.3, 2nd Lane, Palaly Road, Jaffna
குறிப்பு:-Deutsch, French மொழி புதிய வகுப்புகள் இவ்வாரம் ஆரம்பமாகின்றன.(அப்பலோ ஆஸ்பத்திரிக்கு எதிரில்)
அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரேயொரு வெளிநாட்டு மொழிக்கல்வி நிறுவனம்.
COV.Reg.No W/A 76795T.P: 0774842464, 0213216928, 0779927117

**கட்டடவேலைகள் செய்து கொடுக்கப்படும்**
கட்டடங்கள் கட்டுதல், வீடுகட்டுதல், பழைய வீடுகளைத் திருத்துதல், குளியலறைகட்டுதல், சுற்றுமதில் கட்டுதல், மாபிள் பதித்தல், தச்சு வேலைகள், Plumbing, Electrical, Painting, Welding அனைத்தும் தரமாகவும் குறைந்த விலையிலும் குறித்த காலத்தில் செய்து கொடுக்கப்படும்.
அழையுங்கள் 0776679564
AXSHAYACONSTRUCTION, JAFFNA.

## மரண அறிவித்தல்கள்

### சி. நாகராசா

கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும், சுதுமலை ஈஞ்சடியை வசிப்பிடமகவும் கொண்ட சி. நாகராசா நேற்று (26.02.2011) சனிக்கிழமை காலமாகி விட்டார். அன்னாரது இறுதிக்கிரியைகள் தற்காலிக வசிப்பிடமாகிய சுதுமலை ஈஞ்சடியில் இன்று (27.02.2011) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று பூதவுடல் 2.30 மணியளவில் தகனக் கிரியைகளுக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்

சுதுமலை வடக்கு,
ஈஞ்சடி மானிப்பாய். (சி:576483)

தகவல்:
ந. குணரத்தினம் (குணம்.)
0213211316



### குமாரசாமி சிவகோசரி (சிவா)
### (ஜோதி புடைவை, சாவகச்சேரி )

நுணாவில் கல்வயல் வீதி,சாவகச்சேரியைச் சேர்ந்த குமாரசாமி சிவகோசரி நேற்று (26.02.2011) சனிக்கிழமை இறையடி சேர்ந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரசாமி - நாக ரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - கண்ணகைப்பிள்ளை தம்பதியரின் மருமக னும் இந்திரஜோதியின் அன்புக் கணவரும் ஈஸ்வரி, பிறைசூடி, குமரகுரு, நந்தகுமாரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், திருமதி.சோபனா, சங்கர் (லண்டன்), செல்வி அனுஷா (யாழ். பல்கலைக்கழகம்), ஜனகன், தேவகி ஆகியோரின் அன்புத் தந்தையாரும் திருக்கயிலாயநாதன் (லண்டன்) காலஞ்சென்ற கோமளவதி மற்றும் சுசீலாதேவி, நாகநந்தினி, கயிலேஸ்வரன், கருணாகரன் காலஞ்சென்ற மகேந்திரன் மற்றும் சந்திரஜோதி மங்களஜோதி, குமரேந்திரன் ஆகியோரின் மைத்துனரும் முகுந்தன்,கேசவன், ஜெகன் ஆகியோரின் மாமனாரும் ஹரிதாஸ், மணிமேகலை ஆகியோரின் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் இன்று (27.02.2011) ஞாயிற்றுக்கிழமை பி.ப 2.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் கண்ணாடிப்பிட்டி இந்துமயானத்தில் தகனக்கிரியைகள் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கல்வயல் வீதி,
சாவகச்சேரி. (சி/574595)
தொடர்புகளுக்கு:- 0772487772.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி பெருமாள்சாமி பாக்கியம்



சங்குவேலியைப் பிறப்பிடமாகவும், கட்டைப்பாலி லேன், ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பெருமாள்சாமி பாக்கியம் நேற்று (26.02.2011) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் பெருமாள்சாமியின் அன்பு மனைவியும், காலஞ்சென்றர் களான கந்தையா - காமாட்சி தம்பதி யரின் அன்பு மகளும், பாலகுமாரன் (லண்டன்), ரஞ்சிதம், சந்திரகுமார், ஆகியோரின் அருமைத் தயாரும், திலகா (லண்டன்), மனோகரன் (நாதன்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், சிந்துஜா, அஜந்தன், அனுஷியன், அபிராமி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் தருமரத்தினத்தின் அருமைச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (27.02.2011) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஆனைக்கோட்டையில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காக்கைதீவு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கட்டைப்பாலி வீதி,
ஆனைக்கோட்டை. (848)

தகவல்
குடும்பத்தினர்



### பொன்னையா கந்தையா

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா கந்தையா (26.02.2011) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை - நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் பூமணியின் அன்புக் கணவரும் மயில்வானம்,வள்ளிநாயகி, பரமேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் சாந்தகுமார் (ஹொலண்ட்), ஜெயகுமாரன் (ஜேர்மனி), நந்தகுமாரன் (ரஜீவன் மோட்டோர்ஸ்) , தேனுகா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத்தந்தையாரும் தர்சினி, வசந்தனா, மாலதி, விபுலானந்தன் ஆகியோரின் அன்பு மாமனாரும் சுபாசினி, சுதேசினி, தர்சிகா, கௌசிகா, டினேஷ், உமேஷ், மெலானி, ரஜீவன், கிருத்திகா, கிருஜன், மோளிஷா, மதுஷா, மகிஷா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.02.2011) ஞாயிறு பி.ப 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோணிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்டும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

செட்டிச்சோலை,
அளவெட்டி வடக்கு, அளவெட்டி. (849)

தகவல்:
க. நந்தகுமாரன் (மகன்.)
ரஜீவன் மோட்டோர்ஸ்.

### செல்லத்துரை மகாலிங்கம்
*(ஓய்வுபெற்ற நூலகர், நீர்வேலி, புத்தூர்)*



யாழ். வீதி, சிறாம்பி யடியைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட திரு. N.T செல்லத்துரை மகா லிங்கம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை (25.02.2011) மாலை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வர்களான N.T செல்லத்துரை (முன்னாள் துணை முதல் வர், யாழ். மாநகர சபை) - கனகம்மா தம்பதியரின் பாசமிகு மகனும் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - புஷ்பராணி தம்பதியரின் அன்பு மருமகனும் புஷ்பமலரின் அன்புக்கணவரும் உஷா நந்தினி, மேனகா (கனடா), செந்தூரன், மயூரன் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் Dr. வி. உதிஷ்ரன், சஞ்சீவன் (கனடா) ஆகியோரின் மாமனாரும் சிறி தேவராசலிங்கம் (செல்வா மினி) அவர்களின் அன்புச் சகோதரரும் அபிஉதிஷ்ரிகா, அமுத்திகன், அபிநிஷியா, கரிஷ் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(843)

தகவல்: குடும்பத்தினர்,
சிறிதேவராசலிங்கம், உதிஷ்ரன்.

**Vacancy for Translator**
**Kilinochchi**
MEDECINS SANS FRONTIERES

Medecins Sans Frontieres-Holland (MSF-Holland) is an international NGO that offers medical assistance to populations in distress, to victims of man-made or natural disasters, and to victims of armed conflict without discrimination and irrespective of ethnic group, religion, creed, or political affiliation. We are looking for the right candidates for the following position:

**Translator – Kilinochchi**

**Responsibilities:**
*To provide written and oral translations for MSFH international staff
**Requirements:**
* Excellent command of English and Tamil languages (required); Sinhala (highly desirable)
* A Level
* Able to provide oral and written translations from/to English
* Computer Skills:
★ Good knowledge of MS Word and Excel
★ Able to write in Tamil using MS Word is highly desirable
* Previous experience in a similar position is desirable
* Previous experience with MSF is desirable
* Experience working in a psycho-social program
* Lives or willing to live in Kilinochchi

If interested in this position, please forward your resume by February 4 / 2011 to:
**MSF-Holland**
No.188 Thurkkai Amman Veethy, Ananthapuram
Kilinochchi
Or by email to: msfh-kilinochchi-ns@field.amsterdam.msf.org
Only Potential candidates will be contacted for an interview.
If you have not been contact within one week after the closing date, the position has been filled.
(48.22)

**சுட்டிப் பரணி**
என்றால் என்ன? புத்தகசாலைகளில் கேளுங்கள்
தொ.பே.இல - 0770366123

**இடமாற்றம்**
50, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணத்தில் இயங்கிவந்த
**ஹரன் ஜுவெலர்ஸ் ஸ்தாபனம்**
தற்போது 205, மின்சார நிலைய வீதியில் (பெரிய ஆஸ்பத்திரியின் பின்புறம்) இயங்குகின்றது என்பதை எமது அன்பர்களுக்கும் வாடிக்கையாளர்களுக்கும் அறியத் தருகின்றோம்.
நிர்வாகம்.
2226083

**வீடு வாடகைக்கு**
யாழ்ப்பாண பல்கலைக்கழக சூழலில் சகல வசதிகளும் கொண்ட வீடு உடன் வாடகைக்கு உண்டு.
தொடர்பு:- 0729586931

**காணி உடனடி விற்பனைக்கு**
யாழ்.நகர், ஆனைப்பந்தி சந்திக்கு அருகில் பருத்தித்துறை பிரதான வீதியில் 7 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
✱குடியிருப்புக்கு
✱தொழில் நிறுவனங்கள்
✱வியாபார ஸ்தாபனங்கள்/
✱தொடர்மாடி வீடுகள்
முதலியவற்றுக்கு உகந்தது.
தொடர்பு:-0725305782, 0783088249.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 27.02.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு இந்த வாரம் எப்படி.........

## 27.02.2011 முதல் 05.03.2011 வரை

தருபவர் - வித்யா



### மேடம்

பணவரவுகளைப் பெறலாம். திட்டமிட்ட சில வேலைகளைச் சரியாக முடித்துக் கொள்வீர்கள். உறவினர்கள் உதவி கிடைக்கலாம். தொழில் ரீதியான விடயங்களில் புத்திசாலித்தனமாகச் செயற்படுவீர்கள். ஊக்கம், உற்சாகமாகச் செயல்படுவீர்கள். பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். கூட்டு முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். ஆடை, அலங்காரப் பொருள்கள் வாங்கலாம். சகோதரர்கள், மாமன், மைத்துனர்கள் வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். அரசு தொடர்பான காரியங்கள் அனுகூலமாக முடியும். நிலம், பூமி வாங்கப் போட்ட திட்டங்களில் முன்னேற்றம் உண்டு. எதிர்பார்த்த கடனுதவி கிடைக்கும். முகவர் தொழில் புரிவோருக்கு வருமானம் அதிகரிக்கும். பொலிஸ் தொடர்பான விடயங்களில் அனுகூலம் உண்டு. தந்தையுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் விலகி, அவரால் சில நன்மைகளை அடையலாம். போட்டி, எதிர்ப்புகள் விலகி நினைத்த காரியங்களை சுலபமாக முடிப்பீர்கள். வழக்கு விவகாரங்களில் வெற்றி கிடைக்கும். தொழில் ரீதியாக நல்ல திருப்பங்களைக் காணலாம். கையில் பணப்புழக்கம் அதிகரிக்கும். பெண்களால், பயணங்களால் சந்தோஷம் உண்டு.



### இடபம்

குழப்பங்கள், தடுமாற்றங்களுக்கு ஆள்படலாம். உறவினர்கள் வகையிலோ அல்லது வேறு வகையிலோ திடீர்ச்செலவு ஏற்படலாம். சுபகாரிய நிகழ்ச்சிகளில் பங்கேற்கலாம். வயிறு உபாதைகளைச் சந்திக்கலாம். மனதில் இனம்புரியாத சந்தோஷம், மகிழ்ச்சி குடிகொள்ளும். அடுக்கடுக்காகப் பல வேலைகளைத் திட்டமிட்டுச் செய்வீர்கள். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். கடன் மிகுதி வசூலாகும். வருமானம் வரும் வழிகள் அதிகரிக்கும். திட்டமிட்டதை விடச் சில காரியங்களில் கூடுதல் இலாபம் பெறலாம். பிள்ளைகள் மூலம் கிடைக்கும் வருவாயால் வசதி அதிகரிக்கும். அவர்களின் சுபகாரியங்களை நடத்த மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. பெரிய மனிதர்களின் சகாயம் கிட்டும். அவ்வப்போது தேவையற்ற அலைச்சல்கள், குழப்பங்களுக்கு ஆள்படலாம். ஓய்வில்லாமல் பரபரப்பாகச் செயற்படலாம். அடுத்தடுத்துப் பல வேலைகளைத் திட்டமிட்டுச் செய்வீர்கள். நீண்ட நாள்களாக இழுப்பறியாக இருந்த காரியங்களும் சுலபமாக முடிவுக்கு வரும். சகோதரர்கள் உதவிகரமாக இருப்பர். மாமன், மைத்துனர்கள், நண்பர்களை நம்பி ஒப்படைத்த காரியங்கள் நல்ல விதமாக முடிவுக்கு வரும். பெண்கள், பயணங்கள், பொழுது போக்கு விடயங்கள், விருந்து, விசேஷங்கள் போன்றவற்றால் சந்தோஷம் அடைவீர்கள். ஊக்கம், உற்சாகம் கூடும். பிரியமானவர்கள் சந்திப்பு நிகழும். நல்லது நடக்கும்.



### மிதுனம்

உறவினர்களை உபசரிக்கக் கணிசமான பணத்தைச் செலவிடலாம் அல்லது அவர்களில் சிலரைப் பார்க்க நேரிடலாம். கடும் வேலை நெருக்கடிகளாலும் அவதிப்படலாம். கடன் மிகுதிகள், கட்டண மிகுதிகளைச் செலுத்துவீர்கள். தொழில் ரீதியான விடயங்களில் முடிவு எடுக்க முடியாமல் குழப்பங்களைச் சந்திக்கலாம். நண்பர்கள், சக ஊழியர்கள் கேட்ட உதவிகளைச் செய்வீர்கள். எதிர்பாராத செலவுகள் உண்டாகும். தொழில் ரீதியான விடயங்கள் திருப்தி தரும் வகையில் இருக்காது. அடிக்கடி குற்றம் குறைகளுக்கு ஆளாகலாம். சிறிய பிரச்சினைகளைக் கூட பெரிதுபடுத்தி சிலர் உங்களுடன் சண்டை போடலாம். தேக ஆரோக்கியமும் திருப்தி தரும் வகையில் இருக்காது. தேவையற்ற இடமாற்றம், வீடு மாற்றங்களாலும் சிலர் அவதிப்படலாம். எந்த வேலையையும் எடுத்த வேகத்திற்கு முடிக்க முடியாமல் தவிக்கலாம். தந்தை, அரசியல்வாதிகள், அதிகாரிகள், மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள், சகோதரர்கள், பங்காளிகள் தொடர்பான வகையில் அல்லல்களே அன்றி, ஆதாயம் இல்லை. சிலர் சொத்துக்களை விற்கும் முயற்சிகளிலும் ஈடுபடலாம். கடன் பிரச்சினைகளால் கலக்கம் அடையலாம். பெண்கள் தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும்.



### கடகம்

புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். ஓய்வின்றிப் பரபரப்பாகச் செயற்படலாம். சில பொருள்களை சகாய விலைக்கு வாங்கலாம். பெரிய மனிதர்களின் உதவி கிடைக்கும். பெண்களால் சந்தோஷம் உண்டு. வேலை நெருக்கடிகள் அதிகரிக்கும். தேக ஆரோக்கிய குறைவுகளால் அவதிப்படலாம். சக ஊழியர்கள் சிலரின் ஏட்டிக்குப் போட்டியான செயற்பாடுகளால் எரிச்சல் அடையலாம். பயண அலைச்சல் உண்டு. தேக ஆரோக்கியம், தெம்பு உற்சாகம் தரும். உங்களின் மதிப்பு, கௌரவம் மேம்படும். உறவுகளுடன் ஏற்பட்ட பகை விலகும். பூர்வீக சொத்துக்களால் ஆதாயம் பெறும் சூழ்நிலை உருவாகலாம். பிள்ளைகளின் செயற்பாடு உங்களைப் பெருமைப்பட வைக்கும். எதிர்பார்த்த நல்ல வாய்ப்புக்கள் தேடி வரலாம். குடும்ப உறுப்பினர்களின் சுபகாரியங்களை நடத்த மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. வாகனங்களில் செல்லும் போது அதிக வேகத்தைத் தவிர்க்க வேண்டும். சகோதரர்களின் ஏட்டிக்குப் போட்டியான செயற்பாடுகளால், மனஸ்தாபம் ஏற்படலாம். மாமன், மைத்துனர்கள் வழியில் எதிர்பாராத சில உதவிகள் கிடைக்கும். எதிர்பார்த்த நல்ல செய்திகள் வந்து சேரும். கணவன் மனைவி உறவில் சிறு சச்சரவுகள் நேரும். குழப்பம், தடுமாற்றம், வீண் அலைச்சல்களுக்கு ஆள்படலாம்.



### சிங்கம்

குடும்பச் செலவுகள் அதிகரிக்கும். சிலரிடம் வாயைக் கொடுத்து வம்பில் மாட்டிக் கொள்ளலாம். நீண்ட நாள்களாகத் தள்ளி வைத்த வெளியூர்ப் பயணம் செல்லலாம். சில வேலைகளைச் செய்ய மறந்து அவதிப்படலாம். எந்த விடயத்திலும் புத்திசாலித்தனமாகச் செயற்பட்டுப் பாராட்டுப் பெறுவீர்கள். பல மணி நேரமாகும் என நினைத்த காரியங்கள் எல்லாம் சுலபமாக முடிவுக்கு வரும். நண்பர்கள் வட்டம் விரிவடையும். பணவரவுகளைப் பெறலாம். செலவுகள் அதிகரித்து பணப்பற்றாக்குறை தொடரும். கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவதிலும் சிரமங்களைச் சந்திக்கலாம். உடல் ரீதியான சிறு, சிறு உபாதைகளாலும் அவ்வப்போது அவதிப்படலாம். மாற்று மதத்தினர் உதவிகரமாக இருப்பர். வெளிவட்டாரப் பழக்க வழக்கங்கள் உங்களுக்கு சந்தோஷம் தருவதாக அமையும். கூட்டுத் தொழில் விவகாரங்களில் எச்சரிக்கை அவசியம். அவசரப்பட்டு எந்த முடிவுகளும் எடுக்க வேண்டாம். கணவன் மனைவி உறவிலும் அவ்வப்போது சிறு, சிறு பிரச்னைகள் உருவாகலாம். அரசியல்வாதிகள் அடிக்கடி வெளியூர் பயணங்கள் செல்லும் சூழ்நிலை உருவாகும். மற்றவர்களின் பேச்சைக் கேட்டு சில காரியங்களில் இறங்கி விட்டு அவதிப்படலாம். புதியவர்கள் சிலரின் அறிமுகம் கிடைக்கும்.



### கன்னி

எந்த வேலையையும் தாமதம் இல்லாமல் சுறுசுறுப்பாகச் செய்து முடிப்பீர்கள். நண்பர்கள் அல்லது உறவினர்கள் வழியில் எதிர்பாராத உதவி கிடைக்கும். எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம். ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் செலவுகளைச் சந்திக்கலாம். பிள்ளைகளின், குடும்ப உறுப்பினர்களின் சின்னச் சின்ன ஆசைகளை நிறைவேற்றி வைப்பீர்கள். சகோதரர்கள், பங்காளிகள், சகலைகள் நீங்கள் கேட்ட உதவிகளைச் செய்யலாம். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள் சந்திப்பாலும் சந்தோஷம் அடைவீர்கள். அரசியல்வாதிகள் மூலம் காரியம் சாதிக்க மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. கடன் பிரச்சினைகளால் ஏற்பட்ட கவலை மாறும். அவற்றைத் தீர்க்க கணிசமான பணம் வந்து சேரலாம். அரசு குத்தகை பெற மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. வெளிவட்டாரத் தொடர்புகள் விரும்பும் விதத்தில் அமையும். முகவர்தொழில் செய்வோருக்கு வருமானம் கூடும். பயணங்கள் அதிகரிக்கும் உறவுப் பெண்கள் சிலரின் உதவி கிடைக்கும். பெரிய மனிதர்களின் தயவால் சில வேலைகளை சுலபமாக முடித்துக் கொள்வீர்கள். ஆடை, ஆபரணங்கள் சேரும். ஊக்கம், உற்சாகம் கூடும். பணம் வரும்.



### துலாம்

நண்பர்கள் சிலருடன் சேர்ந்து வெளியிடங்களுக்குச் செல்லலாம். தொழில் ரீதியாக சிலர் உங்களின் உதவி நாடி வரலாம். பல நாள்களாக நிறுத்தி வைத்திருந்த வேலை ஒன்றை திடீரெனச் செய்யும் சூழ்நிலை உருவாகும். எதிர்பாராத முக்கிய செய்திகளைக் கேட்கலாம். சோர்வின்றி புத்துணர்ச்சியுடன் செயற்படுவீர்கள். குடும்பத்தில் உ... சிலருடன் ஈகோ பிரச்சினைகள் உருவாகலாம். பெண்கள் வகையில் சந்தோஷமான ...னுபவங்களைப் பெறலாம். வரவு ஒரு மடங்காகவும், செலவு பல மடங்காகவும் இருப்பது தொடரும். சிலருக்கு உதவி செய்யப் போய் அதனால், உபத்திரவத்தில் மாட்டிக் கொள்ளும் சூழ்நிலை உருவாகலாம். பிறரை நம்பி யாருக்கும் வாக்குக் கொடுக்க வேண்டாம். நீங்கள் உத்தரவாதம் அளித்து யாருக்கும் பணம் வாங்கிக் கொடுக்க வேண்டாம். ஏதோ ஒருவிதமான கவலை அடிக்கடி மனதை ஆள்கொள்ளும். அடிக்கடி மனக் குழப்பங்கள் ஆள்கொள்ளும். எதிலும் தெளிவான முடிவு எடுக்க முடியாமலும், பிறர் மீது சந்தேகம் கொள்ளலாம். பல நேரங்களில் உணர்ச்சி வசப்பட்டுப் பேசும் சூழ்நிலையும் உருவாகும். பிள்ளைகள் வழியில் திடீர் செலவு நேரவும் வாய்ப்பு உண்டு. பெண்கள், பயணங்கள், பொழுது போக்கு விடயங்களால் சந்தோஷம் அடைவீர்கள். ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் செலவுகள் உருவாகலாம். சோர்வு, சோம்பல் ஆள்கொள்ளும்.



### விருச்சிகம்

ஆதாயகரமான பணவரவுகளை, பொருள் வரவுகளைப் பெறலாம். நண்பர்கள் உங்களின் முயற்சிகளுக்கு உறுதுணையாக இருப்பர். உறவினர்கள் சிலருக்கு நல்ல யோசனை சொல்வீர்கள். குடும்பத் தேவைகள் நிறைவேறும். ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் செலவுகளைச் சந்திக்கலாம். தேக ஆரோக்கியக் குறைவுகளால் அவதிப்படலாம். திடீர் வெளியூர்ப் பயணங்கள் செல்லலாம். மற்றவர்களின் விமர்சனங்களை எதிர்கொள்ளலாம். உறவினர்கள், நண்பர்கள் மத்தியில் உங்களின் மதிப்பு, கௌரவம் அதிகரிக்கும். எதிர்ப்புகள், போட்டிகள் குறைந்து ஏற்றம் பெறுவீர்கள். பிள்ளைகளின் நீண்ட நாள் ஆசைகளை நிறைவேற்றி வைப்பீர்கள். கடன் பிரச்சினைகளால் ஏற்பட்ட கலக்கம் தீரும். புதிய சொத்துக்கள் வாங்கத் திட்டம் போடுவீர்கள். தொழில் ரீதியான ஆதாயங்கள் அதிகரிக்கும். நிர்வாகத்திறமை மேம்படும். தொழிலுக்கு வங்கிகளில் நிதியுதவி பெற, அரசு சலுகைகள் பெற மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்களால் ஆதாயம் பெறலாம். மனதில் இனம்புரியாத சந்தோஷம், மகிழ்ச்சி குடிகொள்ளும். எதிர்பாராத சில நல்ல காரியங்கள் நடக்கலாம். நட்பு வட்டம் விரிவடையும்.



### தனுசு

தொழில், வியாபார ரீதியான பணவரவுகளைப் பெறலாம். மற்றவர்கள் குறை சொல்லாத வகையில் எந்த வேலையையும் செய்ய முற்படுவீர்கள். தம்பதியர் இடையே அன்னியோன்யம் அதிகரிக்கும். கடன் மிகுதிகள் வசூலாகும். நண்பர்களுக்காகச் சிலரிடம் பரிந்து பேசுவீர்கள். கேளிக்கை, கொண்டாட்டங்களில் நாட்டம் செல்லும். பல நாள் முயற்சிகளுக்குப் பலன் கிடைக்கும். நிலம், பூமி வாங்கப் போட்ட திட்டங்களில் முன்னேற்றம் உண்டு. சகோதரர்கள் நலனில் அக்கறை காட்டுவீர்கள். அரசியல்வாதிகளுக்கு செல்வாக்குக் கூடும். பணிபுரிவோர் அதிகாரிகள், நிர்வாகத்தினர் மூலம் சலுகைகள் பெறலாம். கடன் விவகாரங்கள் கட்டுக்குள் வரும். பொலிஸ் தொடர்பான விடயங்களில் அனுகூலம் உண்டு. மற்றவர்கள் மத்தியில் உங்களின் திறமை பளிச்சிடும். பணப்புழக்கத்திற்கு குறைவிருக்காது. உங்களுக்குத் தேவையான ஆடை, ஆபரணங்கள் வாங்குவீர்கள். மற்றவர்கள் பாராட்டும் வகையில், புகழ்ந்து பேசும் வகையில் உடைகள் அணிவதில் நாட்டம் செல்லும். உறவுப் பெண்கள், மனைவி வழி உறவுகள் மூலமும் நன்மை அடையலாம். தொழில் ரீதியான வேலைப்பளு தொடரும். நீண்ட நாட்களாக சந்திக்க நினைத்த சிலரைச் சந்திக்கலாம். மற்றவர்களுக்காக செலவு செய்யலாம்.



### மகரம்

எதிர்பார்த்த உதவி கிடைக்காமல் ஏமாற்றம் அடையலாம். பலர் பங்கேற்கும் நிகழ்ச்சியில் பங்கேற்கலாம். எதிர்பாராத சந்திப்பு நிகழும். குடும்ப உறுப்பனர்கள் வழியில் மருத்துவச் செலவு நேரும். திட்டமிட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். விருந்தினர்கள் வருகையால் குடும்பத்தில் கலகலப்பு குடிகொள்ளும். மனதிற்கு சந்தோஷம் தரும் செய்தி கேட்கலாம். பணவரவைப் பெறலாம். கொடுக்கல் வாங்கல்களில் எச்சரிக்கை அவசியம். குதர்க்கமான, குத்தலான பேச்சுக்களைத் தவிர்க்க வேண்டும். தேவையற்ற வாக்குவாதங்களில் ஈடுபட வேண்டாம். பெரிய மனிதர்கள் சிலர் உங்களின் மனம் நோகும் வகையில் பேசினாலும், அதைப் பொறுத்துக் கொள்ள வேண்டும். நீண்ட நாள்களாகச் செல்லாத உறவினர்கள் சிலரின் வீடுகளுக்குச் செல்லலாம். அதே நேரத்தில், குடும்பத்தில் சிறு சச்சரவுகள் ஏற்படவும் வாய்ப்பு உண்டு. வெளிவட்டாரத் தொடர்புகள் விரிவடையும். பண விடயங்களில் திருப்திகரமான நிலைமை இருக்காது. பணத்தின் மூலம் செய்யக் கூடிய வேலைகளை நினைத்த வேகத்திற்குச் செய்ய முடியாமல், முட்டுக்கட்டை நிலைமையை எதிர்கொள்ளலாம். வரவேண்டிய கடன் மிகுதிகள் வராமல் இழுத்தடிக்கலாம்..



### கும்பம்


மந்தம், மறதி, கவனக்குறைவு, திட்டமிட்ட காரியங்களில் தடை, எதிர்பாராத தண்டச் செலவு, வெறுப்பு, விரக்தி போன்றவற்றை எதிர்கொள்ளலாம். வீண் பிடிவாதங்களைத் தவிர்க்க வேண்டும். கலகலப்பான அனுபவங்களை எதிர்கொள்ளலாம். உங்களுக்கு வேண்டிய ஒருவருக்காக மற்றொருவரிடம் உதவி கேட்கலாம். எதேச்சையாக நடக்கும் சில சம்பவங்களால் மகிழ்ச்சி அடையலாம். அவ்வப்போது சில பிரச்சினைகளைச் சந்தித்தாலும், மலைபோல் வந்த தொந்தரவுகள் எல்லாம் பனி போல விலகி விடும். கடந்த காலத்தில் இல்லை என, கையை விரித்தவர்கள் எல்லாம் இப்போது கை கொடுத்து உதவுவர். பெரிய மனிதர் ஒருவர் அவ்வப்போது உங்களுக்கு நல்ல யோசனை சொல்லலாம். பிள்ளைகளின் நீண்ட நாள் கோரிக்கை ஒன்றை நிறைவேற்றி வைப்பீர்கள். சில நேரங்களில் சிறிய விடயத்திற்கு அவசரப்பட்டு திடீரெனக் கோபம் கொள்ளலாம். இருந்தாலும், புத்திசாலித்தனமாகச் செயற்பட்டு சில விடயங்களில் பாராட்டுக்களையும் பெறுவீர்கள். உடல் ரீதியான சிறு உபாதைகளுக்கும் ஆள்படலாம். தேவையற்ற பிரச்சினைகளை நினைத்து மனதைப் போட்டுக் குழப்பிக் கொள்வீர்கள். பெண்கள், பயணங்களால் சந்தோஷம் உண்டு. காரிய வெற்றி உண்டு. நல்ல செய்திகளைக் கேட்கலாம். பணவரவு உண்டு.



### மீனம்

ஊக்கம், உற்சாகமாகவும் புத்துணர்ச்சியுடனும் செயற்படுவீர்கள். நீண்ட நாள்களாகப் பார்க்காத உறவினர்கள், நண்பர்கள் சிலரைப் பார்க்கலாம். சுபகாரிய நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளலாம். எதிலும் பொறுமை, நிதானமாகச் செயற்பட வேண்டும். உங்களிடம் உதவி பெற்ற சிலரே உங்களை உதாசீனம் செய்யலாம். சிக்கனமாக இருக்க நினைத்தாலும், தண்டச் செலவுகள் நேரும். உடல் நலம் திருப்திகரமாக இருக்காது. இல்லையெனில், வாழ்க்கைத் துணைவர் உடல் நலக்குறைவால் அவதிப்படலாம். கடன் பிரச்சினைகளால் அடிக்கடி மன அமைதி கெடும். பணிபுரிவோர் விரும்பத்தகாத இடமாற்றங்களை எதிர்கொள்ளலாம். சக ஊழியர்கள் உங்களின் பொறுமையை சோதிக்கும் வகையில் நடந்து கொள்ளலாம். தந்தை, அரசியல்வாதிகள், அதிகாரிகள், மருத்துவம், சகோதரர்கள், மாமன், மைத்துனர்கள் தொடர்பான வகையில் செலவு, சிரமங்கள் உண்டு. பொறியியல் பணியாளர்கள் கடும் அலைச்சல்களுக்கு ஆள்படலாம். வீட்டில் உள்ள மின் உபகரணங்கள் பழுதாகி கணிசமான செலவை உண்டாக்கலாம். சிலர் நீண்ட தூரப் பயணங்கள் செல்லவும் நேரிடலாம். பெண்கள் தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ளவும். கலகலப்பான அனுபவம் உண்டு. எதிர்பாராத சந்திப்பு உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கண் பார்வைக்கு கீரை

பொதுவாக உடல் ஆரோக்கியதிற்கு காய்கறிகள் மிகவும் அவசியம்.

நாம் அன்றாடம் உண்ணும் உணவிலேயே கண்களைப் பாதுகாக்கும் விடயங்கள் அடங்கி உள்ளன. பச்சைக் காய்கறிகளில் விற்றமின் ஏ மற்றும் விற்றமின் சி யும், இரும்பு மற்றும் கல்சியம் சத்துகளின் முதன்மை ஆதாரங்களும் அடங்கி உள்ளன.

இவை கண்களுக்கு மிகவும் நல்லது. தினமும் ஏதாவது ஒரு வகை கீரையை சேர்த்து கொள்வது உடல் நலத்துக்கு மிகவும் சிறந்தது. குறைந்த பட்சம் வாரத்திற்கு இரண்டு முறையாவது உணவில் கீரை சேர்த்து கொள்ள வேண்டும்.

அகத்திக் கீரை, பசளிக் கீரை, முருங்கை, பொன்னாங்காணி, முளைக்கீரை, அறக்கீரை, வெந்தயக் கீரை ஆகிய கீரைகளில் இரும்பு, போலிக் அசிட் மற்றும் விற்றமின் பி2 ஆகிய சத்துக்கள் அடங்கியிருப்பதால் இவற்றை அதிகம் சேர்த்துக் கொள்வது நல்லது.

விற்றமின் ஏ யில் கண்ணையும், மூளையையும் இணைக்கும் முக்கிய சத்து அடங்கியுள்ளது. கண் விழித்திரையிலுள்ள ரோடோஸ்பின் என்ற புரதத்தில் விற்றமின் 'ஏ' உள்ளது. பார்வைக்கு இது முக்கிய பங்கு வகிக்கிறது







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Flex Travels** வழங்கும் **FREE AIR TICKET** உடன்



# IELTS இன்றி
# Spot Admissions
# மூலம் UK இல்
# உயர் கல்வி



## West End College London

| | | |
|---|---|---|
| திகதி | : | **26th March 2011** |
| இடம் | : | **4, IBC Road, Colombo 6.** |
| நேரம் | : | **10.00am to 4.00pm** |

(சி/576244)

**VISA** பெற்றுக்கொள்ளும் முன்னர் அல்லது அதன் பின்னர் எந்தவொரு கட்டணமும் அறவிடப்படமாட்டாது.

எமது சேவை முற்றிலும் **இலவசம்**

For appointment please contact :

**0777-761346**
**0775-952607**

**4, IBC Road, Wellawatte, Colombo 6.**

E-mails > flexinstitute@sltnet.lk
kiru@flexinstitute.lk
ashwinee@flexinstitute.lk

flex Institute
*Step Towards a Bright Future*
(A Subsidiary of Flex Graphic)

Web: www.flexinstitute.lk

FLEX Graphic

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சர்வதேசரீதியில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக இளமானிக் கற்கைநெறிகள் முதன் முதலாக யாழ்.மண்ணில்...

## பொறியியல் மற்றும் முகாமைத்துவப்பட்டப்படிப்பு

- **BEng. From University of Wolverhampton UK**
- **BSc. International Transportation Management and Logistics**
  From Dalian Maritime University (DMU)







ஐக்கிய இராஜ்ஜியம், அவுஸ்திரேலியா, சீனா ஆகிய நாடுகளின் தலைசிறந்த பல்கலைக்கழகங்களின் சர்வதேச அங்கீகாரத்துடன் கூடிய பட்டப்படிப்பு. (UGC அங்கீகாரம்) .

நெகிழ்வு தன்மைவாய்ந்த கற்கைநெறி முழுமையாக இங்கேயே மேற்கொள்ளலாம், அல்லது 2+2 முறைமையின் கீழ் 2 வருடங்கள் சினேக் யாழ் வளாகத்திலும் மிகுதி 2 வருடங்கள் குறிப்பிட்ட வெளிநாட்டு பல்கலைக்கழகத்திலும் மேற்கொள்ளலாம்.

- குறைந்த, இலகு தவணை கட்டணங்கள்.
- தரம் வாய்ந்த விரிவுரையாளர்கள்
- உலகத்தரம் வாய்ந்த வசதிகள்.
- உள்ளக பட்டப்படிப்பின் அங்கீகாரம்.

*Explore Choices , Options and Opportunities for you ... !*

KKS Road, Maruthanarmadam, Jaffna.
Tel: 021 4 925 925 Gen. Hotline: 011 4 486 486
E-mail: infojaffna@cinec.edu

**CINEC Jaffna Campus**
BRANCH OF CINEC MARITIME CAMPUS

WORLD CLASS EXCELLENCE IN EDUCATION AND TRAINING www.cinec.edu

ADInnovations

---

## மஹிந்ரா 575DI NST ட்ரக்டரை கொள்வனவு செய்யும் உங்களுக்கு டிமோவிடமிருந்து அருமையான கொடுப்பனவு!

Mahindra





575DI NST ட்ரக்டருடன் ரொடவேடர் இலவசம்!



ரொடவேடருக்கு பதிலாக ட்ரேலரை பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பு*

- இலங்கையில் அதிக எரிபொருள் சிக்கனம் கொண்ட ட்ரக்டர், 45 குதிரை வலுவை கொண்டவைக்கானது.
- இரண்டு வருடங்கள் அல்லது 2000 வேலை மணித்தியாலங்கள் டிமோவின் உத்தரவாதம்.
- ட்ரக்டருடன் முதல் 6 சேவைகளுக்கு தேவையான உதிரிப்பாகங்கள் இலவசம்!
- இந்தியாவில் 27 வருடங்களாக அதிகம் விற்பனையாகும் முதற்தர ட்ரக்டர்.
- முதல் மூன்று சேவைகளும் இலவசம்.*

(*நிபந்தனைகள் உண்டு)

**Mahindra 575DI NST**
விசேட விலை ரூ. 1,349,000/-

HNB லீஸிங்

மஹிந்ரா **575DI NST** ட்ரக்டரை கொள்வனவு செய்வதற்காக HNB லீசிங் அல்லது HNB கடன் வசதியை பெற்றுக்கொள்வீர்களேயானால், முதல் வருடத்திற்கான காப்புறுதி இலவசம்! ☎: 011 2660330

dimo TECHNOLOGY

வரையறுக்கப்பட்ட டீசல் மற்றும் மோட்டார் என்ஜினியரிங் பகிரங்க கம்பனி
உழவு உபகரணப் பிரிவு, கிரிந்தவலை வீதி, வெலிவேரிய.
தொ.பே/.'.பக்ஸ்: 033-4674616
வெப்: www.dimolanka.com

துரித இலக்கம் : 0777 418126

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'கண்வலி!'

கோடை காலம் என்றாலும் அழையா விருந்தாளியாக வந்துவிடும் தொற்று நோய்கள். அதில் முக்கியமானது அவஸ்தைக்கு பெயர் போன 'மெட்ராஸ் ஐ' என்னும் கண்வலி.

கண்களில் நாட்டு வைத்தியம், பாட்டி வைத்தியம் என்று தாய்ப்பாலை ஊற்றுவது, எண்ணை ஊற்றுவது என தவறான வைத்தியங்களை செய்யக்கூடாது என்றும் எச்சரிக்கின்றனர் மருத்துவர்கள்.

கண்களை கசக்கினால் ஒரு சிலருக்கு திருப்தி ஏற்படுவது போன்று இருக்கும். ஆனால் அப்படி கண்களை கசக்குவது கூடாது.

இதனால் கண்களின் பாகங்களாகிய கருவிழி, வெண்ணிறமாகிய ஸ்கிலீரா, கண்ணில் உள்ள ஆடி, விழித்திரையில் பாதிப்பு ஆகியவை ஏற்படும். இவைகளை மருத்துவர்கள் சரியாக கண்டுபிடித்து மருந்துகளை கொடுப்பார்கள்.

ஆனால் நாம் பொதுவாக ஏதாவது ஒரு மருந்தை ஊற்றி விடுவோம். இதனால் பார்வை பறிபோகும் அபாயம் ஏற்படும்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹஜன சம்பத சீட்டிழுப்பு முடிவுகள்

கொழும்பு,பெப்.27

தேசிய லொத்தர் சபையின் மஹஜன சம்பத 2362ஆம் இலக்க நேற்று முன்தினம் சீட்டி ழுப்பில் "A" என்ற ஆங்கில எழுத்தும் 3/6/9/3/3/0 என்ற இலக்கங்களும் அதிர்ஷ்டத்துக்குரியனவாகத் தெரிவாகின.

இதன் பிரகாரம் வலமிருந்து இடமான அமைப்பில் சுப்பர் பரிசு வெல்லப்படவில்லை. 3/6/9/3/3/0 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் இருவருக்கு முதலாம் பரிசாகத் தலா இருபது இலட்சம் ரூபா கிடைக்கவுள்ளது.

6/9/3/3/0 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 14 பேருக்கு இரண்டாம் பரிசாகத் தலா ஒரு இலட்சம் ரூபா கிடைக்கவுள்ளது.

9/3/3/0 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 137 பேருக்கு மூன்றாம் பரிசாகத் தலா பத்தாயிரம் ரூபா கிடைக்கவுள்ளது.

3/3/0 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 1,401 பேருக்கு 4ஆம் பரிசாகத் தலா ஆயிரம் ரூபா கிடைக்கும்.

3/0 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 13,703 பேருக்கு 5ஆம் பரிசாகத் தலா நூறு ரூபா கிடைக்கவுள்ளது.

0 என்ற இலக்கத்தை மட்டும் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 1,36,214 பேருக்கு 6ஆம் பரிசாகத் தலா இருபது ரூபா கிடைக்கும்.

இடமிருந்து வலமரன அமைப்பில் 3/6/9/3/3 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 15 பேருக்கு ஏழாம் பரிசாக தலா பத்தாயிரம் ரூபா கிடைக்கவுள்ளது.

3/6/9/3 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 141 பேருக்கு 8ஆம் பரிசாகத் தலா ஆயிரம் ரூபா கிடைக்கும்.

3/6/9 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 1,364 பேருக்கு 9ஆம் பரிசாகத் தலா நூறு ரூபா கிடைக்கவுள்ளது.

3/6 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 13,644 பேருக்கு பத்தாம் பரிசாகத் தலா ஐம்பது ரூபா கிடைக்கும்.

"A" என்ற ஆங்கில எழுத்தை மட்டும் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 54,691 பேருக்கு பதினோராம் பரிசாகத் தலா இருபது ரூபா கிடைக்கவுள்ளது.

(ற)

**வீடு வாடகைக்குண்டு**

SLT தொலைபேசி வசதி, வாகனத் தரிப்பிட வசதி கொண்ட பெரிய வீடு வாடகைக்குண்டு.
சிறு கம்பனிகள் மற்றும்
பெரிய குடும்பம் வசிக்கக் கூடியது.
தொடர்பு: 21, றக்கா லேன், சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 0770761976, 0778894334

**நாகபூஷணி திருமண சேவை**

உள்நாட்டு, வெளிநாட்டு மணமகன்கள், மணமகள்கள் மற்றும் Doctors, Engineers, Accountants, Bankers, Teachers மற்றும் அரச தனியார் துறைகளிலுள்ள மணமகன்கள், மணமகள்கள் அதிகளவில் உள்ளனர் . பதிவு செய்யும்போதே எம்மிடமிருந்து உடனுக்குடன் மிகச் சிறந்த முறையில் நீங்கள் விரும்பும் மணமக்களைப் பெற்றுக்கொள்ளலாம். தபால், Fax, Email மூலமோ, நேரிலோ தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ளுங்கள்.

தொடர்பு: நாகபூஷணி திருமண சேவை
இல.125, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (யாழ்.மாநகரசபை, சுகாதார பணிமனை முன்பாக)
Fax: 021 222 9306 Phone: 021 222 9306 Mobile : 0771387596, 0771250325.
Email: nakapoosany wedding@gmail.com
(761) (38-23-22)

# அழியாத நினைவின்
# இரண்டாம் ஆண்டு

## தர்மலிங்கம் நிர்மலானந்தன்



மலர்வு
01.07.1987

உதிர்வு
27.02.2009

உரிமையோடு உறவாடி எம்மோடு
உயிரில் கலந்த உறவே
நீ உலா வந்த வீதிகளும் உறவாடிய
சொந்தங்களும் உன் நினைவில் வாடுதடா
உனக்காக வாழாமல் இவ்வுலகில்
எமக்காக உன் உயிர் துறந்தபோதும்
உன் திருமுகம் காணக்கூட
நாம் கொடுத்துவைக்க வில்லையடா
இரவுகள் வந்து போகின்றன ஆனால்
எம் கண்களில் உறக்கம் மட்டும் இல்லையடா
பசுமையான உன் நினைவுகளால்
தூங்க மறுக்கின்றன விழி இரண்டும்
எந்த நிலையில் இருந்தாலும் தடம் மாறிப் போகாது
உன் நினைவுகளுடன்........



கடந்த 27.02.2009 அன்று புதுக்குடியிருப்பு பகுதியில் அகால மரணமடைந்த எமது மகனின் இரண்டாவது ஆண்டு நினைவு நாளில் அவரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்.

கள்ளப்பாடு,
முல்லைத்தீவு.

குடும்பத்தினர்.
சு.தர்மலிங்கம் (தந்தை)

(49-25-26)

# TVS

## காட்சியறை தற்போது சாவகச்சேரியில்....




தென்மராட்சி மக்களின் பிரயாணத் தேவையைப் பூர்த்திசெய்யும் முகமாகவும் தமது சேவையை விஸ்தரிக்கும் நோக்குடனும் சாவகச்சேரி நகர் மத்தியில் பிரமாண்டமான *TVS* காட்சியறை *( Show Room)* இன்று ஞாயிற்றுக்கிழமை (27.02.2011) திறக்கப்படுவதை ***TVS LANKA*** தனியார் நிறுவனம் தென்மராட்சி மக்களுக்கு மிகவும் மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றது.

வாடிக்கையாளரின் தேவைக்கேற்ற வகையில் **70 CC** தொடக்கம் **180 CC** வரையிலும் **TVS** லங்காவில் மட்டுமே உண்டு என்பதை பெருமையுடன் தமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றது.

அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு ரூபா 10, 000/- அதிவிசேட விலைக்கழிவு (நிபந்தனைக்குட்பட்டது)

27, 28 ஆம் திகதிகளில் கொள்வனவு செய்பவர்களுக்கு விசேட பரிசில்கள் வழங்கப்படும் *TVS* சகல மோட்டார் சைக்கிள் தேவைகளுக்கும் நீங்கள் நாடவேண்டிய இடம்




## யசோ TVS

இல.174, ஏ-9 வீதி, சாவகச்சேரி.
(சாவகச்சேரி வைத்தியசாலை அருகில்),

தொ.பே :
0217200950

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்சைம் தடுப்பு மூலம் மார்பக புற்றுநோய் பரவலைத் தடுக்கலாம்

என்சைம் என்ற வேதிப்பொருளை தடுப்பதன் மூலம் மார்பகப் புற்று நோய் இதர உறுப்புகளுக்கு பரவுவதைத் தடுக்க முடியும் என பிரிட்டன் புற்றுநோய் ஆராய்ச்சி நிறுவனத்தினர் கண்டுபிடித்துள்ளனர்.

LOXL2 என்சைமை தடுப்பதன் மூலம் புற்றுநோய் இதர உறுப்புகளுக்கு பரவுவதை தடுக்கலாம் என அவர்கள் கூறியுள்ளனர். 90 சதவீத புற்றுநோய் மரணங்களுக்கு கட்டிகள் உடலின் இதரபகுதிகளுக்கு இடம் பெயர்வதே காரணமாகும். மார்பக புற்றுநோய் உள்ளவர்களுக்கு LOXL2 என்சைம் அதிக அளவில் உள்ளது. இந்த வேதிப் பொருள் பரவுவதால் புற்றுநோய் பாதித்துள்ளவர்கள் நீண்டகாலம் உயிர்வாழ்வதற்கான வாய்ப்பு குறைகிறது. மேலும் புற்றுநோய் துவக்க நிலையில் இருக்கும் போது அது பரவுவதற்கு LOXL2 என்சைம் காரணமாக உள்ளது.

இந்த என்சைம் மார்பக திசுக்களில் இருந்து புற்றுநோய் செல்கள் ரத்த ஓட்டத்தில் கலப்பதற்கு காரணமாக உள்ளது. எலிகள் மீது நடத்தப்பட்ட சோதனையை தொடர்ந்து பிரிட்டன் ஆய்வாளர்கள் தங்களது புதிய முடிவினை வெளியிட்டுள்ளனர்.

இந்த புதிய ஆய்வு சிறந்த நம்பிக்கை தருவதாக உள்ளது என புற்று நோய் ஆர்ராய்ச்சியாளர்கள் நிறுவனம் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விலங்குகளின் குளிர்கால உறக்கத்தைப் போல மனிதர்களை செயற்கை உறக்கத்தில் ஆழ்த்த முடியும்



சில விலங்குகள் குளிர் காலத்தை உறக்கத்தில் கழிப்பதைப் போல மனிதர்களையும் செயற்கையாக உறக்கத்தில் ஆழ்த்தமுடியுமென விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர். இதற்கான ஆராய்ச்சிகளில் தாம் தீவிரமாக ஈடுபட்டுள்ளதாகவும் அவர்கள் குறிப்பிடுகின்றனர். பொதுவாக அலஸ்கான் கரடிகள் பனிக்காலத்தின் போது சுமார் 7 மாதம் வரை நித்திரையிலேயே கழிக்கக் கூடியன.

இக்காலப்பகுதியில் அவை உணவை உட்கொள்வதில்லை. ஏன் நீரைக் கூட பருகுவதில்லை. இவ்வகையான குளிர் காலத்திற்கு முன்னரே அதற்கு தேவையான கொழுப்புச் சத்து மிகுந்த உணவுகளை உட்கொண்டு விடும். இவை சேமிக்கப்பட்டு உறக்கத்தில் இருக்கும் காலப்பகுதியில் உறுப்புகளின் செயற்பாட்டிற்கு தேவைக்கேற்ப கடத்தப்படும். மேலும் அவை நித்திரையிலிருந்து எழும்பும் போது எந்த உடல் நிலையில் இருந்தனவோ அதே நிலையிலேயே இவை எழும்புகின்றன.

இக்காலப்பகுதியில் இவற்றின் இதயத்துடிப்பானது நிமிடத்திற்கு சுமார் 8 - 14 தடவையென குறைந்துவிடும். உடலில் வெப்பமும் சுமார் 12 பாகை செல்சியஸ் வரை குறைந்து விடுகின்றது. இரத்த ஓட்டம், சுவாசம் என்பன அப்படியே குறைந்து விடும் மேலும் உடலின் வளர்சிதைமாற்றமும் மூன்றில் ஒன்றாக குறையும். மொத்தத்தில் இவற்றின் உடலானது உயிரினை தக்க வைத்துக்கொள்ளும் அளவுக்கே உள் உறுப்புக்கள் செயற்படும். இதே போன்ற உறக்க நிலைக்கு மனிதர்களையும் ஆழ்த்தும் முறையானது நீண்ட விண்வெளிப் பயணம் மேற்கொள்ளும் விஞ்ஞானிகள் முதல் கடுமையான உடல் சுகயீனங்களுக்கு உள்ளாகியுள்ளவர்களுக்கும் பெரிதும் உதவும் என அவர்கள் தெரிவிக்கின்றனர்.

மனிதர்களின் உடலிலும் வளர்சிதை மாற்ற வீதத்தினை குறைத்தல் மற்றும் மனித உடலின் திசுக்களுக்கு தேவையான ஒட்சிசனின் அளவைக் குறைத்தல் போன்ற ஆராய்ச்சிகள் வெற்றிகரமாக முடிந்தால் இந் நிலமை சாத்தியமே என அவர்கள் குறிப்பிடுகின்றனர். கரடிகள் மட்டுமன்றி சில வகை எலிகள், வெளவால்கள், சில வகை பாம்புகளும் இவ்வகையான பனிக்கால உறக்கத்திற்குச் செல்கின்றன.










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூட நம்பிக்கைகள் புறந்தள்ளப்பட வேண்டும்



நற்காரியங்களில் விதவைப் பெண்கள், கணவனைப் பிரிந்து வாழும் பெண்களை ஒதுக்கி வைக்கும் சம்பவங்கள் இன்றும் எமது சமுதாயத்தில் தொடர்ந்த வண்ணமே உள்ளன.

முன்னோர்களால் விதிக்கப்பட்ட பாரம்பரிய விதிமுறைகளை எமது சமுதாயம் இன்னும் மாற்றி விடவில்லை. ''பெண் என்றால் பேயும் இரங்கும்'' என்பார்கள். ஆனால் மனிதர்களைப் பொறுத்த வரையில் இரக்கம் இருக்கின்றதா? இல்லையா? என்பது கேள்விக் குறியான ஒரு விடயமே.

முற்காலத்தில் விதவைப் பெண்கள் வெளியில் வந்தால் ''விடியாதவள்'', ''முழுவியளத்திற்குச் சரியில்லாதவள்'' எனச் சமூகத்தால் புறக்கணிக்கப்பட்டு வீட்டிற்குள் அடைக்கப்பட்டு மாற்றார் முகம்காணாமல் மறைத்து ஒதுக்கப்பட்டாள்.

ஆனால் தற்போது சமூகம் வளர்ச்சி கண்டுள்ள போதிலும் சமூகத்தின் விழுமியங்கள், மூட நம்பிக்கைகள் மறையாத ஒன்றாக தொடர்ந்த வண்ணம் உள்ளன. வீடுகளில் நடைபெறும் நற்காரியங்களில் இவர்கள் ஒதுக்கப்படும்போது அவர்களின் மனநிலை, எதிர்பார்ப்புகள், ஏக்கங்கள் பற்றி எவரும் சிந்திப்பது கிடையாது. அதுமட்டுமன்றி மூட நம்பிக்கைகள் மனிதனை எந்தளவுக்கு மாற்றியுள்ளது என்பதற்கு இதுவும் ஓர் எடுத்துக்காட்டாகும்.

கணவனைப் பிரிந்து வாழும் பெண்களின் மனநிலை ஆண்களிடம் மனைவியை இழந்த அல்லது பிரிந்த பாதிப்பை ஏற்படுத்துவதில்லை.

ஒருவருக்குச் சுபகாரியம் என்பது அங்குள்ள அனைவரின் சந்தோசத்தையும் ஒன்றிணைந்து வெளிப்படையாகக் கொண்டாடப்படும் ஒவ்வொருவரின் மனங்களிலும் சந்தோசங்கள் தென்பட வேண்டுமே தவிர அவர்களின் உருவங்களில் அல்ல சபையில் உள்ளவர்களால் ஒதுக்கப்பட்டு அல்லது ஒதுங்கி நிற்கும் பெண்களின் மனம் வேதனைப்படும்போது நாம் குதூகலித்து கோலாகல மாகக் கொண்டாடுவதில் ஏதேனும் நன்மை உண்டா? என்பது புரியாத புதிராகவே உள்ளது.

எமது முன்னோர் விதைத்து வைத்த நல்ல விடயங்களைக் கருத்திற்கொள்ள வேண்டுமே தவிர மூட நம்பிக்கைகளை சமூகம் புறந்தள்ள முன்வர வேண்டும்.

பெண்களுக்கான பாகுபாடுகள் மனிதனால்தான் உருவாக்கப்பட்டன. எனவே அதனை விடுத்து சமத்துவத்துடன் சம உரிமை கொடுத்து வாழப் பழகுவோம்.

**ஜீவன்,** *மானிப்பாய்*

# பெண்கள் நோயின்றி வாழ ஓய்வெடுத்தல் அவசியம்

-மயூரி



உழைத்துக் களைத்து விட்ட உள்ளங்கள் எல்லோருக்கும் ஓய்வு கட்டாய தேவையாக அமைந்து விடுகிறது. இதில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதத்திலும் ஓய்வைக் கழிக்கின்றனர். ஆண்கள் வேலைக்குச் சென்று விட்டு வீடு வந்ததும் ஓய்வு எடுப்பது வழக்கம். வீட்டுவேலை இருந்தாலும் களைப்பாக இருக்கிறது எனக் காரணம் சொல்பவர்களும் உள்ளனர்.

ஆனால் பெண்களைப் பொறுத்த வரையில் வேலைக்குச் செல்லும் பெண்களும் சரி வீட்டில் இருக்கும் பெண்களும் சரி ஓய்வு எடுப்பது என்பது மிகக் குறைவாகவே உள்ளது. காரணம், பெண்களுக்கு எதாவது ஒரு வேலை வந்து கொண்டே இருக்கும். ஓய்வுநேரம் கிடைக்காதா சீரியல் பார்ப்பதற்கு என ஏங்கும் பெண்கள் எத்தனை பேர் உள்ளனர். அரட்டை அரங்கம் வைப்பது சில பெண்களின் தொழிலாகி விட்டது. இவர்களைவிட்டுப் பெரும்பாலன பெண்கள் தமது பொழுதைப் பயனுள்ளதாக ஆக்க வேண்டும் எனச் சுய தொழிலில் ஈடுபடுபவர்களாக உள்ளனர்.

இவ்வாறு பெண்களின் தேவைகளை அடுக்கிக் கொண்டே போகலாம். ஆனால் பெண்கள் கட்டாயமாக ஓய்வு எடுக்க வேண்டும். தொடர்ந்து வேலை செய்யும்போது உடல் ரீதியாகவும் சரி உளரீதியாகவும் சரி சோர்வு ஏற்பட்டு ஆறுதல் என்பது இல்லாது சோர்ந்துவிடும் அளவுக்குக் களைத்து விடுகிறார்கள். அத்துடன் சாப்பாட்டையும் கவனிக்காது விடுகிறார்கள். இதனால் பெண்கள் நோய்வாய்ப்படும் வாய்ப்பு உள்ளது. பெண்களுக்குத் தற்போது நோய்கள் ஏற்படுவது அதிகம். காரணம் ஓய்வின்மை. ஓய்வு என்பது உடல், உள ரீதியாகத் தளர்வாக இருப்பது. இதனை ஒவ்வொருவரும் கவனத்தில் கொள்ளவேண்டியது அவசியம்.

ஓய்வு என்பது ஒரே இடத்தில் அமர்ந்து இருப்பதோ அல்லது படுத்திருப்பதோ அல்ல. மனதை அமைதியாக வைத்திருக்கக் கூடிய வகையில் இயற்கையை இரசிக்கலாம். நம்பிக்கையானவர்களுடன் மனம் விட்டுப் பேசலாம். பிடித்த இடத்திற்குச் சென்று வரலாம். இவ்வாறு செய்வதன் மூலம் மனதில் உள்ள கவலைகள், வேதனைகள் குறைவடையும். இதன் மூலம் மனம் மகிழ்ச்சியாக இருக்கும்.

மகிழ்ச்சியாக இருப்பதன் மூலம் தான் உடல் ஆரோக்கியத்தைப் பேண முடியும். சிலர் கூறுவார்கள் வீட்டில் எல்லாம் இருக்கும்போது என்ன குறை என்று. குறைகளை வெளியே சொல்ல முடியாமல் சிக்கித் தவிக்கும் பெண்கள் தான் இன்று ஏராளம். வீட்டுக்கு வீடு வாசல்படி என்பதுபோல ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பிரச்சினை இருக்கத்தான் செய்கின்றது. அதனைக் கையாளும் விதத்தில்தான் பெண்களின் ஆரோக்கியம் தங்கியுள்ளது எனலாம்.

எல்லோரிடத்திலும் எல்லாவற்றையும் சொல்ல முடியாது. சொல்லவும் கூடாது. ஆனால் நம்பிக்கைக்குரிய ஒருவருடன் நிச்சயமாக மனம்விட்டுப் பேசவேண்டும். மற்றும் குடும்பத்தில் உள்ளவர்களுடன் நிச்சயமாகக் கொஞ்ச நேரமாவது கதைக்கவேண்டும் அப்போதுதான் உறவுகள் உடையாமல் உறுதியாக இருக்கும்.

இப்போது யாருக்கும் கதைக்க நேரமே கிடைப்பதில்லை. கல்வி, வேலை என்று எதாவது ஒன்று இருக்கும். எனவே இரவுப் பொழுதிலாவது எல்லோருடனும் குறைந்தது பத்து நிமிடமாவது கலந்து மகிழ்ச்சியாகப் பேசுவோம். இவ்வாறு கதைப்பதனால் மனக்கவலைகள், குறைகள் தீரும். இதன்மூலம் பெண்களின் கவலைகள் (பாரம்) குறையும். பெண்கள் தனிமையை உணர்வது அதிகம். அதனை வெளியில் சொல்லவும் பயம். இதனால் யோசிப்பது, கோபப்படுவது, அழுவது போன்ற உணர்வுகளை வெளிப்படுத்துவர். எனவே பெண்கள் ஓய்வு எடுப்பது அவசியத் தேவையாக உள்ளது. அத்துடன் அதனை பயனுள்ளதாகவும் மகிழ்ச்சியான தாகவும் மாற்றவேண்டும். அதன் மூலம் பெண்களின் ஆரோக்கியம் பேணப்படும்.

## அம்மா!



பத்து மாதம் சுமந்து-எனைப்
பெற்றெடுத்து-பண்புடனே
வளர்த்தெடுத்து
பாசமாய் பயிற்றுவித்து
பள்ளிக்கு நாம் செல்ல
பார்த்து மிக மகிழ்ந்திடுவாய்
பாசமிகு தாயே
கடவுளுக்கு நிகரானவளே
வாழிய நீ நீடுழி-!

கருணாகரன்
சோபிகா.

## என் பாசமுள்ள சகோதரி



நான் பிறந்ததுதான்
தாய் வயிற்றில் -ஆனால்
தவழ்ந்தது உன் மடியிலே
சின்னஞ்சிறு வயதிலே தாயாய்
பள்ளிக் காலத்தில் நண்பியாய்
இருந்தவள் நீ
அம்மா என்று அழைப்பதை விட
அக்கா என்று அழைப்பதே அதிகம்
ஆனால் அன்று யோசிக்காது
என்னை விட்டுச்சென்ற நீ
மீண்டும் என்னைத் தேடி வருவாய்
என உங்கள் வரவுக்காய்
காலமெல்லாம்
என் விழி விழித்திருக்கும்
உந்தன் பெயர் சொல்லும்போது
என் மனம் வசந்தமாகின்றது
இந்த வசந்தத்துக்குச் சொந்தக்காரி
வசந்தினி வருவாளா?

சிவஞானம் துஸ்ஷாலினி
யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

# குறைந்த மூலதனத்தில் நிறைந்த வருமானத்தைப்பெறும் சுயதொழில்

சுயதொழில் முயற்சியானது பெண்களின் வளர்ச்சிப் பாதைக்குப் பெரும் உதவி புரிகின்றது. தையற்கலை, கயிறு பின்னுதல் பன்னவேலை, உணவுப் பொருள்கள் தயாரித்து விற்பனை செய்தல் போன்ற தொழில்களைப் பெண்கள் தமது இருப்பிடங்களில் இருந்துகொண்டே செய்யமுடியும். இவற்றில் ஒன்றான தையற்கலையானது பார்வைக்கு இலகுவாக இருந்தாலும் ஒவ்வொருவரின் திறமையைப் பொறுத்தே வருமானத்தைப் பெற்றுத்தரக்கூடிய ஒன்றாக உள்ளது. இதற்கான பயிற்சிகள் பாடசாலை மட்டத்தில் இருந்தே பெண்களுக்கு கற்பிக்கப்படுகின்றது.

இதனைப் பெண்கள் உரிய முறையில் கற்றுப் பயன்படுத்த வேண்டியது அவசியமாகும். ''தன்கையே தனக்குதவி'' என்பதைப் போலச் சுயதொழில் செய்பவர்கள் அடுத்தவர்களுடைய கைகளை எதிர்பார்த்து வாழவேண்டிய தேவை குறைவாகவே இருக்கின்றது. இன்றைய காலகட்டத்தில் அதிகரித்துவரும் [illegible]

பொறுப்புகளும் கடமைகளும் கொஞ் சம் அதிகமாக இருந்தாலும் அதனை இலகுவான வழியில் கொண்டுசெல்ல வேண்டிய தேவை அவர்களது கையில்தான் உள்ளது.

சுயதொழில் செய்யும் ஒவ்வொருவருக்கும் சுயதொழிலினால் கிடைக்கும் வருமானம் அவர்களுக்கும் அவர்களைச் சார்ந்திருக்கும் குடும்பத்துக்கும் பெரும் பயனைப் பெற்றுக்கொடுகின்றது என்பதில் சந்தேகமில்லை. எமது நாட்டில் அதிகமாகத் தையற் கலை யைத்தான் தேர்ந்தெடுப்பார்கள். இது பயனுள்ள ஒரு தொழில் மட்டுமன்றி சுயதேவைகளுக்கும் இடையூறு விளைவிக்காத ஒன்றாகும்.

மேலும் நவீன காலத்துக்கு ஏற்றாற்போல் தையல் இயந்திரங்கள் பல வடிவங்களில் [illegible]ள்ளதால் எமக்குப் பிடித்தமான வடிவமைப்புக்களில் ஆடைகளைப் [illegible]ள்ள முடியும். கடையில் கொள்வனவு செய்யும் ஆடைகளை விட நாமாகத் தைக்கும் ஆடைகள் நீண்டகாலப் பாவனையைத் தருகின்றது. எனவே அதிக மூலதனமன்றி வருமானத்தைப் பெற்றுத்தரக்கூடிய சுயதொழிலைச் செய்து [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org